412
44305
412 / 2 ரு.

தமிழன் கண்ட மலேயா



THE REGISTRAR OF BOOKS
MADRAS

அ.மு.பரமசிவானந்தம்.

V435
N50
108079

தமிழன் கண்ட மலேயா

அ. மு. பரமசிவானந்தம், B. O. L; M. Litt.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை 10.

தமிழ்க் கலைப் பதிப்பகம்
சென்னை - 10

M. I. P. PROJECT
Microfilmed.

ARCHIVES LIBRARY

108079

மலேயா நாடு தமிழர் பெரும்பாலராக உள்ள நாடு. பழங்காலந்தொட்டு தமிழர் மலேயாவில் வாழ்ந்து வருகிறார்கள். தமிழர் நாட்டுக்கு அடுத்தபடி, பெரும்பாலராகத் தமிழர் வாழும் நிலப்பகுதி மலேயாதான்.

அம்மலேயாவில் தமிழ்ப் பயிர் ஓம்பும் கழகம் மலேயாத் தமிழ்ப் பண்ணை; அப்பண்ணையார் வருக என்றார்கள். சென்று அவர்வழிப் பணியாற்றினேன். மலேயாவில் சரியாக ஒரு திங்கள் இருந்தேன். எனினும் அங்கு பார்த்தும் கேட்டும் அறிய வேண்டுவன அத்தனையும் அறிந்து கொண்டேன். நாட்டு நிலை, மக்கள் வாழ்க்கை முறை, தமிழர் நிலை, இயற்கை வளம், வரலாறு, ஆகிய எத்தனையோ வகையில் மலேயாவைப் பிரித்துப், பிரித்துக் கண்டேன். கண்டவற்றைக் கடிதமாகத் தீட்டி மகள் மங்கையர்க்கரசிக்கு அனுப்பினேன். அவை இன்று இந்நூலாக வெளிவருகின்றன.

இவ்வாக்கப் பணிக்கு அடிகோலிய மலேயா தமிழ்ப் பண்ணையார்க்கும், பிற அறிஞர்களுக்கும் என் வணக்கம். இந்நூல் மலேயாவைப் பற்றி ஒரு கருத்தை உள்ளத்தே உருவாக்கும் என எண்ணுகின்றேன்.

அ. மு. பரமசிவானந்தம்

உரிமை பதிவு

விலை இரண்டு ரூபாய்

விற்பனை உரிமை:

வசந்தம் பதிப்பகம்.

23. A., அருணாசல ஆச்சாரி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

கடிதம் 1.

கடல்மேல் கலத்தகம்

21—5—48

அன்பின் செல்வி மங்கையர்க்கரசிக்கு,

நலன் விழைவு. புதன்கிழமை அம்மாவும், தம்பியும், மாமாவும், தாத்தாவும் மற்றுமுள்ள நண்பர்கள் பலரும் என்னை வாழ்த்திக் கப்பலேற்றி அனுப்பினார்கள். கலம் ஏறி வெளியூர் செல்வது நமக்குப் புதிதாகையால் அம்மா சற்று வருத்தமுற்றார்கள் என்பதை முகக் குறிப்பால் அறிந்தேன். அனைவரும் கப்பலுள் வந்து சிறிது நேரம் தங்கிப் பிறகு தரைக்கு இறங்கிச் சென்றார்கள். பல நண்பர்கள் வந்து வந்து கண்டு சென்றார்கள். மாலை நான்குமணிக்குக் கப்பல் புறப்பட்டது. கண்ணுக்குத் தெரியும் வரையில் அனைவரும் நின்றுகொண் டிருந்ததைப் பார்த்தேன். பிறகு கடல் நடுவில் கலம் சென்றது. என் அறைக்குள் நான் சென்றேன். தனிமையை என் மனம் அப்போது தான் உணரத் தொடங்கியது.

குழந்தாய்!

எனது அறையில் மற்றொருவரும் உடன் இருந்தார். அவர் மலேயாவில் அரசாங்க மருத்துவராக இருக்கின்றார் என அறிந்தேன். அவர் மிக நல்லவராக இருந்தார். அவருடன் நன்கு பழகினேன் மாலை இருட்டும் வரையில் நான் என் அறையிலிருந்தபடியே சென்னைக் கடற்கரையை-அரிய தமிழகத்தின் எல்லையை-உயரிய கோபுரங்களைக் கண்ணுற்றுக்கொண்டே சென்றேன். இருட்டவும், கரை மறையவும்சரியாக இருந்தது. பிறகு உணவுகொண்டு படுத்துக்

கொண்டோம். நல்ல உறக்கம் என்னை அணைத்துக்கொண்டது.

கடற்காட்சியும் கடற்பிணியும் :

மறுநாள் (20-5-48) காலை எழுந்து நாற்புறமும் நோக்கினேன். பார்க்குமிடம் எங்கும் பரந்த கடல். எப்பக்கத்தும் கருங்கடல் காட்சி அளித்தது. எழுந்து என் காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டேன். அங்கங்கே வேண்டிய வசதிகளைச் செய்யப் பல அலுவலாளர்கள் இருந்தார்கள். தூய வெந்நீரில் மூழ்கினேன். வெந்நீர் எனக்குப் பழக்கமில்லை என்பது உனக்குத் தெரியும். என்றாலும் அந்தக் கடல் நிலை என்னை வெந்நீரை வேண்டுமாறு தூண்டிற்று. பிறகு பூரி கிழங்கு பலகாரம் கொண்டுவந்தார்கள். அதற்குள் கடற்பிணி என்னைப் பற்றிக்கொண்டது. சிறிது உட்கொண்டேன். உடனே அனைத்தையும் வாயிலெடுத்தேன். மயக்கமாகிப் படுத்துக்கொண்டேன். பிறகு பத்துமணிக்குக் கொஞ்சம் கஞ்சி உண்டேன். அன்று முழுவதும் மயக்கமாகவே இருந்தது. மாலை மறுபடியும் உப்புமா அருந்த வற்புறுத்தினார்கள். பயன் மறுமுறை வாயிலெடுத்ததுதான். இரவும் ஒன்றும் உட்கொள்ளாது அப்படியே படுக்கையில் புரண்டேன். என்னை மறந்து தூங்கினேன். இப்படி ஒரு நாள் கழிந்தது.

இன்று (21-5-48) சற்று தெளிவடைந்தேன். காலைக் கடன்களை முடித்துக்கொண்டேன். சற்று உலாவினேன். காலையில் எலுமிச்சஞ் சாறு அருந்தினேன். இன்று என்னை 'வாந்தி', 'மயக்கம்' ஒன்றும் பற்றவில்லை. எனினும் என் அறையிலிருந்த மருத்துவர் ஒரே மயக்கமாக வாயிலெடுத்துக்கொண்டிருந்தார். என் பக்கத்து அறையில் ஒரு மணமான புதுக் குடும்பம் தங்கி இருந்தது. அந்த அம்மையார் கடற்பிணியால் பெரிதும் வருத்தமுற்றார்கள். அவர் சற்று என்னைப்போல் தெளிவடைந்தவராய் எங்கள் அறைக்கு அடிக்கடி வந்து போனார். எங்களது அறைக்கு மூன்றாவது அறையில் ஒரு இளம் பெண் தனியாகப் பயணம் செய்துகொண்டிருந்தார். மலேயாவில் வாழும் தன் கணவனிடம் அவர் சென்றுகொண்டிருந்தார். அவரைக் கடற்பிணி நலிவுறுத்தவில்லை.

கடலின் தோன்மையும் வளமும் :

சற்று தெளிவடைந்தமையால் கப்பல் மேல் தளத்தில் ஏறி நாற்புறமும் நோக்கினேன். எங்கும் கருங்கடல் காட்சி அளித்தது. கடல் என்று எண்ணும்போது உளத்துக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறது தெரியுமா? இன்று நாம் வாழ்கின்ற மண்ணும், காண்கின்ற மலையும் எத்தனைகோடி ஆண்டுகள் இந்தக் கடலுள் மூழ்கிக் கிடந்தன! 'கல் தோன்றி மண் தோன்றாக்' காலமுதற் கொண்டு-அதற்கு முன்கொண்டு இந்தக் கடல் இதே மாதிரி அலைகளை வீசிக்கொண்டு ஓய்வு, ஒழிவு என்பதில்லாமல் இருக்கின்றதே. குழந்தாய்! இந்த உலகத்தில் முதல் கடல்தான் உண்டாயிற்று. பிறகு பலகோடி ஆண்டுகள் கழித்துத்தான் நாம் வாழும் நிலம் உண்டாயிற்று. நம் நாட்டு வட எல்லையாகிய இமயம் கடலுக்குள் இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் அதை எண்ணும்போது மற்றொன்றும் என் உள்ளத்தே தோன்றி வருத்துகின்றது.

இமயம் கடலுள் இருந்த காலத்தே தெற்கே தமிழ் நாடு எவ்வளவு விரிந்து இருந்தது தெரியுமா? இதோ நான் செல்லுகின்ற கடலெல்லாம் நிலமாய் இருந்ததே. இன்றைய குமரிமுனைக்குத் தெற்கே நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள் இருந்தனவே. மேற்கே மெடகாஸ்கர் தொடங்கி, கிழக்கே நான் போகும் மலேயாவும் தாண்டி ஆஸ்திரேலியா வரையில் தமிழ்நாடு இருந்ததே. இதோ கலம் செல்லும் இந்த இடத்தில் எத்தனை தமிழர் வாழ்ந்தார்களோ! அந்த அரும் பெரு நாட்டைக் கடல் கொண்டதைக் குறித்து எண்ணுங்கால் உளம் நைகின்றது. செய்வது என? இயற்கை விளையாட்டு அது! கடலுக்கும் தமிழ் மீது காதல் உண்டு போலும்!

மக்கள் தோற்றம் :

கடிதம் எழுதிக்கொண்டே கடலை எட்டிப் பார்த்தேன். பெரிய மீன் ஒன்று துள்ளிக் குதித்தது. மனிதனுக்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்டான உயிரினம் அல்லவா மீன்! மண்ணுக்கு முன் கடல் தோன்றிற்றல்லவா? அப்போது முதல் முதலாகக்

கடற்பாசியைப் போன்ற குறையுள்ள உயிரினம் உலவி, பிறகு முழு உயிருள்ளதாக மீன்தான் தோன்றிற்று. எனவே, முதல் உயிரினமாகிய மீன் இனம் என் கண்ணுக்குப் பெருவிருந்தாயிற்று. மீன் பலவகையில் பெருகிற்று. மீனிலே இருந்து பலப்பல உயிரினம் தோன்றின. ஏன், இன்றைய மனிதன் கூட மீனிலிருந்து தோன்றினவன் தான் எனப் பல அறிஞர்கள் முடிவு கட்டியுள்ளார்களே. மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்றால் உனக்குப் புரியும். ஆனால், குரங்கு எங்கிருந்து தோன்றிற்று? H. G. வெல்ஸ்போன்ற பேரறிஞர்கள் ஆய்வுக்கண்கொண்டு கண்டிருக்கிறார்கள். அனைத்துயிர்களுக்கும் முதலிடம் மீனும் கடற்பாசி போன்ற முதல் உயிரினமும் என்பது அவர்கள் முடிவு. அவற்றின் தோற்றத்திலிருந்தே இன்றைக்கு நாற்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் தோன்றி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். இவற்றையெல்லாம் ஆராய்வது உனக்கு விருப்பமாகவும் வேடிக்கையாகவும் இல்லையா? நீ இன்னும் அறிவு நிரம்பப் பெற்ற பிறகு அவை பற்றி எழுதிய நூல்களோடு பேசுவாய். அவை பலவற்றை உனக்கு விளக்கும்.

கப்பல் 'வாசனா' :

நாங்கள் செல்லுகின்ற கப்பல் தனிப்பட்டது. இத்துணைப் பெரிய கப்பலில் நாங்கள் பன்னிரண்டு பேர்தான் செல்கின்றோம். கப்பற் பொறி ஏதோ பழுதுற்றதென்றும் ஆகவே, அதிகச் சுமை கூடாதென்றும் முதல் வகுப்புக்கென்று பன்னிருவரை ஏற்றிக் கொண்டாள் 'வாசனா'. கப்பலைப் பெண்பால் இனத்தில் சேர்த்துள்ளார்கள் என்பதை நீ அறிவாயா? தன்னைச் சார்ந்த மக்களைத் தாயெனப் பரிந்து காத்து, விரும்பிய கரைக்குப் பாதுகாவலாகக் கொண்டு செல்லும் அவளைத் தாய் எனல் பொருந்தும். அவள் நடை, மிக மென்மையாக-அசைவாக-பெண் நடையாகத்தான் அமைகின்றது. அவள் மிக மெதுவாகத்தான் செல்லுகிறாள். பொறுமைக்கு எல்லை காணவேண்டில் இவள் மடியில் அமர்ந்து செல்ல வேண்டும். கப்பலோட்டிகள் பொறிக்கேட்டால் மெள்ளச் செல்வதாகச் சொன்னார்கள். ஆனால், நான் அவள் பெண்மைத் தன்மையால் ஒல்கி ஒசிந்து மெல்லச் செல்கிறாள் என எண்ணுகின்றேன்.

அந்த மென்மையில் தமிழ் மக்கள் வீரமும் காண்கிறது. திரண்டு வரும் அலைகடலைச் செல்க என்று தள்ளித், தன் மடியிடைத் துயிலும் மக்களை ஏந்தி அஞ்சா ஆண்மையோடு அலை கடலைத் தாண்டுவதைக் காணுங்கால் அவள் வீரம் தோன்றும்.

மலையாளமும், மலேயாவும்:

குழந்தாய்! என்னோடு பன்னிருவர் பயணம் செய்கின்றனர் என்று எழுதினேனே! அவர்கள் யாரென்று அறிய நீ ஆசைப்படுகிறுயல்லவா! ஆம்! நான் ஒருவன் தான தமிழன். ஒரு பஞ்சாபி. மற்றவர் அனைவரும் மலையாளிகள். இதற்கு முன் கப்பலிலும் கூட இவ்வாறு மலையாளிகள் தான் அதிகமாகச் செல்லுகிறார்களாம். மலையாளிகளெல்லாம் ஒருகால் தமிழராய் இருந்தவர்கள் என்பது உனக்குப் புதிதாக இருக்கலாம். சேர, சோழ, பாண்டியரைப் பற்றியும அந்த மூன்று தமிழ் அரசர்களும் தமிழ் நாட்டை ஆண்டதைப் பற்றியும் படித்திருக்கிறு யல்லவா! அவருள் சேரன் ஆண்ட நாடுதான் இன்று மலையாள நாடாக மாறிவிட்டது. 'சிலப்பதிகாரம்' உண்டாகிய நாடுதான் தற்கால மலையாள நாடு. ஆனல், அதுபற்றி அங்கு நினைப்பவர் இல்லை. தமிழிலே இருந்து சிதைந்த மொழியானது இன்று வடமொழிச் சேர்க்கையைப் பெருவாரியாகப் பெற்றுத் தமிழிலிருந்து மாறி விட்டது. எனினும் பல சொற்கள் தமிழாகவே உள்ளன.

மலையாளிகள் பலர் மலேயாவில் உள்ளனராம். கப்பற்றலைவர் ஒருவர் வேடிக்கையாகச் சொன்னார். 'மலையாளிகளாகிய நீங்கள் பெரும்பாலராக மலேயா சென்று, மலையாளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி, மலேயாவும மலையாளமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவே என்று பேசிவிடுவீர்களோ' என்றார் அவர். அனைவரும் சிரித்தோம். மலையாளிகள் எங்கெங்கு பொருள் வருவாய் உண்டோ, அங்கெல்லாம் செல்வதைப் பற்றிப் பேசிக் கொண்டோம். 'கால்டுவேல்' பல ஆண்டுகளுக்கு முன் தமிழரை அவ்வாறு சொல்லிவிட்டுச்சென்றான்' எங்கெங்கு பொருள் அதிகம் உண்டோ, வருவாய் உண்டோ அங்கே தமிழரைக்காணலாம் என்று, ஆனல், அது இன்று மலையாளி

களுக்குப் பொருந்தும். நீ உன் விடுதியிலேயே வேலைபார்ப்ப வரும் மேற்பார்வையாளரும் மலையாளப் பெண்கள் என்று கூறி இருக்கிறாய். சென்னையில் மலையாளிகளை எந்த இடத்திலுங்காணலாமே ஒருவேளை மலேயாவிலும் அப்படித்தானே என்று கேட்டேன். இல்லை என்றார்கள். ஒரு சில ஆண்டுகளாகத்தான் அவர்கள் கூட்டம் கூட்டமாக மலேயா செல்கிறார்களாம். அவர்கள் பெரும்பாலும் தோட்டங்களில் வேலை பார்க்கிறார்களாம்.

கடல்மேல் கலம் அசைந்துகொண்டிருக்கிறது. சூரியனும், திங்களும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கிறார்கள். இன்னும் நான் நிறைந்த தெளிவை அடையவில்லை. ஆகவே இன்று இதோடு என் எழுத்து முடிகிறது. நாளை நிகழ்ச்சிகளை விளக்கமாக எழுதுகிறேன்.

அன்புள்ள தந்தை,

அ. மு. பரமசிவானந்தம்

கடிதம் **2.**

சென்னைச் சிங்காரம்

22—5—48

அருமைக் குழந்தாய்!

நேற்று கலத்திடை நிகழ்ந்தவற்றை எல்லாம் மேலே எழுதியுள்ளேன். இன்று அனைவருமே சற்று தெளிவடைந்து காணப்பட்டார்கள். நான் கப்பல் முழுதும் சுற்றிப் பார்த்தேன். நன்கு பசி எடுத்தது. கஞ்சிதான் சாப்பிட்டேன் என்றாலும் நிறையச் சாப்பிட்டேன். இடை இடையே சற்று மயக்கம் வந்தாலும் நன்கு அனைவரிடமும் பழகினேன். கப்பலில் வேலைசெய்யும் நம்மவர்களும், பிற நாட்டவர்களும் மிக இனிமையாகவும், எளிமையாகவும், பழகுகின்றார்கள். சென்னையில், மக்கள் வாழ்க்கை முறை பற்றியும், அது அமைந்த வகைப்பற்றியும் சில நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அரசாங்கமும், நகராண்கழகமும் எவ்வெவ்வாறு நகரை வளம்படுத்த வேண்டும் என்

பதைப் பேசினேம். பல நாடு சுற்றி வந்த பெரியவர் ஒருவர் பெரும்சுமை இழுக்கும் சென்னையின் வண்டிக்காரனைப் பற்றிக் கூறிக் கண்ணீர் வடித்தார். அதுபற்றிச் சென்னையிலேயும் பலர் பேசுவதையும் எழுதுவதையும் கேட்டுத் தான் இருக்கிறேம். ஆனல், சென்னைச் சிங்காரமெல்லாம் செல்வர்களுக்குத் தானே! ஏழைகளுக்கு ஏது? சென்னைக்குள் எத்தனைப் புதுநகர்கள் உண்டாயினும் அவற்ருல் ஏழைக்கு என்ன பயன்? அவன் விண்ணே கூரையாய் நடுத் தெருவே வீடாகவன்றே வாழ்கை நடத்துகிருன் அவன் நிலையை ஒரு பெரியார் நன்கு விளக்கினர்.

குழந்தாய்! கப்பலுக்கு மேல் தளத்தில் அருமையான ஒரு இடம் உள்ளது. அதில் ஒரு நூல் நிலையம் இருக்கிறது. படிக்க வசதிகள் இருக்கின்றன. அங்கிருந்து கொண்டுதான் நான் இந்தக் கடிதங்களை உனக்கு எழுதுகிறேன். பலரும் இங்கே கூடித்தான் பேசுகிறேம். அவற்றுள் ஒருவர் பேசினதைத்தான் மேலே சொன்னேன்.

பொருள் மனிதனுக்கா? மனிதன் பொருளுக்கா?

எனது அறையிலுள்ள மருத்துவர் இன்னும் தெளிவடையவில்லை. பலமுறை கப்பலில் சென்ற அவர் இப்படி வருந்துவது ஏனே என்பது எனக்குத் தெரியவில்லை. அவர் தன் வருத்தத்தில் சொன்னர்; 'மனிதன் பணத்துக்காக எல்லா நலன்களையும் இழக்கிருன்,' என்று. அவர் மலையாளத்தே பிறந்து மலாய் நாட்டில் மருத்துவ வேலை செய்கின்றவர். பொருள் கருதித்தானே அங்கே போகிறேம் என்ற எண்ணம் உண்டாயிற்று. மனைவி மக்களையெல்லாம்விட்டு இப்படித் தனிமையாக வருந்த வேண்டுவது எல்லாம் பொருளுக்காகவன்றே என்று உள்ளம் உடைந்து கூறினர் அவர். ஆம்! அவர் கூறியது உண்மைதான். பிறந்த நாட்டிலே பெற்ற பொருளைக் கொண்டு வாழலாம் என எண்ணுதவர்தானே பிறநாடுகள் புகுந்து பெரும்பொருள் ஈட்டுகின்றனர். பொருள் மனிதனுக்கா, மனிதன் பொருளுக்கா என்பதே அறிய முடியாத படியல்லவா இன்றையவாழ்க்கை இருக்கிறது. மனிதனுக்கு வேண்டிய எல்லா நலத்தையும்- இன்பத்தையும் தர அல்லவா பொருள். அத்தகைய பொருள் மிகுதியாகப் பெற்றிருந்தும் பலர் மேலும் மேலும் உடல் வருந்தி உயிர்

வருந்திப் பொருள் பெருக்க ஓடுவானேன்? இல்லாதவர்கள்தான் வேறு விதியில்லை, வயிற்றுப் பிழைப்புக்காக ஓடுகிறார்கள் என்றால், இருக்கின்றவர்கள் அவர்களுக்குமேல் பேயாய்ப் பறப்பானேன்? இப்படி ஓடி ஓடிப் பொருள் பெருக்க வேண்டும் என்ற தனி மனிதன் உள்ளத்தே தோன்றும் உணர்ச்சி, நாட்டுணர்ச்சியாகிப் பிறகு போருக்கு வழி செய்கிறதே! இன்றைய உலகநிலையே இது. தன் வாழ்வுக்கு வளம்படவேண்டியது பொருள் என்பதை மறந்து, தன் வாழ்வே பொருளைப்பெருக்க என்று மனிதன் அலைகிறான். இந்த நிலைமாறினால் தான் நாடு செழிக்கும்; உலகம் வாழும்.

உணவிலும் வேறுபாடு :

கண்ணே! உனக்குப் புரியாததை எல்லாம் எழுதுகிறேன் என்று எண்ணாதே! அவற்றை எல்லாம் நீ எண்ணிப் பார்க்கும் நாள் எதிரில் உள்ளது. நிற்க, பன்னிருவர் கலத்தில் சென்றோம் என்று கூறினேன். அவருள் நான் ஒருவன்தான் மரக்கறி உண்பவன். மற்றவர் யாவரும், மாமிசம் உண்பவர்கள். ஆனால் ஒருவர், என் அடுத்த அறையில் இருப்பவர். உடல் நலம் இன்மையால் இந்திய மரக்கறி உணவு கேட்டார். ஆங்கில உணவு உண்பவருக்கும், இந்திய உணவு உண்பவருக்கும், பல வகையில் வேறுபாடு உண்டு. அவர்களுக்குக் காலை 6-மணிக்கெல்லாம் 'டீ', 9-மணிக்குச் சிற்றுண்டி, 1-மணிக்கு நல் உணவு, மாலை 4-மணிக்குச் சிற்றுண்டி, இரவு உணவு. உணவும் மிகச் சிறந்திருக்கும். எங்களுக்கு காலை 7-மணிக்குச் சிற்றுண்டி. 11-மணிக்குச் சாதாரணச் சாப்பாடு, 4-மணிக்குச் சிற்றுண்டி. இரவு உணவு. அவர்கள் உணவு இருபது ரூபாயானால் எங்கள் உணவு இரண்டு ரூபாய்தான். அதுபற்றி அந் நண்பருக்குக் கோபம் வந்தது. அவர் காலையில் 'டீ' வேண்டும் என்று கேட்டாராம். இந்திய உணவுக்குக் கிடையாது என்றார்களாம். நாங்கள் அதே பணம்கொடுத்தும், குறைந்த மதிப்புள்ள இந்திய உணவை உண்டபோதிலும் எங்களுக்கு 'டீ' இல்லையே என்று வருந்தினார். அவர் கேட்பது முறைதானே! உணவுதான் குறைபட்டது என்றால் 'டீ' கூடவா இல்லாதிருக்க வேண்டும். கேட்டால் வேண்டுமானால் நீங்களும் அந்த ஆங்கில

உணவே கொள்ளுங்கள் என்கிறார்கள். அது அவருக்கு ஏற்காது.

நான், ஒருவேளை முதல் வகுப்பு பரங்கியருக்குத்தான் ஒதுக்கப்பட்டதாயிருக்கலாம், அதில் நாம் வந்தது தவறு என்று சொன்னேன். அவருக்குக் கோபம் வந்தது. 'நம் நாட்டில், அதுவும் சுதந்திரம் பெற்ற நாட்டில் நாம் அவமதிக்கப்படுவதா? நாமே கப்பல் கட்டி அதில் முதல்வகுப்பின் உயர்ந்த இந்திய உணவை ஏற்பாடு செய்து, அவர்களுக்குத் தாழ்ந்ததைக்கொடுத்து அவமானம் செய்யவேண்டும்' என்றார். நல்லது என்றேன். 'ஜல உஷா' அதற்கு முன் எச்சரிக்கையாகத்தான் மிதக்க விட்டார்கள் போலும் என்றேன். அவர் உடனே 'இந்தியர் இன்னும் அதிகமாக ஆங்கிலேயரைத்தான் கவனிப்பார்கள்' என்றார். 'ஆம்! அது இந்தியன் அடிமை மனப்பான்மை' என்றார், உடன் இருந்த மருத்துவர் நாங்கள் சென்றது ஆங்கிலேயருடைய கப்பல் (British India Stream Nanigation) ஆனதால் பேச்சு அவ்வளவு வளர்ந்தது. ஆங்கிலேயரை அவர் கூறியவாறு இந்தியன் பழிவாங்குவானா அல்லது இன்னும்பாதம் பணிவானா என்பதை இனி நீயும் காண்பாய்.

கப்பலில் வேறு வகுப்புப் பயணத்தார் இல்லாமையால் அமைதியாக இருந்தது. ஆனால் கடல் அலைகள் ஓயாது வந்து வந்து சென்றுகொண் டிருந்தன. அலைகள் என் கண்ணைவிட்டு அகலா நிலையில் இன்னும் மேலும் மூன்று நாட்கள் நான் செல்ல வேண்டியுள்ளது. 26—5—48-ல் தான் சிங்கபூர் போகும் என்றார்கள். சிங்கப்பூர் போகும் வரை எழுதும் எல்லாக் கடிதங்களும் ஒன்றாகத்தான் வரும். ஆதலால் வேறு இருப்பின் நாளை எழுதும் கடிதத்தில் எழுதுகிறேன்.

கடிதம் 3.

23—5—48

அருமை அரசி!

முன் கடிதம் நேற்றுப் பகலே முடித்துவிட்டேன். நேற்று மாலை நான் முழுநலம் பெற்றுவிட்டேன். கப்பலில் கண்ட பல நண்பர்களுடன் பல பொருள்களைப் பற்றிப்

பேசிக் கொண்டிருந்தேன். மலாய் நாட்டின் பல்வகை வளங்களைப்பற்றி அவர்கள் விளக்க உரைத்தார்கள். அவற்றை எல்லாம் நேரில் கண்டு பின் எழுத இருக்கின்றேன். ஆதலின் இங்கு அதிகம் எழுதவில்லை.

நிறைமதியில் நெடுங்கடல்மேல் :

குழந்தாய் !

நேற்று நிறைமதி அல்லவா. மாலை 6-மணிக்குக் கப்பலின் மேல் தளம் சென்றேன். திங்கள் தனது முழுக்கதிர்களோடு வெளிவந்து. ஆனால் முழு இன்பத்தை என்னால் அனுபவிக்க முடியவில்லை. மேகங்கள் தோன்றித்திங்களை மூடிக்கொண்டன. அனைவரும் மேல் தளத்தில் சிறிது நேரம் வீற்றிருந்தோம் பலவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். சிங்கப்பூர் வானொலி நிலையத்தைச் சேர்ந்த ஒருவர் நண்பரானார். அவர் மலையாளிதான். ஆனால் ஆங்கிலத்தைப் புதிய உச்சரிப்புடன் பேசுவதில் பேரார்வம் கொண்டவராக இருந்தார். அவரிடம் சிறிது நேரம் பேசிக்கொண் டிருந்தேன். மலேயா வானொலி அமைப்புகளைப்பற்றி அறிந்து கொண்டேன். பிறகு சற்று அமைதி !

நான்கு நாட்களாக நலிவுற்றதால் உடல் மிகச் சூடாகி இருந்தது. ஆகவே எண்ணெய் தேய்த்துக் கொள்ள விரும்பினேன். கப்பல் மருத்துவர் நமது ஊர்த் தமிழ் அந்தணர் அவர் நன்கு என்னிடம் பழகினார். அவர் எண்ணெய், சீயக்காய் வாங்கித் தருவதாக அழைத்துச் சென்றார். பொருள் காப்பார், எண்ணெய் சீயக்காய் கொடுத்தார். நானும் மருத்துவரும் அவர் அறைக்குச் செல்லும் போது, மேல் தளத்தில் பால் நிலா முகிழ்த்தது. அத்துடன் அக்கப்பலில் பணிசெய்வார் ஒருங்கு கூடித் தாளம், மேளம் முதலியவற்றோடு பாடிக்கொண்டு மதி ஒளியை நன்கு அனுபவித்துக்கொண் டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் கொங்கணவர்கள். அவர்கள், அவர் மொழியில் ஏதேதோ நாடோடிப்பாடல்களை பாடிப் பெருந் தாளங்களால் ஒலி எழுப்பிக்கொண் டிருந்தனர். நமது ஊரில் ஒரு பத்து இருபது ஆண்டுகளுக்கு முன் பஜனைகள் அந்த முறையில் கூச்சலாகத் தான்நடக்கும். வெறும் தாள

மும் மேளமும்தான் பஜனை என்று அவர்கள்நினைத்தார்கள். ஆண்டவனை அன்பால் வணங்குவதுநீங்கி ஆரவாரமிகுதியே ஆராதனை ஆயிற்று. நம் ஊரில்காணும் பெரிய விழாக்களெல்லாம் ஆரவாரத் தன்மையனவே! உளத்தில் அன்பு இருந்தால் போதும். ஆரவாரப் பாட்டும் அதுபற்றிய பஜனையும் வெளிமயக்கேயாகும். இது எல்லாச் சமயங்களும் கண்ட உண்மை.

உடல் நல முற்றதாலும் பல நண்பர்கள் விரும்பினதாலும் இரவு நெடுநேரம் வரை வேடிக்கையாகப் பொழுது போக்கிக்கொண் டிருந்தோம். இன்று நன்கு உண்டேன். எண்ணெய் தேய்த்துக் கொண்டேன். தனியே சிறிது நேரம் திருவாசகம் படித்தேன். கட்டுரைகள் எழுதத் தொடங்குகிறேன். நன்கு படிக்கிறேன். சிங்கப்பூர் வியாழன் போய்ச் சேருவேன்.

கடிதம் 4.

அசையாக் கடல்
24—5—48

அருமை அரசி!

நேற்றைய கடிதத்தின் தொடர்ச்சியாகவே கொள்க. இன்று காலை எழுந்து கடலை நோக்கினேன். வியப் பெய்தினேன். நாம் இருப்பது கடலா தரையா, என்று முடிபு செய்யக்கூடவில்லை. பரந்த கடலானது சிறு அசைவும் இல்லாது ஒரே படித்தாய் நிலைத்து நின்றது. நம் ஊர்ச்சிறு வாய்க்காலிலாவது அசைவு இருக்கும். இப்பரந்து ஆழ்ந்த கடலில் சிறு அசைவும் இல்லை. மகிழ்ந்து மகிழ்ந்து கடலை நோக்கினேன். ஆழ்ந்த அறிவுடையார் இத்தகைய அமைதியில்தான் வாழ்வார்கள் என்று அறிவுறுத்திற்று கடல். ஆழ்ந்த கடல் நோக்கி நெடுநேரம் நின்றேன். பிறகு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்தேன்.

'சுமத்திரா' தெரிந்தது :

காலை எட்டு மணிக்கு, முதன் முதலாகத் தெற்குப் பக்கத்தே ஒரு மலை தெரிந்தது. நாம் ஏதோ நிலத்தின் அருகே இருக்கிறோம் என்பதை மட்டும் உணர்ந்தேன்.

சிறிது நேரம் கழித்து ஒரு பெரு மலைத்தொடர் வெகு தொலைவில் தெற்கே காட்சி அளித்தது. அது ஒரு பெரு நிலமாக இருக்கும் என்று எண்ணினேன். அனைவரும் கண்டனர். ஐந்து நாட்களுக்குப் பின் - கடலையே கண்டு கண்டு சலித்த எங்களுக்கு, மலைத் தொடர் மகிழ்ச்சி யூட்டிற்று. பிறகு அந்த மலைத்தொடர் 'சுமத்ரா' தீவினில் இருப்பதென்றும், நாம் அத்தீவின் அருகில் வந்து விட்டோம் என்றும் அறிந்தேன். சுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளை எண்ணும் காலத்துப் பண்டைத் தமிழன் பெருமையை எண்ணாதிருக்க முடியவில்லையே. அவன் கடல் மேல் கலம் செலுத்தி, இத்தீவுகளை யெல்லாம் தன்னதாக்கி வாணிப வளனைப் பெருக்கி வாழ்ந்தானே! அன்றைய அருந் தமிழன் எங்கே? இன்றைய இழிநிலைத் தமிழன் எங்கே?

மலைத்தொடர் மிக நீண்டதாகக் காணப்பட்டது. பல பறவைகள் கடல்மேல் பறந்தன. ஒரு பறவை வேடிக்கை யாக மீன்களைப் பிடித்துக்கொண் டிருந்ததைக் கண்டோம். ஒரு கப்பல் தென் மேற்கிலிருந்து எங்கள் கப்பல் பக்கமாக வந்துகொண் டிருந்தது. அது பொருள் ஏற்றும் கப்பல் என்று அறிந்தேன். அது எங்களுக்குப் பின்னால் எங்களைத் தாண்டி வடகிழக்காகச் சென்றது. 'பினங்கு' செல்வது அது என்று கூறினார்கள். எனவே நாங்கள் பினங்கு செல்லும் வழியையும் கடந்துவிட்டோம் எனவும், இரண்டு நாளில் சிங்கப்பூர் செல்வோம் என்றும் கூறினார்கள். கடலிலிருப்பது மகிழ்வை விளைப்பினும், கரைசேர வேண்டும் என்ற விருப்பால் மகிழ்ந்தேன். சுமத்திராவிலுள்ள மலைதொடர்கள் மாலைவரை காட்சி அளித்துக்கொண்டே வந்தன.

கப்பல் நிர்வாக நிலை :

உடல் நிலை சற்று சூடாயிருந்ததால் கடல் நீரால் தொட்டியை நிரப்பி அதில் மூழ்கி நெடுநேரம் இருந்தேன். பிறகு இந்திய உணவு உண்ணும் சிலரும், அதிலே மரக்கறி உண்ணும் நானும் கூடிச்சென்று கப்பல் அதி காரிக்கு எங்கள் குறையை உணர்த்தினோம். அதே அளவு தொகை கொடுத்து, அரைக்கால் பாக உணவு வகைகூடப் பெறவில்லை என்றால் என் செய்வது? எனது மரக்கறி

உணவு செய்ய ஒரு ஐயர் இருந்தார். கப்பலில் மரக்கறி உணவு செய்வது அவர் வேலையாம். நான் அவரிடம் நேரில் சென்று உணவு நன்றாக இல்லையே என்றேன். அவர், 'கப்பலில்' ஒன்றும் கொடுப்பதில்லை உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, கடுகு, நல்லெண்ணெய் பல திங்களாகக் கிடையாது. அவை வந்து ஆறு திங்களாயின பின் உணவு எப்படி இனிக்கும், என்றார். நான் உண்மை தானே என எண்ணி இரக்கங்கொண்டேன் அவர் 1930 திலிருந்து இந்த வேலை செய்கிறாராம். இத்தகைய சுவை யற்ற உணவை இத்தனை நாளும் பயணம் செய்தவர்கள் எப்படி உண்டார்களோ என்று அவர்களுக்காக இரங்கி னேன். ஆனால் பிறகு பொருள் காப்பாளரிடம் வந்து கேட் டபோது, இரண்டொரு பருப்புத் தவிர எல்லாம் இருக்கின் றன என்றும், நல்ல பலகாரங்களுக்கு வேண்டிய பொருள் கள் பல இருக்கின்றவென்றும், சோம்பேறித் தனத்தால் அவர் ஒன்றும் செய்வதில்லை என்றும் சொன்னார் எனக்கு எல்லாம் வியப்பாக இருந்தது. ஆனால் ஒன்றுமட்டும திட்டமாக விளங்கிற்று. பயணம் செய்வோர்க்குப் பயன்பட வேண்டிய பொருள்கள் எப்படியோ யாராலோ கப்பலில் மறைக்கவோ கெடுக்கவோ படுகின்றன என்பது நன்கு விளங்கிற்று. அவ் வகையில் கப்பல் அதிகாரிகள் கருத்திருத்த வேண்டும்.

செல்வி!

எங்கள் கப்பல் மருத்துவர் தமிழர் என்றும், நல்லவர் என்றும் முன்னே எழுதி இருக்கிறேன். இன்று மாலை எங்களை எல்லாம் அவர் அழைத்துக்கொண்டு கப்பலின் பல பகுதிகளையும் காட்டினார். மூன்றாவது வகுப்புப் பயணத்தார் ஒருவரும் இல்லையாதலால் எல்லா இடத்திற் கும் நாங்கள் செல்வது எளிதாக இருந்தது. இரண்டாயிரத் துக்குமேற்பட்டவர் உடன்வருவார்களானால் கப்பல் நிலையே வேறாக இருந்திருக்குமாம். நாங்கள் எல்லாவற்றையும் நன்கு சுற்றிப் பார்த்தோம். கப்பலில் வேலை செய்யும் பிறநாட்டு ஏழை மக்கள் ஓய்வு நேரத்தை வீணாக்காது 'பீடி' சுருட்டும் தொழிலில் காலம் கழித்தனர். ஆனால் தமிழ்ப் பணியாளர்கள் வீண் பொழுது போக்கிக்கொண்

டிருந்தார்கள். ஒவ்வொரு அறையாகச் சென்று பார்த்துக் கொண்டே போனோம்.

ஒரு பக்கத்தே ஏழெட்டு ஆடுகளும், சில கோழிகளும் இருந்தன. அவை சிங்கப்பூர் செல்வதற்குள் மக்கள் வயிறு களில் அமைதிபெறும். அவை அலறின. நான் என் செய்யக் கூடும்? என்னைத் தவிர மற்றவர் அனைவரும் அவற்றை அன்போடு அடிவயிற்றில் அணைப்பவராயிற்றே! அவற் றின் பார்வைக்கு இரங்கினேன். கண்கள் நீர் சொரிந்தன. அவற்றைக் கடந்தோம். பொறி அறையையும் பிற எல்லா அறைகளையும் எங்களுக்கு மருத்துவர் காட்டிக்கொண்டே வந்தார். இரண்டு பொறிகளில் ஒன்று பழுதுற்றமை யால்தான் மிக மெதுவாகக் கப்பல் செல்கிறது என்றார். பொறியினை இயக்க எட்டு ஆங்கில நாட்டுப் பொறியாளர் கள் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் தம் பணியைத் திறம்பட ஆற்றினர்.

பேசும் ஒளி:

மாலையில் சில கப்பல்கள் கிழக்கும் மேற்கும் .போய்க் கொண்டிருந்தன. இரவானதும் ஒன்றோடு ஒன்று பேரொளியால் அறிக்கைகள் விட்டுக் கொண்டன அவை பேசின பேச்சை யானறியேன். பொறியாளர் புரிந்து கொள்வர். குழந்தாய்! ஒளியால் உலகை ஆளு தல் கூடும். கடந்த போரிலே ஒளியிட அஞ்சிச் சென்னை நகர விளக்கெல்லாம் சீரழிந்தனவே. ஒளி பகைவருக்குக் காட்டியும் கொடுக்கும்; பகைவரை வீழ்த்தவும் பயன் படும். சில சமயங்கள் நமது ஊர் உந்து வண்டிகளில் (Bus) சில காவற் கூட அலுவலர் ஏறிவரின், அதை எதி ரில் வரும் வண்டிக்கு அறிவிக்க, பகலிலே-ஓட்டுபவர் விளக்கைப் போட்டுக் காட்டும் வழக்கம் இன்னும் நீ அறி யாய்! ஒளி, காட்டவும், வாட்டவும் பயன்படுகிறது. சூரிய னது பேரொளி இல்லையெனில் உலகமே இல்லை. எனவே எல்லாம் ஒளியாலாயது. ஒலியாலாயதும் கூட. கப்பல் களின் ஒளிப்பேச்சு அதை இயக்குபவருக்குத்தான் விள ங்கும்.

வீரன் சுபாஷ்:

இரவு நெடுநேரம் பேசிக்கொண் டிருந்தோம் என்னைத் தவிர அனைவரும் மலேயாவிலேயே பணி

யாற்றி வாழுபவர்கள். அவர்கள் ஐப்பான் போரை யெல்லாம் கண்டவர்கள். போரைப் பற்றிப் பேசிவரும் காலத்து அவர்கள் 'சுபாஷ்சந்திரபோஸைப்' பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அவர்களை அறியாமலே, அவர்கள் உணர்ச்சி வயப்பட்டார்கள். அவர்தம் ஆற்றலையும், ஆணையையும், உணர்ச்சி மிகுந்த பேச்சுப் பெருக்கினை யும், பிற அருஞ்செயல்களையும் அடுக்கி அடுக்கிப் பேசிக் கொண்டே சென்றார்கள். நான் என்னை மறந்தேன். அந்தோ! இன்று அவர் இருந்திருப்பின் இக் கப்பலில், இந்திய மண்ணிலிருந்து புறப்படும் கப்பலில் இந்தியன் புறக்கணிக்கப்பட மாட்டான் என்பது உறுதி.

நல்ல செல்வி! உனக்கு 'சுபாஷ்' பற்றி அதிகமாகத் தெரியாதே. அன்று நீ சிறு குழந்தை. ஒரு புறம் ஜர்மனி யும், ஒருபுறம் ஜப்பானும், ஆங்கில வல்லரசைத் தாக்கிய காலம் அது. அந்த நாளில் நாட்டு விடுதலைக்காக அனைத் தையும் விட்ட அந்த நல்லவன் பல தடைகளைத் தாண்டிப் போர் அரண்களைப் பின்னாக்கி, காட்டையும் மலையையும் கடந்து ஒருவரும் அறியாதபடி ஜர்மனி சென்று, பிறகு கீழ்த் திசை வந்து ஒரு அரும் படைக்குத் தலைவனானான். அவரது படைத் திறனைக் கப்பலில் உள்ளார் கூறிக் கூறி வியக்கின்றார்கள். இன்று அவன் இருப்பின் நாடே வேறு நிலையில் இருக்கும். இனி அவன் வரான் என்பது பலரும் கூறுகிற உறுதி.

நாடென்றும், காங்கிரஸ் என்றும் கூறும்போது தற் போதைய அரசியல் நிலை சிறிது உனக்கு நினைவு வரும். இன்றைக்கு காங்கிரஸில் பலர் சேரலாம். பட்டம், பதவி பெற. முன்னே காங்கிரசைக் காட்டிக் கொடுத்த அதே பெரியவர்கள், தம் 'சர்' பட்டம்போன்ற வற்றையும் விட்டு வரலாம். அவர்களை அணைக்க அவர்களைப் போன்ற சிலரும் இருக்கலாம். போஸ் இருப்பாரேயானால் அப்படி வரும் சமய சஞ்சீவிகளைச் விட்டுத் தள்ளுவர். அது வீரம் கூட. இப்படிக் காட்டிக் கொடுத்து, நாட்டைப் பாழாக்கி வாழும் ஒரு சில சுயநலத்தார் வேண்டுங்கால் வேண்டிய நடிப்பை மேற் கொண்டு வாழ்வதிலும், ஒழிந்து வீழ்வதேமேல். எங்கெங்கோ சென்றேன்! குழந்தாய்.

இன்றைய காங்கிரஸ்காரரும் பெரும்பாலோர் பதவி வேட்டைக்காரர்கள் என்பதை நம் சென்னையிலே பல காங்கிரஸ்காரர்களே பேசக்கேட்கிறோமே. ஆனால் போஸ் அவற்றை ஒன்றும் கருதாது, வெற்றி காணா அந்த வேதனை நாளிலே அனைத்தையும் விட்டு, அன்னை நாட்டுப் பணியினையே மேற் கொண்டு, காடு மலை கடந்து வாடி வருந்தி, வல்படை வகுத்து, நாட்டை மீட்கமுயன்றார். வான் வழிச் செல்லுங்கால் விமானக் கோளாறினால் இறந்தார் என்ற செய்தி வர வர உறுதியாகப் படுகிறது. இருப்பின் இத்துணை நாள் வந்திருப்பாரே.

இத்தகைய அரும் பெரும் தலைவரைப் பற்றிப் பேசிய அந்த மலேயா வாழ் நம் நாட்டு மக்களது சொற்களைக் கேட்டுக் கொண்டே கப்பலில் மேல் தளத்திலேயே படுத்து உறங்கினேன். எங்கள் அறையில் நன்கு காற்று வாராமையால் நானும் என் அறையிலுள்ள மருத்துவரும் மேல் தளத்திலேயே உறங்கினோம். நாளைத் தொடர்ந்து எழுதுகிறேன்.

கடிதம் 5.

26—5—48

அருமைக் குழந்தாய்!

கப்பலிலிருந்து எழுதும் கடைசிக் கடிதம் இதுவாகத்தான் இருக்கும். இதோ எனக்கு எதிரில் ஐந்து கல் தொலைவில் 'மலாக்கா' விளக்குகள் நன்கு எரிந்துகொண்டிருக்கின்றன. நான் உங்களிடம் மலாக்கா முகவரியும் கொடுத்து வந்திருக்கிறேனே. சிங்கப்பூர் சென்று பின் மலாக்காவுக்கோ, கோலாலம்பூருக்கோ செல்வேன். நாளைக் காலை 9 மணிக்குள் சிங்கப்பூரில் இருப்பேன். பிறகு அழைத்தவர் வழியே அவர் பணி ஆற்றுவேன்.

திராவிடர் நாகரிகம் :

இன்று காலை முதல், கப்பல் கரை யோரமாகவே வந்து கொண்டிருக்கிறது. பல ஊர்களைக் கண்டோம். கீழ்ப் பக்கத்தே பல 'ரப்பர்'த் தோட்டங்கள் காட்சியளித்தன. மேல் பக்கத்தில் சிற்சில இடங்களில் பனை மரங்கள்

தெரிந்தன. எனினும் மேல்ப்பக்கத்தே பெரு நிலப்பரப்பு ஒன்றும் தெரியவில்லை. சாதாரணமாகத்தான் நேற்றும் இன்றும் கழிந்தது. நேற்றுப் பகல் அனைவரும் பேசிக் கொண்டு இருந்தோம். வரலாற்றைப் பற்றிய பேச்சு அது. கபாடபுரத்தைப் பற்றியும் தென்மதுரையைப் பற்றியும் பலர் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், நம் திராவிட நாகரிகம் எகிப்திய கிரேக்க நாகரிகங்களைப் போல் மிகப் பழையதென்றும், ஆரிய நாகரிகத்துக்கு முந்தினது என்றும் ஒத்துக்கொண்டார்கள். திராவிடர் கலைநலமும், பிற நாகரிகப் பண்பாடுகளும் மற்ற கலைப் பண்பாடுகளுக்கு முந்தின என்பதை ஏற்றுக்கொண்டார்கள். முடிவில் அனைவரும் ஒரு முடிவாகக் கூறியது இந்திய நாட்டு வரலாறு எழுதும் வரலாற்று ஆசிரியர்கள், தென்னாட்டுத் திராவிடர் வரலாற்றைப் புறக்கணிக்கின்றனர் என்பதே. கப்பலில் பணியாற்றும் 'வில்லியம்' என்ற இந்திய ஆங்கிலேயரும், உடன் இருந்த ஒரு பஞ்சாபியும் அது பற்றி மிக வருந்திக் கூறினர். நம் நாட்டு ஆங்கிலமும் தமிழும் நன்கறிந்த அறிஞர்கள் அவ்வழியில் கருத்திருத்துவார்களேயானால் நம்நாட்டுப்பழம் பெரு நாகரிகம் உலகுக்கு நன்கு விளக்கப் படலாம். ஆனால் அவர்கள் செய்ய முன் வரவில்லையே!

செல்வி! இரண்டுநாளும் கடலின் மேல் தளத்தே ஒரு வகைப் பந்து விளையாட்டு விளையாடினோம். நன்கு வியர்த்த பின் தொட்டி நீரில் சிறக்க மூழ்கினேன். நன்கு உண்டு உறங்கினேன்.

என்னைத் தவிர மற்றவர் அனைவரும் மலேயாவில் பணியாற்றுவோர். ஆதலால் அனைவரும் தம் தம் இடத்தை அடைகின்றோம் என்ற மகிழ்ச்சியில் திளைத்தனர். பாலும் தேனும் பாய்ந்தோடும் மலேயா அடைந்து விட்டோம் என்று மகிழ்ந்தனர். நானும் அந்நாட்டைக் காணப்போகின்றேன் என்ற மகிழ்ச்சியில் திளைப்பினும் தாய்நாட்டை விட்டு நெடுந்தொலைவில் உள்ளதை நினைத்தேன். இன்று புதன் கிழமை அல்லவா? சரியாக ஒரு வாரத்துக்கு முன் சென்னைக் கரையில் கப்பல் புறப்படும் காலத்து உன் அன்னை கசிந்து நின்ற காட்சி என் கண் முன் வந்தது. ஒரு வாரமாகக் கப்பல் ஓய்வு இன்றி மெது

வாக மணிக்கு எட்டுக் கல் வீதம் வந்துகொண்டே இருக்கிறது. ஒரு இடத்திலும் நிற்கவில்லை.

மலேயா ஜலசந்தியில் :

நேற்றும் இன்றும் பல கப்பல்கள் குறுக்கும் நெடுக்குமாகச் சென்றுகொண் டிருந்தன. இரண்டு நாட்களாகத் தான் கப்பலில் பிணி இல்லை. ஆடவர் பெண்டிர் அனைவரும்—பன்னிருவரும்—மேல் தளத்தில் சிறிது நேரம் தங்கி இருந்தோம். கப்பல் மருத்துவர் ஒருவர்தான் என்னிடம் தமிழில் பேசமுடியும். மற்றவரோடெல்லாம் ஆங்கிலத்திலேயே பேச நேர்ந்தது.

நாளை கப்பலிலிருந்து இறங்குவேன். நான் வந்த கப்பலுக்கு 'வாசனு' என்று பெயர் என முன்னமே குறித்துள்ளேன். ஆங்கிலேயருக்குச் சொந்தமான கப்பல் இது. இதில் பணியாற்றும் பெரும் பொறியாளரெல்லாம் ஆங்கிலேயர். கோவாவைச் சேர்ந்த 'கொங்கணி' மொழி பேசும் பலர் இதில் பணியாற்றுகின்றனர். ஒரு சில பணியாளர்கள்தான் தமிழர்கள் கப்பலில் பெரும்பாலும் கண்ணைத் துயின்றவண்ணமே காலத்தைப் போக்கினேம். கப்பல் அசைவிலும், கடற்பிணியிலும் வேறொன்றும் செய்ய இயலவில்லை. நான் உனக்கு எழுதிய இந்தக் கடிதங்கள் தவிர வேறு பத்துப் பக்கங்கள்தான் எழுதினேன். ஆனால் நான் புறப்படும் போது இந்தப் பயணத்தில் ஒரு பெரும் நூல் எழுதி முடிக்கலாம் என எண்ணி இருந்தேன். என் அறையில் மேசை நாற்காலி போடாததைக் கூடக் குறையாகச் சொன்னேன். ஆனால் பிறகு அசையும் கப்பலில் அவற்றின் தேவை இன்மையை அறிந்தேன். ஒரு சிலர் சில நூல்களைப் படித்தனர். பெரும்பாலோர் வேடிக்கைப் பேச்சிலும், காகித ஆட்டத்திலுமே காலத்தைக் கழித்தார்கள். கப்பல் அதிகாரிகள் அனைவருமே எங்களிடம் அன்பாக நடந்து கொண்டனர். நான சாதாரண உடையில்தான் (மேல் அங்கியும் இன்றி) இருந்தேன். அதனால் குறைவு ஒன்றும் பெறவில்லை. அனைவரும் என்னைப் பேராசிரியர் என்றே அழைத்தார்கள். கப்பலிலே இருந்து கூடத் தந்தி கொடுக்கவும், வாங்கவும் வசதி உண்டு. நான் தேவை இல்லாததால் தந்திகொடுக்க

வில்லை. நாளை சிங்கப்பூரில் இறங்கி என்ன செய்யவேண்டும் என்பது எனக்கே தெரியவில்லை. 'வருக' என அழைத்தவர்கள் அங்கே வந்திருப்பார்கள். அவர்களின் கைப்பாவையாகவே மலேயாவில் என் நாட்களைக் கழிப்பேன். மலேயாவாழ் தமிழர்களைக் கண்டு, அவர் தம் வாழ்வின் நலம் அறிந்து அன்றுடம் கடிதம் எழுதுவேன். அனைத்தும் வான்வழி விமானத்தின் மூலம் அனுப்பி வைக்கிறேன்.

பார்க்க வேண்டியவை பல!

குழந்தாய்! மலேயாவில் பார்க்க வேண்டியவை பல உள்ளனவாம். உடன் வருபவர்கள் பலவற்றைக்குறித்துள்ளார்கள். அவற்றை எல்லாம் கண்டு கண்டு அவ்வப்போது எழுதுகின்றேன். பல உனக்குப் புதிதாக இருக்கலாம் 'ரப்பர்' உற்பத்தி, ஈய உற்பத்தி ஆகியவை பார்க்க வேண்டியவை. பினங்கில் நாகர் கோயில் உண்டாம். அதில் பல பாம்புகள் இருக்குமாம். பலர் சுற்றிச் செல்வார்களாம். அவை குறுக்கு நெடுக்காகச் செல்லுமாம். ஆனால் ஒன்றும் செய்யாவாம். அவற்றையெல்லாம் நேரில் கண்டு அவ்வப்போது எழுதுகின்றேன்.

நாளை எங்கிருந்து கடிதம் எழுதுவேன் என்று எனக்குத் திட்டமாகத் தெரியவில்லை. இதை நாளைத் தபாலில் சேர்ப்பேன். மறுநாள் முதல் தொடர்ந்து கடிதங்கள் அனுப்பிக் கொண்டே இருப்பேன். காலை சிங்கப்பூர் சேர்ந்து அதன் நலமெலாம் கண்டு அடுத்த கடிதத்தில் திட்டமாக எழுதுகின்றேன். கடற்பயணம் மொத்தத்தில் நன்கு தான் அமைந்தது. முதல் இரண்டு நாட்கள் தான் துன்பமுற்றேன். எனினும் பிறகு ஐந்து நாட்களும் இனிமையாகக் கழிந்தன. கரை ஓரமே போய்க்கொண்டிருக்கிறேன். காலை சிங்கப்பூரில் இருப்பேன். பிற அடுத்த கடிதத்தில் எழுதுகின்றேன். அனைவருக்கும் என் அன்பு! அன்பு! அன்பு!

கடிதம் 6.

மலாக்கா,
28—5—48.

சிங்கப்பூர் மண்ணில் முதல் நாள்!

அன்பின் குழந்தாய் முந்திய கடிதங்கள் கிடைத்திருக்குமே. அவை எல்லாம் கடல்மேல் நின்று எழுதியவை. கடல் அலைபோன்ற எண்ண அலைகள் அவை. நேற்றுக் காலை எட்டு மணிக்குச் சிங்கப்பூர் துறை முகத்தை அடைந்தோம். கப்பல் வெகு தொலைவிலேயே நிறுத்தப்பட்டது இறங்குமுன் மருத்துவர் முதலிய பல அலுவலர் வந்து எங்களைப் பார்வையிட்டனர். பிறகு உரியவர் கலம் செலுத்த நான் என் நண்பர்களுடன் பகல் 12-30-மணிக்குக் கப்பலை விட்டு இறங்கினேன். மணி என்னும்போது நம் நாட்டு மணியை எண்ண வேண்டும். அதற்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. சிங்கப்பூர் 1,600 கல் கிழக்கே தள்ளி இருக்கின்றதல்லவா? எங்கும் ஞாயிறு தோன்றும்போது மணி ஆறாகவன்றோ இருக்கும். இந்த 1,600 கல் தொலைவினால் இரண்டு மணி நேரம் கடிகாரம் முன் செல்லுகிறது. அங்கு ஞாயிறு தோன்றுவதற்கும், இங்கு தோன்றுவதற்கும் அவ்வளவு வேறுபாடு. இங்கு 12-30 என்றால் அங்கு 10-30 ஆகும்.

நிற்க, சிங்கப்பூரில் நான் எதிர்பார்த்தபடி ஒருவரும் வரவில்லை. சிறிது நேரம் காத்து நின்றேன். பிறகு ஒரு வாடகை மோட்டார் ஏற்பாடு செய்து கொண்டு, நமது பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் மகனார் டாக்டர். சங்கர் இருக்கும் வீட்டிற்குச் சென்றேன். அவரது முகவரி என்கையில் இருந்தது நல்லதாயிற்று. கப்பலைவிட்டு நண்பர் பலரும் தனித்தனி விடைபெற்றுப் பிரிந்தபின் இப்புதிய நண்பர் வீட்டை அடைந்தேன். அவர் தந்தையார் முன்னமே என் வருகை பற்றி அவருக்கு எழுதி இருந்தார். ஆதலால் நான் சென்றதும் நன்கு அறிந்தவர் போல் வரவேற்றார். வீடு செல்லுங்கால் சிங்கப்பூரின் பல் வேறு பெருந்தெருக்களை யெல்லாம் தாண்டிச் சென்றோம் நகர்த் தோற்றம் நன்கு சிறந்து காட்சி அளித்தது. பல நாட்டு மக்கள் இங்கு நிறைந்து நின்றனர். இவர் வீடு

செல்வதற்குக் கப்பலிலுள்ள சமையற்காரர் உடன் வந்து உதவினர்.

டாக்டர் வீடு சென்றதும், அவர் டெலிபோன் மூலம் இங்கு நடைபெறும் தினத்தாள் 'தமிழ் முரசு' ஆசிரியருக்கும், மற்றொருவருக்கும் என் வருகையைத் தெரிவித்தார். அவர்கள் எனக்காக ஒருவரைத்துறைமுகத்திற்கு அனுப்பினர்கள் என்றும் அவர் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்றும் சொன்னர்களாம். நான் சாதாரண உடையில் இருந்தேன். வந்தவர்மேநாட்டு உடையில் என்னை எதிர் பார்த்தாராம். குழந்தாய்! இந்நாட்டில் அந்த உடைக்குத்தான் நல்ல மதிப்புள்ளது பிறகு டாக்டர் என்னிடம் வெளியே போகும்போது கூடியவரை அந்த உடை யுடனே செல்லவேண்டு மென்று சொன்னர். நானும் இசைந்தேன். பிறகு 'தமிழ் முரசு' ஆசிரியர் திரு. சாரங்கபாணி அவர்கள் வந்தார்கள். சாரங்கபாணியார் தமிழ் நாட்டுத் திருவாரூரைச் சேர்ந்தவர். இங்கு தம் இதழ் மூலம் தமிழ்ப் பணி செய்கிருர். சிறிது நேரம் பேசிக்கொண்டே இருந்தோம்.

செல்வி! நான் தங்கிய வீட்டின் உரிமையாளராகிய அன்பர் மருத்துவர் தன் மனைவியோடும் இரு குழந்தைகளோடும் வாழ்ந்து வருகின்றுர். குழந்தைகள் வயதில் சிறிய வர்களாயினும் அறிவு நிரம்பப் பெற்றவர்கள். என்னோடு நன்கு பழகினர்கள். அவர்கள் வீட்டுப் பணியினைச் செய்ய ஒரு சீனப் பெண்மணி அமர்த்தப்பட்டிருந்தாள். சிங்கப்பூரில் சீன மக்கள்தான் பெரும்பாலோர். அவர்கள் எல்லா விடங்களிலும் பணியாற்றுகிருர்கள். பெரிய வியாபாரங்கள் செய்கிருர்கள். அவர்கள் இல்லாத இடமில்லை. மாலை ஐந்து மணிக்குள் பல நண்பர்கள் வந்து சென்றுர்கள். அனைவரையும் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் மருத்துவர். மாலைச் சிற்றுண்டிக்குப் பின் மருத்துவர், தம் குடும்பத்துடன் என்னையும் அழைத்துக் கொண்டு சிங்கப்பூரின் பல பகுதிகளையும் நன்கு காட்டினர். மாலை ஆறு மணிக்கு இங்கு வந்து சேர்ந்ததற்குத் தகவல்-தந்திகொடுத்தேன்.

உணவின் வகை

அன்று இரவு உணவை அவர் வீட்டிலேயே கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர். என்னை அழைக்க வந்தவரும் அவர் விழைவுக்கு இணங்கினர். உணவுக்கு முன் பல பொருள்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். யாழ்ப்பாண நண்பர் ஒருவர் அவரைக் காண வந்தார். அவர் நல்ல தமிழ்ப் பற்று உடையவர். அவரோடு சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தேன். உணர்ச்சி அறிந்தேன். அவர் அரசாங்கத்தே உயர்ந்த உத்தியோகம் செய்பவர்.

இரவு உணவு உண்டோம். சிறந்த உணவு. உணவு என்றல் நம் நாட்டினும் வேறுபட்ட உணவு என்று எண்ணவேண்டாம். இங்கு பெரும்பாலும் தமிழர் உள்ளமையின் நம் நாட்டு உணவு பெறுவது இங்கு எளிது தான். கப்பலிலேயே நம் நாட்டு உணவுக்கு வசதி செய்திருந்தபோது—வேண்டியதைப் பெற்று உண்டபோது இங்கு அதில் கடினம் ஒன்றும் இல்லை. நம் நாட்டைப் போன்று இங்கு அரிசிச்சோறு கிடைக்கிறது. இந்த நாட்டில் பெரும் பகுதியில் அரிசி விளையாவிட்டாலும் அடுத்த நாடாகிய சையாமிலிருந்து இந்த நாட்டுக்கு அரிசி வருகிறது. நம் நாட்டில் விளையும் பதார்த்தங்களைப் போன்று இங்கு பல இடங்களில் பீர்க்கன், புடலன், கத்தரி, வெண்டை போன்ற காய்கள் காய்க்கின்றனவாம். நிறைய வாழைத்தோட்டம் உண்டு. ஆகவே வாழைக்கனிகள் ஏராளம். உருளையும், வெங்காயமும் நம் நாட்டில் இருந்துதான் இறக்குமதியாகின்றனவாம். மற்றப் பருப்பு வகைகளும் இந்தியா, பாகிஸ்தான் பகுதிகளிலிருந்துதான் வருகின்றன. மாமிச உணவு உண்பவர்கள் தான் ஏராளம். சீனமக்களும், மலாய்க்காரரும், நம் நாட்டுப் பெரும்பகுதி மக்களும் மாமிச உணவுக்காரர்களே. கடல் சூழ்ந்த நாடாதலால் இங்கு மீனுக்குக் குறைவில்லை. வற்றல் மீன் எல்லா இடங்களிலும் கிடைக்குமாம். ஆடு மாடுகள் அதிகம் இல்லையாதலால் நெய் கிடைப்பது அரிது. சில செல்வர்கள் நல்ல பசும்பாலைப் பெற வசதியாக இங்கு வாழும் நம் நாட்டு ஆடவரும் மகளிரும் இத்

உண்டு. ஆனால் பெரும்பாலோர் 'டின்பால்'தான் உபயோகிக்கிறார்கள். இந்தத் தகவல்களை யெல்லாம் சாப்பிடும்போது திரு. சங்கரர் அவர்கள் விளக்கிக் கொண்டே வந்தார்கள். இந்நாட்டு உணவைப்பற்றி ஒருவாறு உணர்ந்தாய் அல்லவா! வாய்ப்பு நேரும்போது மேலும் மேலும் அங்கங்கே எழுதுகிறேன்.

சிங்கப்பூரில் சிறு நெறிகள் !

சிங்கப்பூரைப் பற்றியும் மலேயாவைப் பற்றியும் பல பேசினோம். நகரில் திருடர் தம் துணிகரக் கொள்ளைகள் நடப்பதைப் பற்றியும், கொள்ளையும், கொலையும் மிக எளிதாக இங்கு நிகழ்வதையும் குறித்தார். நான் உண்மையில் பயந்தேன். உணவு உண்டபின் தெருவை நோக்கி உட்கார்ந்துகொண் டிருந்தோம். கண்டறியாதன கண்டோம். குழந்தாய்! நான் சொல்வது உனக்குப் புரியாது! சீன நாட்டுப் பெண்கள், வாழ்க்கை நடத்துவதற்காக - வயிற்றுப் பிழைப்புக்காக உடலை விற்கும் கோலங்கள் பலவகையில் நடுத்தெருவிலேயே எங்கள் கண்முன்பட்டன. அதை அவர்கள் குற்றமாகக் கருதவில்லையாம். எவ்வகையிலாவது வாழ்தல்தான் இறைவனுக்கு ஏற்றதென்று அவர்கள் கருதுகிறார்களாம். ஆடவரும் பெண்டிரும் இப்படி மிருக உணர்ச்சி வகையில் வாழ்விழந்து வாடுவதை நோக்க எனக்கு வருத்தமாக இருந்தது. நாகரிக உலகத்தில் - நலம் பேசும் உலகத்தில் - இப்படி உணவுக்காக உடலை விற்கும் காட்சி உளமுருக்கும் காட்சியன்றோ! மற்றும் பல்வேறு சூதாட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் இடங்கள் இங்கு பல உண்டாம். ஆடவரும் பெண்டிரும் குடித்துக் களித்து, காமமயக்கில் ஈடுபட்டு, சூதாடி வாழ்வை வீணாக்குவார்களாம் நாகரிகம் நிறைந்த சிங்கப்பூர் தெருவில் இந்த அநாகரிகக் காட்சி.

செல்வி! தமிழன் மானம் இழந்து வாழான். வாழ்வு பெரிதென்றெண்ணி மானம் இழக்கமாட்டான். அந்த நாட்டில் வாழ்ந்த நான் இதைக்காண மிக வருந்தினேன். மானம்வரின் உயிர் வாழா மரபு எங்கே? மானமிழந்து உயிர் வாழும் இவ்வாழ்வெங்கே? ஆனால் இந்நாட்டு மக்கள் இதைப் பெருங்குறையாகக் கருதவில்லை. நல்ல வேளை

தகைய ஆட்டங்களில் பெரும்பங்கு கொள்ளாத வாழ்வு என் உள்ளத்துக்குச் சற்று ஆறுதல் அளித்தது.

பதினொரு மணிக்கு மருத்துவர் என்னை அழைத்த நண்பர் வீட்டில் விட்டு வந்தார். வழியில் பல தெருக்கள் வழியாக அழைத்துச் சென்று, இரவில் நகர் விளங்கும் நலத்தைக் காட்டினர். நேரமாகி விட்டதாலும், பெரும் களைப்பினாலும் அப்படியே உறங்கி விட்டேன்.

எழுந்து நடந்த இன்றைய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து எழுதுகிறேன்.

கடிதம் 7.

மலாக்கா.
28—5—48

அன்பின் அரசி!

முன் கடிதத்தின் தொடர்ச்சியாகவே இதைக்கொள்க. நான் இன்று பகல் 10. 30-க்கு மலாக்காசெல்லவேண்டும் என்று ஏற்பாடாகி இருந்தது. மலாக்கா புறப்படுமுன், அந்த வழிப் பயணத்தைச் சொல்லுமுன் சிங்கப்பூர் பற்றி இன்னும் சில சொல்ல விரும்புகின்றேன்.

சிங்கப்பூரின் சிறப்பு:

சிங்கப்பூர்த் துறைமுகம் உலகத்துறைமுகங்களில்மிக முக்கியமானது. மேலைநாட்டுக் கப்பல்களும், கீழை நாட்டுக் கப்பல்களும் இதைத் தொடாது போக வழியில்லை. உலகம் சுற்றிப் பெரும் வாணிப வகையிலும், பற வகையிலும் செல்லும் கலங்கள் அனைத்தும் இதைத் தொட்டே செல்லவேண்டும். நாள்தோறும் நூற்றுக்குக் குறையாத கப்பல்கள் இங்கு வந்து செல்லுமாம். மலேயா நாட்டின் தென்கோடியில் சிங்கப்பூர் ஒரு தனித்தீவு. ஆளும் முறையில் கூட இன்றும் அது தனியாகவே அமைந்துள்ளது. சிறு சிறு குன்றுகள் இடை இடை விளங்க, பலப் பல கலங்கள் கரையிடை நிற்க, மிக அழகிய இயற்கைத் தோற்றத்தோடு காட்சி யளிக்கும் தீவு இது. போர்க்குரிய பெரிய கடற் படைத்தளம் இங்கு

உண்டு. சாதாரணமக்கள் இறங்கும் துறைமுகத்திற்கு எதிர்ப் பக்கத்தில் பதினேழு கல் தொலைவில் தீவின் மறுபுறத்தே அக்கடற் படைத்தளம் அமைகின்றது. அதை நான் காணவில்லை. சிங்கப்பூர் கடற் படைத்தளம் உலகில் சிறந்த தளம் என்பதை அனைவரும் அறிவார்களல்லவா. இத்தளம் சென்ற போரில் ஜப்பான் கைப்பட்டவுடன் ஆங்கிலேயர் தம் நாடே அழிந்ததென்று அலமந்ததை நீ அறியாய். அன்று நீ குழந்தை நான் இறங்குமுன் கடலிலிருந்தே பல கப்பல்கள் கரை ஓரங்களில் நிற்பதைக் கண்டேன். சென்னையைப் போன்று ஒரு குறித்த இடத்தில் தான் கப்பல் நிற்க வேண்டும் என்றில்லை. எங்கெங்கும் இயற்கைத் தளங்கள். பல விடங்களில் நிற்கின்றன கலங்கள். இத்தகைய இயற்கை வளம் வாய்ந்த கடல் தளத்தை ஜப்பான் விட்டபின் மறுமுறையும் ஆங்கிலேயன் பற்றிக் கொண்டான். இன்று கீழை நாடுகள் எல்லாம் விடுதலை பெற்று விட்டன. இம் மலேயா நாடு ஒன்றுதான் ஆங்கிலேயரின் கீழ் அமைகின்றது. ஆங்கிலேயனின் கீழ்ப்பட்ட மற்றொன்று 'ஹாங்காங்'.

குழந்தாய்! சிங்கப்பூர் உலக முக்கியமான இடமாதலால் இங்கு எல்லா நாட்டு மக்களும் வாழ்கின்றனர். எனினும் சீனர் பெரும்பாலராக இருக்கின்றனர். அதற்கடுத்த படியாக உள்ளனர் இந்தியர்கள். சிங்கப்பூரில் பத்து லட்சம் மக்கள் வாழ்கின்றார்களாம். 60,000 தமிழர்கள் அங்கு உள்ளனர். விளம்பரப் பலகைகளைப் பெரும்பாலும் ஆங்கிலத்திலும், சீன மொழியிலும் தான் காண்கின்றேன். சிற்சில இடங்களில் தமிழ்ப் பலகைகள் தெரிகின்றன. மகமதிய மக்களும் பெரும்பாலராக வாழ்கின்றனர். பெருவாணிபத் தலமாதலால் எங்கும் கடைத் தெருக்கள் காட்சி அளிக்கின்றன. இராப் பகல் மூடாத பல கடைகள் உண்டாம். இங்கு மக்கள் வசதிக்காகச் செல்லும் 'பஸ்' முதலியன இரவு 1 மணி வரையில் ஓடுமாம். சென்னையில் 9 மணிக்குமேல் அவை ஓடா என்பது உனக்குத் தெரியுமே! இந்த நிலை, இவ்வூர் இரவிலும் ஓய்வற்ற பேரூர் என்பதை விளக்கவில்லையா!

தெருக்கள் மிகத் தூய்மையாகப் பாதுகாக்கப் படுகின்றன. மக்கள் வாழ்வும் நலத்துறை வகையில் செம்மைப்படுத்தப் பட்டுத்தான் இருக்கிறது. உயரிய கட்டடங்கள் நகரை அணி செய்கின்றன. ஓய்வற்ற உயரிய நகராக இது அமைகின்றது. மேலைக் கீழை நாடுகளை இணைக்கும் ஒரு இணைப்பிடமாக இது அமைகின்றது என்பது பொருந்தும்.

நகர அமைப்புகள் :

சிங்கப்பூர் மட்டுமல்லாது மலேயாவில் உள்ள அத்தனை ஊர்களும் மிகத் தூய்மையாகத்தான் பாதுகாக்கப் படுமாம். நகரில் மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும் காணவில்லை காரணம் அறியவிரும்பினேன். மோட்டார்கள் அதிகம் உள்ளமையில் பிற வண்டிகள் தேவை இல்லை என்பது ஒன்று. மற்றும் நகர நலம் கெடா வகையில் பசு, மாடு முதலியவற்றை ஊர்ப்புறத்தேதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்கள். சில பேரூர்களில் நகர எல்லைக்கு 5 கல் தாண்டிக் கூட, கால் நடைகள் இருக்குமாம். அவை உலவுவதாலும், சாணி, மூத்திரத்தாலும் நகர நலம் கெடும் என்பதை அறிந்து அழகிய முறையில் அவற்றைச்சேர்க்காது காக்கிறார்கள். சொந்தப் பசு வைத்துக் கொள்ள விரும்புகின்றவர்கள கூட நகரில் வைத்துக்கொள்ளக் கூடாதாம். வெளியே வைத்துத்தான் பாலைமட்டும் கொண்டு வரவேண்டும். சென்னைநகரிலே - நம் தலைநகரிலே மனிதன் வீட்டுக்கும், மாட்டுக் கொட்டிலுக்கும் வேறுபாடு காணாத நமக்கு இது வியப்பாகத் தோன்றவில்லையா! இது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ வகைகளில் நகரங்கள் நலத்துறை - குடிநீர், கல்வி, போக்குவரத்து ஆகிய பலவகைகளில் நம் நாட்டினும் நன்கு ஓம்பப்படுகின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் வாய்ப்பு நேருமிடந்தோறும் வரைகின்றேன்.

வண்டி வசதியும் சாலை நலனும்:

அருமைச் செல்வி! மற்றும் இத்தகைய அரும்பெரும் நகரிடை நான் நம் நாட்டுக்குப் புறப்படுமுன் இன்னும் இரண்ட மூன்று முறை தங்குவேன். இன்னும் எழுத

வேண்டி இருப்பின் அப்பொழுது எழுதுகிறேன். பகல் 10-30-மணிக்கு மலாக்காவுக்குப் 'பஸ்'சில் புறப்பட்டேன்.

'பஸ்' என்றால் நம் ஊரை எண்ணாதே. பல மணி நேரம் காத்திருந்து, வந்தாலும் ஏறுவதற்கு 'சண்டை' போட்டு ஏறவேண்டும் என்று கருதாதே 'பஸ்' ஏறுவதற்கு முன்னமே டிக்கெட் பெறவேண்டும். இடமிருக்கும் அளவுக்குத்தான டிக்கெட். பின் வருபவர்கள் அடுத்த வண்டிக்குத்தான். சிங்கப்பூரிலிருந்து குறித்த நேரத்தில் பல ஊர்களுக்கும் 'பஸ்' போகிறது. மலாக்காவுக்கு காலை 7 மணி, 10 - 30 மணி, பகல் 1 - 30 மணி ஆகிய வேளைகளில் மூன்று வண்டிகள் புறப்படுகின்றன. காலம் தவறுவதில்லை. குறித்த நேரத்தில் வண்டி வந்தது. இது போன்று நமது நாட்டில் கோவைச் செல்வர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் கோவை வட்டத்தே ஒழுங்காக நடத்துகிறார் என்பதைச் சென்ற டிசம்பரில் நாம் கோயன்புத்தூர் சென்ற போது உனக்குச் சொல்லிக் காட்டி இருக்கிறேன் அல்லவா! நிற்க. மலாக்காவிற்கு நான் 'பஸ்'ஸில் சென்றுக்கொண்டே இருதேன். அங்குதான் அருணாசலஞ் செட்டியார் அவர்க்ள் உள்ளார்கள். மலேயா தமிழ்ப் பண்ணையின் பொருளாளர் அல்லவா அவர். 10-30-க்குப் புறப்பட்ட 'பஸ்' சிங்கப்பூரின் பலதெருக்களையும் தாண்டி, அச்சிறு தீவின் எல்லையையும் தாண்டி மலேயா பெரு நிலத்தில் புகுந்தது. நகர நலங்கண்ட நான் ஓடியபடியே மலேயா நாட்டுப்புற நலன்களைக் கண்டேன். எப்புறம் நோக்கினும் பசுமை. நான் புறப்படும்போது நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. மழை பெய்வதும் விடுவதும் இந்நாட்டில் அடிக்கடி காணக்கூடிய தொன்றாகும். மழைக்காலம் என்று ஒன்று இல்லையாம். ஆண்டு முழுதும் மழை இருக்குமாம். நான் மலாக்கா செல்வதற்குள் பல முறை மழை வந்து வந்து சென்றது. எங்கும் இயற்கை நலம் காட்சி அளித்தது. சாலைகள் மிக அழகாகச் செப்பனிடப்பட்டிருந்தன. 160-கல் தொலைவு அந்த வண்டியில் வந்தும் சிறு அசதியும் தெரியவில்லை என்றால் சாலை நலத்தை எண்ணிப்பார். 40-கல் தொலைவு காஞ்சிபுரத்திலிருந்து சென்னை வருவதற்குள் எவ்வளவ

அசதி நாம் பெறுகின்றோம். அதை இங்கு நினைத்தாலும் கூட அச்சம் எழுகின்றது. வண்டியும் மிக விரைவாக வந்தது. இந்தச் சாலைகளை எண்ணும் காலத்து ஒருபுறம் மகிழ்ந்தேன். ஆனால் ஒருபுறம் வருத்தமுற்றேன். இத்தகைய அழகிய சாலைகளை ஆக்கித்தந்தவன் யார் என நினைக்கிறாய். மலாய் நாட்டுக்காரனா? சீனனா? ஆங்கிலேயனா? இல்லை! ஆனால், நம் அருமைத் தமிழன் கைதான் இந்தச் சாலைகளை அமைத்தன. பிறந்த நாட்டில் வாழ வகை இழந்த தமிழன் நாடோடியாய் இங்கு வந்து வயிற்றை வளர்க்க வழி கண்டான். அவன் அரும் பெரும் உழைப்புத்தான் மலேயாவைச் செல்வ நாடாக மகிழ்விக்கின்றது. எத்தனை தமிழ்த் தாய்மார்கள் கல் உடைத்திருப்பார்கள். வரம்பு கட்டி இருப்பார்கள். அவர்கள் உழைப்பெல்லாம் நம் நாட்டிற்குப் பயன்பட்டிருந்தால் எவ்வளவு நலமாக இருந்திருக்கும். ஆனால் அன்றைய ஆள வந்தார்கள் அதை எண்ணவில்லை. இன்று வந்தவராவது இதை எண்ணி, இனி, தமிழ் மக்களை-இந்தியரை கூலியாளாகப் பிற நாட்டுக்கு அனுப்பாதிருப்பார்களாயின் நாடு உயரும்; நாம் உயர்வோம்.

அரசி! இப்படிக் கைவருந்தி உழைத்த தமிழன் இங்கு இன்னும் உயரவில்லை. ரப்பர்த் தோட்டங்களில் பெரும்பாலராகக்—கூலியாளாகத்தான் அவன் காலம் கழிக்கிறான். இதை எண்ண உண்மையில் உளம் நைகின்றது. அவன் இட்ட சாலையில் அந்நிய நாட்டார் 'மோட்டார்'களில் ஆடாது அசையாது அழகாகச் செல்லுகின்றனர். ஆனால் அவன் அன்றைய நிலையிலேயே உள்ளான். தமிழன் செப்பனிட்ட அந்தச் சாலையில் செல்லுங்கால் என் சிந்தையில் எத்தனையோ கோடி எண்ணங்கள் வந்து வந்து, சென்றன. 'தமிழா உன் கதி இதுவா! பிறர்க்கு உழைத்தும் ஓட்டாண்டியாக வாழவா நீ பிறந்தாய்?' என்றது என் நா.எண்ணிப் பயன் என !

மலேயா நாட்டில் சீன மக்கள் பெருவாரியாக உள்ளனர் என்று எழுதினேன் அல்லவா! அம்மக்கள் நிலை, நான் சென்ற வண்டியிலும் விளங்கிற்று. பத்துக்கு மேற்பட்ட பிரயாணிகள், செலுத்துபவர், நடத்துபவர் அனைவரிலும் நான் ஒருவன் தவிர மற்றவர் அனைவரும் சீன மக்களே

நடத்துபவர் (Conductor) மட்டும் மலாய் நாட்டவர் போல் தோன்றிற்று. ஆகவே நான் யாரொடும் பேசவும் இயல வில்லை. வெளியே உள்ள இயற்கையோடுதான் பேசிக் கொண்டு சென்றேன். இயற்கை என்னென்ன பேசிற்று தெரியுமா?

இயற்கையோடு இயைந்த வாழ்வு:

மனிதன் முதற்காலத்தே இயற்கையோடு கலந்த வாழ்க்கையைத்தான் வாழ்ந்தான். உயர்ந்த மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும் பின்பு அவன் உள்ள உணர்ச்சிக்கு ஏற்ற செயற்கை இடமாக நின்றன. பல மற்று, ஓடியாடிப் பாடுபட்டுத் தனக்கெனவே வாழாத அந்தக் காலத்தில், மனிதன் பரந்த இயற்கை இடையில் மனமகிழ்ச்சியோடு வாழ்ந்தான் இன்று பயந்து, மற்ற வர் வாடத் தாமே பொருள் பெருக்கி, ஒருவன் உழைக்க-அந்த உழைப்பின் பலனை ஒருவன் பெற, பெற்ற பொருளைப் பதுக்க - பத்திரப்படுத்திவைக்க சுவர் அமைத்து, கம்பி அமைத்து சிறைச்சாலைபோன்ற வீடமைத்துக் கொண்டான். கள்ளமற்ற உள்ளத்தோடு அனைவரையும் ஒத்துநோக்கி, இயற்கை எழிலிடை இன் பங்கண்டான் அன்றைய மனிதன். இன்றைய முத லாளி – பிறன் பொருளால் பெரியவன் ஆனவன் - பார்க் கின்றவர்களையெல்லாம் ஐயமுற்று ஒருவரையும் நம் பாது கல்வீட்டையும் இரும்புப்பெட்டியையும் நம்பிச் சிறைப்பட்டு வீட்டில் வாடுகின்றான். குழந்தாய்! இந்த உயர் ந்த கருத்தை மலேயா நாட்டு இயற்கை நன்குவிளக்கிற்று. சாலை இருமருங்கிலும் உழைத்துப் பாடுபடும் பாட்டாளி மக்கள் சாதாரண வீடுகளை அமைத்துக் கொண்டு வாழ் கின்றார்கள். அவர்கள் வீடுகளுக்குக்காற்றோட்டப் பல கண்ணி உண்டு. ஆனால் கள்ளர்களுக்கு அஞ்சிய கம்பிகள் கிடையா. இயற்கைச் சோலைகளின் நடுவிலே, இனிய பற வைஒலிகளின் இடையிலே - இந்நாட்டுப் பழங்குடிமக்கள்-உழைப்பாளிகள் - பயமற்று, கொண்டதை மன நிறை வால் ஏற்று வாழ்க்கை நடத்துகின்றார்கள். அம்மம்மா; ஓய்வற்ற சிங்கப்பூர் தெருக்களுக்கும் இந்நாட்டுப்புறங்க ளுக்கும்தான் எத்தனை வேற்றுமை இவற்றை எல்லாம் எனக்கு இயற்கை அன்னை எடுத்து விளக்கிக்

கொண்டே வந்தாள். நான் கண்ணும் இமைக்காது அவள் காட்டிய காட்சிகளையும் உணர்த்திய பாடங்களையும் கண்டும் அறிந்தும் வந்தேன்.

சாலையின் இருமருங்கிலும் உயர்ந்த ரப்பர்த்தோட்டங்கள்காட்சி அளித்தன. 'ரப்பர்' த்தோட்டங்களில் சிலவற்றை நேரில் காண இருக்கிறேன் ஆதலால், அவைகளைப் பற்றிப் பிறகு எழுதுகிறேன். நாட்டுப் புறங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. வழி நெடுகப் பாலங்கள் மரங்களால் ஆக்கப்பட்டிருந்தன. இத்துணைச் சிறந்த சாலைகளில் பாலங்கள் மட்டும் இந்நிலையில் ஏன் இருக்கின்றன என எண்ணினேன். மலாக்கா வந்த பின் அதன்வகை அறிந்தேன். ஜப்பான் படை எடுக்குங் கால் ஆங்கிலேயர் பின் வாங்கியபோது இந்தப பாலங்களை யெல்லாம் உடைத்து விட்டார்களாம். பின்னாலேயே தொடர்ந்து வந்த ஜப்பானியர் பதிலுக்கு மரபபாலம் அமைத்தார்களாம். பல பாலங்களைக் கடந்தோம்.

வீட்டமைப்பு:

குழந்தாய்! வழியிடைக் கண்ட தோட்டவீடுகளாம் நாட்டு வீடுகள் புது வகையாக இருந்தன. வீடுகள் எல்லாம் மரத்தால் ஆகியனவாக இருந்தன. நிலம் பெரும்பாலும் சதுப்பாக இருந்ததால் ஆழ்ந்த கடைக்கால் இட்டு வீடு கட்டமுடியாது போலும். அடியில் மரத்தால் ஆகிய கால்கள் நட்டு, இடத்துக்கு எற்றபடி இரண்டோ, மூன்றோ, நான்கோ அடிகள் விட்டுப்பின் அதே மரத்தாலே தரை, சுவர் முதலான இட்டு, மேலே தகரத்தாலோ அன்றி ஓலையாலோ கூரைவேய்ந்த வீடுகளே எங்கும் காணப்பட்டன. மிக எளிய வீடுகள்தான். சில வீடுகள் தென்னை போன்ற ஒருவகை ஓலையால் வேயப்பட்டிருந்தன. நகரத்தில் கண்ட ஆடம்பர வாழ்க்கை இங்கெல்லாம் காணப்படவில்லை. மக்கள் சாதாரண முறையிலேயே காணப்பட்டனர். ரப்பர்த் தோட்டங்களோடு, சில இடங்களில் பல தென்னஞ்சோலைகளும் காணப்பட்டன. மலாக்கா நெருங்க நெருங்கத்தான் தென்னஞ்சோலைகள் அதிகமாக இருந்தன. தேங்காய்கள் மிகப் பெரியன. நம் நாட்டில் இவ்வளவு பெரிய தேங்காய்காண

முடியாது. இங்கு உரித்த காய்கள் அங்கு மட்டையோடு கூடியகாய்கள் அவ்வளவு இருக்கும்.

வரும் வழியில் இரண்டிடத்தில் இரு ஆறுகளைக் கடந்தோம். அவைகளுக்குப் பாலங்கள் கிடையா. பெரும் படகுகளில்தான் நாங்கள் ஏறிய பஸ் அப்படியே ஏற்றப்பட்டு மறுகரைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பல பெரிய சுமையுள்ள 'லாரி'கள் கூட அப்படித்தான் கொண்டு செல்லப்பட்டன. மலாக்கா வந்த பின் அதற்குரிய காரணங்கள் கேட்டேன். அத்துறைகளில் பெரும்பாலும் மலேயா நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்கின்றார்கள் என்றும், இந்த மாற்ற முறையின் மூலம் பலர் பிழைக்கின்றார்கள் என்றும், அவர்கள் பிழைப்பு கெடாதபடி பார்த்துக்கொள்ளவே அரசியலார் பாலங்கள் அமைக்காது இந்த வகை ஏற்றுமதி மூலம் அவர்களுக்கு வருவாய் செய்துள்ளனர் என்றும் அறிந்தேன். அவர்கள் வாழ அது சிறந்த வழி என அவர்கள் நினைத்தாலும் என் உள்ளம் அதைச் சரி என ஒப்பவில்லை. அந்த ஓடப் பிழைப்புற்று வாழும் அத்தனைக் குடும்பங்களையும் அரசாங்கம் விரும்பினால் வேறு பல வழிகளில் முன்னேற்றமுறச் செய்யலாம். அனைவருக்கும் கல்வி அளித்து அரசியல் உத்தியோகங்கள் அளிக்கலாம். அதை விட்டுப் 'பழைய கருப்பனே கருப்பன்' என்பது போன்று, தாழ்ந்த நிலையிலேயே வைத்து வாழ்க்கை வாழ வேண்டும் என்று விதித்திருப்பது விசித்திரம்தான். வழி நெடுகப் பல இயற்கைக் காட்சிகள் கண்ணையும கருத்தையும் கவர நூற்று அறுபது கல் தாண்டி ஜொகூர், மூவார், பத்துப் பகார் முதலிய ஊர்களை எல்லாம் கடந்து, மாலை 5 மணிக்கு மலாக்கா வந்து சேர்ந்தேன். வழியில் ஓரிடத்தில் 'சன்மார்க்கத் தமிழ்ப் பாடசாலை' என்ற ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் இருப்பதை மாட்டியிருந்த பலகையால் அறிந்தேன்.

மலாக்காவில் முதல் நாள்:

மலக்கா வந்து 'பஸ்' நின்றவுடன் திரு. அருணசலஞ் செட்டியார் அவர்கள் தம் அருமை மகனாரோடும் மற்றுஞ் சிலரோடும் அங்கு வந்து இருந்து என்னை அன்புடன் வரவேற்றனர். பிறகு அவர் தம் வீட்டுக்குச் சென்றோம்

அங்கு பல நண்பர்கள் வந்து கண்டு சென்றனர். மலாக்கா வாழ் தமிழ் மக்கள் தமிழ் ஆர்வம் மிக்கவர்கள் என அறிந்தேன். பலர்வந்தனர். திரு. செட்டியார் அவர்கள் அனைவரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். இங்குள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் பார்வையாளரும், ஒரு தமிழாசிரியரும் வந்தனர். அவர்கள் மூலம் இந்த மலேயா நாட்டிலும், மலாக்கா மாவட்டத்திலும் தமிழ் எப்படிப் பயிற்றப்படுகின்றது என்பது பற்றியும், அரசியலார் தமிழுக்குத் தற்போது அளித்துள்ள ஏற்றத்தைப் பற்றியும்அறிந்தேன். மலேயாவுக்கு இனி ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப் போகிறார்கள் என்றும், அதற்கெனத் தனி முயற்சிகள் நடந்து முடிந்துவிட்டன என்றும், ஜோகூர் பகுதியில் அப் பல்கலைக் கழகம் அமையுமென்றும், அதில் 'தமிழுக்கு' ஓர் தனி இடம் உண்டு என்றும் அறிந்தேன். ஆங்கிலத்தோடு, சீனமொழி, மலே, தமிழ் மூன்றும் சம இடம் பெற்று அப் பல்கலைக் கழகத்தே திகழும் என்பது கேட்க உண்மையிலே உளம் மகிழ்ந்தேன். அந்த வளர்ச்சிக்குக் காரணமா யமைந்த, மலாய் நாட்டுத் தமிழ் மக்களை வாழ்த்தினேன். செல்லுமிடமெல்லாம் செம்மைத் தமிழ் பரப்பும் உளத்தால் தமிழன் வாழ்கின்றான் என்பதை எண்ணினேன்.

செல்வி! பல்வேறு பொருள்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து, உணவு உண்டபின் இரவு 10 மணிக்குப் படுக்கச் சென்றேன். எனது முதற் சொற்பொழிவு மலாக்காவில் 30-5-48 ஞாயிறு மாலை 5–30-க்கு தமிழ்ப் பண்ணையின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிற அடுத்த கடிதத்தில்.

கடிதம் 8.

மலாக்கா
31—5—48

அன்பின் அரசி!

நான் இன்னும் மலாக்காவில்தான் தங்கியிருக்கிறேன் நாளை வரையில் இங்கேதான் இருப்பேன். மலாக்காதான் இந்நாட்டின் மிகப் பழைய ஊர். எனவே இங்கே சில நாட்கள் கூடத் தங்கவேண்டியுள்ளேன். 29. 5. 48-ல் முழுவ

தும் ஓய்வு எடுத்துக் கொண்டேன். எங்கும் செல்ல வில்லை. எனினும் மாலக்காவில் தமிழ்ப் பற்றுள்ள அன் பர்கள் சிலர் வந்து வந்து கண்டு சென்றார்கள். அவர்க ளோடு பேசுகின்ற உரையாடல்களில் அவர்களிடம் அமை ந்து நின்ற தமிழ் உணர்ச்சியை நன்கு அறிந்தேன். தமிழ் பயிற்றும் சில ஆசிரியர்கள் வந்தார்கள். இளைஞர்கள் வந் தார்கள். தமிழ் நாட்டில் வெளியாகும் சிறந்த அறிஞர்க ளுடைய நூல்களை அவர்கள் நன்கு பயின்று இருந்தார் கள்.

திரைகட லோடியும் திரவியம் தேடு

எதிர்பாராதபடி திரு. அருணசலஞ் செட்டியார் அவர் களது நெருங்கிய உறவினர் ஒருவர் அன்று காலை 9மணிக்கு மறைந்தார். எனவே செட்டியார் அவர்கள் மறைந்தவர்தம் இறுதிச்சடங்குகளைக் கவனிப்பதில் இருந்தார். இறந்த வரது மனைவி மக்கள் அங்கு இந்தியாவில் உள்ளனர், இவர் இங்கே மறைந்தார். இப்படி நடப்பது இங்கு மிகப் பழக்க மான ஒன்று என்று கூறினர்கள். உற்ற மக்கள் மனைவியரை விட்டுப் பிரிந்து நாடு கடந்து வந்து வர்ழ்வுக்குப் பொருள் தேடும் ஒருவர் இப்படித் தனிமையில் இறப்பதைக் காண் பது எனக்குப் புதிதல்லவா? உண்மையில் நான் மனம் வருந்தினேன். வாழ்வை எண்ணி உலகிலே மக்கள் இவ் வாறு கடல் கடந்தும், நாடு கடந்தும் உழைக்கும் முறை யில் பொருள் சேர்ப்பது சிறந்ததுதான். இறப்பின் எளி மையில் அவர்கள் வாழ்கின்றார்கள். பல நாடுகளுக்கு இப் படிப் பலர் சென்று வாழ்வதால்தான் உலகத் தொடர்பும், பிற நலன்களும் மேன்மேலும் பெருக வழி ஏற்படுகின்றன. நாம் இருப்பதைப் போன்று ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியலாகாது என்ற அளவில். இருப்பார்களானால் உலக மக்களது கூட்டுறவும் பிற நலன்களும் பெறுவது எங்கே? நம்மவர் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும், எங்கும் வெளியே போகலாகாது என்றும் தவருக எண்ணுகின் றனரே; அவர் தம் அறியாமையை எண்ணி வருந்துகின் றேன். வாழ்வு தனக்காக மட்டுமன்று, உலகுக்காகவும் என்று எண்ண வேண்டும். எண்ணி வாழ வேண்டும். அவ்வாழ்வுதான் உலகை வாழவைக்கும்.

குழந்தாய் !

இறந்தவர் தம் இறுதிப் பணிக்குச் செட்டியார் அவர்கள் செல்ல, நானும் நிறைந்த ஓய்வு கொண்டு, வந்த வருத்தம் நீங்கப்பெற்றேன். மாலையிலே ஒரு ஆங்கிலப் பள்ளியில் பயிற்றும் ஆசிரியர் வந்தார். அவர் நம் நாட்டு ஈரோட்டைச் சேர்ந்தவர். ஈரோட்டை நீ அறிவாய். அந்த ஊரிலே பிறந்த இவ்வாசிரியர் சுப்பிரமணியம் அவர்கள் நெடு நேரம் பல பொருள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு நாற்பதுக்குமேல் வயதிருக்கும். ஆயினும் அவர் மேலும் தமிழ் பயிலவேண்டும் என்று பற்றுக் கொண்டு, லண்டன் பி. எ. யில் தமிழ்ப் பாடம் எடுத்துப் பயின்று வருகிறார். தம் மகளாரையும், மைந்தரையும் தாய் நாட்டுக்கு அனுப்பித் தமிழ்ப் பயிலச் சொல்ல வேண்டும் என விழைகின்றார். அவரோடு நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தேன். இரவு உணவு உண்டு விரைந்து படுக்கச் சென்றேன்.

மலாய் நாட்டில் தமிழ்ப் பயிற்சி :

அருமை அரசி!

நேற்றுத்தான் (30—5—48) எனது முதற் பணி தொடங்கப் பெற்றது. காலையில் சற்று ஓய்வாகவே பல நூல்களைப் படித்துக் கொண்டிருந்தேன். பகல் 10—30 மணிக்கு மலாக்காவில் தமிழ் பயிற்றும் ஆசிரியர்களைக் காணவேண்டும் என முன் ஏற்பாடு இருந்தது. தமிழை மலாய் நாட்டில் பள்ளிச் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கத் தற்போதுதான் ஏற்பாடாகியுள்ளது. அதற்குத் தேர்ச்சியுள்ள ஆசிரியர் ஒருவரும் கிடைக்காமையால் சாதாரணமாகத் தமிழ்ப் பயின்றவர்களைத் தேர்ந்தெடுத்து ஆசிரியர்களாக அமைத்துள்ளனர்.

குழந்தாய் ! தமிழ்ப் பயிற்சியைப் பற்றிச் சிறிது சொல்லத்தான் வேண்டும். இங்கு தமிழ் மாணவர்கள் பெரும்பாலராக உள்ளனர். அவர்களுக்குத் தனியாகத் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் தேவையாக உள்ளன. அந்தத் தேவையை மலேயா அரசியலார் நன்கு நிறைவேற்றித் தந்துள்ளார்கள். நம் தமிழ்நாட்டில் தமிழ் மட்டும் பயில இன்று வரை பள்ளிப்பிள்ளைகளுக்கு வாய்ப்பில்லையே. இது வரை

யிலே ஆங்கிலேயருக்கு அடிமையாயிருந்தோம். ஆகவே தமிழொடு ஆங்கிலம் பயிலவேண்டிய அவசியம் இருந்தது. இன்று தமிழொடு, ஆங்கிலத்தோடு, இந்தியும்படிக்கவேண்டும் என்று திட்டம் தீட்டப்படும். இன்னும் நம் நாட்டுக் கல்வி முறை முற்றும் ஒழுங்காக்கப் பெறவில்லையாதலின் அதுபற்றி விளக்கமாக எழுத முடியவில்லை. இன்றைய அரசியலார் மூன்று மொழியைக் கட்டாயமாக்குவார்களென்று நான் நினைக்கிறேன். ஆனால் இங்கு ஆங்கில ஆட்சி இருந்த போதிலும் தமிழர் தமிழை மட்டும் கற்க வாய்ப்பிருக்கிறது. அதற்கு ஊர்தோறும் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளின் ஆசிரியர்கள்தான் இதோ பயிற்சிக்கு வந்திருக்கின்றவர்கள். அவருள் மலாக்காவைச் சுற்றியுள்ள தமிழ் பயிற்றுபவர்களைத்தான் நான் காண்பது. அவர்களுக்கு வாரத்துக் கொருமுறை பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. அந்த முறையில் பயிற்சி பெற வந்த ஆசிரியர்கள் பதின்மர் அன்றைய வகுப்புக்கு வந்திருந்தனர். தமிழ்ப் பள்ளிகளின் மேற் பார்வையாளர் அவர்தம் பயிற்சி வகுப்பை நடத்திக் கொண்டிருந்தார். ஆசிரியர் இயல்பையும் அவர் பயிற்ற வேண்டிய முறையையும் அவர் விளக்கிக் கொண்டு இருந்தார். சிறிது நேரம் கேட்டுக் கொண்டிருந்தேன். பிறகு ஆசிரியர் என்னையும் பேசச் சொன்னார். தமிழ்ப் பயிற்றும் முறை பற்றிச் சில சொல்லச் சொன்னார். தமிழ் பயிலும் மாணவர் தொடக்க நிலையில் உள்ளவர். பயிற்றுவர்களும் அதே நிலையில் உள்ளவர். எனவே அவர்கள், இள மாணவர் உள்ளங் கொள்ளத் தமிழ் பயிற்றும் வகைகள் எவை என்பதைத் தொட்டுச் சொன்னேன். மலாய் நாட்டில் உள்ள இளந் தமிழ்க் கொழுந்துகள் தமிழ் உரம்பெற வழிகள் சில ஆய்ந்து உரைத்தேன். அவைகளை யெல்லாம் எழுதுவதனால் கடிதம் இடம் பெறாது. நேரில் சொல்லுகிறேன்.

செல்வி! அந்தத் தமிழாசிரியர்கள் மிக உணர்ச்சி உள்ளவர்கள் என அறிந்தேன். அவர்தம் உணர்ச்சிக்கு என் சொற்கள் தூண்டுகோலாக அமைந்தன. அவர்கள் பல நாள் எண்ணி வந்த ஒரு திட்டத்தைப்பற்றி அன்று முடிவு கட்டினார்கள். 'தமிழாசிரியன்' என்ற திங்கள் இதழைத் தொடங்கி நடத்த வேண்டும் என்பதுதான்

அது. குழந்தாய்! நம் நாட்டுத் தமிழாசிரியர்கள் ஆயிரத்துக்கு ஏறக்குறைய இருந்தும் இந்த உணர்ச்சி வழிச் செல்லவில்லை. ஆனால் இங்கு 1600 கல் தொலைவில் பணி யாற்றும் தமிழாசிரியர்கள் அந்தப் பணியில் தலை நின்றார்கள். அவர்தம் முடிவு கேட்டு மகிழ்ந்தேன். ஆனால், ஒன்று கூற வேண்டும். இங்கு, இந்தத் தமிழாசிரியர்தம் முயற்சிக்கு அரசாங்கமே முன்னின்று உதவி செய்யும். அவர்கள் அரசியலார் துணை கொண்டு அந்த இதழைச் சிறக்க நடத்துவார்கள் என எண்ணுகின்றேன். அவர்கள் தங்கள் நிலை உயர அரசாங்கத்தோடு பேசுவார்கள். அங்கு, குழந்தாய்! அந்த நிலை இல்லை. இங்குள்ள தமிழாசிரியர்கள் தம் முடிவைத் தெரிவிக்கவேண்டி வகுப்பு முடிந்த பிறகு நான் தங்கி இருந்த இடத்திற்கு வந்தார்கள். முடிவு கூறி, என்னையும் முதல் இதழுக்கே ஒரு கட்டுரை தர வேண்டினார்கள். உணர்ச்சி வயப்பட்ட அவர்தம் உள்ள வேகத்தை அறிந்த நான் கொடுப்பதாக உரைத்தேன்.

பண்ணையின் முதற் பணி :

மாலை 5. 30 மணிக்குக் கூட்டம் தொடங்கிற்று. பல உயர்ந்த அலுவலர்களும், வாணிபர்களும் பிறரும் கூட்டத்திற்குப் பெருவாரியாக வந்தனர். இக்கூட்டம் மிகப்பெரிய தென்று இங்குள்ளவர்கள் கூறிக்கொண்டார்கள். இந்திய நாட்டுக் கொடியேற்றம் முதலில் நடைபெற்றது. பிறகு நான் 'தமிழ் இன்பம்' என்னும் பொருள் பற்றி ஒன்றே கால் மணி நேரம் பேசினேன். கூட்ட முடிவில் பலர் எனக்கு அறிமுகம் செய்விக்கப்பட்டார்கள். நல்ல அறிஞர்கள் பலர். பினாங்கிலிருந்து வந்த திரு. இராமநாதன் என்பவர்கள் எனக்கு அறிமுகமானார். அவர் அங்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே தமிழ் எம். ஏ. தேர்ச்சி பெற்றவர். கூட்டம் முடிந்தபின் வீட்டுக்கு வந்து உணவு கொண்டோம். இரவு பதினொரு மணி வரையில் பல நண்பர்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். அனைவர் விருப்பத்துக்கும் இணங்க, அமைப்பாளர் திரு அருணாசலம் செட்டியார் அவர்கள் மலாக்காவிலே 1-6-48-ல் மற்றொரு கூட்டமும் ஏற்பாடு செய்தார்கள். 'தமிழ்க்கலை' என்னும் பொருள் பற்றியே பேசவேண்டும்

என்றுர்கள். அவர்வழியே மலாய் நாட்டில் நான் நடக்க வேண்டியவன் ஆதலால் இசைந்தேன். பிறகு துயிலச் சென்றேன்!

மேலை நாட்டாரும் கீழை நாடுகளும்:

அரசி! இன்று (31-5-48) நான் ஓய்வின்றிப் பல விடங்களுக்கும் சென்று பார்வையிட்டேன். போர்த்து கீசியர்கள்தான் கீழ் நாட்டில் தம் ஆதிக்கத்தைச் செலுத்திய முதல் மேலை நாட்டார். மேலை நாட்டவர் இதுவரை இந்த ஆசியப் பகுதிகளையெல்லாம் ஆண்டு வந்தவர்கள் அல்லவா! அவர்கள் இன்று ஒவ்வொன்றுக விட்டுப் போவதையும் காண்கிருேமே! இந்தியாவும், பர்மாவும், இலங்கையும் இன்று விடுதலை பெற்றநாடுகளாக வில்லையா! மேநாட்டாரில் முதல் முதல் கடல்வழியாக வந்தவர் போர்ச்சுகீசியர் தான். இந்தியாவுக்கு வந்தவர் 'வாஸ் கோடிகாமா' என்பவர். ஆனல் அவர்கள் வரும்போது நாடாளவேண்டும் என்ற ஆசையால் வரவில்லை. வாணி பத்தைப் பெருக்கவேண்டும் என்ற விருப்பத்தாலேயே வந்தார்கள். அப் போர்ச்சுகீசியர் ஒரு படைக் கப்பலை 1509-ல் மலாக்காவிற்கு அனுப்பினர். ஆனல், அன்று ஆளுகையிலிருந்த சுல்தான் மலாக்காவில் அவர்களை இறங்கவிடவில்லை. போர்ச்சுகீசியர் திரும்பினர். பிறகு 1511-ல் போர் மூலமே இங்குள்ள சுல்தானை விரட்டி மலாக்காவில் குடியேறினர் போர்த்துகீசியர். குழந்தாய்! இங்கு அன்று வாழ்ந்த சுல்தானிடம் நமது நாட்டுக் கள்ளிக்கோட்டையார் கொடுத்த பீரங்கி ஒன்று இருந்ததாம். அதை வந்தவர் தம் நாட்டு 'லிஸ்பன்' காட்சிச்சாலைக்கு அனுப்பிவிட்டார்களாம். பிறகு இந்நாட்டுச் சுல்தான்களும், ஜாவா நாட்டு மன்னர்களும் முயன்றும் மலாக்காவைக் கைப்பற்ற முடியவில்லை. கடைசியாக 1641-ல் டச்சுக்காரர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர். பின்னர் அவர்களிடமிருந்து 12-8-1795-ல் ஆங்கிலேயர் மலாக்காவைக் கைப்பற்றினர். அதுமுதல் இந்த ஊரை இவர்கள் ஆண்டுவருகிருர்கள். கைப்பற்றிய காலத்து இருந்த டச்சுக்காரர் விருப்பப்படி அரசியல் அலுவலகங்களையெல்லாம் செந்நிற வண்ணமாகவே வைத்துள்ளனர். இப்படித் தான் இந்த நாட்டுப் பகுதிகள் ஒன்றன்பின் ஒன்ருக ஆங்கிலர் ஆட்சியின் கீழ்ப்பட்

டன. பட்டாலும் முழு உரிமையும் அவர்களிடம் இல்லாமல் சுல்தான்கள் ஆட்சியோடு பிணைக்கப்பட்டுள்ளது. இதே போல் ஒவ்வொரு ஊரைப் பற்றியும் சரித வரலாறுகள் உள்ளனவாம். ஆனால், அவற்றைப் பற்றி யெல்லாம் எழுதினால் கடிதங்கள் நீளுவதோடு, போதிய வகை யில் இன்றைய மலேயாவைக்காட்ட இயலாது. மற்றும் அது ஒரு வரலாற்று நூலாகுமே ஒழிய வந்ததைக் கூறும் முறையாகாது. இது ஒன்றை மட்டும் இன்தைய ஆட்சி வந்த வகைக்கு விளக்கினேன். மற்றவையும் ஏறக் குறைய இதே முறையில் தான் இன்றைய நிலைக்கு வந்துள்ளது என்பதை அறிவாய்.

போர்ச்சுகீசியர் தான் முதல் வந்த மேனாட்டார் என்று கூறினேன் அல்லவா? இந்த மலாக்காவையும் அவர்கள் தான் முதலில் கண்டு வளர்த்தனர் என்பது முடிவு.

சேவியர் செம்மைப் பணி:

அவர்கள் வாணிபத் துறையில் வந்தபோது, கிறிஸ்து சமயத்தைப் பரப்பப் பல பாதிரியார்கள் உடன் வந்தனர். அவருள் ஒருவர் 'சேவியர்' என் னும் செம்மலார். தம் அன்புச் சமயத்தைப் பரப்ப வந்த இடத்திலே பரனடி சேர்ந்தார். அவர் சமயப் பிரசாரம் செய்து நின்றபோது கொல்லப்பட்டார் என்று நம் நாட்டில் சொல்லுவார்கள். ஆனால் இங்குள்ள குறிப் பில் அவர் சீன நாட்டுக்குச் செல்லும் காலை இறந்தார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எப்படியாயினும் தாய் நாட்டைவிட்டு, தந்தையாம் இறைவன் புகழ்பாட வந்த பெரியார் அந்தப் பணியிலே தம் ஆவி நீங்கினார் என்றால் அவர் பெரியவ ரன்றோ! அவர் மறைந்து இன்று முன்னூறு ஆண்டுகள் ஆகின்றன. அவரை இங்கு மலாக்காவில் நான் தங்கிய வீட்டின் பின்னுள்ள சிறுமலை யில் அடக்கம் செய்துவைத்தார்கள். பிறகு அவரது உடம்பு நம் நாட்டில் போர்த்துகீசியருக்குச் சொந்தமான, மேலைக் கடற்கரையிலுள்ள கோவாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த உடம்பு அங்கே இன்னும் வைத் துப் பாதுகாக்கப்படுகிறது. சிறிதும் கெடாத வகை யிலேவைத்துப் பாதுகாக்கின்றனராம். பல நூற்றாண்டுகள்

கழித்தும் உயிர் நீங்கிய உடம்பு நன்கு பாது காக்கப் படுகிறது என்பது உனக்கு வியப்பை ஊட்டுகிறதல்லவா! அந்த முறையில் காக்கப் பல மருந்துவகைகள் பயன் படுகின்றன. இராமாயணத்தில் தசரதன் உடம்பு பல நாள் பரதன் வரவுக்காகப் பாதுகாக்கப் பட்டிருப்பதைப் படித்தறிகிறோம். அதை நாம் காணவில்லை. இன்று 'சேவியர்' திருவுடல் கோவாவில் பாதுகாக்கப்படுகிறது. அவர் செய்த பணி கருதி, நான் நம் நாடுவந்தபின் வாய்ப்பு நேருமேல் உன்னைக் கோவாவுக்கு அழைத்துச் சென்று அதையும் காட்டுகிறேன்.

அன்புச் செல்வி! அவரை மூடிவைத்திருந்த கல் லறையின்பக்கலில் நின்றுகொண்டு, அவரைப் புதைத்து வைத்த அந்தத் திறந்த பள்ளத்தை நோக்கும்போது அப்படியே சிறு துளிக் கண்ணீர் புறப்பட்டது. அருகிலே இருவர் இருந்தனர். இல்லாவிட்டால் ஓ வென்று கதறி அழுதிருப்பேன். தந்நலம் மறந்து, செல்வமும் சீரும் மறந்து, நாடும் பிறவும் மறந்து, ஆண்டவன் பணியே அன்புப் பணியெனப் பல நாடு போந்து அன்புச் சமயத் தைப் பரப்பிய அண்ணலார் மறைந்த இடம் கண்டால் கண்ணீர் உகுக்காது என் செய்வது? உலகம் உய்யத் தன் குருதி சிந்திச் சிலுவை ஏறிய செம்மல் காட்டிய நெறியைப் பேச்சளவில் அல்லாது செயலளவில் சிறக்கக் காட்டிய 'சேவியர்' நிலை நினைந்தேன். தமிழ் நாட்டில் இன்று அவர் தம் திருப் பெயரால் பல கல்லூரிகளும், பள்ளிகளும் ஆக்கப்பட்டிருப்பதை எண்ணி மகிழ்ந்தேன்.

சேவியர் ஒருவரைப் பற்றிச் சிறிது அறிந்தாய்! இது போன்று சிறந்து சமயத்தை வளர்க்க நாடுவிட்டு மக்கள் விட்டு உலகின் பல பாகங்களுக்கும் சென்ற அறி ஞர் பலர் என்பதை அறிவாய். அவர்களுள் கால்டு வெல் லும், போப்பும் தமிழ் நாட்டில் கிறிஸ்து சமயம் பரப்ப வந்தவருள் தலை சிறந்தவர்கள். இருவரும் தமிழை நன்கு பயின்றவர்கள். இறக்கும் காலத்துத் 'தமிழ் மாணவன்' என்ற உணர்வோடு இறந்தார் போப். 'கால்டுவெல் ஒப் பிலக்கணமே, இன்று, வாடும் திராவிடன் தனது மொழி உலகிடை உயர்ந்த மொழி என்று கூறிக் கொள்ளக்

காரணமாக அமைந்தது. இப்படிக் கடந்த நான்கைந்து நூற்றுண்டுகளாக இயேசு சமயம் பரப்ப வந்து செல்லும் நல்லவர், நாட்டில் பலர். இன்றும் எல்லா நாட்டிலும் அவர்கள் வந்து சமயப்பணி செய்கின்றனர். ஆனல் நம் நாட்டில் உள்ள சைவ மதத்தை வளர்க்கும் பெருந்தலைவர்களோ பட்டு மெத்தையையும், பஞ்சவர்ணக் குடையையும், பவனித் திருவிழாவையும் விட்டுச் சமயம் வளரப்பாடுபடுவதே கிடையாதே. சமயத்தைப் பற்றிக் கவலையும் படுவதே இல்லையே. இந்த நிலையில் எச்சமயம் வாழும் வீழும்! என்பதை நீயே சிந்தித்துப் பார்.

மலாக்காவில் கண்டவை:

சேவியர் திருவடி பட்ட இடம் கண்டு கசிந்து நின்று நாங்கள் மலை விட்டிறங்கி அரசாங்க அலுவல்கள் பலவற்றையும், அரசாங்க நூல் நிலையம், பொருட் காட்சிச் சாலை ஆகியவற்றையும் பார்த்தோம். பிறகு செட்டியார் அவர்களுடன் மலாக்கா மருந்தகம் (Govt. General Hospital) பார்க்கச் சென்றோம். குழந்தாய்! இந்த ஊர் அவ்வளவு பெரியதன்று. நம் காஞ்சிபுரத்தைவிடச் சிறிய ஊர்தான். ஆனல் இந்த மருந்தகம் சென்னையின் மருந்தகத்தைக் காட்டிலும் சிறந்ததாக விளங்கிற்று. ஐந்தடுக்கு மாடி, ஊருக்கு வெளியே ஓர் தனியிடம். தூய நிலை. எல்லா நோய்களுக்கும் தொடர்ந்து மருந்து அளிக்க ஒரு இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குருதிச் சோதனை செய்யும் இடமும் பிற இடங்களும் கண்டோம். நம் நாட்டில் கண்ட மருத்துவர், கண்ட வைத்தியம் செய்வதுபோல் இங்குச் செய்ய முடியாதாம். கத்தி எடுத்து அறுக்க எந்த மருத்துவருக்கும் உரிமை இல்லையாம். அவர்கள் மருந்து மட்டும்தான் கொடுக்கலாமாம். ஆனல் அறுவை முழுதும் இங்குக் கொண்டுவந்துதான் நடைபெற வேண்டுமாம். மற்றும் பிற மருத்துவ நலங்களும் நன்கு புரக்கப்படுகின்றன. உண்மையில் சொல்லுகின்றேன், நான் இத்தகைய மருந்தகத்தை நம் நாட்டில் கண்டதில்லை. ஆங்கில மருத்துவர்கள் பலர் இங்கு பணியாற்றுகின்றனர். தமிழர் நிரம்ப உள்ளனர். எந்தப் பகுதியிலும் தமிழில் பேசிப் பழக முட்டுப்பாடு ஒன்றும் இல்லை.

பயன்தரு பள்ளிகள்:

சிறந்த மருந்தகத்தைக் கண்டபின் நகரில் நடைபெறும் பள்ளிகளைப் பார்வையிட விரும்பினேன். முன்னேற்பாட்டின்படி 'மெத்தடிஸ்டு மிஷன்' ஆண் பெண் பாடசாலைகளைப் பார்வை யிட்டேன். அந்த மிஷன் பள்ளிகள் அமெரிக்கப் பாதிரியாரால் நடத்தப்படுவனவாகும். நம் நாட்டில் உயர் நிலைப்பள்ளி (High School) உள்ளதே அந்த வகையில் அமைந்தன இவை. பிள்ளைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மிக அன்போடு வரவேற்று ஒவ்வொரு வகுப்பிற்கும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினர். மாணவரில் பெரும்பாலோர் சீனர்கள். அடுத்துச் சில ஆங்கிலேயர். தமிழர் மிகக் குறைவு. தமிழர்கள் இங்குள்ள அரசாங்கப்பள்ளியில் பயில்கிருர்களாம். ஒவ்வொரு வகுப்பையும் சுற்றிப் பார்வையிட்டு, பிறகு மண்டபம், அறிவியல் ஆய்வகம் முதலிய அனைத்தையும் பார்த்தோம். இங்கே பள்ளி நேரம் காலை 8—முதல் பகல் 1—மணி வரையில். சிறிது நேரம் பள்ளி நடை முறையைப் பற்றிப் பேசிவிட்டு, பக்கத்தில் இருந்த பெண் பாடசாலைக்குச் சென்ருேம். அதுவும் ஒரு உயர் நிலைப் பள்ளிதான். அந்தப்பள்ளியின் தலைமை ஆசிரியையும் அன்போடழைத்துப் பல வகுப்புக்களையும் காட்டி, அவர்கள் பாடம் நடத்தும் முறைகளையும் விளக்கினர். இரு விடங்களிலும் மாணவர்களைப் போன்றே, பெரும்பாலான ஆசிரியர்கள் சீனர்கள் தான். ஆண் பள்ளியில் நான் முன் இக்கடிதத்தில் குறித்த ஈரோடு சுப்பிரமணியமும், மகளிர் பள்ளியில் ஒரு திருவாங்கூர்ச் செல்வியும் பணியாற்றுகின்றூர்கள். திரு சுப்பிரமணியம் அவர்கள் தான் இவற்றை யெல்லாம் பார்க்க ஏற்பாடு செய்தார். நான் கல்வித் துறையில் அவர்கள் கையாளும் பல முறைகளை அறிந்தேன். அவர்கள் நம் நாட்டு முறையைக் கேட்டறிந்தார்கள். மேலும் தொடர்ந்து கல்வி முறை பற்றி அளவளாவ என் முகவரியை அவர்கள் கேட்டார்கள். நான் கொடுத்தேன். அவர்கள் முகவரியும் பெற்றேன். பொதுவாக மலாய் நாட்டில் கல்வியும் பொது நலமும் அரசியலாரால் நன்கு புரக்கப்படுகின்றன என்று கண்டும் கேட்டும் உணர்ந்தேன்.

'வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி

நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலப்பல பள்ளி' என்ற பாரதியின் கனவு இங்கு நனவாக்கப் படுவதை எண்ணி மகிழ்ந்தேன்.

அருமைச் செல்வி! கடிதம் நீளுகிறது. கண்டதைச் சொல்ல வேண்டுமே! மலாக்காவில் தமிழ் நாட்டிலிருந்து வெகு காலத்திற்கு முன் வந்த ஒரு செட்டி வகுப்பார் மலாக்காப் பெண்களை மணந்து கொண்டு ஒரு வகைத் தனிக் குடியர்க மாறிவிட்டார்களாம். அவர்களை மலாக்கா செட்டிமார் என்றே அழைக்கிறார்கள். அவர்கள் மகமதிய மதத்தைத் தழுவினவர்கள். எனினும், வீட்டுச் சடங்குகள், வழிபாடுகள், கலியாணம் முதலியன அனைத்தும் நம் நாட்டில் நாம் செய்வது போலத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு ஐயர் உண்டு, சடங்கு செய்ய. மாரியம்மன் கோயிலும், பிள்ளையார் கோவிலும் உள, விழாவாற்ற. விழாக்கள் செய்ய வெள்ளித்தேரும், பிற வாகனங்களும் உள்ளன. இங்கு இருக்கும் பிள்ளையார் கோயிலை அவர்கள் தற்போதுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் வசம் விட்டிருக்கின்றனர். அப்பிள்ளையாருக்குப் பொய்யா விநாயகர் என்று பெயர். நாங்கள் மாரியம்மன் கோயில் முதலியவற்றைப் பார்த்துக் கொண்டே 'பொய்யா'க் கோயில் புகுந்தோம். அங்கு நகரத்தார் ஒருவர் தம் தாயின் ஆண்டுக் கடன் குறித்துப் பெரு விருந்து ஏற்பாடு செய்திருந்தார். விருந்து மிகச் சிறந்திருந்தது. உண்டோம், பிறகு தங்கிய வீட்டுக்கு வந்து மாலை நான்கு மணி வரையில் ஓய்வு கொண்டேன்.

சாதிகள் இல்லையாமே ? :

மாலை 4. 30 மணிக்கு, முன் ஏற்பாட்டின்படியே திரு சுப்பிரமணியம் அவர்கள் வீட்டிற்குத் தேநீர் விருந்துக்காகச் சென்றோம். அங்கு காலையில் கண்ட பள்ளிகளை நடத்தும் அமெரிக்கப் பாதிரியாரும், அவர் மனைவியாரும், அப்பணியிற் கலந்த சீனப் பெரியாரும், அவர்தம் மனைவியாரும் வந்திருந்தனர். திரு. உ. அரு. அருணசலம் செட்டியார் அவர்களும் தம் குடும்பத்தோடு வந்திருந்தார்கள். சிற்றுண்டி உண்டு கொண்டே பல பொருள்களைப் பற்றிப் பேசினோம். அமெரிக்கப் பெரியாரும் அவர்தம்

மனைவியாரும், பிறரும் தமிழ் நாட்டுப் பழைய இயல்புகளை அறிய வேண்டினர். பலவற்றை விளக்கினேன். 'உங்கள் நாட்டில் வரவரச் சாதிகள் இல்லையாமே' என்றார் அமெரிக்க நல்லார். நம் நாட்டு மேடைப் பேச்சாளர்கள் பேச்சுகளும் பிற இதழ்களின் விளம்பரங்களும் அவர் கண்டிருக்கக் கூடும். சாதிகள் இல்லை எனச் சட்டம் செய்வோம் என வீண் ஒலி எழும்பும் நாட்டு ஆரவாரம் அவர் காதில் பட்டிருக்கக் கூடும். நான் அந்த நிலை யெல்லாம் பேச்சளவிலே என்றும், நாட்டில் ஆடும் சாதி வெறியின் கொடுமை இத்தகைய தென்றும் விளக்கி உரைத்தேன் மேடையில் சாதி இல்லை என்று பேசி, செயலில் தன் இனம், தன் சாதி என்று நேரக்கும் கீழ்மை நம் நாட்டில் உள்ளதை யாரும் அறிவார் அல்லவா? வெளி ஆரவாரம் இங்குக் கேட்கப் படுகிறது. சில சாதிகள் பற்றி விளக்கி உரைத்தேன். குழந்தாய்! நம் நாட்டில் சாதிகள் வேண்டாம் என்று பேசப்படுகிறதே ஒழியச் செயலில் முன்னேற ஏதாவது வழி உண்டா?

சீன அறிஞர் தமிழ் நாட்டுக்கும், அவர் நாட்டுக்கும் உள்ள தொடர்பை அறியவிரும்பினர். அது பற்றிப் பலவாகப் பேசிக் கொண்டிருந்தோம். சர்க்கரையும் பட்டும் சீனவிலிருந்து வந்ததால்தான் தமிழர் அவற்றைச் 'சீனி' என்றும், 'சீனம்' என்றும் அழைத்தார்கள் என்று நான் சொல்லும் போது அனைவரும் வியப்படைந்தார்கள். இத் துணைத் தொடர்பு நெடுநாளாக உண்டா என எண்ணினர் கள். ஏன்? நம் நாட்டிலேகூட, சீனி என்ற பெயர் ஏன் அதற்கு இடப்பட்டது என்றால் பல படித்தவர்கள் கூடப் பதில் சொல்ல மாட்டார்களே! கற்கண்டைக் கூடச் 'சீனக் கற்கண்டு' என்று நாம் சொல்லும் போது அது பற்றி எண்ணுகிறோமா? இல்லையே! அப்படி இருக்க, இங்கு வாழும் அமெரிக்கரும், சீனரும், பிறரும் அதனை எவ்வாறு அறிந்து கொள்ள இயலும்.?

செல்வி! அந்தக் குடும்பங்களோடு மாலை நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தேன். பிறகு நானும் திரு செட்டியார் அவர்களும் பிறரிடம் விடை பெற்றுப் புறப்பட்டோம். செட்டியார் அவர்கள் மலாக்கா கடற்கரையின் நீளத்தையும், ஊர்ப்புறத்தே அக்கரையில் அந்த செல்வர்தம்

மாளிகைகளையும் எனக்குக் காட்ட விழைந்து காரிலேயே அந்தப் பக்கம் அழைத்துக் கொண்டு சென்றார். கடற் கரை அழகாக அமைந்தது. அதன் அருகில் நீண்ட நெடுஞ்சாலை. இரு மருங்கும் வானோங்கிய மாளிகைகள். அவற்றின் ஒன்றில் பண்டித நேரு அவர்களும், மற்றொன் றில் மறைந்த தாகூர் அவர்களும் மலாக்கா வந்தபோது தங்கி இருந்தார்களென்று அவைகளைக் காட்டினார். செல் வர்தம் பிற மாளிகைகளும் அழகாக அமைந்திருந்தன.

ஏற்றத் தாழ்வு!

செல்வி! எங்கும் இந்தச் செல்வர்-வறியர் வேறுபாடு நீங்கவில்லை. நாம் வாழும் சென்னையில் வறுமையில் வாடும் கூலிமக்கள், சென்னை நகரில் சூளை, 'ஜார்ஜ் டவுன்' முதலிய பக்கங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் வாட, செல்வர் மாம்பலத்திலும், மயிலையிலும் உல்லாச வாழ்வு வாழவில்லையா! ஆங்கில நாட்டுச்செல்வர் தம் நிலை கருதித் தனித்து வாழப் பிரான்சு நாட்டில் தனி இடத்தில் மாளிகை கட்டித் தங்கியுள்ளார்கள் என்று அறியவில் லையா! அதேபோல இங்கும் செல்வர்கள் வாழ்கிறார் என்று எண்ணும்போது இங்குமா இதைக்காண வேண்டும் என எண்ணினேன். என்ன செய்வது? உலகப் பொருளாதாரம் திருந்தும் வரையில் எங்கும் இந்த வேறுபாடுதானே. என்று பொருளாதாரச் சமத்துவம் உண்டோ, அன்று, ஒரு வேளை இவை அகலும். அதை எண்ணின் பலப்பல எண்ண அலைகள் தோன்றுகின்றன. அவற்றை எழுதின் கடிதம் நீளும்.

திரும்பி வரும் வழியில், மற்றொரு நண்பர் வீட்டில் தங்கிச் சிறிது தேநீர் அருந்தினோம். நான் காப்பி, தேநீர் அருந்துவது வழக்கமில்லையல்லவா! ஆகவே, எங்கு சென் றாலும் எனக்குச் செட்டியார் அவர்கள் முன் ஏற்பாட்டால் பால் கொடுக்கச் செய்து விடுவார். பிறகு வீட்டுக்கு வந் தோம். பெருமழை பெய்தது. பிற அலுவல்களை முடித்து உனக்கு இந்தக் கடிதத்தையும் எழுதி முடித்துப்பதினொரு மணிக்குப் படுக்கச் சென்றேன். அன்றாடம் கடிதம் எழுத முடியாதுபோலும். வான் வழித் தபால் வாரத்திற்கு மூன்று நாள் தான் வருமாம். 2-6--48ல் கோலாலம்பூர் செல்கிறேன். அடுத்த கடிதம் அங்கிருந்து எழுதுகிறேன்.

கடிதம் 9.

கோலாலம்பூர்
3—6—48

அன்புடை அரசி!

மலாக்காவில் கடைசி நாள்!

முந்திய கடிதங்களெல்லாம் முறையாகப் பெற்றிருக்கக் கூடுமே! அனைத்தையும் படித்து மலேயாவைப் பற்றிய பல செய்திகளை நீ அறிந்திருக்கக் கூடும். 1-6-48ல் நான் முன் குறித்தபடி மலாக்காவில் 'தமிழ்க்கலை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்ற வேண்டி இருந்தது. அன்று காலையில் எழுந்து நெடுந்தொலைவு நடந்தேன். நான் சென்னையை விட்டு வந்த பிறகு காலையில் நடக்கும் முறையினை அன்றுதான் மேற்கொண்டேன். தொடர்ந்து நேற்றும் இன்றும் நடக்கிறேன். இன்று வெளியே அதிகமாக எங்கும் செல்லவில்லை. கடைத்தெருக்கள் எப்படி இருக்கின்றன என்பதை மட்டும் காணச் சென்றேன். அங்கு, மலாக்காவில் தமிழ் அச்சிடும் பணியினைப் பெருவாரியாகச் செய்யும், சீனர்கட்கு உரித்தான ஒரு அச்சகத்தைக் கண்டேன். அதில்தான் தமிழ்க் கொடியும் பிறகூட்ட நிகழ்ச்சிகளும் அச்சாகின்றன என அறிந்தேன். அந்த அச்சகம் சீனருக்குச் சொந்தமென்றும், இதைப்போன்றே சிங்கப்பூரிலும், இன்னும் பல இடங்களிலும் அச்சுத் தொழிற்சாலை அமைத்திருக்கிறார்கள் என்றும் அறிந்தேன். இப்படி ஒருவரே பல இடங்களில் அச்சுத் தொழிற்சாலை சிறப்புற நடத்துவது நம் நாட்டில் அதிகமாகக் காணப்படாத தொன்றல்லவா! அந்த அச்சகம் சீனருக்குச் சொந்தமாயினும் அதை நடத்துபவர் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் ஆவர். யாழ்ப்பாணத்தவரும் தமிழர்தான் என்பதும், இலங்கையில் அவர்கள் வாழ்ந்தாலும், அவர்கள் தமிழ்ப்பற்றும், தமிழ் நாட்டுப் பற்றும் உடையவர்கள் என்பதும், உனக்குத் தெரியுமே! சிறந்த தமிழ்ப் பற்றுடைய இவ்வச்சக மேற்பார்வையாளர், முன்னமே ஒரு நாள் வீட்டுக்கு வந்து என்னைக் கண்டு சென்றார். நான் அச்சகம் சென்றதும் வருக என்று வரவேற்று, அச்சகப் பகுதிகள் பலவற்றையும் காட்டினர். அவ்வச்சகத்தோடு

சேர்ந்த, ஒரு கடையும் முன் அமைந்திருந்தது. அதில் பல விளையாட்டுப் பொருள்களும் இருந்தன. சில வேடிக்கை யாக இருந்தன. இரண்டொன்றை நான் வரும்போது வாங்கி வருகிறேன்.

மாமிச உணவு:

அச்சகத்தின் பலபகுதிகளையும் பார்த்துவிட்டு, சிறிது நேரம் அங்கு தங்கி அவர் அளித்த உபசாரத்தை ஏற்றுப் பிறகுநானும்உடன்வந்த மற்றொருவரும் பலகடைகளையும் பார்க்கப் புறப்பட்டோம், கடைகள் வரிசையாக அமைந் திருந்தன. பெரும்பாலும் சீனமக்களே கடைகளை வைத்து நடத்தி வருகிறார்கள். ஒரு நல்ல சிற்றுண்டிச்சாலை நமக்கு ஏற்ற முறையில் இங்கு கிடையாது. சீனர்தம் சிற்றுண்டிச் சாலைகள் பல. அவற்றில் மீனும், கறியும் மிகுதியாக அமைந்து கிடந்தன. குழந்தாய்! மாமிசப் பொருள்களை நம் நாட்டில் மறைவாக விற்கிறார்களே அந்தமுறை இங்கு கையாளப்படவில்லை. அந்தவகையில் இந்நாட்டு மக்களது நாகரிகமும் நலமும் மிகக்குறைவு என்றுதான் நினைக்கி றேன். கண்டகண்ட விடங்களில்மாமிசக் கண்டங்களைச் சுட் டதும், பச்சையுமாக வைத்துக்கொண்டு விலை கூறித் திரி கிறார்கள். சீனர்கள் பாம்பு முதற்கொண்டு எல்லா வகை யான மாமிசங்களையும்தின்பார்களாம். எனக்குஒன்றிரண்டு இடங்களில் வாயிலெடுக்கவும் கூடத் தோன்றிற்று. சென்னைநகரில் மாலைவேளைகளில் பலகாரங்களையோ, 'ஐஸ்' முதலியவற்றையோ வண்டிகளில்வைத்து விலைகூறிவரும் வகைகளனைத்தும் உனக்குத் தெரியுமே! அந்தமுறையில் பலவகை மாமிசங்களைப் பக்குவப்படுத்திச் சந்திகளில் பலர் வைத்துக்கொண்டு நிற்கும் காட்சி என்னை மயங்க வைத்தது. சந்திகளில் மட்டும் அல்லாது பெரும் உணவு விடுதிகளிலும் இக்கதியே. மற்றும் உலர்ந்த மாமிசப் பிண் டங்கள் பலசரக்குக் கடைகளில் நிரம்ப மாட்டப்பெற் றிருக்கும். நீண்டமீன்களது உடல்கள் கயிறுகளில் கட்டித் தொங்க வைத்திருப்பதைக் கண்டேன். சிறுசிறு மீன் களைப் பிரித்துக் கூடைகளில் பருப்புவகைகளைப் போல நிரப்பி வைத்திருந்தார்கள். அவற்றோடு கூடத்தான் பிற பருப்பு வெங்காயம் போன்ற நம் தேவைக்கு வேண்டியன வற்றையும் வைத்திருந்தார்கள். நமக்கு வேண்டியவற்றை

யும் அவைகளுக்கு இடையிலே சென்றுதான் வாங்கவேண்டும். ஆனால் ஒன்று; இங்கு வாழ்கின்ற தமிழர்களிலும் பெரும்பாலோர் மீனும் இறைச்சியும் உண்கிறவர்கள்தான்.

செல்வி! இத்தகைய கடைக் காட்சிகளைக் கண்டுகொண்டே சென்றோம், நானும் என் உடன்வந்தவரும். இங்கு பெரும்பான்மையானவர்கள் மாமிச உணவில் பழகுபவர்களாதலில், இந்தநிலை இங்கு உள்ளது என்றார் அவர். நான் வாய்மூடி மௌனியாகிப் பேசாது மேலே சென்றேன். பிறகு அவர் அங்கே அருகே இருந்த ஒருபடக் காட்சிச் சாலையைப் பார்க்க அழைத்தார். அது திறந்திருந்தது. சென்னையில் இருக்கும் சிறந்த சாலைகளைப்போல அது அமைந்திருந்தது. இந்த நாட்டில், ஒவ்வொரு சிறு ஊரிலும் படக்காட்சிச் சாலையும் உணவுச்சாலையும் இருக்கும் என்றார். அந்த ஊரில் இன்னும் பல காட்சிச் சாலைகளும் இருக்கின்றன என்றார். பிறகு இன்னும் பிற சிறந்த ஊர் நலங்களைக் கண்டுகொண்டே சென்றோம். அம்மலாக்கா ஊரின் இடையே ஒரு சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. அவற்றைக் கடக்க அங்கங்கு பல பாலங்கள். பாலங்களின் அமைப்பு மிக எளியதாகத்தான் இருந்தது. இன்னும் பல நலங்களைக் கண்டுகொண்டே வீட்டுக்கு வந்தோம். உணவு உண்டோம். பகல் ஓய்வு பெற்றேன். மாலை 6-30க்குச் சொற்பொழிவுத் தொடக்கம்.

பந்து விளையாட்டு :

கூட்டம் தொடங்குவதற்கு முன் ஒரு காற்பந்துப் போட்டி நடைபெற்றது. நம்நாட்டில் பந்தயங்களை வேடிக்கை பார்ப்பது போலவே சிறந்த கூட்டம் அந்த ஆட்டத்தைப் பார்த்து அதிலே திளைத்திருந்தது. அன்று ஆடிய குழு மலேயாவிலேயே சிறந்த குழு என்றும், எனவே பெருவாரியான மக்கள் அதைக் காணச் செல்கிறார்கள் என்றும் அறிந்தேன். இந்நாட்டில் இப்பந்து விளையாட்டில் மக்கள் விருப்பமுடையவர்கள். பல ஊர்களிலிருந்து பந்தாட்டம் பார்க்க வருகிறார்கள். கூட்டத்தைத் தாண்டித்தான் சொற்பொழிவிற்குச் சென்றேன். 6-30க்குக் கூட்டம் 8-15க்குக் கூட்டம் முடிவுற்றது. இடை இடையே இசை யாசிரியர் சேதுராமன் அவர்கள்

தமிழ் இசை பாடினர். கூட்டம் முடிந்தபின் பல அன்பர்கள் வந்து சென்றார்கள். மறுநாள் கோலாலம்பூர் செல்வதால் பல நண்பர் கண்டு பிரியா விடைபெற்றுச் சென்றார்கள்.

கோலாலம்பூருக்கு வழியில் :

மறுநாட்காலையிலும் நடந்தேன். மலாக்காவில் உள்ள சோலைநகரில் அரசியல் அலுவலாளர்களெல்லாம் தங்கி இருந்ததைப் பார்த்தேன். காலைக் கடன்களை முடித்துப் புறப்படத் தயாரானேன். புறப்படுமுன் பலர் வந்து கண்டு சென்றார்கள். அனைவரும் ஊருக்குத் திரும்புங்கால் மறுமுறையும் மலாக்கா வந்துபோக வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள். சரியாகப் பதினொரு மணிக்குக் காரில் புறப்பட்டோம். திரு. அருணாசலஞ் செட்டியார் அவர்கள் குடும்பத்தோடு உடன் வந்தார்கள். வழியில் சன்னாசி மலை என்ற இடத்திற்குச் சென்றோம். அது செட்டிமார்களுக்குச் சொந்தமான கோயிலாம். ஒருதுறவி அங்கே சமாதி அடைந்தாராம். ஒரு சமயத்தில் 5000 பேர் சாப்பிடக்கூடிய வசதிபெற்ற பெரு மண்டபங்களும், அதற்கெற்ற அட்டிற்சாலைகளும் அமைந்திருந்தன. மறைந்த அடிகளார் வழிபட்ட இலிங்க உருவமும், முருகனது உலா விழாவுக்கான உருவமும் (உற்சவ மூர்த்தம்) இருந்தன. போர்க்காலத்து மலாக்காவில் உள்ள செட்டிமார் அனைவரும் இங்கே வந்துதான் தங்கி இருந்தார்களாம். அவர்களது இலட்சக்கணக்கான செல்வத்தை இங்கேதான் மூடி வைத்தார்களாம். அதற்கென அமைக்கப்பட்ட ஒரு நிலவறை இன்னும் இருக்கிறது. திரு. செட்டியார் அவர்கள் போர்க் காலத்தை அம்மக்கள் எவ்வாறு அங்கு கழித்தார்கள் என்பதை விளக்கினார். இந்த இடம் மலாக்காவிற்கு ஐந்துகல் தொலைவில் இருக்கிறது.

பிறகு நாங்கள் நேரே கோலாலம்பூருக்குப் புறப்பட்டோம். இடையில் சிரம்பான் என்ற ஊரில் தங்கிப் பகல் உணவு கொண்டு, ஓய்வுபெற்றுப் பிறகு மாலை 4 மணிக்குப் புறப்பட ஏற்பாடாகி இருந்தது. கார் மிக விரைவாகச் சிரம்பான் நோக்கிச் சென்றது. அதன் வேகத்துக்கு ஈடாக எனது உணர்ச்சி அலையும் மிக வேகமாகப் பறந்து கொண்டிருந்தது.

மலேயாவின் பழங்குடிகள் :

நகரை விட்டு மறுபடியும் சோலைகள் ஊடே புகுந்தோம். எங்கும் பசுமைதான். உயர்ந்த மரங்கள். மரங்களில் பெரும்பாலன 'ரப்பரு'ம், தென்னையும். சிற்சில இடங்களில் நெற்பயிர் விளைவதையும் கண்டேன். எந்தப் பயிருக்கும் தண்ணீர் பாய்ச்சவேண்டும் என்ற தேவையே இல்லை. இயற்கை யன்னை வான் வழி நீர்ப் பெருக்கை நல்கிக்கொண்டே இருக்கிறாள். வழி நெடுகப் பசுஞ்சோலைகளுக்கு இடையே சிறு வீடுகளும், சிற்றூர்களும் காணப்பட்டன. உடன் வந்த செட்டியார் அவர்கள் அவ்வியற்கை வளச் சிறப்பை எல்லாம் விளக்கிக் கொண்டே இருந்தார்கள். சிறுசிறு தனிக்குடில்களில் வாழ்கின்றவர்கள் எல்லாம் இந்நாட்டு முதற் குடிகள் என்றும், அவர்கள் மலாய்க்காரர்கள் என்றும் சொன்னார்கள். மற்றும் மலாய்க்காரர்கள் 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற மேன்மைக் கருத்தை வாழ்விடைக் கொண்டவர்கள் என்றும் கூறினார்கள். அவர்கள் பெரும்பொருள் சேர்த்துவைக்க வேண்டும் என்று எண்ணாதவர்கள். வாழ்வின் தேவைக்குச் சிறு குடிலும் சிற்றுணவும், போதுமான உடையுமே அவர்கள் விரும்புவன. உழைப்பின் பயனால் சிறிது பொருள் பெற்றதும் அதை ஓய்வில் வைத்துக்கொண்டு காலம் கழிப்பர். அவர்கள் பெரும் மாளிகை வாழ்வை விரும்பார். மக்கள் பலர் உணவின்றி வாட, உயர்ந்த குபேர வாழ்வுக்கு வழிகோலும் சுயநலம் அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் தனித்த சோலைகளில் பிற நாட்டார்தம் தொடர்பு கொள்ளாது தனியே வாழ்பவர்கள். சீன மக்கள் தம் இனப் பெருக்கிற் கேற்ப அங்கங்கே புதுப்புது ஊர் கண்டு குடியேறுகிறார்கள். அப்படி ஒரு சிற்றூர் அருகில் உண்டானதைக் கண்டால், மலாய் மக்கள் அவர்களை வெறுக்காது, அவர்களோடு வாழவும் விரும்பாது தாங்கள் அந்த இடம் விட்டு நீங்கி வேறு தனி இடத்தில் தங்கள் குடில்களை அமைப்பார்கள். நகர வாழ்வை அவர்கள் விரும்பவில்லை. தங்கள் நாட்டை இப்படி மற்றவருக்கு விட்டுத் தாங்கள் தனித்த வாழ்வை வாழ விரும்பும் அவர்களை முன்னுக்குக் கொண்டு வர அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அவர் வாழ்வை எண்ணின் நம் நாட்டில்

நகரை விட்டு நாட்டை விரும்பிய இராமலிங்க அடிகளார் நினைவிலே வருகிறார். 'தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால் சிறுகுறும் என்னுள்ளம் பயந்தே நாட்டிலே' வாழ விரும்பிய நல்லவர் அல்லவா அவர்.

குழந்தாய்! இந்நிறை மனமுடைய மலேயா மக்கள் சிறுகுடில்களைக் கண்டுகொண்டே மேலே சென்றேன். எதிரே வானளாவிய மலைகள் காட்சி அளித்தன. மலேயா சிறந்த மலைநாடாகவே விளங்குகிறது என அறிந்தேன். ஒரு நீண்ட தொடர் நெடுந்தொலைவில் தெரிந்தது. சென்ற பாதையானது பலப்பல வளைவுகளைக் கொண்டதாக அமைந்தது. இயற்கை வள எழிலை எல்லாம் கண்டு மகிழ்ந்து கொண்டே பகல் ஒரு மணிக்குச் 'சிரம்பான்' என்ற ஊரைச் சென்று அடைந்தோம்.

சிரம்பானில் சில மணிகள்:

சிரம்பானிலும் தமிழ் மக்கள் பலர் வாழ்கின்றனர். அங்கேயும் கூட்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், அது கோலாலம்பூர் கூட்டத்துக்குப் பிறகே. என்றாலும் பகல் உணவு அப்போது எங்களுக்கு அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திரு. இராமசாமிச் செட்டியார் என்பவர் எங்களை எல்லாம் அன்போடு வரவேற்று அவர்தம் வீட்டில் விருந்தளித்தார். பெரு விருந்தின் சுவை நலத்தில் ஆழ்ந்து பின் சிறிது நேரம் ஓய்வு கொண்டோம். அதற்குள் திரு செட்டியார் அவர்கள் அங்குள்ள முக்கியமானவர்களையெல்லாம் வர ஏற்பாடு செய்தனர். இருபதுக்குக் குறையாத தமிழர்கள் வந்து சென்றார்கள். அவர்களோடெல்லாம் நம் நாட்டைப் பற்றியும் இன்று நம்நாட்டில் இருக்கும் அரசியல் நிலை பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். வந்தவருள் ஒருவர் அரசாங்க மருந்தகத்தே மருத்துவராக இருப்பவர். அவர் ஆங்கில மோகம் கொண்டவர் போலும் அவர் சென்ற பின் திரு. இராமசாமிச் செட்டியார் அவர்கள் அந்த ஊரில் தமிழ் பற்றி ஆங்கிலத்தில் பேச முடியுமா என்று கேட்டார். அது அந்த மருத்துவர் விருப்பமென்றும், இன்னும் ஒரு சிலரும் அவ்வாறு விரும்புகிறார்கள் என்றும் சொன்னார். எனக்கு பெருந்துன்பம் செய்வதுபோல் இருந்தது. தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும்

வேண்டுந்தான். எங்கு? தமிழறியாத பிற நாட்டாரிடையில். முன் கடிதத்தில் குறித்தேனே அமெரிக்கரிடமும் சீனரிடமும் பேசிக்கொண்டிருந்தேன் என்று; அவர்களிடம் ஒரு மணி நேரத்துக்கு மேல் ஆங்கிலத்தில்தான் உரையாடிக் கொண்டிருந்தேன். ஆனால், தமிழராய்ப் பிறந்து, தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலும் வாழ்கின்ற தமிழரிடையில்—தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்றால் அதை எண்ணி நகைப்பதா, அன்றி அழுவதா என்று தெரியவில்லை.

அன்பின் செல்வி!

அந்நிய மோகம் இன்னும் தமிழரை விட்டு அகலவில்லை. நான் முதலிலேயே உடைபற்றிய அந்நிய மோகத்தைக் குறிப்பிட்டேன். இது உணர்வு பற்றிய அந்நிய மோகம். ஆனால் பலர் இந்த அடிமை மோகத்திலிருந்து விடு பட்டு விட்டார்கள். நம் நாட்டிலே தமிழில் பேச வராது என்று சொல்லி ஆங்கிலத்தில் பேசுவது பெருமை என்று எண்ணிய காலம் போய், தமிழில் பேசவிட்டால் மேடையில்-ஏன்-நாட்டில் கூட இடமில்லை என்ற நிலை ஏற்பட்டு விட்டதல்லவா! இந்தக் காலத்திலும் இப்படி அந்நியருக்கு - அந்நிய மொழிக்கு அடிமையாகும் மக்கள் இருப்பதைக் காண வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

சிரம்பானில் மாலை 4 மணி வரையில் தங்கினோம். மலேயாவாழ் இந்தியர் ஒற்றுமையாக இல்லை யென்றும், அவர்கள் ஒன்றுபடின் நாட்டில் இந்தியர் நிலை மேன்மேலும் வளரும் என்றும், ஓங்கிவரும் சீன இனத்தோடு, சுகமாக வாழ வழி தேடிக்கொள்ள முடியும் என்றும், அந்த நல்ல நிலைக்கு இந்தியர் இனியாவது ஒன்று படவேண்டும் என்றும் கூறினார்கள். சுபாஷ் ஆண்மையால் ஆண்ட இடம் இது. நேரு வந்து சென்ற நாடு இது. இவர்களெல்லாம் பல ஆக்க வேலைகளுக்கு வழி கோலிச் சென்றார்கள். ஆனால் இந்திய நாட்டுச் செல்வர்கள் ஒருமை வழிக்கு ஆக்கம் தேடவில்லை. அவர்கள் தமது பொருளைப் பெருக்கித் தம் நாட்டுக்கு அனுப்பும் ஒன்றையே குறியெனக் கொண்டுள்ளார்களாம்.

108079

மாலை நான்கு மணிக்குக் கோலாலம்பூருக்குப் புறப்பட்டோம். கடக்கவேண்டியது நாற்பத்திரண்டுகல். அந்த நெடுவழி என் கண்ணுக்குப் பெரு விருந்தாக அமைந்தது. பல நூறு வளைவுகளைத் தாண்டினோம். பண்டைத் தமிழன் உழைப்பில் வழிந்த இரத்தம்தான் சாலைகளை ஆக்கி இந்நாட்டை வளம்படுத்தியது என்று முன் சொன்னேனல்லவா. அதே தமிழன்தான் மலையின் சரிவிலும், மேடுபள்ளங்களிலும். மலைக்கல்லை உடைத்தும், பிற அருஞ் செயல் செய்தும் இந்த நெடுஞ்சாலையை உண்டாக்கி இருக்கிறான். அம்மம்ம! அந்த இயற்கை வளம் எண்ணத் தரமன்று! இங்கு இதனிலும் சிறந்த இயற்கை வளங்கள் உள்ளனவாம். அவற்றைக் காணும்போது எழுதுகிறேன். கோலாலம்பூர் வருவதற்குள் பல முறை மலையில் ஏறினோம் - இறங்கினோம் - வளைந்தோம் - நிமிர்ந்தோம். காட்டாறுகளைக் கடந்தோம். கழினியும், சோலையும் கண்ணுக்கும், கருத்துக்கும் பெருவிருந்தாய் அமைந்தன. அந்த இயற்கை எழிலைப் பருகிக்கொண்டே சரியாக மாலை 5-45க்குக் கோலாலம்பூர் வந்து சேர்ந்தோம்.

செல்வி!

கோலாலம்பூரில் :

என்னை வருக என்று அழைத்தவரும், சென்ற ஆண்டு வரை சென்னையில் வாழ்ந்து சைவசித்தாந்த சமாசச் செயலாளராயிருந்தவருமாகிய திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் இங்குதான் இருக்கின்றார்கள். அவர்கள் இங்கு வந்ததும் வருக என்று வரவேற்றார்கள். அவருடன் இன்னும் சிலரும் இருந்தனர். மலேயாத் தமிழ்ப் பண்ணையின் தலைமை நிலையம் இங்குதான். அதன் செயலாளர் திரு. சிவம் அவர்கள் இருந்தார்கள். வருக என்றார்கள். பிறகு பலர் வந்தார்கள். மலேயாத் தமிழ்ப் பண்ணைத் தலைவரும், இந்திய அரசினர் 'ஏஜண்டு'ம், சிறந்த தமிழ் அறிஞருமாகிய திரு த. கோ. நடராசப் பிள்ளை அவர்கள் வந்தார்கள். அவர்தம் மொழிப்பற்றும் இனப்பற்றும் சென்னையிலேயே நான் நன்கு அறிந்தேன். அவரைக் கண்டதும் உண்மையில் பெருமகிழ்வுற்றேன். ஒரு உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு இத்தகைய

முறையில் தமிழுக்குத் தொண்டு செய்யும் நல்லன்பரைக் காண்பது அருமையினும் அருமையன்றோ! அவரிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு அவர்கள் வேறொரு கூட்டத்திற்குச் சென்றார்கள். நாங்கள் அனைவரும் எங்களுக் கென அமைத்த உணவு விடுதிக்குச் சென்று உண்டோம். கோலாலம்பூர்த் தமிழ் அன்பர்கள் விருந்தேற்று புரக்கும் நலம் உடையவர்கள். ஒவ்வொரு வேளைக்கு ஒவ்வொரு அன்பர் உண்ண வருக என்று அழைத்தார்கள். தமிழ் மீதுள்ள அன்பால் அழைக்கும் அவர்களது அழைப்புக்களை அப்படியே ஏற்றுக் கொண்டோம். பெரும்பாலும் கோலாலம்பூரில் இருக்கும் வரை வேளைக்கொரு வீடாகத் தான் விருந்து சுவைக்க ஏற்பாடாகி இருந்தது. உண்டபின் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்து படுத்துக் கொண்டோம். இத்துடன் நேற்றைய நிகழ்ச்சிகளை முடித்துக்கொள்ளுகிறேன். இன்றைய நிகழ்ச்சிகளையெல்லாம் இன்று இரவிலாவது நாளையாவது நன்கு எழுதுகிறேன்.

கடிதம் **10.** கோலாலம்பூர்

4—6—50

அன்பின் அரசி!

நேற்று விடியற்காலை உறக்கம் விட்டு எழுந்தேன். திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் உலவி வரலாம் என்றார்கள். நானும் புறப்பட்டேன். மேல் நிகழ்ச்சியைக் கூறுவதன் முன் கோலாலம்பூரைப் பற்றிச் சொல்ல வேண்டும். கோலாலம்பூர் மலேயா கூட்டாட்சியின் தலை நகரம். சிங்கப்பூரைத் தனியாகப் பிரித்து ஆங்கிலேயர் தம் காலனியாக ஆக்கிக் கொண்டார்கள். அத்தீவு நீங்க மற்றைய மலேயா நாடுகள் அத்தனையும் தம்முள் கூட்டாட்சி பெற்றே உள்ளன. அதற்குத் தலை நகர் கோலாலம்பூர். எனவே சிங்கப்பூருக்கு அடுத்த சிறப்பைப் பெற்ற ஊர் இது. இது கடற்கரைப் பட்டினமல்ல. உள்நாட்டு ஊர். ஊர் நெருக்கமாக அமையவில்லை. மிகப் பரந்து கிடந்தது. சிங்கப்பூரில் கண்டது போலவே இங்கும் சீனர்கள்

தாம் அதிகம். மலேயா மக்கள் குறைவு. பிற இடங்களைக் காட்டிலும் இங்கு தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். 'தமிழ் நேசன்'' 'ஜனநாயகம்' இரண்டு தமிழ் நாள் இதழ்கள் இங்கு வெளிவருகின்றன. தலைநகரானதால் எல்லா அரசியல் தலைமை அலுவலகங்களும் இங்கு இருக்கின்றன. நகரம் மிகத் தூய்மையானதாக அமைந்துள்ளது.

ஊர் அமைப்பும் வாழ்வும் :

காலை வெளியே உலவச் சென்றபோது, சற்று தொலைவில் தனித்த மாளிகைகள் காணப்பட்டன. அவைகள் பெரும்பாலும் சீனர்களுக்குச் சொந்தம் என்றும், சீனர்களோ அன்றிப் பிற அரசியல் அலுவலாளர்களோ தான் அங்கு வாழ்கின்றனர் என்றும் அறிந்தேன். தமிழர்களில் பெருஞ் செல்வம் பெற்றவர்கள் பலர் இருப்பினும் அவர்கள் இத்தகைய சிறந்த வாழ்வை வாழ விரும்பவில்லை. அவர்கள் அனுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். உண்பது, உறங்குவது, பணியாற்றுவது, ஓய்வு கொள்வது என்ற எல்லாம் ஒரு சிறு வீட்டில்தான் என்றால் எவ்வாறு அவர்கள் முழுநலத்தையும் அனுபவித்தவர்களாக முடியும்? அதுவும் ஒரே இடத்தில் ஐந்தாறு பேர்கள் கூடி வாழும்போது. ஏழைகள் வாழ்வு மட்டும் அது என்று எண்ணாதே! எங்கோ ஒன்றிரண்டு செல்வர்கள் தவிர மற்றவர்களெல்லாரும், பணமிருந்தும் கொடுத்து வைக்காதவர்கள். வளமிருந்தும் வாழ்விழந்தவர்கள். செல்வமிருந்தும் சிறப்பிழந்தவர்கள் தான்.

சீனர்களும், ஆங்கிலேயர்களும் இங்கு சிறக்க வாழ்கின்றார்கள். சீனர் தம் வாழ்க்கை முறை சீர் கேடுற்றதாயினும் வாழ்க்கை நிலை சிறந்தே காண்கிறது. மலாய் நாடு வந்து குடியேறிய சீனன், தன் நாடு வேறு, இந்நாடு வேறு என்று எண்ணாமல் பணியாற்றி, பெற்றதை வைத்துக் கொண்டு சிறந்த முறையில் வாழ்வு நடத்தி, தானும் தன்னுடன் வாழும் சீன மக்களும் முன்னேற வேண்டிய வழிகள்-வகைகள் என்னென்னவோ அத்தனையும் முயன்று இங்கேயே செய்து சிறக்க வாழ்கின்றான். சம்பாதித்துத் தன்னாட்டுக் கனுப்பி விட்டு, ஒரு நாளில் தானும் இந்நாட்டை விடப் போகின்றவன் தான் என்ற எண்ணம் அவ

னுக்கு இல்லை. ஆகவே அவன் பெற்றது கொண்டு சுற்றம் அருந்தி, தானும் உயர் வாழ்வில் இயங்குகிருன். ஆனல் இந்தியனே-தமிழனே தான் எவ்வளவு செல்வம் பெற்ருலும், இந்நாட்டை வேற்று நாடாகவே கருதுகிருன். ஈட்டிய பொருள் அனைத்தையும் இந்தியாவுக்கு அனுப்புவதிலேயே கண்ணும் கருத்துமா யிருக்கிருன். தன் வாழ்வைக் காணக் கூட அவனுக்கு நேரமில்லை. எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும் இறுதியில் இந்தியா செல்ல வேண்டும் என்ற எண்ணத்திலேயே வாழ்கின்ருன். இந்நாட்டை ஒரு வளம் பெருக்கும் இடமாக எண்ணுகின்ருன். அதனல் அவ்விந்தியரது வாழ்க்கை முறை உயரவில்லை. அவர் தம் கல்வி முதலியனவும் உயர வழி இல்லை. வந்த பிறகு இதைத் தன் சொந்த நாடென ஓம்பி, பெற்றதைக் கொண்டு இங்கேயே சிறந்த வாழ்வு நடத்துவாராஞல் தமிழர், இந்தியர் மற்றைய அனைவரினும் சிறக்க வாழ்வார்கள். ஆனல் அந்த ஒரு செயல் காண முடியாத ஒன்றே என் எண்ணுகின்றேன்.

ஒற்றுமை யற்ற வாழ்க்கை :

நிற்க, செல்வி மலாய் வாழ் இந்தியரில் நூற்றுக்கு எண்பதுக்கு மேற்பட்டவர்கள் தமிழர்தான். ஆகவே இந்தியர் என்று நான் குறிப்பதெல்லாம் நம் அருமைத் தமிழ் மக்களைத்தான். கோலாலம்பூரில் தமிழர் மிகுதி என்று கூறினேன். அவருள் யாழ்ப்பாணத் தமிழர் பலர் இருக்கின்றனர். யாழ்ப்பாண மக்கள் சிறந்த தமிழ் அறிவும், தமிழ்ப்பண்பும் படைத்தவர்கள். இங்கு ஆற்றும் தமிழ்ப் பணியில் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. நடைபெறும் கூட்டங்களும் பெரும்பாலன அவர்களைச் சார்ந்தனவே.

அரசி! மற்ருென்றும் இங்கேயே எழுதிவிடுகிறேன். மலேயா வாழ் இந்தியர் பெரும்பாலும் ஒற்றுமை அற்றவர்களாகத் தான் இருக்கிருர்கள். புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் இந்தியாவைப் பற்றிக் கூறும்போது,

'வாழ்கின்ருர் முப்பத்து முக்கோடி மக்கள் என்ருல்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்' என்ருன்.

அந்த வேற்றுமை மனப்பான்மை அத்தமிழனை எங்கும விடாது பற்றிச் செல்கிறது போலும். மலேயா வாழ் இந்

தியர்களுக்குள் பல வேறுபாடுகள் உண்டாம். இந்தியரில் பெரும்பாலோர் கூலிகளாக-எழுத்தறியா அப்பாவிகளாகத் தோட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களையல்ல நான் குறிப்பது. எல்லாம் அறிந்த நகரத்தில் வாழும் மக்களைப் பற்றியே நான் இங்கு குறிக்கின்றேன். நான் ஏதாவது ஒரு 'ரப்பர்' தோட்டத்திற்கு விரைவில் செல்வேன். செல்லும்போது அந்த நிலை கண்டு பிறகு எழுது கிறேன். நகரில் வாழ்கின்ற இந்தியர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றுவார்களானல் பல உயர்ந்த செயல்களைச் செய்யக் கூடும். யாழ்ப்பாணிகள் ஒரு மனத்தோடு உழைக்கிறார்கள். சீனர் வாழ்வு ஒருமையில் சிறக்கிறது. இந்தியர் வாழ்வு ஓரளவில் பல்வேறு வேற்றுமைகளுக்கு இடையே ஒற்றுமைக்கு வழி கோலுகிறது. அவ்வொற்றுமை வளர வேண்டும்; வேற்றுமை மடிய வேண்டும்.

நாட்டு இதழ்கள் :

குழந்தாய்! இன்று எண்ணெய் தேய்த்துக் கொண்டு பெரும்பகுதியை ஓய்வில் கழித்தேன். யாரையும் காண வில்லை. பிறகு மாலை நான்கு மணிக்கு மேல் இங்குள்ள 'தமிழ் நேசன்','ஜன நாயகம்' என்ற இரண்டு நாளிதழ் அலுவலகங்களுக்கும் சென்றேன். முதலாவது செட்டிமார்கள் நடத்துவது; பின்னது வேறு. இரண்டிலும் உள்ள பொறுப்பாளர்களும், ஆசிரியர்களும் என்னை அன்போடு வருக என்று வரவேற்றுத் தேநீர் கொடுத்து உபசரித்தார்கள். அவர்களிடமிருந்து மலாய் நாட்டில் பத்திரிகைத் தொழில் எவ்வாறு நடைபெறுகிறது என்று அறிந்தேன். இவற்றுடன் சிங்கப்பூரிலிருந்து 'தமிழ் முரசு'ம் "மலேயா நண்பனும்,' பினங்கிலிருந்து 'சேவிகா'வும் ஆக ஐந்து தமிழ் நாள் இதழ்கள் மலேயாவில் பணியாற்றுகின்றன. அவை மிகப் பெருத்த அளவில் இல்லையாயினும் தம்மாலான பணியைக் கூடியவரை தளராது ஆற்றித்தான் வருகின்றன. பெரும்பாலும் தாய் நாட்டுச் செய்திகள் தான் இடம்பெற்றுள்ளன. அவர்களுக்கு உள்ள குறைகளை அறிந்தேன். இந்திய அரசாங்க ஆணையின்படி அவர்கள் தமிழ் எழுத்துக்களை அங்கிருந்து ஏற்றுமதி செய்ய முடியவில்லையாம். நல்ல எழுத்துக்களை அவர்கள்பெறமுடியவில்லை. போருக்கு முன் பெற்ற அந்தப் பழம் எழுத்துக்கள் தவிர்த்துப் புது

எழுத்துக்கள் பெற வழி இல்லை. எனவே அழகிய அச்சு வேலைகளை இங்கு காண முடியவில்லை. இந்திய- சென்னை அரசாங்கத்தினர் பத்திரிகைகளுக்காவது விலக்களித்து வேண்டிய எழுத்தைப் பெற அனுமதிப்பாராயின் இங்கு தமிழ் அச்சுக்கலை நன்கு வளரும். இதழ்ப் பணியும் வளரும். அவர்களைக் கூட்டாக அதுபற்றி முயலுமாறும், என்னால் கூடிய அளவு தாய்நாடு சென்று உதவுவதாகவும் அவர்களுக்கு வாக்களித்தேன்.

மாலை 3-30 மணிக்கே அவர்களுடைய இதழ்கள் வெளி வந்து விடுகின்றன. மலேயா நாடு முழுவதும் பத்திரிகை செல்கின்றது அவ்விதழ்க் கூடங்களில் சிறிது நேரம் தங்கிப் பிறகு திரும்பினேன். பிறகு 5-30 வரை ஓய்வு கொண்டு 6 மணிக்குக் கூட்டத்திற்குச் சென்றேன். கூட்டம் விவேகானந்தர் ஆச்சிரமத்தில் அமைக்கப்பட்டிருந்தது. 'சமரசம்' என்னும் பொருள் பற்றிப் பேசினேன். ஒரு யாழ்ப்பாணத்தார் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்திற்குப் பல யாழ்ப்பாண ஆடவரும் பெண்டிரும், தமிழ் நாட்டு மக்களும் வந்திருந்தனர். கூட்ட முடிவில் ஆச்சிரமத்தின் வழிபாட்டுக் கூடத்தைக் காட்டினார்கள். விவேகானந்த அடிகளார் திருப்பெயரால் அமைந்த அக் கூடம் தக்க முறையில் அவர் கொள்கைகளை யேற்றுப் பணியாற்றுகின்றதா என அறிய முயன்றேன். காலம் இல்லை. பல அறிஞர்கள் அறிமுகமாயினர். கூட்டம் முடிந்த பின் தங்கிய இடத்திற்கு வந்தோம். முன் குறித்த படி ஒருவர் வீட்டில் விருந்து ஏற்பாடாகி இருந்தது. விருந்துக்குப் பின் சிறிது தூரம் நடந்தேன். பத்து மணிக்குப் படுக்கச் சென்றேன். பிற அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். இன்று கல்வி பற்றிச் சில முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவை அடுத்த கடிதத்தில் வரும்.

கடிதம் **11.**

கோலாலம்பூர்,
4—6—48 (இரவு)

அறிவின் கொழுந்தே!

முன் கடிதங்கள் பெற்றிருப்பாயே! எல்லாவற்றையும் நன்கு படித்து அறிந்துகொள். இன்று மிகச் சிறந்த ஒரு பொருளைப் பற்றி எழுத இருக்கிறேன். ஒரு நாடு நல

முற வேண்டுமானால் அந்நாட்டில் கல்வி சிறந்த நிலையில் இருக்க வேண்டும். படித்தவர் தொகை எந்த நாட்டில் அதிகமாக இருக்கின்றதோ, அந்நாடே அனைத்திலும் சிறந்த நாடாக இருப்பதைக் காண்கின்றோம். கற்ற மக்கள் வழி அந்த நாடு நலம் பெறும்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்றார் நம் பழம் பாட்டனார். 'அறிவுடையோனாறு அரசு செல்ல', அவ்வரசு வழி நாடு நடக்க, அந்நாடு பிற நாடுகளின் முன் தலை சிறந்து நிற்கும். செல்வி, இங்கு மலாய் நாட்டுக் கல்விமுறை பற்றியும் அதனினும் சிறப்பாகத் தமிழ்க் கல்வி முறை பற்றியும தான் இன்று உனக்கு எழுதப் போகிறேன். தமிழ்ப் பண்ணை நிதியாளர் திரு உ. அருணாசலஞ் செட்டியார் அவர்கள் இந்த மலாய் நாட்டுக் கல்வி அதிகாரியைக் (Dy Director for Education) காண ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர் ஒரு ஆங்கிலேயர். இங்கு எல்லாத் துறைகளிலும் தலைமைப் பதவியில் இருப்பவர் ஆங்கிலேயர்தான். இது அவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட நாடாதலின் அவர்கள் எல்லாத் தலைமைப் பதவிகளையும் தம்மதாக ஆக்கிக்கொண்டுள்ளனர்.

கல்வி அதிகாரியைக் கண்டேன்:

முன் ஏற்பாட்டின்படி காலைச் சிற்றுண்டிக்குப் பின் 9–45-க்குக் கல்வி அதிகாரியை நானும் திரு செட்டியார் அவர்களும் காணச் சென்றோம். எல்லாவற்றிற்கும் ஓர் உயர்ந்த கல்வி அதிகாரி இருந்தார் பிறகு ஒவ்வொரு மொழிக்கும் (மலே, சீனம், ஆங்கிலம், தமிழ்) தனித்தனி அதிகர்ரி இருந்தனர். அனைவரும் ஆங்கிலேயர்தான். நாங்கள் தமிழுக்குரிய தலைவரைச் சென்று கண்டோம். மலேயா நாட்டில் தமிழ்த்துறைக்கு ஆக்கம் தேட அமர்ந்திருப்பவர் ஒரு ஆங்கிலேயர்தான். அவருடன் 11 மணிக்கு மேலும் சுமார், 1½ மணி நேரம் பேசிக்கொண்டே இருந்து பல குறிப்புகள் பெற்றோம். அவர் பொறுமையோடு, நாங்கள் கேட்ட கேள்விகள் அத்தனைக்கும் சிறந்த முறையில் பதில் அளித்ததோடு, பல குறிப்புகளையும் நேரில்

காட்டி மலேயாவில் தமிழ் எவ்வாறு வளர்க்கப்படுகிறது என்பதை விளக்கினர்.

மலேயாவில் நான்கு மொழிகள்தான் பயிற்றப்படு கின்றன. அவற்றுள் முதலிடம் பெறுவது அந்நாட்டு மொழியாகிய மலே. அடுத்தது சீனம். மூன்ருவது ஆங் கிலம். இறுதியாக நிற்பது தமிழ். தமிழும் அரசாங்கத்தே ஒரு மொழியாக அமைந்துள்ளதை எண்ணி மகிழ வேண்டுவதே. மேலும் போருக்குப் பின் தமிழ்வளர்க்காக அரசியாலார் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியைப் பாராட்ட வேண்டும். போருக்கு முன் இருந்ததைக் காட்டிலும் தற்போது கல்வித்துறையில் பெரும் பொருள் செலவழிக்கப் படுகிறது. தமிழைப்பொறுத்த வரையில் 1946-ல் ஆகிய செலவைக் காட்டிலும் 1947-ல் நான்கு மடங்கு செலவு அதிகமாகி இருக்கிறது. முன்னே 'ரப்பர்' தோட்டங்களிலும், பிற விடங்களிலும் தனியாக நடத்திய பாடசாலேகளுக்கெல்லாம் தற்போது அரசியலார் மானி யம் வழங்குகின்றனர். அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் கள் நல்ல தேர்ச்சியும், போதனுமுறைப் பயிற்சியும் பெற்ற வர்களாயின் அவர்களுக்கு 50 வெள்ளிச் சம்பளமும் 30 வெள்ளி உயர் பொருள் உதவியும் ஆக 80 வெள்ளி அர சாங்கத்திலிருந்து கொடுக்கின்றனர் பயிற்சி பெருத ஆசிரி யர்களாயின் அவர் அவர் தகுதிக்கு ஏற்ப 30 வெள்ளியி லிருந்து சம்பளம் பெறுகின்றனர். பயிற்சிபெற்ற ஆசிரியர் தொடக்கத்தில் 80 வெள்ளி பெறுகிருர் என்ருல் நம் நாட்டுக் கணக்குப்படி ரூ 125-ஆகிறது. ஆதாவது அங்கு இன்று ரூ 45-பெறும் ஆசிரியர் இங்கு ரூ 125 பெறுவார். அத்தொகை முழுதும் அரசாங்கத்தாராலே யே கொடுக்கப்படுகிறது. ஆசிரியர் சம்பளத்தோடு மட்டு மல்லாது, பாடசாலேக்கு வேண்டிய பிற துணைக்கருவிகள், நூல்கள், பிறபாடப் பொருள்கள் ஆகிய அனைத்தும் அர சாங்கத்தாராலேயே வழங்கப்படுகின்றன. சில அரசியலார் நடத்தும் பள்ளிக் கூடங்கள். தவிர, பெரும்பாலன இந்த முறையில் மானியம் பெறுகின்றன. அரசியலார் நடத்தும் பள்ளிகளின் பொறுப்பு அனைத்தும் அவர்களையே சார்ந் தது. பிறபள்ளிகளை நடத்துவோர் செய்யவேண்டுவது பள்ளிக் கூடத்திற்கு நல்ல இடத்தைப் பெறுவதும், அரசாங்க மானியத்தை வாங்கி ஆசிரியருக்குக் கொடுப்

பதும், ஒழுங்காகப் பள்ளிகளைப் பார்த்துக் கொள்வதும் தான். மலேயா முழுதும் மானியம் பெருத தமிழ்ப் பள்ளிகள் இருபத்தைந்துதான் இருக்கின்றன. இவையும் போதுமான இடவதியும், பிற வசதிகளும் பெருத காரணத்தினுலேயே நிற்கின்றன. அனைத்தும் பெறின் திட்டமாக அரசாங்க மானியம் அவைகளுக்கும் உண்டு. பல பள்ளிகளும் தொடங்கப் பெற விருக்கின்றன.

கல்விக் கணக்கு :

மலேயாவில் தமிழர் பெரும்பாலராக ரப்பர் தோட்டங்களில்தான் வாழ்கிருர்கள் என்று எழுதினேன் அல்லவா? எனவே, பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் அந்தத் தோட்டங்களில்தான் உள்ளன. சிங்கப்பூர் நீங்கிய மலேயா முழுதும் 264 தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவற்றுள் 39,000 மாணவ மாணவிகள் கல்வி கற்கிருர்கள். சுமார் 1,100 ஆசிரியர் பள்ளிகளில் பணியாற்றுகின்றனர். அவருள் பயிற்சி பெற்றவர்கள் 250 பேர்தான். பயிற்சி பெறுவதற்கு நம் நாட்டைப் போலத் தனியாகப் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் (Training Schools) கிடையா. ஆசிரியர்களை வார இறுதியில், சனி ஞாயிறுகளில் வரவழைத்து, அந்தந்த வட்டமேற்பார்வையாளாகள் பயிற்சி வகுப்பு நடத்துகிருர்கள். நான் மலாக்காவில் கண்டதாகச் சொன்ன பயிற்சி வகுப்பு அத்தகையதுதான். இங்கும் அத்தகைய பயிற்சி வகுப்புகள் நாளை நடைபெறும் போது, சென்று காணவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது பற்றி நாளை எழுதுகிறேன். அந்தப் பயிற்சி வகுப்புகள் எட்டு இடங்களில் நடைபெறுகின்றனவாம். தறபோது அப்பயிற்சி வகுப்பில் தேர்ந்தவரே பயிற்சிபெற்றவர் என்று கணக்கிடப்படுகின்றனர். ஆனல் இன்னும் இரண்டு ஆண்டில் 1950ல் பயிற்சிக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப் போகின்ருர்கள். அப்பயிற்சிக் காலம் மூன்ருண்டாகும். அதில் தேர்ச்சி பெறுபவர்கள் தான் ஆசிரியராக வருவர். பயிற்சி இல்லாததற்காகத் தற்போது யாரும் தள்ளப்படுவதில்லை. பழைய ஆசிரியர்களும் நிலைத்த இடம்பெறுகின்றனர். ஆனல் அவர்கள் வாரந்தோறும் நடைபெறுகின்ற பயிற்சி வகுப்புகளுக்குக் கட்டாயம் வந்து பயிற்சி பெற்றுச் செல்லவேண்டும். அவ்

வாறு இவ்வாண்டு பயிற்சி பெறுபவர்கள் சுமார் 200 ஆசிரியர்கள்.

குழந்தாய்! இப்பயிற்சி வகுப்பு தமிழுக்குத்தான் நடைபெறுகின்றது. பிற மலே, சீனம் முதலிய வற்றிற்கு இத்தகைய பயிற்சி வகுப்பு கிடையாது. அவற்றிற்கு வேறுமுறை. பயிற்சிக் கல்லூரிகள் கூட உண்டு. தமிழ் மொழி இவ்வகையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. தமிழை வளர்க்க தமிழ் நாட்டு அரசியலார் ஆக்கப்பணி ஆற்றுவதைக் காட்டிலும் மலேயா அரசாங்கம் ஊக்கங் காட்டி ஆக்க வேலை செய்கின்றது என்றால் அது மிகையாகாது.

இப்பயிற்சி உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. வேறு மொழி ஒன்றும் பயிலாது, தமிழ் மட்டும் பயின்ற வர்கள ஆசிரியராக வருவதற்குச் சாதகமாக வருகின்றது இது. நான் செல்லும் இடங்கள் தோறும் உள்ள ஆசிரியர் களைக் காணவேண்டும் என அவர்கள் விழைந்தார்கள். அப்படியே கண்டு கொண்டுதான் வருகிறேன். இளம் மாணவ மாணவிகளும் தனித்தமிழ்ப் பயிற்சியில் ஊக்கங் காட்டித்தான் படிக்கிறார்கள்.

தமிழ் வளருகிறது :

தமிழ் வளர்வதற்கு அரசாங்கத்தார் ஒரு பத்தாண்டுத் திட்டம் தயாரித்துள்ளனர். எட்டாவது ஆண்டு இறுதிக் குள் தமிழ் மாணவரில் கல்வி கற்காதவர் கள் ஒருவருமே இல்லை என்று சொல்லும் அளவிலே அத் திட்டம் தீட்டப் பெற்றுள்ளது. தற்போதைய கணக்கின் படி பள்ளிக்குச் செல்லும் வயதில் உள்ள தமிழ் மாணவர் தொகை 64,000. ஆனால் பள்ளியில் படிக்கும் தொகை 59,000. மிகுதி 25,000 இளைஞர்களும் வேறு வேலைகள் செய்தோ, வீண்பொழுது போக்கியோ காலம் கழிக்கும் சிறுவர்கள் தான். 6 ஆண்டுக்கு மேல் 14 ஆண்டுக்குள்ளாகப் பள்ளிக்குச் செல்லும் வயதாக வரையறுத்துள்ளார் கள். 10 ஆண்டு திட்டத்தின்படி எல்லா மாணவர்களையும் வற்புறுத்திப் படிக்க ஏற்பாடு செய்ய 1800 ஆசிரியர்கள் தேவை. அவர்களும் ஆண்டுதோறும் சிறுகச் சிறுகப் பயிற்சி பெற்று வெளிவருவார்கள். வருங்காலத் திட்டத்தில் பயிற்சிபெறுபவருக்கு 60 வெள்ளிச் சம்பளம் தொடங்கத்

திட்டம் உள்ளது. அவையெல்லாம் ஆசிரியர் திறன், படிப்பு, பயிற்சி முதலியவற்றைப் பொருத்துள்ளது. பத்தாம் ஆண்டில் தமிழ் மாணவர் அனைவரும் படித்தவர்களாகவே இருப்பார்கள். இதனால்-இத்திட்டத்தால்-பெருஞ் செலவு அரசாங்கத்தாருக்கு உண்டானாலும், அவர்கள் அதைப் பொருட்படுத்தாது மக்கள் கல்வி ஒன்றையே கண் எனக் கருதுகின்றனர்.

தமிழனே நடை:

அரசாங்கத் தமிழ்க் கல்வித் துறைவர் தாங்கள் எவ்வாறு மலேயாவில் தமிழை வளர்க்கப் போகின்றோம் என்பதை விளங்க உரைத்தார். நான் அவரை விடாது மேலும் மேலும் பல குறுக்குக் கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தேன். தோட்டத்தில் உள்ளவருக்கும், மற்றவருக்கும் ஏன் கட்டாயத்தின் மூலம் கற்றுக் கொடுக்கலாகாது என்றேன். அதற்குப் போதுமான ஆசிரியர் இல்லாமைதான் முதற் காரணம் என்றார். அத்துடன் தோட்டங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் பெரும்பாலன தோட்ட முதலாளிகளாலேயே நடத்தப் படுகின்றமையால் அவர்கள்தான் தத்தம் தொழிலாள் அவர்தம் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புமாறு வற்புறுத்தவேண்டும். அப்படி வற்புறுத்தினால் ஒரு தோட்டத்தில் இருக்கிற தொழிலாளி மற்றொரு தோட்டத்திற்குச் செல்வானே ஒழிய தன் மக்களைப் படிக்கவிட மாட்டான் என்றார். இதைக்கேட்டால் அழுவதன்றி வேறு என்ன செய்வது? இப்படி வலிய வந்து கல்வி பெற வேண்டினும் அந்த இளங் குழந்தைகள் சம்பாதிக்கும் சிறு காசைப் பெரிதாக மதித்து, அவர் தம் பிற்கால வாழ்வைப் பாழாக்கும் அறிவறியாத் தமிழ் இனம் அந்நிய நாட்டில் அவதியுறுவதைக் காண நெஞ்சு பொறுக்கவில்லை. அப்படித்தான் அக்குழந்தைகளும், பெற்றோரும் சம்பாதிக்கின்ற காசையாவது காத்துவளர்க்கின்றார்களா என்றால் அதுவும் இல்லையே. பெரும்பாலும் குடிக்கே, வருந்திப் பெறும் பணம் அனைத்தும் பாழாக்கப் படுகிறது. அவர் தம் நிலையை எழுத ஆரம்பித்தால் வேறு ஒன்றையுமே எண்ண இயலாது.

செல்வி! மாணவரைக் கட்டாயப் படுத்த முடியாத நிலை இது. நான் மற்றொன்றும் கேட்டேன். ஏன் தமிழ்

மாணவர் அனைவரையும் கட்டாயம் .தமிழ் பயில வேண்டும் என்று சட்டத்தால் வற்புறுத்தலாகாது என்றேன். நான் முன் ஒன்றிருமுறை எழுதியது போன்று, இங்குள்ள தமிழ் மக்கள் பலர் ஆங்கில மோகத்தில் ஆழ்ந்துள்ளவர்கள். ஆகவே அந்தக் கேள்வி கேட்க வேண்டிநேர்ந்தது. ஆனால் அந்தச் சட்டம் வருமானால் தமிழர்களே அதை எதிர்ப்பார்களாம். எதிர்ப்பவர் நகரில் உள்ள செல்வர்களேயாவர். இப்படியே ஒருபுறம் ஏழைகளும், ஒருபுறம் செல்வர்களும் இருந்து தமிழ் வளர்ச்சிக்குத் தடை செய்கின்றார் என்றால் அதை எல்லாம் தாண்டி அரசியலார் செய்து வருகின்ற முயற்சியை நாம் போற்றாதிருக்க முடியுமா? மலேயாநாட்டில் அரசாங்கத்தார் இந்தச் சிறந்த முறையில் தமிழ் வளர்க்கிறார்கள்.

நான் மற்றொன்றும் கேட்டேன். நல்ல தமிழ் ஆசிரியர்களையும் தமிழில் பயிற்றுவிப்பவர்களையும் ஏன் தமிழ் நாட்டில் இருந்துவரவழைக்ககூடாது என்று கேட்டேன். அதற்கும் இங்குள்ள தமிழர்கள் இணங்கார்கள் என்ற பதில் பெற்றேன். 'நல்ல அறிஞர்கள் சில ஆண்டுகள் இங்கு வந்து தமிழ் மணம் பரப்பிச்சென்றால் மிகுந்த பயன் உண்டாகும். எனினும் இங்கிருக்கும் தமிழர் தங்களுக்கு வேலைகள் இல்லாது போகுமே என்று எண்ணி வருந்துவார்கள். என்றாலும் சில பேச்சாளர்களாவது வந்து செல்லத்தான் வேண்டும். அந்த முறையில் பணியாற்றும் பொறுப்பை மலேயா தமிழ்ப்பண்ணை ஏற்றுக் கொண்டிருப்பதைக் காண மகிழ வேண்டியுள்ளது என்றார். இன்னும் கல்வி நிலைகளைப் பற்றிப் பல கேட்டறிந்தேன். முடிவில் அவர் பெருமையோடு தமிழ் வளர்ச்சியைப் பற்றித் தமிழ் நாட்டு அரசியலார் கருத்திருத்துவதை விட நாங்கள் அதிகமாகவே ஆவன செய்கிறோம் என்று கூறி முடித்தார். நானும் அவர் சொல்வது உண்மையாதலின் ஒன்றும் பதில் கூறாது ஆம் என்றேன். நம் நாட்டில் நம் அரசாங்கம் இருந்த போதிலும் இதுவரை இவர்கள் தமிழ் வளர்க்கக் கையிலே உள்ள பத்தாண்டு திட்டத்தைப் போன்று ஒரு திட்டம் உண்டா? குழந்தாய்! இன்னும் ஜில்லா வாரியாகத் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அமைந்த கணக்கை இத்துடன அனுப்பியிருக்கிறேன் கண்டு கொள்க

மலேயாவில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் (1948 ஆண்டுத் தொடக்கத்தில்)

எண்	மாவட்டங்கள்	மொத்தப் பள்ளிக்கூடங்கள்	மொத்த ஆசிரியர்கள்	பள்ளியில் பயிலும் தமிழ் மாணவர்				மொத்தம்
				அரசியலார் பள்ளியில்	உதவிச் சம்பளம் பெறும் பள்ளியில்	தனிப்பட்ட பள்ளியில்	தோட்ட உதவி பெறும் பள்ளியில்	
1	பெர்லிஸ்	3	3	35	—	—	61	96
2	கிட்டா	80	98	—	248	—	2326	2574
3	பினாங்கு	41	83	85	1071	199	1062	3047
4	பேராக்	212	291	834	2480	260	5997	9571
5	சிலாங்கூர்	233	343	1073	1916	354	8970	12313
6	நெகிரி செம்பிலான்	72	102	520	423	72	1978	2993
7	மலாக்கா	35	35	59	150	—	819	1028
8	ஜோகூர்	136	165	170	750	45	3782	4747
9	பாகாங்	29	39	42	462	72	559	1136
	ஆகமொத்தம்	841	1170	2818	8130	1002	25554	37504

இவை தவிர, கெலந்தான், டிரங்கானு என்ற கீழ்ப் பகுதியிலுள்ள இரண்டு மாவட்டங்களில் பெருங்காடுகள் அடர்ந்திருப்பதாலும், மக்கள் எண்ணிக்கையே மிகக்குறைவாயிருப்பதாலும் பள்ளிகள் கிடையா. கடைசியாக எடுத்த கணக்குப்படி மலேயா முழுதும் 39,000 மாணவர் படிக்கின்றனர்.

கல்வி அதிகாரியாகிய அவ்வாங்கிலேயரோடு, நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தபின், அவருக்குத் துணை யாளராயிருந்த நம் நாட்டு நல்லார் திரு. இராஜா அவர் களிடமும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு வந்தோம்.

ஆங்கில அதிகாரி என்னை நான் நம் நாட்டிற்குப் புறப்படுவதற்கு முன் சில பள்ளிகளையாயினும் சென்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் அத்துட னில்லாது, வாய்ப்பு நேருமேல் ஐந்தாறு ஆண்டு கள் கழித்து இங்கு வந்து தமிழ் எவ்வாறு வளர்ந்துள் ளது என்பதையும் காணவேண்டும் என்றும் கூறினர். அவர் இந்தியாவுக்கு வந்துள்ளாரா என அறியக் கேட் டேன். இல்லை என்றார். அவர் ஒரு பள்ளியில் ஆசிரிய ராய் இருந்தவர் என்றும், பிறகு இந்தப் பதவிக்கு வந்தவர் என்றும் அறிந்தேன். அவருக்குத் துணைவராயிருப்பவர் ஒரு தமிழர் அவர் தமிழ் வளர வேண்டிய வகைகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்து வருகின்றார். இருவர் தம் முயற்சியாலே பாரதி கண்ட கனவு 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' செய்யப் பெறும் சிறப்பு, மலேயா நாட்டில் சில ஆண்டுகளில் நிறைவேறப் பெறும் எனும் நிலை எண் ணும்போது மகிழாதிருக்க முடியவில்லை

'காஜாங்' :

குழந்தாய்! கடிதம் மிக நீளுகிறதல்லவா? என் செய் வது. கண்டதைச் சொல்லித்தானே ஆக வேண்டும். சரியாகப் 11-30க்குத் தங்கி இருந்த இடத்திற்கு வந்தோம். அன்றைய பகல் உணவு எங்கட்குக் கோலாலம்பூரில் இல்லை. இங்கிருந்து 15 கல் தொலைவில் உள்ள 'கஜாங்' என்ற ஊரில் ஒரு செட்டியார் வீட்டில் விருந்து ஏற்பா டாகி இருந்தது. இந்தஊர் கோலாலம்பூர் சிங்கப்பூர் நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது. காரில் அங்கு 12-30க்கு கெல் லாம் போய்ச் சேர்ந்தோம். அவர்கள் இன்முகத்தோடு வர வேற்றார்கள். நல்உணவு உண்டோம். பகல் ஓய்வு கொண்டு மாலை 3-30க்கு அச்சிறு நகரைச் சுற்றிப் பார்த்தேன். அச்சிறு நகருக்கும் நீர் வசதியுண்டு. குழாய் உண்டு

மின்சாரம் உண்டு. நல்ல மருந்தகம் உண்டு. உயர்ந்த பள்ளி உண்டு. தனித்த தமிழ்ப் பள்ளியும் உண்டு. இப்படி எல்லா வசதியும் அந்தச் சிற்றூருக்கும் இருந் தது கண்டு மகிழ்ந்தேன். இப்படியே ஒவ்வொரு சிறு ஊரிலும்கூட வேண்டிய வசதிகள் பெற வாய்ப்பு உண்டு என்று கூறினர்கள். இதை நினைக்கும்போது நம்நாட்டில் ஏன் இவற்றை எல்லாம் செய்யக்கூடாது என்ற எண் ணம் தோன்றுகிறதல்லவா? 5,000; 10,000 மக்கள் கூடி யிருக்கும் ஊர்களில் கூட ஒரு உயர்நிலைப் பள்ளியோ— சிறந்த மருந்தகமோ கிடையாதே! சில ஊர்களுக்குச்செல்ல நல்ல சாலை வசதியும் கிடையாதே! ஏதோ ஜில்லா போர்டார்கள் மனம் வைத்து ஏற்படுத்திய மண்சாலை, ஒரு சிறு மருத்துவ இல்லம் (Rural Dispensary) இவ்வ ளவுதானே. இந்த மலேயாவை வளமாக்கும் இதே ஆங்கிலேயர்தான் நேற்று வரை நம்மையும் ஆண்டவர் க்ள். ஆனல் இங்கு செய்திருக்கும் அத்தனைச் சிறப்புகள் அங்கு ஏன் இல்லை? இத்தகைய கேள்விகள் எல்லாம் உள்ளத்திலெழுந்தன.

இந்தச் சிறிய ஊரின் நலமும் பார்க்கப் பார்க்க இனிமை தந்தது. பிறகு மாலை 4-50 க்குக் கோலாலம்பூர் வந்து சேர்ந்தோம். சில நண்பர்கள் வந்திருந்தார்கள். கண்டேன். பிறகு திரு. இராமநாதன் செட்டியார் அவர் கள் அழகுடைய ஊரின் இடையில் ஒரு பூஞ்சோலை அமைந்திருக்கிறது என்றும், அதைக் காணவேண்டும் என்றும் சொன்னர்கள். உடனே புறப்பட்டுச் சென்றோம். மலைச்சரிவுகளுக்கு இடையில் மனிதர் தம் கைத்திறனல் அமைக்கப்பட்ட பூஞ்சோலை அது. பலவேறு வகையான மலர்ச்செடிகள் அதை அழகு படுத்தின. அந்த மலைச் சரிவில்தான் பல அரசியல் அலுவலாளர்களும், அரசாங் கத் தலைவர் (Governor) அவர்களும் வாழ்வதை அறிந் தேன். பல ஐரோப்பியர்கள் அந்த இயற்கையில் தோய்ந் திருந்தார்கள். நானும் உடன் சென்ற நண்பர்களும் அவற்றின் எழிலெல்லாம் கண்டு திரும்பினேம்.

இன்று மாலை 7 மணிக்குக் கந்தசாமி கோயிலில் சொற்பொழிவு ஏற்பாடு செய்திருந்தனர். கந்தன் கோட்டம் சென்றேன். கோயில் அமைப்பு முறை மனதுக்கு மகிழ்ச்சி

அளித்தது. எனினும் ஒன்று என் உளத்தை ஈர்த்தது. நவக்கிரகமும் சனிக் கோயிலும் தனியாக அமைக்கப் பட்டிருந்தன. இந்தத் தொத்துநோய் தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்ததோ என வியந்தேன். ஒப்பற்ற இறைவனாகிய ஒருவனை வணங்கும் சைவ மக்கள் ஏனோ அவனிடத்தில் முழு நம்பிக்கை வைக்கவில்லை.

நிற்க, இன்றுமாலை நான் 'தமிழும் சமயமும்' என்னும் பொருள் பற்றிப் பேசினேன். பிறகு வந்து உணவு கொண்டு பத்து மணிக்குப் படுக்கச் சென்றேன். பிற அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

கடிதம் 12 — கோலாலம்பூர்
5—6—48

மங்கையர்க்கரசி !

இன்று நான் பல அன்பர்கள் வாய்மொழிக்குக் கட்டுப்பட வேண்டியவனானேன். அவர்தம் அருளுக்கு அஞ்ச வேண்டியவன் ஆனேன். காலை முதல் இரவு வரை ஒருவர் மாறி ஒருவர் உணவும் சிற்றுண்டியும் அளித்துக்கொண்டே இருந்தார்கள். அவர்களது அன்பிற்கு ஆற்றாத நானும் என் நண்பர்களும் அவரவர் அழைத்த இடந்தோறும் சென்று இட்ட விருந்தினை ஏற்றுக் கொண்டோம். எனினும் அளவு மீறிவிட்டது. அன்பு விருந்து கொண்ட நாங்கள் உண்மையில் ஆற்றாது திணறினோம்.

பயிற்சி வகுப்பு

காலை எழுந்து உரிய கடன்களை முடித்துக்கொண்டு காலைச் சிற்றுண்டி கொண்டோம். பிறகு முன் ஏற்பாட்டின்படியே ஆசிரியர் பயிற்சி வகுப்பைக் காணவேண்டும் என்று புறப்பட்டோம். உயர்நிலைப்பள்ளி ஒன்று உயரிய மலைச்சாரலில் கட்டப்பட்டிருந்தது. பள்ளிக்கூடம் என்றால் ஏதோ சாதாரணமானது என்ற எண்ணத்தில் இருந்துவிடாதே. நல்ல வேளையாக ஒன்று இங்கு நினைவுக்கு வருகிறது. இந்த நாட்டில் உள்ள ஊர்கள் பெரும்பாலும் மலையைச் சார்ந்தே இருக்கின்றன. இம்மலை

மேலும் சரிவுகளிலும்தான் பள்ளிகளும், அரசியல் அலுவலகங்களும், பெரு உத்தியோகத்தர் வீடுகளும் அமைந்துள்ளன. பள்ளிக்கூடங்கள் நம்நாட்டுக் கல்லூரிகள் என விளங்குகின்றன. இந்த ஊர் தலைநகர் ஆனதால் சிறந்த பள்ளிகள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் நான் இதோ காணச்செல்வது. அங்குதான் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நாங்கள் போகும்போது இரண்டு வகுப்புகள் நடைபெற்றன. ஒன்றில் ஒரு ஆசிரியர் நிலநூல் பயிற்றிக்கொண்டிருந்தார். சில மாணவர் இருந்தனர். பல ஆசிரியர்கள் அவர் பயிற்றுவதைக்கண்டு குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். இப்படி ஒவ்வொரு முறை ஒவ்வொருவரும் ஒரு பாடத்தைப் பயிற்ற மற்றவர் அதிலுள்ள நலந்தீங்குகளை எடுத்துக்காட்டவேண்டும். இது பயிற்சி முறையில் ஒரு வகை. மற்றொரு வகுப்பில் நலவழி நூல் பயிற்றிக்கொண்டிருந்தார் ஒரு ஆசிரியை. இரண்டு வகுப்பின் நலன்களையெல்லாம் கண்டுகொண்டே இருந்தேன். உடன்வந்தவர்களும் நானும் அப்படியே வகுப்பில் அமர்ந்தோம். பாடங்களை, கேள்வி மூலம் மாணவர்களிடம் விடைபெறுவகையிலேயே நடத்திக் கொண்டிருந்தனர். ஒரு வகுப்பை மேற்பார்வையாளரும், மற்றொருவகுப்பைக் கல்வித்துணை அதிகாரியும் நடத்திக் கொண்டிருந்தனர். பயிற்றும் முறை தீர்ந்தது இரண்டு ஆசிரியர்களும் பயில வந்திருக்கும் ஆசிரிய மாணவர்களுக்கு மேலும் பயிற்சி முறையைக் கற்பிக்கத் தொடங்கினர். அதற்கு முன் எங்களைச் சிற்சில சொற்கள் சொல்லப் பணிந்தார்கள். நானும், திரு. கா. இராமநாதன் அவர்களும் தமிழ்ப்பள்ளி ஆசிரியர் மலாய் நாட்டில் ஆற்ற வேண்டிய பணி, வகை, முறை ஆகியவற்றைப் பற்றிப் பேசிவிட்டு அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டுவந்தோம். வந்ததும் சில நண்பர்கள் விருப்பப்படி 19-6-48-ல் மறுபடியும் கோலாலம்பூரின் கூட்டத்தே பேச ஒத்துக்கொண்டேன்.

இயற்கைக் குகைக் கோயில்

பகல் 10-30-க்கு மேல் 8 கல் தொலைவிலுள்ள பத்துக் குகைகளைக் காணவேண்டும் என்று நானும் திரு. சேதுராமன், சிதம்பரம் ஆகியோரும் காரில் புறப்பட்டோம். பத்துக் குகைகள் கண்டார் உள்ளதைப் பற்றும்

குகைகளாகத்தான் காணப்பட்டன, சிறுசிறு குகைகள் பல இருப்பினும் மிகப் பெரிதாக அமைந்த குகை ஒன்று தான் உயர்ந்து விளங்கிற்று. தூரத்தில் செல்லும் போதே அதன் தோற்றம் சிறந்து காணப்பட்டது. நம் நாட்டில் பல்லவ அரசர்களால் கட்டப்பட்ட மாமண்டூர்க் குகைக் கோயில்களையும், மகாபலிபுரக் குகைக் கோயில் களையும் நீ கண்டிருக்கிறாயல்லவா! அவை எல்லாம் மனி தன் கையால் குடைந்த கோயில்கள். வடநாட்டில் உள்ள அஜந்தா குகைகளின் வன்மைக் கண்டவர்கள் கூறு கின்றார்கள் அல்லவா! அதிலேயும் மனிதர் கை வண்ணத் திறன் காட்சி அளிக்கும். ஆனால் இந்தப் பத்துக் குகையில் மனிதனது கை வண்ணத்திறன் இல்லை. இயற்கையே இக் குகையை ஆக்கி உள்ளது. மிக உய ரிய நிலையில் அது அமைந்துள்ளது. பல்வேறு சித்தி ரப் பாடுகள் அமைந்தனபோன்று பாறை உருகித் தொங்கிக் கொண்டிருந்தது. காணக்காணத் தெவிட் டா நிலையில் இயற்கைவளம் நிறைந்திருந்தது. கருங்கற் பாறை பெரு நெருப்பால் உருகிப் பல்வேறு வகையாக ஒழுக்கெடுத்து அப்படியே இறுகி நின்றிருக்க வேண்டும். ஒரு பெரிய மாளிகைபோல் அக்குகை விளங்கிற்று. மேலே, இடை இடையே கண்ணாடி புதைத்தாற் போல் விளங்கிய திறப்புகள் சில காணப்பட்டன. அவைகளுக் குச் சற்று உள்ளே வாசலைப்போல் திறந்த இடம். அந் தக் குகையில் ஒரு தமிழன் வேல்வைத்து முருகனை வழி படுகின்றான். அம் முருகனுக்கு ஆண்டு தோறும் பெரு விழா உண்டென்றும், பல ஆயிரக்கணக்கான மக் கள் வந்து செல்வார்கள் என்றும் அறிந்தேன். கோலா லம்பூர் வரும் ஒவ்வொருவரும் இதை வந்து கண்டுதான் செல்வார்கள் என்றும், இக்குகையில் சாதிபேதமன்றி அனைவரும் வரலாம் என்றும் அறிந்தேன். அண்ணாந்து நோக்க நோக்க அக்குகைக் கவின் மிக அழகாக இருந் தது. இடம் மிகக் குளிர்ந்திருந்தது. எத்தகைய கோடை வெய்யிலும் அங்குத் தெரிய வில்லை. அந்தக் குகையிலுள்ள வேலனுக்கு வழிபாடு ஆற்றினர் பலர். பலபகுதிகளையும் பார்த்துக் கொண்டு, அழகாகக் கட்டிய படிகளின் வழியே கீழே இறங்கி வந்தோம்.

இருபொருள் தொழில்கள்:

குகை நலம் கண்ட நாங்கள் உணவு நேரமாகிவிட்டமையின் காரில்விரைந்து ஊர் நோக்கி வந்துகொண்டிருந்தோம். வழியிலே ஒரு ரப்பர் தோட்டமும், ரப்பர் தொழிற்சாலையும் இருந்தன. அதையும் பார்த்து விட்டுச் செல்ல நினைந்தோம் அத்துடன் அருகே ஒரு ஈயத்தொழிற்சாலையும் இருந்தது. இந்த இரண்டு தொழிலும்தான் மலேயா நாட்டின் செல்வங்கள். ஈயத் தொழிற் சாலைக்கு அருகில் சென்றோம். ஈயம் கலந்திருக்கும் மண்ணை நன்றாக நீரில் கரைத்து அந்த நீரைப் பல வகைகளில் பாய்ச்சிப் பிறகு கடைசியாக மண் வேறு, நீர் வேறு, ஈயம் வேறாகப் பிரிக்கப்பாடுபடும் முயற்சி பாராட்டத்தக்கதே! பூமியில் எங்கோ புதைந்து கிடக்கும் பொருள்களை பெருமுயற்சியால் மேலுக்குக் கொணர்ந்து உருவாக்கி உலக நன்மைக்கு அளிக்கும் முறை விரும்பத்தக்கதன்றோ! அதிலும் இந்த ஈயத் தொழிற்சாலைக்குப் பெரும் பொருள் மூல தனமாக வேண்டும். இந்த ஈயத் தொழிற்சாலை மேல் நாட்டருக்குச் சொந்தமானது. ஈயத் தொழிற் சாலைகளில் பெரும்பாலன மேலைநாட்டு ஆங்கிலேயருக்கும் அமெரிக்கருக்கும் சொந்தமானவை தான். அஞ்சாது முதல்கொண்டு வந்து போட்டுப் பல அரிய வேலைகளுக்குப் பின் அப் பொருளைப் பெருக்கும் முயற்சியில் அந்நாட்டு மக்கள் முயல்வது போன்று நம்மவர் முயல்வதில்லையே! நம்மவர் பொருளெல்லாம் மங்கையர் நகையிலே - மற்றவகையிலே மல்லவா மங்குகிறது. வட்டிக்கடை வேண்டுமானால் சிலர் வைப்பார்கள். ஆனால் தனி முறையிலோ - கூட்டுமுறையிலோ இத்தகைய பெருந் தொழிற்சாலைகள் அமைப்பது நாம் நம் நாட்டில் பெருவாரியாகக் காணமுடியாதே. தற்போது வடநாட்டு முதலாளிகள் அப் பணியில் இறங்கியுள்ளார்கள். தமிழர்கள் அந்தத் துறையில் மிகக்குறைந்தவரே. செல்வி! ஈயத் தொழிற்சாலையைப் பார்வையிட்டபின் ரப்பர் தொழிற்சாலையையும் பார்க்கவிரும்பினோம். பக்கத்திலிருந்த ரப்பர் தோட்டத்தில் சென்று மரத்திலிருந்து எப்படிப் பால் எடுக்கிறார்கள் என்பதைக் கண்டோம். பிறகு தொழிற்சாலைக்குச் சென்றோம். அங்கு பணியாற்றும் ஒரு மலையாளி எங்களை வருக என்றார். தொழிற்சாலைத் தலைவர்

அங்கு அன்று இல்லை என்றும், அவர் உத்தரவு பெறுது உள்ளே செல்ல இயலாதென்றும் அறிவித்தார். வேறு ஒரு நாளைக்கு முன் ஏற்பாட்டோடு வரலாம் என்றார். அங்குள்ள ரப்பரா லாய பல பொருள்களைக் காட்டி அவை ஆக்கிய விதத்தையும் சொன்னார். நான் இரண்டொரு நாளில் அந்த ரப்பர் சாலையோ அன்றி வேறு ஒன்றையோ காண்பேன். அப்போது அதைப்பற்றி விளக்கி எழுதுகின்றேன்.

ரப்பர் சாலையிலிருந்து நேரே வீட்டுக்கு வந்தோம். திரு. சேதுராமன் அவர்கள் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்திருந்தது. சாப்பிடும்போது மணி இரண்டு. விருந்து பெரு விருந்தாக அமைந்திருந்தது. பல நண்பர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். உணவுக்குப் பின் பல வற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அத்துடன் அங்கே வேறொரு முடிவும் செய்தார்கள். கோலாலம்பூர் வானொலியில் 19 - 6 - 48 ல் மாலை 4 லிருந்து 4 - 40 வரையில் நான் பேசவேண்டும் என்ற முடிவே அது. சிற்றலை (Short wave) 49 ல் பேசுவேன். அங்கு நேரம் (I S T) பகல் 2.00 முதல் 2.40 வரை. அங்கு நன்றாகக் கேட்கும் என்கிறார்கள்.

அன்பிற்கு அஞ்சினேன்:

பல பேச்சுக்களுக்குப் பின் 2 - 30 க்கு நாங்கள் தங்கும் இடம் வந்தோம். சில கடிதங்கள் எழுதினேன். நெடுநேரம் ஓய்வு பெற வில்லை. இலங்கை, யாழ்ப்பாண நண்பர் ஒருவர், திரு. குமரன் என்பவர் சிலரைச் சேர்த்துப் புகைப்படம் எடுக்கவேண்டும் என்று 3 - 30 க்கு, காருடன் வந்து புறப்படுக என்றார். புறப்பட்டோம். ஒரு சீனர் புகைப் படச் சாலையில் புகுந்தோம். அது அவ்வளவு சிறந்த புகைபடச் சாலையாக இல்லை. எனினும் படம் எடுக்கப்பட்டது. பிறகு அந்த யாழ்ப்பாண நண்பர் விட வில்லை. ஒரு சிற்றுண்டிச்சாலையில் விருந்து ஏற்பாடு செய்தார். விருந்தை உண்ண முடியவில்லை. பெரு விருந்து உண்டு இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லையே! எனினும் அவர் விடவில்லை. சிறிது அளவு உட்கொண்டோம். பிறகு சிறிது நேரம் பேசச்

சொன்னார். பேசினோம். ஒரு துறவியார்—சுவாமி சத்யானந்தா அவர்களும் நானும் இரண்டொரு நிமிடங்கள் பேசினோம். பிறகு அவர்களிட மிருந்து விடுதலை பெற்றுக் கொண்டு - ஆம் - விடுதலைதான்; அவர் அன்பில் பட்டு வேண்டாமென்றாலும் உண்ண வேண்டி இருந்ததே-மற்றொரு யாழ்ப்பாண நண்பர் வீட்டிற்குச் சென்றோம். அவரும் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். நல்ல வேளையாகப் பலகாரம் ஒன்றும் அவர் செய்துவைக்கவில்லை. குறைந்தது பத்துப் பன்னிரண்டு வகைப் பழங்களை நன்கு திருத்திப் பலதட்டுகளில் - பல நிறங்கள் தோன்ற வைத்திருந்தார். அந்தப் பழத்தின் நிறங்களும், வைத்திருந்த முறையும் மிக அழகாக இருந்தன. பழங்களாயினும், மிகச்சிறிய அளவுதான் கொள்ள நேர்ந்தது. அவர்தம் அன்பில் நான் திண்டாடினேன். எனினும் சிறிது உண்டேன், அதற்குள் கூட்டநேரம் நெருங்கி விட்டதாதலால் விரைந்து கூட்ட மண்டபத்திற்கு அனைவரும் சென்றோம். கூட்டம் நன்கு நடை பெற்றது. நான் 'தமிழ் நெஞ்சம்' என்ற பொருள்பற்றிப் பேசினேன். திரு. கா. இராமநாதன் அவர்களும் சிறிது நேரம் பேசினார்கள். கூட்டம் முடிந்ததும் வீட்டுக்கு வந்தோம். இரவுக்கு இந்திய ஏஜண்டு திரு. நடராசப் பிள்ளை அவர்கள் வீட்டில் விருந்து ஏற்பாடு செய்திருந்தது. எப்படி விருந்துண்பது என நாங்கள் ஏங்கினோம். ஆனல் அவர் விடவில்லை. அவர் நமது இந்திய அரசாங்கச் சார்பாக இங்கு பொறுப்பேற்றுப் பணியாற்றுகின்றவர். நல்ல தமிழர். பல பாடல்களை அவர் எழுதியுள்ளார். தமிழ் அன்பர். நல்லார். அவர் வீட்டுக்குச் சென்றோம். அவருடன் மற்றொரு நண்பர் திரு. நடராச மூப்பனார் அவர்களும் இருந்தார்கள். அவர்களோடு அளவளாவிக் கொண்டே உணவினை உண்டோம். அறிவறிந்த வகையில் நகைச் சுவை பொருந்தப் பல பேச்சுக்களைப் பேசிக் கொண்டே இருந்து உண்டோம். உணவு உண்ட பிறகும் நீண்ட நேரம் பேசிக்கொண்டே இருந்தோம். தமிழ் இலக்கியங்களைப் பற்றிய பேச்சுக்கள் அவை. தமிழ் வளர்ச்சியைப் பற்றிய பேச்சுக்கள் அவை.

இரவு 10 மணிக்கு மேலாகி விட்டதால் நாங்கள் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தோம். ஒன்றும்

செய்ய இயல வில்லை. அப்படியே படுத்துப் பாயில் புரண்டேன். உணவு மிகுதியால் மயங்கினேன் நாளை காலை ஒன்றும் சாப்பிடப் போவதில்லை என்று அப்போதே முடிவு செய்து விட்டேன் நான். நான் விரித்த பாயிலே நன்கு புரண்டேன். அப்படியே உறங்கி விட்டேன் என்று தான் சொல்ல வேண்டும். நாளை நிகழ்ச்சியைப் பற்றிப் பிறகு எழுதுகிறேன்

அன்பின் செல்வி ! விளையாட்டிலேயே காலத்தைக் கழிக்காதே. பள்ளக்கூடம் திறக்க இன்னும் சில நாட்கள் தானே இருக்கிறது. மறவாது நன்கு படித்து, கணக்குகள் போட்டு நல்ல தேர்ச்சி பெறுக. நீ கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே. நான் பெரும்பாலும் 23 ம் தேதி புறப்படுவேன். வெளிநாட்டுக் கப்பல்கள் கிடைப்பின் 25-க்குள் புறப்பட்டு 30-6-48க்குள் அங்கு வந்து விடுவேன். இல்லா விட்டால் நான் வந்த அதே கப்பல் 27–6–48-ல் புறப்படுகிறது; அதில் ஏறி 4–7-48ல் அங்கு வந்து விடுவேன். பிறபின்.

கடிதம் 13.

கோலாலம்பூர்,

7—6—1948.

அன்பின் செல்வி !

திருவள்ளுவர் விழா:

நேற்று காலை எழுந்த உடனே உடம்பு நல்ல நிலையில் இல்லை. மெதுவாகத்தான் எழுந்தோம். ஒன்றும் செய்ய முடியவில்லை. எனினும் 10 மணிக்கு ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தமையின் அதற்குப்புறப்பட வேண்டி இருந்தது. நேற்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் காலைக் கூட்டமும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. காலை நான் ஒன்றும் சாப்பிடவில்லை. எப்படியோ குளித்துச் சரி செய்து கொண்டு 10 மணிக்கு ஏற்பாடு செய்த கூட்டத்திற்குச் சென்றோம். நகரத்தார் மண்டபத்தே கூட்ட ஏற்பாடு

இது வரை கூடாத அவ்வளவு பெருங் கூட்டமாகக் கூடி யிருந்தனர் மக்கள். 'திருவள்ளுவர் விழா' வாக அக் கூட் டம் அமைந்திருந்தது. இடையில் மண்டபத்தே வள்ளு வரது பெரிய படம் அலங்காரத்தோடு வைக்கப்பட்டிருந் தது. கூட்டத்திற்கு முன் இனிய இசை யரங்கு நடை பெற்றது. திரு. இராமநாதன் அவர்களிடம் பயிலும் இருவர் முதலில் பேசினார்கள். ஒருவர் வியாபாரி, மற்றொருவர் அச்சகப் பொறுப்பாளர். இருவரும் சுமார் முப்பது வயது உடையவர்கள். சிதம்பரம், சுப்பையா என்பவர்கள்; சிறிது நேரம் பேசினார்கள். அவை அவர்களுக் குத் தொடக்கப் பேச்சுக்களாக அமைந்தன. எனினும் உணர்வோடு பேசினார்கள். பிறகு நான் பேசினேன். பிறகு, அருணாசலம் செட்டியார் அவர்களும், கா. இராமநாதன் அவர்களும் பேசினார்கள். பல புதியவர்களைக் கண்டேன். இந்த ஊரில் உள்ள திராவிட கழக உறுப்பினர் சிலர் வந்து கண்டனர். நம் நாட்டிலே தற்போது விரைந்து வளரும் கழகம் அது அல்லவா! அந்த உணர்ச்சி இங்குள்ள திரா விட இளைஞர் உள்ளங்களையும் பற்றி விட்டது. அவர்கள் கூடிய விரையில் ஊர் தோறும் கழகங்கள் அமைக்கிறார் களாம். அவர் தம் கழகச் சார்பில் பேசுமாறு கேட்டார் கள். கூட்ட அமைப்பாளர் திரு. அருணாசலஞ் செட்டியார் அவர்களைக் கேட்குமாறு சொன்னேன். திருப்பி வருங் கால் கூட்டம் வேண்டும் என்றார்கள். இன்னும் பல அன் பர்களோடு பேசிக் கொண்டிருந்தோம். பகல் விருந்து, பண்ணைச் செயலாளர் திரு. சிவசைலம் அவர்கள் வீட்டில் ஏற்பாடு செய்திருந்தது. அவர் வீட்டுக்குச் சென்றோம் அவர் தம் மனைவி நம் பாரதியின்-சுப்பிரமணிய பாரதியின் மைத்துனியின் மகள் என அறிந்தேன். அவர் தம் குடும் பமே தமிழ் ஆர்வம் உள்ள குடும்பமாக இருந்தது. உண வுக்குப் பின் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து 2 மணிக்கு மேல் வீட்டுக்கு வந்தோம். சிறிது நேரம் தான் ஓய்வு கொள்ள முடிந்தது. மாலை 5 மணிக்கே கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆகவே, விரைந்து கூட்டத் திற்குச் சென்றோம். கூட்டத்திலே 'தமிழன் வாழ' என்னும் பொருள் பற்றி அதிக நேரமே பேசி விட்டேன். பிறகு அருணாசலஞ் செட்டியார் அவர்களும், இராமநாதன் அவர் களும் பேசினார்கள். திரு. இராமநாதன் அவர்களது

நகைச் சுவைப் பேச்சு மக்களை மகிழச் செய்தது. கூட்ட முடிவில் ஒரு அம்மையார் அழகாகப் பாடினார்கள். அப்பர் பாட்டையும், சுந்தரானந்தர் பாட்டையும் நல்ல பண் ஒன்றப் பாடினார்கள். அவர் யாழ்ப்பாணச் செல்வி என்றும் மலையாளி ஒருவரைக் கலப்பு மணத்தால் கைப்பற்றி வாழ்கின்றார்கள் என்றும் அறிந்தோம். யாழ்ப்பாண மக்கள் இந்த முறையில் கலப்பு மணம் செய்து கொள்வது புதிது என்றும், அம் முறை போற்றப் படவேண்டியதென்றும் கூட இருந்தவர்கள் கூறினார்கள்.

ஒரு தெய்வ வழிபாடு :

கூட்டம் முடிந்த பின் கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டோம். இன்று கார்த்திகை நாள் அல்லவா! ஆகவே குமரன் கோயிலுக்குச் சென்றோம். நகரத்தார் கோயில் அழகாக அமைந்திருந்தது. காலைக் கூட்டம் நடந்த மண்டபத்தின் பக்கத்தில்தான் அக் குமரன் கோட்டம். பரந்த இடம். சிறந்த முறையில் வழிபாடு. கோயிலில் ஐயர் இல்லை. ஒரு பண்டாரம்தான் எல்லாப் பணியையும் செய்தார். நகரத்தார் தங்கிய ஊர்தோறும் தண்டபாணிக்குக் கோயில் உண்டென்று அறிந்தேன்.

தமிழ்க்கடவுளாகிய முருகனைத் தமிழ் மக்கள் செல்லும் இடந்தோறும் மறவாது போற்றுகிறார்கள். இயற்கையை முருகனாக வழிபட்டவர்கள் நம் தமிழ் மக்கள். முருகு என்னும் சொல்லுக்கே அழகு என்னும் பொருள் தானே! ஆம்! எங்கெங்கு அழகுண்டோ அங்கங்கே அவ்வழகை வணங்கினர் தமிழர். அழகு வணக்கம் முருக வணக்கமாயிற்று. முருகனுக்கு, பின்னால் பல கதைகள் தோன்றலாயின. இங்கு இயற்கை வளம் வாய்ந்த மலையநாட்டிற்கு வந்து வாணிப வளனைப் பெருக்கிய செட்டிமார் உள்ளங்களை அவ்வியற்கை இறைவன் - முருகன் தொட்டான் போலும். பலன் இயற்கைகளுக்கு அடுத்து - எங்கும் - ஊர்தோறும் அவனுக்கு உயர்ந்த கோயில்; விழாக்கள்; விருந்துகள் ; எல்லாம்.

தண்டபாணிக் கோயிலைக் கண்டபின் ஆதீஸ்வரர் கோயில் செல்லப் புறப்பட்டோம். அது தமிழர் ஒருவரின பெரு முயற்சியால் கட்டப்பட்டதென அறிந்தேன். அங்கு 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற

உண்மை நிலைநாட்டப் பட்டிருந்தது. சிவலிங்க உருவம் தவிர வேறு எந்த உருவமும் கிடையாது. ஒன்றான உருவம் இருக்கும்போது, பிற உருவ வழிபாடுகள் எதற்கு என எண்ணினார் அமைத்தவர். அத்துடன் நடுநிலையில் - இலிங்க அறையின் முப்பக்கத்திலும் அறம், பொருள், இன்பம் என்று எழுதி இருந்தது. இறுதியில் வீடுகாட்டும் நெறியாக இறைவன் முன்புறம் அமைந்திருந்தது. அது உண்மையிலேயே சமய அடிப்படையை எங்களுக்கு நன்கு விளக்கிற்று. நம் நாட்டிலும், இங்குள்ள பிற கோயில்களிலும் நவக்கிரகங்கள் இருக்கின்றன. இன்னும் பல சிறு தெய்வங்கள் உள்ளன. ஆனால் இந்தக் கோயிலில் அந்தக்கூட்டங்களைக் காணமுடியவில்லை ஆகவே அந்தக் கோயிலை நீங்க எனக்கு மனமில்லை. மற்றும் அக்கோயில் நகருக்குப் புறம்பே ஓர் அமைதியான இடத்தில்தான் அமைந்திருந்தது. அதற்குப் பூசைசெய்பவரும் ஒரு தமிழர் தான். இக்கோயில் பணியை மேற்கொண்ட பெரியார் மருத்துவர் - விசுவலிங்கம் என்பார் என அறிந்தேன்.

தனிச்சிறப்புடைய அக் கோயிலைக்கடந்து ஊர்க்காளி கோயிலைக் காணவேண்டும் என்று சென்றோம். அது மிகப் பழைமையான கோயில் என்றும் காண வேண்டுவது இன்றியமையாதது என்றும் சொன்னார்கள். ஆனால் நேரமாகி விட்டபடியால், நாங்கள் செல்வதற்குள் கோயிற்கதவைச் சாத்தி விட்டார்கள். கோயிலுக்குள் நம் நாட்டைப் போன்று வேப்பமரங்கள் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் வீட்டுக்கு வந்தோம். வயிற்றைப் பட்டினி போட நினைத்தேன். பாலில் மிளகு இட்டுக் காய்ச்சிக் குடித்தேன். பிறகு உறக்கம்.

கோலக் கிள்ளான்:

இன்று காலை எழுந்தேன். இன்று கோலாலம்பூரில் சொற்பொழிவு இல்லை. சற்று தூரத்தே 25 கல் தொலைவிலுள்ள 'கிள்ளான்' என்ற ஊரிலே பேச்சு ஏற்பாடு செய்திருந்தனர். கிள்ளானிலிருந்து நண்பர் மாணிக்கஞ் செட்டியார் அவர்கள் வந்திருந்தார்கள். கடற்கரை ஓரத்திலே உள்ள ஊர் அது. அங்கு சென்று மாலை 'தமிழர் பண்பாடு' என்ற பொருள்பற்றிப் பேசவேண்டும்.

9. 30 மணிக்கு விவேகானந்தர் கல்விச்சாலையைக் காண வேண்டும். இடையருது ஓய்வு இன்றி உற்ற பணி யாற்றத் தொடங்கிவிட்டேன்.

விவேகானந்தர் கல்விச்சாலையைப் பார்த்தோம். அது தமிழ்ப் பாடசாலை. வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்கும் இதற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. இது ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம். மேல் வகுப்பிற்குப் போகப் போக எண்ணிக்கை குறைந்துவந்தது. ஏழாம் வகுப்பில் ஒரே மாணவிதான் இருந்தாள். பெரும்பாலும் எல்லா வகுப்பிலும் பிள்ளைகளைக் காட்டிலும் பெண்களே அதிகம் இருந்தனர். இந்தப் பள்ளிக்கூடம் யாழ்ப்பாண மக்களால் நடத்தப் பெறுகின்றமையின் அந்நாட்டு மாணவர்கள்தான் அதிகமாகப் பயில்கின்றனர். இதில் தமிழ் பயின்றவர்கள் மேல் வகுப்புப் பயில வசதி இல்லை. தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் நகரங்களிலேயே மேற்படிப்புக்கு வழி இல்லாதிருப்பதால், தோட்டப் பள்ளிகள் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்கக் கூடவில்லை. பள்ளியைப் பார்த்து விட்டுக் கடை வழி வந்தோம். இரண்டொரு புத்தகக் கடைக்குள் சென்றோம். நம் நாட்டு நூல் இங்கு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. பிறகு சிறிதுநேரம் ஓய்வு கொண்டு 11 மணிக்கு மேல் கிள்ளானுக்குப் புறப்பட்டோம்.

ரப்பர்த் தோட்டம்:

வழி நெடுக ரப்பர் தோட்டங்கள் காட்சியளித்தன. இரு பக்கத்திலும் உயர்ந்த மரங்கள்—பசும் புற்றரைகள் நன்கு விளங்கின. ரப்பரில் இரண்டு வகை உண்டு என்றும், ஒன்று சாதாரணம் என்றும், மற்றொன்று ஒட்டு என்றும் அறிந்தேன். ஒட்டு, பயிரிட்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே பயன் கொடுக்குமென்றும், ஆண்டுதோறும் சாதாரண மரம் பயன் கொடுப்பதிலும் மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகப் பயன் கொடுக்கும் என்றும் அறிந்தேன். ஆனல் இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் பயன் நின்றுவிடும். சாதாரண மரம் நாற்பது ஆண்டுகள் வரை பயன் அளிக்கும். ஒட்டுக் கன்று உண்டாவதைக் காண விரும்பினேன். ஒரு தோட்டத்தின் பக்கத்தில் காரை நிறுத்தி, அருகே சென்று ஒட்டுக் கன்றுகளைக் கண்டோம்.

கன்றுகள் சாதாரணமாகக் கொட்டைகளை இட்டு, நாற்று விடுவதுபோல் பயிரிட்டுப், பிறகு பிடுங்கி 15-அடி அல்லது 20 அடிக்கொன்று நடுவார்கள். நட்ட செடி நன்ருகத் துளிர் விட்ட பிறகு வேருெரு நல்ல ரப்பர் மரத்தினது பட்டையை—ஒட்டுக்கு ஏற்பட்ட பட்டையைக் கொண்டு வந்து, இந்தக் கன்றின் அடியில் உள்ள பட்டையைக் கீறி எடுத்து, அதில் வைத்துக் கந்தைத் துணிகளால் கட்டி விட்டு ஈரம் போகாது பார்த்துக் கொள்வார்கள். பிறகு அந்த இடத்திலிருந்து புதுக்கிளை ஒன்று புறப்படும். புறப்பட்ட கிளையை மரமாக வளரவிட்டு, பழைய செடியை அந்த ஒட்டுக்கு மேல் வெட்டி விடுவார்கள். அவ்வாறு வெட்டி விடப்பட்ட செடிகளைக் கண்டோம். அவையே பிறகு பெரிய ஒட்டு மரங்களாகி விரைவில் பயன் தருவன. புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற தோட்டங்களிலெல்லாம் இவ் ஒட்டுச் செடியே பயிரிடுகின்ருர்களாம்.

கேட்க ஆள் இல்லையா?

வழியில் பல தொழிலாளர்கள் பால் எடுத்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் தமிழர்களே. அவர்கள் வாழ்கின்ற வாழ்க்கையைக் காண விரும்பினேன். வழியில் தொழிலாளர் வீடுகள் வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. அவர் தம் வீடுகள் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தன. 10'×8' என்ற அளவுதான் அவனது மொத்த வீடும். அதிலேயே சமையல், தங்கல், வாழ்தல், உறங்கல், மகப் பெறுதல், பிள்ளைகள் படித்தல், இறத்தல் இத்தனையும் என்ருல் அவன் மனித வாழ்வுதான் வாழ்கிருன் என்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா? அவன் யார் தெரியுமா? நம் தமிழன்தான். தமிழன்தான் தோட்ட வேலையில் இருப்பவன் என்று முன் எழுதினேனே! மலேயாவில் சுமார் ஏழு லட்சம் தமிழர்கள் உண்டென்றும், அவருள் ஆறு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தோட்ட வேலைக்காரர்கள்தான் என்றும் அறிந்தேன். அந்தோ! அருமைத் தாயகம் விட்டு வந்து வாடும் இத் தமிழ் இனத்தை, இந்தத் தோட்ட முதலாளிகளோ அவர்களோடு தொடர்பு கொண்ட இந்த அரசாங்கமோ கவனிக்காது. நம் இந்திய அரசாங்கமும் சிறப்பாக தமிழ் நாட்டை ஓம்பும் சென்னை அரசாங்கமும்தான் இதைக் கவனிக்க

வேண்டும். ஐயோ! பாவம். அவர்களுக்குத்தான் தங்களைக் கவனித்துக் கொள்ளவே நேரம் போதவில்லையே. நான் வந்த உடன் அரசாங்கத்தில் இந்த இழிவைக் கூறி ஏதாவது செய்து அவர்கள் வாழ்வை உயர்த்த வேண்டும் என்றும் சொல்லும் வரை மனம் அமையாது.

செல்வி! இங்குள்ள இந்திய காங்கிரஸ் அன்பர்கள் தொழிலாளர் வாழ்வு உயரப் பல வழி காணுகின்றார்கள். தோட்டங்களுக்குள்ளே தோட்ட முதலாளிகளே கள்ளுக் கடைகள் வைத்து, அவர் தம் சம்பளத்தைப் பறித்துக் கொண்ட காலம் இருந்ததாம். ஆனால் காங்கிரஸ் முயற்சியால் தோட்டக்கடைகள் எடுக்கப்பட்டன. தோட்டத்திற்கு வெளியில் கடைகள் உள்ளன. கூலி பெறும் பணம் அங்கு குவிக்கப்படுகிறது. எவ்வளவு உயர்ந்த கூலி பெற்றாலும் குடி அவனைப் பாழாக்குகின்றது. மனைவியும், மக்களும், தானும் சம்பாதித்தால் கூட ஒரு குடும்பம் வாடும் நிலையில் தான் உள்ளது. ஏழைத் தொழிலாளி பிறரால் வாட்டப் படுவது ஒரு புறம் இருக்க, அவனே தன்னை எண்ணிப் பார்க்க மறுக்கிறான். எண்ணி, குடியை விட்டு, நல் வாழ்வு வாழ்வானானால் சற்று சிறக்க வழி உண்டு. ஆனால் அதை எண்ண அவனுக்குக் ல்வி இல்லை, ஓய்வு இல்லை, கருத்தும் இல்லை, முதலாளியின் முகமனும் இல்லை.

கிள்ளானுக்கு 12 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். உணவு உண்டபின் சிறிது நேரம் ஓய்வு கொண்டோம். பிறகு கோலக் கிள்ளான் காணச் சென்றோம். அதுதான் (Port Swethenham) 'போர்ட் சுவெட்டன்ஹாம்' என்று வழங்குவது. அது ஒரு இயற்கைத் துறைமுகம். பல சாமான் கப்பல்கள் இருந்தன. அங்கு பல தொழிலாளிகள் கப்பற் பணி யாற்றி வாழ்ந்து வந்தனர். துறைமுகத்தை நன்கு சுற்றிப்பார்த்து, கிள்ளானின் பல பகுதிகளையும் கண்டோம். ஊரின் ஒருசார் மலாய் நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கெனத் தனிக் கோயிலும், பள்ளியும் பிற வசதிகளும் செய்து கொடுத்தனர் அரசாங்கத்தார். அவர்கள் நாட்டுப் பழங் குடிகளானதனாலும், மிகப் பிற்போக்கான நிலைமையில் இருப்பதாலும் அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதி களையும் அரசாங்கத்தார் வலிய வந்து செய்து தருகின்ற

னர். வீடற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள இடமும் பிறவும் தருகின்றனர். அந்த இடத்தை அவர்கள் விற்க முடியாதபடி அமைக்கின்றனர். வீண் செலவு செய்து தம் பொருளை விற்று மறுபடி வாழ்க்கைக்கு ஏங்காத முறையில் அரசாங்கத்தார் தாங்கள் அளித்த நிலம் வீடு முதலியன கொடாத வகையில் பத்திரம் ஏற்படுத்துகின்றனர். இது அரசாங்கம் நாட்டுப் பழங்குடிக்கே செய்யும் நல் உதவி. நம் நாட்டில் பழங்குடி மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று பல ஆண்டுகளாகத் திட்டமிடுகிறார்கள். அவர்கள் இங்கு இந்த நாட்டுப் பழங்குடிகளுக்கு அரசாங்கம் அளித்து வரும் உதவிகளை நேரில் கண்டு செல்ல வேண்டும். அரசாங்க உத்தியோகத்தில் கூட அவர்களுக்குத்தான் முதல் இடம். எல்லா வசதிகளும் அவர்களுக்கு உண்டு.

மாலை 6 மணிக்குச் சொற்பொழிவு ஏற்பாடு. 'தமிழர் பண்பாடு' என்பதைப் பற்றி ஒரு மணி நேரம் பேசினேன். எனக்கு உடல் நிலை சற்றுச் சரியாக இல்லை. ஆகவே பேச்சு அவ்வளவு நல்ல முறையில் அமையவில்லை என்றுதான் நான் நினைத்தேன். பேச்சு முடிவில் தமிழர்-திராவிடர் வேறுபாடு, தமிழ்நாடு- திராவிட நாடு வேறுபாடு இவற்றை விளக்குமாறு கேள்வி வந்தது. அதற்கும் தக்க முறையில் பதில் அளித்து விட்டுப் பேச்சை முடித்துக் கொண்டேன். பிறகு அங்கு மற்றொரு நண்பர் வீட்டில் விருந்து. உடல் நலமின்மையில் சிறிதளவே உண்டு கோலாலம்பூருக்குப் புறப்பட்டோம். கிள்ளானில் சிறப்புச் செய்து, என்னை அழைத்துக் கொண்டு போய் எல்லாவற்றையும் காட்டி, அனைத்தையும் விளக்கி, அன்போடு உபசரித்தவர் திரு. மாணிக்கஞ் செட்டியார் என்பவர் ஆவர்.

இரவு 10 மணிக்கு கோலாலம்பூர் வந்து படுத்துக் கொண்டோம்.

உடல் நலம் இன்மையால் இன்று 8 மணி வரையில் நன்றாக கம்பளத்தால் போர்த்துக்கொண்டு உறங்கினேன். உடல் நல முற்றது. பிறகு சிறிது தலைவலிதான் இருந்தது. அதுவும் தற்போது குறைந்துள்ளது. பட்டினி போட்டேன். நான் இப்போது நன்கு இருக்கிறேன்.

இன்று மாலை, சிரம்பான் செல்ல வேண்டும். அங்கு பேச்சு முடித்துக் கோலாலம்பூர் வந்து நாளை ஓய்வு கொள்வேன். பிறகு தெலுங்கான்சன், ஈபோ முதலான ஊர்களுக்குப் போய்ச் சனிக்கிழமை 12—9—48-ல் பினங்கு போய்ச் சேர்வேன். அடுத்த கடிதம் ஈபோவிலிருந்தாவது, பினங்கிலிருந்தாவது எழுதுகிறேன். பிறபின்.

கடிதம் 14. ஈபோ.

11—6—48

அன்பின் அரசி !

முந்திய கடிதங்களை யெல்லாம் முறையாகப் படித்திருப்பாயே ! முன் கடிதத்தில் குறித்தபடி, நான் 8—6—48 பகல் பத்து மணிக் கெல்லாம் சிரம்பானுக்குப் புறப்பட்டேன். எல்லாவிடத்திற்கும் திரு. அருணசலம் செட்டியார் அவர்கள் தம் மனைவியுடனும், பேரன் சுப்பையாவுடனும் வந்து கொண்டிருந்தார்கள். காரில் செல்லும் போது எனது உடல் நிலை சற்றுச் சரியாக இல்லாத காரணத்தால் சற்று மயக்கம் பெற்றேன். காரை நிறுத்திச் சிறிது ஓய்வு பெற்றபின், மெதுவாக ஓட்டிக்கொண்டு சென்றனர். சிரம்பான் ஒருமணிக்குச் சென்று சேர்ந்தோம் எனது உடல் நிலைக்கு ஏற்றபடி நல்ல முறையில் மிளகுச் சாறு உணவு கொண்டேன். எங்கள் வேண்டுகோளின் படியே யாரும் பெருவிருந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. என் உடல் நலமின்மையை அவர்கள் நன்கு அறிந்தமையினாலே ரசஞ் சோறு போட்டு நன்கு உறங்குமாறு பணித்தார்கள். மூன்று மணி நேரம் நன்கு உறங்கினேன். மாலை 4—30 க்கு விழித்தேன். உடம்பு எவ்வளவோ நலமுற்றிருந்தது. பிறகு 5 மணிக்குக் கூட்டத்திற்குச் சென்றேன். நடைபெற்ற கூட்டங்களில் இதுதான் மிகச் சிறிய கூட்டம். 5-மணிக்கு மிகச்சிலரே இருந்தனர், பிறகு 5-45 க்குக் கூட்டம் தொடங்கப் பெற்றது. அன்று அங்கு ஒரு உதைப் பந்து ஆட்டம் நடந்த

தென்றும் பெரும்பாலான மக்கள் அங்கு சென்று விட்டார்கள் என்றும் அறிந்தேன். உதைப் பந்தாட்டச் சிறப்பைப் பற்றி நான் என் மலாக்காக் கடிதத்தில் குறித்திருக்கிறேன் அல்லவா! அந்தச் சிறப்பு மலேயா எங்கும் உண்டு. பந்தாட்டம் என்றால் அன்று வேறு எந்தக் கூட்டமும் அந்த ஊரில் நடைபெறாது. அந்த ஆட்டத்தில் மக்களுக்கு அவ்வளவு உணர்ச்சி. நல்லதுதானே.

குடிநீர் வசதி

மாலை 7-15 க்குக் கூட்டம் முடிந்தது. பிறகு மறுபடியும் சாறுஞ் சோறும் உண்டு படுத்து உறங்கினேன். மறு நாள் புதன் கிழமை 9—6—48 காலை எழும்போது சற்று உடம்பு தெளிவு பெற்றிருந்தது. அங்குள்ளவர்களுடன் அருகிலே இருந்த ஒரு ஏரியைச் சுற்றி நடந்துவரப் புறப்பட்டேன்! ஏரி ஊரின் நடுவில் அழகாக அமைந்திருந்தது. ஏரி என்றால் நமது ஊர்களில் உள்ள பெரிய ஏரிகளைப் போன்றது என்று எண்ண வேண்டாம். அவற்றில் ஆண்டுக்குப் பத்து திங்கள் தண்ணீர் இருக்காதே. இது மலைச்சரிவை அடுத்து ஒரு மடுப்போல் இருந்தது. நான் முன்னமே ஒரு முறை குறித்திருக்கிறேன், ஊர்கள் இடையில் மலைகள் இருக்குமென்று, இந்த ஊரிலுள்ள மலையும் சரிவும் மிக அழகாகக் காட்சி அளித்தன. அந்த மடுவின் காட்சி எவ்வளவு அழகாய் விளங்கிற்று தெரியுமா? அதன் நீர்தான் என்ன தூய்மையோடு இருந்தது. அதிகாலையில் சூரியன் தோன்றுமுன் இம்மலைச் சரிவைச் சுற்றிவந்து அந்த மடுக் கரையில் உட்கார்ந்திருந்தால், அம்மம்மா, இதைவிடச் சுவர்க்கம் என்பதொன்றுண்டா என எண்ணத் தோன்றுகின்றது. அம் மடுவுக்கு வருத்துக் காலும் வடிகாலும் அமைந்திருக்கும் முறையும் நன்கு சிறந்து விளங்கிற்று. அதில் தண்ணீர் எப்பொழுதும் குறைந்ததில்லையாம். எவ்வளவு மழை பெய்தாலும் அதிகமாகப் பெருகுகிறதும் இல்லையாம். அந்தவகையில் அந்த ஏரியின் போக்கு வருத்தை அமைத்திருக்கின்றார்கள். நடந்து வந்தபின் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சிற்றுண்டிகொண்டு மறுபடியும் கோலாலம்பூருக்குப் புறப்பட்டோம். வழியில் காஜனில் தங்கி 11 மணிக்குக் கோலா

லம்பூர் வந்து சேர்ந்தோம், அங்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டு, பகல் உணவு கொண்டு ஓய்வு பெற்றேன்.

மாலை 3—30 மணிக்கு நானும், திரு. சிதம்பரம்செட்டியார் அவர்களும் கோலாலம்பூர்க் கடைத் தெருவைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். பல கடைகளைக் காட்டிக் கொண்டே சென்றார். பேனாக்கடை, துணிக்கடை, கடிகாரக் கடை முதலிய பல கடைகளுக்கும் என்னை அழைத்துக் கொண்டு காட்டினார், இரண்டு மூன்று கடைத்தெருவுகளுக்கு அழைத்துச் சென்றார். ஒவ்வொரு பொருளும் பார்ப்பதற்கு அழகாக அமைந்திருந்தது. எல்லாவற்றையும் வாங்க வேண்டும் எனத் தோன்றிற்று, பல கடைகளில் புகுந்தோம். கோலாலம்பூர் இயற்கைக் காட்சிகளையும் சில கட்டிடக் காட்சிகளையும் புகைப் படத்தில் விலை கொடுத்து வாங்கினோம். துணிக்கடையில் பல உயர்ந்த துணிகள் அழகாக வைக்கப்பட்டிருந்தன. கூடுமானால் சிலவற்றை நான் வரும்போது உனக்காக வாங்கி வருகிறேன். 5—30 க்குத் திரு சிதம்பரம் அவர்களுக்கு ஒரு கூட்டம் இருந்தது, எனவே நானும் அவருடனே திரும்பி விட்டேன. அத்துடன் கடைகளும் பெரும்பாலும் மூடப்பட்டு விட்டன. பகற் கொள்ளைக்காரர்கள் நாட்டில் அதிகம் என்றும், அவர்கள் திடீர் என்று கடைகளுள் புகுந்து கொள்ளை அடிக்கிறார்கள் என்றும் அறிந்தேன். அதனால் தான் கடைகளையெல்லாம் இருட்டுமுன் ஐந்துமணிக்கே மூடிவிடுகிறார்களாம். மற்றொன்றும் கேள்விப்பட்டேன்; ஒரு கூட்டத்தார் சில பணக்காரர்களை அப்படியே தூக்கிக் கொண்டு போய்விடுவார்களென்றும், அவர்கள் வேண்டிய பணத்தை இரகசியமாக வரவழைத்துக் கொடுத்தால்தான் விடுவார்கள் என்றும், இன்றேல் கொன்று விடுவார்கள் என்றும் கூறினார்கள். சென்ற ஆண்டு ஒன்றிரண்டு செட்டியார்களை அவ்வாறு செய்தார்களாம். நல்ல இயற்கை வளம் வாய்ந்த நாட்டிலே இத்தகைய காட்டுமிராண்டிச் செயல்களைக் கேட்க எனது உடல் துணுக்குற்றது . நடுங்கினேன். நாகரிக உலகத்தில் இந்த அநாகரிகக் கொடுஞ் செயல்—அதுவும் பணத்துக்காக நடைபெறுகிறதுஎன எண்ணும்போது வருந்தாது இருக்கமுடியவில்லை. நீ இதுகேட்டுஅஞ்ச வேண்டாம். இங்கு அந்தக்

கொள்ளைக் கூட்டத்தாருக்குப் பணக்காரர் யார் என்று தெரியுமாம். தெரிந்து அவர்களையே அவ்வாறு கொண்டு செல்வார்களாம்! என்னே கொடுமை!

குழந்தாய்! மாலையில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் 'தமிழ் நேசன்' அலுவலகத்தில் இருந்து கொண்டு, 19—6—48-ல் வானொலிப் பேச்சுக்கு வேண்டிய சில பாடல்களைத் திரட்டிக்கொண்டிருந்தேன். அலுவலகப் பொறுப்பாளர் திரு. சுப்பையா அவர்கள் அன்போடு உபசரித்தார்கள் மலேயா தமிழ்ப் பண்ணையின் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. கூட்ட முடிவில் என்னை அழைத்து எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைத்தனர். திரு நடராசப் பிள்ளை அவர்கள் சில சொற்கள் சொன்னார்கள். அவர்கள் இந்தியா ஏஜெண்டு என்று முன்னமே சொல்லி இருக்கிறேன். அவர்தான் இப் பண்ணைக்கும் தலைவர். கூட்டத்திற்குப் பின்னும் நான் சிறிதுநேரம் தமிழ் நேசன் காரியாலயத்தி லிருந்து சிற்றுண்டி உட்கொண்டு பிறகு வீட்டுக்குச் சென்றேன். நாளை நான் வெளியூர் சென்று திரும்பப் பத்து நாட்கள் கழியுமாகையால் வானொலிப் பேச்சுக்கு வேண்டிய பாடல்களைத் தருமாறு' திரு. கந்தையா அவர்கள் கேட்டார்கள் கந்தையா அவர்கள் மாணவ மாணவிகளை இசை வழி இயக்கும் நல்லாசிரியர். யாழ்ப்பாணத்தார். பாடல்களை மட்டும் அவர்களிடம் கொடுத்துவிட்டுக் கட்டுரையை இரண்டொரு நாளில் அனுப்புவதாகச் சொல்லிவிட்டேன்.

கண்டறியாதன கண்டேன்!

இரவு ஒன்பது மணிக்கு, திருவாளர்கள் சிதம்பரம் சுப்பையா, சேதுராமன் ஆகியோருடன் நான் ஒரு காட்சிச் சாலைக்குச் (Show) சென்றேன். காட்சிச் சாலை என்ற உடன் அது என்னவோ ஒரு உயர்ந்த இடம் என்று எண்ணிவிடவேண்டாம். சிங்கப்பூரில் காட்சிச் சாலைகள் உண்டு என்று குறித்திருந்தேனே, இன்று அதுபோன்ற ஒன்றைத்தான் காணச்சென்றேன். கண்டால்தான் மக்கள் வாழ்க்கையை முழுதும்அறிய முடியும் என எண்ணினேன். எண்ணியது வீண்போகவில்லை. மலேயா வாழ் சீனமக்களும் பிறரும் எவ்வளவு மிருகத்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பது தெரிந்தது. சிங்கப்பூரில் சீனமக்கள்

வாழ்வுக்கு உடலை விலை கூறுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதே காட்சி இங்கும் கண்டேன். பல சீனப் பெண்கள் அன்று இரவுக்கு அலைந்து கொண்டிருந்தனர். சில ஆடவர்கள் அவர்களைச் சுற்றித் திரிந்தனர், ஆடவரைக் காட்டிலும் பெண்களே அதிகம். அதிலும் சீனமக்கள் அதிகம். மலேயா மக்களும் இருந்தனர். ஆனால் நல்ல வேளையாக நம் இந்திய மக்களை அக் கோலாகலத்தில் நான் காணவில்லை. மூலைக்கு மூலைக் கூத்துக்கள் - சீன மொழியில் - நடந்துகொண்டிருந்தன. அவர்கள் பாட்டுகளுக்குப் பக்கவாத்தியங்கள் பேரொலி செய்தன. அவைகளை வாத்தியங்கள் என்று கூறக் கூடத் தோன்றவில்லை எனக்கு. அந்த நாடகங்களைக் காணக் காணச் சிரிப்புத்தான் வந்தது. நம் நாட்டுத் தெருக் கூத்துக்களே எவ்வளவோ மேல் என்னலாம். ஆனால் இவைகள் கொட்டகைக்குள் பெரும் கூச்சலுடன் நடைபெறுகின்றன. அவர்கள் பேசுவதும் பாடுவதும் மிக வேடிக்கை. உடையோ அதற்கு மேல். அந்த ஒரு காட்சிச்சாலைக்குள் பல மேடைகள். மேடைகளுக்கு எதிரில் பார்ப்பதற்குத் தனித் தனி நாற்காலிகள் இல்லை. சிற்றுண்டிச்சாலையைப் போன்ற ஏற்பாடு. அங்கு உட்கார்ந்து பார்ப்பவர்க்குப் பணம் கிடையாது. ஆனால் ஏதாவது சாப்பிடவேண்டும். நாங்கள் இரண்டிடங்களில் உட்கார்ந்தோம். ஆனால் ஒன்றும் சாப்பிடாது சிறிது நேரம் இருந்து எழுந்து வந்துவிட்டோம். அங்கு வேலை செய்கின்ற அத்தனைபேரும் சீன இளம் பெண்கள் தாம். ஐயோ அவர் தம் இளம் வாழ்வு இப்படிப் பாழாக்கப் படுகிறதே என்றேன். அது அவர்களுக்குப் புரிந்தால்தானே, பதில் சொல்ல.

ஒருபுறம் சூதாடுமிடங்கள் நிறைய இருந்தன. அவற்றிலெல்லாம் கூடச் சீனப் பெண்கள் இளமை தோய்ந்த- ஆனால் தளர்ந்த முகத்துடன் உட்கார்ந்து போகின்றவர்களையெல்லாம் சூதாட அழைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த வேடிக்கைகளைக் கண்டு மேலும் சென்றேன். ஒரு பக்கத்தில் சில மாலாய்ப் பெண்கள் சிலருடன் கைகோர்க்காது நடனமாடிக்கொண்டிருந்தார்கள். அது என்ன என்றேன். அங்கு சென்று உட்கார்ந்து ஒன்றும் சாப்பிடாது, சிறிது நேரம் இருந்து எழுந்து வந்துவிட்டோம். அந்தப் பெண்களுடன் யார்வேண்டுமானாலும்

5 நிமிஷங்கள் ஆடலாமாம். ஆங்கில முறையில் உடை வேண்டுமாம். ஒரு வெள்ளிக்கு (இந்த நாட்டு நாணயம்; தற்போதைய மாற்றப்படி 1 வெள்ளிக்கு ரூ 1-9-0) 5 டிக்கெட் தருவார்களாம். நாம் ஒன்றைக்கொடுத்து ஒரு பெண்ணை அழைத்தால் அவள் எதிரில் வந்து ஆடவேண்டும். நாமும் ஆட வேண்டும். அப்படிச் சிலர் ஆடுவதைக் கண்டோம். அந்தப் பெண்களில் பத்து வயது உள்ள ஒரு சிறு பெண் இருந்தாள். அந்தக் குழந்தையின் கதியும் இப்படியா இதற்குள் ஆகவேண்டும் என எண்ணினேன். முன் கடிதத்தில் மலாய் மக்களுக்கு அரசாங்கத்தார் உதவியை எழுதி இருக்கிறேன். அவர்கள் முதல் முதல் செய்ய வேண்டுவது இத்தகைய ஆட்டங்களை நிறுத்துவதுதான் என்பது என் எண்ணம். பிறகு பல கடைகளைப் பார்த்துக் கொண்டே வெளியே வந்தோம். இதுவா நாகரிகம் என்று என் வாய் முணு முணுத்தது. எவ்வளவு இயற்கைவளம் இருந்தாலும் இந்த அநாகரிக மக்களிடையில் மயேலாவில் அந்தோ! எப்படி நம் தமிழ் மக்கள் வாழ்கிறார்களோ என எண்ணினேன்! குழந்தாய்! இத்தகைய காட்சிகளுக்கு நம் நாட்டு அரசியலார் சிறிதும் இடம் தரமாட்டார்கள். இங்கோ ஊருக்கு நான்கைந்து. இது இந்நாட்டு மக்கள் ஒழுக்கக் கேட்டை விளக்கும் கண்ணாடியாக விளங்குகின்றது.

வெளிவந்த நாங்கள் அருகில் உள்ள ஒரு பெரிய ஓட்டிலில் நுழைந்தோம். அதுதான் அந்த ஊரில் மிகப் பெரியது என்றும், 'Capitol' என்ற பெயர் வாய்ந்ததென்றும் கூறினார்கள். அதனுள் புகுந்ததும் திடுக்கிட்டேன். அங்கே ஆங்கிலமுறை நடனம் நடந்துகொண் டிருந்தது. பல ஆடவரும் பெண்டிரும் தம் முன் கை கோர்த்து நடனமாடிக்கொண் டிருந்தனர். இது நம் நாட்டு ஆங்கில விடுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சித்தான். மேனாடுகளில் மிகச் சாதாரணம். ஆனால் இங்கு அம்முறையில் நடைபெறவில்லை. ஓட்டல் முதலாளிகள் நடமாடுவதற்கென்றே சில பெண்களைத் தயாராக்கி வைத்திருக்கிறார்களாம். அவர்களோடு ஆட 20 காசுகள் டிக்கெட் பெறவேண்டுமாம். கையோடு கை கோர்த்து களிப்பில் மூழ்கி ஆடும் அந்த நடனம் ஐந்து நிமிடங்கள், அங்கும் சிறிது நேரம் இருந்து கண்டோம். பிறகு அந்த விடுதியின்

மேல் தளங்களையும் வாடகை அறைகளையும் சென்று கண்டோம். ஒரு நாளைக்கு 7 வெள்ளி முதல் 14 வெள்ளி வரை நான்கு முறையில் பல அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. வெளியூரிலிருந்து வரும் பலர் தங்கத் தக்க விடுதிகள் நிறைய உண்டு. பிறகு பற்வற்றைப் பார்த்து விட்டு வீட்டுக்கு வந்தோம். மேலை நாட்டு நாகரீகமும், தூரக் கிழக்கு நாகரீகமும் இங்கு மலேயாவில் ஒன்று கலந்து மக்களை மாக்களாக்குகின்றது என்பதே அக்காட்சிகளால் நான் பெற்ற முடிவு.

வீட்டுக்கு வந்து களைப்பால் படுத்து நன்கு உறங்கி விட்டேன். நேற்று (10—6—48) காலை 6 மணிக்கு எழுந்தேன். இங்கு 7 மணிக்குத்தான் சூரியன் புறப்படுகிறது.

இந்த நாட்டு மணிக்கும் நம் நாட்டு மணிக்கும் வேறுபாடு என்று குறித்தேன் அல்லவா! கணக்குப்படி உண்மையில் அமைவது $1\frac{1}{2}$ மணி நேரம்தான். சுமார் 1600 கல் தொலைதானே உள்ளது. ஆகவே $1\frac{1}{2}$ மணி நேரம்தான் இருக்கும். ஆனல் அரசியலார் ஏனோ இன்னும் ஒரு அரைமணி நேரம் முன்னுக்கி இரண்டு மணி நேர வேறுபாட்டைக் காட்டுகின்றனர். இப்படி $\frac{1}{2}$ மணி நேரம் அதிகமாகச் செல்வதால்தான் சூரியன் உதிப்பதற்குள் மணி 7 ஆகி விடுகிறது. மற்றும் மலை சூழ்ந்த நாடாதலால்—பனிவிழும் பகுதியாதலால்-வெளி வரும் சூரியன் நெடு நேரம் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

தெலுக்கான்சன்

நான் இன்றுதான் வடக்கு நோக்கிப் புறப்பட வேண்டும். இன்று மாலை 5 மணிக்குத் 'தெலுக்கான்சன்' என்ற ஊரில் பேச்சு. ஆகவே காலையிலேயே கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு புறப்படத் தயாரானேம். சிற்றுண்டி கொண்டோம். கோலாலம்பூரிலிருந்து தெலுக்கான்சன் 120 கல். சரியாகக் காலை 9-15க்குப் புறப்பட்டோம்.

வழி சிறந்து காணப்பட்டது. பல காறுகளையும் மலைகளையும் கடந்து சென்றேம். குறைந்தது பத்துக் கல் தொலைவிற்கு ஊரே காணவில்லை. ஒரே காடு அடர்ந்திருந்தது. போக்குவரத்து, கோலாலம்பூருக்குத் தெற்கே

இருந்ததுபோல் அவ்வளவு அதிகமாக இல்லை. வழியில் பல ஈயம் எடுக்கும் தொழிற்சாலைகள் இருந்தன. இந்த நாட்டுக்கு ரப்பரும் ஈயமும்தான் மூலப் பொருள்கள் என்று எழுதி இருக்கிறேன். அந்த வகையில் இந்தப் பகுதியில் ஈயம் அதிகமாக எடுக்கிறார்கள் பெருங் காடுகள் எங்கும் தென்பட்டன. கார் விரைந்து வந்தது 50 கல் தாண்டி ஒரு ஊரில் சிறிது நேரம் நின்றோம். செட்டியாரின் உறவினர்கள் வழி இளைப்புக்குக் 'காப்பி' முதலிய நீர் வகைகள் அளித்தார்கள். சிறிது நேரம் இளைப்பாறினோம். பிறகு மறுபடியும் புறப்பட்டோம். வழி நெடுக மறுபடியும் இயற்கையும் எழிலும்தான். தெலுக்கான்சன் ஒரு தீவினைப்போல ஆறு ஒன்றினால் சூழப்பட்டு கடலுக்குப் 15 கல் தொலைவில் இருந்தது. ஆனால் நேராகச் சென்றால் அண்மையில் உள்ளது. ஆற்றில் அடிக்கடி தண்ணீர் ஏறி இறங்கிக் கொண்டிருக்குமாம். அந்த ஆற்றின்வழிப் பெருங்கப்பல்கள் கூட வருமாம். அதை மாலையில் கண்டேன். ஊர் அருகே பல பெரிய தோட்டங்கள் இருந்தன. இந்த ஊரின் அருகில்தான் சமதரையாக இருந்தது. அதிக மலைகள் இல்லை. எங்கும் ரப்பர் தோட்டங்கள் காட்சியளித்தன. சரியாக 1.45க்கு ஊர் போய்ச் சேர்ந்தோம். அன்பர் கண்ணப்ப செட்டியார் அவர்கள் வருக வென்று வரவேற்றார்கள். உணவுக்குப் பின் சிறிது நேரம் இளைப்பாறினேன். பிறகு வானொலிப் பேச்சு எழுதினேன். மாலை 4. 30க்கு ஊரைச் சுற்றிப் பார்க்கக் 'காரி'லேயே புறப்பட்டோம். ஊர் சிறியதாயினும் எல்லா வசதிகளும் நிறைந்திருந்தன. பள்ளிக்கூடம் முதலிய எல்லா வசதிகளையும் பார்த்து ஆற்றோரம் சென்றோம். அங்கே ஒரு சிறு கப்பல் சாமான்களை ஏற்றிக்கொண் டிருந்தது. ரயில் வசதி அந்தத் துறைவரை இருந்தது. அங்கே ஒரு சுங்கச்சாவடி. சாதாரணமாக ஒரு சிறு துறைமுகமாகவே இருந்தது. இது சிங்கப்பூர் பினாங்கு பெருவழிக்கு 23 கல் தொலைவில் மேற்கில் தள்ளி இருந்தது. புகை வண்டிப் பாதையும், கற்பாதையும் இதற்குத் தனியாக அமைந்திருந்தன. எல்லாச் சாலைகளும் அழகா அமைந்திருந்தன. ஊரில் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்துக் கூட்டத்துக்குச் சென்றோம். கூட்டத்திற்குப் பலர் வந்திருந்தனர். இந்தக் கூட்டத்தில்தான்

தொழிலாளர் பலரைக் கண்டேன். முதல் முதல் தொழிலாளர பலரைக் கண்ட நிலை இதுதான். பேச்சு நடந்தது. 'தமிழ்ச் சோலை' என்பதுதான் பொருள். கூட்ட முடிவில் முருகன் கோயிலுக்குச் சென்றோம். கோயில் மிக் அழகாக அமைந்துள்ளது. இது வரையில் பார்த்த வற்றுள் இந்தக் கோயில்தான் மிகச்சிறந்து விளங்கி நின்றது எழிலார் திருக்கோயில். பிறகு உணவு கொண்டு உறங்கினோம்.

தோட்டத்தே தொழிலாளர் :

குழந்தாய்! இன்று காலை எழுந்தது முதல் இந்தக் கடிதம் எழுதும் வரை சரியாகத்தான் இருந்தது. பகலில் இரண்டு மணி நேரம் படுத்து உறங்கினேன். காலை எழுந்ததும் கடன்களை முடித்துக்கொண்டு, சிற்றுண்டி கொண்டோம். அருகிலே உள்ள ஒரு ரப்பர்த் தொழிற் சாலையைக் காணவிழைந்தோம். திரு. கண்ணப்ப செட்டியார் அவர்கள் உடன் வந்து காட்டுவதற்கு இசைந்தார்கள். முன் ஏற்பாடுசெய்து, வரும் வழியிலே உள்ள 'தெலுக்கன்சன் எஸ்டேட்'டைக் காணச்சென்றோம். அந்த எஸ்டேட்டின்மானேஜர் ஒரு நாயுடு. கும்பகோணத்தைச் சேர்ந்தவர். தமிழர். நல்ல அன்பர். எங்களை அன்போடு வரவேற்றார். இயந்திரத்தின் ஒவ்வொரு பகுதியையும் காட்டினார். பால் பல் வேறு மாற்றங்கள் பெற்றுப் பிறகு வெளி நாட்டுக்கு அனுப்பத் தயார் செய்யும் வரை ஒவ்வொன்றாக விளக்கிக் காட்டிக்கொண்டே சென்றார். அவர் வீட்டில் தெலுங்கு மொழிதான் வழக்கத்திலுள்ளது. அவரும் தமிழை நன்கு பேசவில்லை. ரப்பர் எல்லாம் நன்கு பதம் செய்யப்பட்டு மேலை நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அங்கேதான் சாமான்களாக அவைமாற்றப்படுகின்றன. இவ்வளவு பெரியதோட்டங்கள் இருந்தும் இங்கு பெரிய தொழிற்சாலைகள் கிடையா. நம் நாட்டுப் பஞ்சுப்பொதியைத் தம் நாட்டிற்குக் கொண்டுசென்று உயர்ந்த நூலாக்கித் துணியாக உயர்ந்த விலைக்குத் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தார்களல்லவா; கடலைக்காயைக் கொண்டு சென்று, சோப்பாக-பல உயர் பொருளாக-அனுப்பி வந்தார்களல்லவா! அந்த முறையில் தான் இந்த ரப்பர் வெளி நாடுகளுக்குக் கொண்டு செல்லப் பட்டு, முடிந்தபொருளாக இங்கு கொண்டுவரப்படுகிறது

இப்பொழுதுதான் 'டன்லப்கம்பெனி' உரிமையாளர் ஒருசிறு தொழிற்சாலை இங்கே தொடங்கி இருக்கிறார்களாம். நாங்கள் கண்ட அந்தத் தோட்டத்திற்கு உரிய பொருள் செய்யும் தொழிற்சாலை மேலை நாட்டில் உள்ளது என்பதை அறிந்தேன். அந்த நாயுடு நண்பர் பலவற்றைக் காட்டிக் காட்டி விளக்கிக் கொண்டிருந்தார். பிறகு அவர் எங்கள் அனைவரையும் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவர் அன்பிற்குக் கட்டுப்பட்டுச் சென்றோம். முன்நாள் வந்த கப்பலில் அங்கிருந்து மாம் பழங்கள் வந்திருந்தன. அரிந்து கொடுத்தார்கள். பிறகு பால் பருகினோம். அவர் தம் அன்பு மிகப் போற்றக் கூடியதாக இருந்தது. இப்படி அன்புள்ள தமிழர்கள் அங்கங்கு இருப்பதைக் காண உண்மையில் உளம் மகிழ்ந்தேன். பிறகு அருகிலே உள்ள தொழிலாளர் வீடுகளைக் காண வேண்டும் என்றேன். அவர் எங்களை அந்தப் பகுதிக்கு அழைத்துக்கொண்டு சென்று காட்டினார். அந்த எஸ்டேட் உரிமையாளர்கள், தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருக்கின்றனர். வீடுகள் சற்று பெரியதாக 12'×10' ஒரு அறையும், எதிரில் ஒரு தாழ்வாரமும், தனித்த சமையல் அறையும் பொருந்தக் கட்டி இருந்தார்கள். மற்றக் குழாய்-கழிவிடம் முதலியன நன்கு அமைந்திருந்தன. அங்குள்ள தொழிலாளிகளில் பெரும்பாலோர். தெலுங்கர்கள், தொழிலாளிகளின் நிலை சீர் பெறவில்லை என்று அங்கங்கே குறித்து வந்தேனே. நமது நாட்டு அரசாங்கம் இத்துறையில் கருத்திருத்தினால் உடன் நலம் பெற வழியுண்டு. அதிலும் தமிழ் நாட்டு அரசியலார்தான் கருத்திருத்த வேண்டும் தொழிலாளர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் தானே. இது குறித்து நமது பொதுத்துறை அமைச்சர். திரு. மீ. பக்தவச்சலம் அவர்களுக்கும் கூட இன்று ஒரு கடிதம் எழுதியுள்ளேன். சென்னை வந்ததும் நேரில் சென்று கண்டு இவர்கள் குறையை விளக்கவேண்டும். போனது போக இனியாவது இந்திய அரசாங்கம் தொழிலாளிகளை வெளி நாட்டுக்கு அனுப்பாதிருக்க வேண்டும். இதோ இங்குள்ள 6 லட்சம் தொழிலாளியும், தம் கைவளத்தால் அங்கிருந்து, தமிழ் நாட்டைக் கற்பகலோகமாக்கலாமே! அதற்கு வழி செய்யவேண்டுவது நம் அரசியலாரின் கடன்.

செய்வார்கள் என எண்ணுகிறேன். இந்தப் பகுதியில்தான் சில தெலுங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை யெல்லாம் கண்டு, பிறகு திரு நாயுடு அவர்களிடமும், கண்ணப்பர் அவர்களிடமும் பிரியா விடைபெற்றுப் பிரிந்து மேலே ஈபோவுக்குச் செல்லப் புறப்பட்டோம்.

'தெலுக்கன்சன் எஸ்டேட்' ஆங்கிலேயருக்கு உரிமையான பேர்திலும், மானேஜர் நாயுடுவைப் போன்ற நல்ல தமிழர்கள் மேற் பார்வையில் நடப்பதால் சிறந்திருந்தது என அறிந்தேன். தொழிலாளிகள் பெரும்பாலும் ஒழுங்காக வேலைக்கு வருவார்களாம். வேலை நிறுத்தம் போன்ற வீண் தொல்லைகள் கிடையாவாம். இந்த வட்டத்தில் எல்லாத் தோட்டங்களிலும் அமைதி முறையில் இது சிறந்திருந்ததாம். தெலுக்கான்சன் பேரா வட்டத்தின் தலை நகர். பேரா மிகப்பெரிய வட்டம். இதில்தான் தமிழ் மக்கள் அதிகமாக உள்ளனர். பேராவும், கீழ்ப்பேரா (Lower Perak) மேல் பேரா (Upper Perak) என்ற இரண்டாக அமைந்துள்ளதாம். இது கீழ்ப் பேராவின் தலை நகர். பல தலைமை நிலையங்கள் இங்கே இருந்தன, கண்டோம்.

தெலுக்கன்சனிலிருந்து விடைபெற்றுக் கொண்டு நேரே ஈபோவுக்குப் புறப்பட்டோம். வழியில் ஒரு இடத்தில் (கம்பார்) சிறிதுநேரம் தங்கிப் புறப்பட்டோம். சரியாய்ப் 12 மணிக்கு ஈபோ. திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் வீடு சேர்ந்தோம். அவர் வீட்டிலிருந்து கொண்டுதான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். அவர் மிக அன்புள்ளவர். அத்துடன் அறிஞர். ஆங்கிலம் தமிழ் இரண்டும் நன்கு பயின்றுள்ளார் என்பதைப் பிறகு அவரிடம் பேசும்போது அறிந்தேன். திருக்குறளில் பல அவருக்கு வரும். அவர் சிறந்த தமிழ்ப் பண்பாளர் என்று முன்னமே திரு. செட்டியார் அவர்களும் சொல்லி இருந்தார்கள்.

எழிலார் ஈப்போ:

வந்த வழி வருத்தம் நீங்கச் சிறிது நேரம் உறங்கி விட்டுப் பகல் ஒரு மணிக்கு மேல் உணவு கொண்டேன். கடிதங்கள் எழுதி முடித்தேன். வானொலிப் பேச்சு எழுதி முடித்துத் தபாலில் அனுப்பிவிட்டேன். பிறகு சிறிது நேரம் ஓய்வு கொண்டேன். மாலை 5 மணிக்குக் கூட்டம்.

அதற்கு முன் ஈப்போ நகரைக் காணச் சென்றோம். மலேயாவிலேயே இந் நகர்தான் மிக அழகு வாய்ந்த நகராக விளங்குகின்றது. மலைச்சரிவுகளிலும், பிற விடங்களிலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அணி அணியாக வீடுகள் கட்டி வைத்திருந்தனர்.

அலுவலகங்களில் வேலை பார்பவர்களுக்கு இந்த நாட்டில் இது ஒரு அரிய வாய்ப்பு. அரசியலாரே அடுக்கடுக்காக அவரவர் தம் தேவைக்கு ஏற்றபடி, பலப்பல வகையான வீடுகளைப் பலப்பல முறையில் ஊர் தோறும் கட்டித் தந்திருக்கிறார்கள். அரசியல் அலுவலாளர்களுக்கு அமைத்திருக்கும் வீடுகளும் அமைப்பு முறைகளும் அழகாக அமைகின்றன. ஒவ்வொரு ஊரிலும் நான் அவற்றைக் கண்டு கொண்டேதான் வருகிறேன். கோலாலம்பூரில் 1000-க்குமேற் பட்ட வீடுகளை அவர்கள் கட்டி இருக்கிறார்கள். அரசாங்கப் பணத்தை இத்தகைய ஆக்க வேலைக்குப் பயன் படுத்து கிறார்கள். ஊழியர்களும் எங்கு மாற்றப்பட்டாலும் இடத்திற்கு என்ன செய்வோம் என்ற ஏக்க மில்லாது செல்லு மிடந்தோறும் சொந்த வீடுகள் போல் சென்று குடியேறுகின்றார்கள். ஆனால் எங்கும் வீடு கிடைக்காத் திண்டாட்டம் இந் நாட்டிலும் உண்டு. வீடுகள் போதவில்லை. கட்டட வசதி இல்லை— பொருள்கள் கிடைக்க வில்லை என்ற குறை பல இடங்களில் உண்டு.

குழந்தாய்! இந்த இடத்தில் மற்றொன்றும் குறிக்க விரும்புகிறேன். இந்நாட்டில் வீடுகளை வாடகை பெறுவதில் ஒரு விநோத முறையைக் கையாளுகிறாகள். வாடகையைப் பற்றிய பேச்சே இருக்காது. அது ஒரு சிறு தொகையாக இருக்கும். ஆனால் முன்னமே மொத்தமாக 'டி தொகை' (Tea Money) என்று வாங்குவார்கள். குடியிருப்பவர் மற்றவருக்குக் காலி செய்து விட்டாலும், அன்றி, வீட்டுக்காரரே தனியாக விட்டாலும் யாருக்கும் இந்த 'டி தொகை' உண்டு. ஆனால் இந்தத் தொகை ஏறக்குறைய வீட்டு விலைக்குக் கூட வந்து விடும். நான் இருக்கும் போது ஒரு வீடு வாடகைக்கு விடப்பட்டது: 9 000 டாலர் 'டி தொகை'யாம். அந்த வீடு ஒருவேளை 12,000 டாலர் போகும். அவ்வளவு தான். இந்த

விபரீத முறை வெளிப்படையாகத் தான் நடக்கிறது. எனி னும் அரசாங்கம் கண்டு கொண்டுதான் இருக்கிறது. இந்த நிலையில், அந்த அரசாங்கக் கட்டடங்கள் இல்லை யானல் அலுவலாளர்கள் என்ன செய்வார்கள் என் பதை எண்ணிப் பார். நல்லவேளையாக அந்தக் கவலையில் அவர்களை வைக்கவில்லை அரசாங்கத்தார்.

ஈப்போவில் ஒரு குதிரைப்பந்தய இடம் இருக்கிறது. அது நமது சென்னைக் குதிரைப் பந்தய இடத்தைப் போன்று சிறந்து நின்றது. குதிரைப்பந்தயம் இந்நாட் டில் மிகுதி. பல ஊர்களில் இப்பந்தய ஆட்டங்கள் நடை பெற வசதிகள் இருக்கின்றன சிங்கப்பூர் தொடங்கி பினங்கு வரை உள்ள ஊர்களில் பல குதிரைப்பந்தய இடங்களைக் கண்டேன். சூதுக்கும், குடிக்கும் பேர் போன நாடென்று முன்னமே குறித்திருக்கிறேனே. அதை உண்மை என்று விளக்குவது போன்று ஊர் தோறும் இப்பந்தயச் சாலைகள் உள்ளன. திங்களுக்கு ஒரு ஊர் என்ற முறையிலே ஆண்டு முழுதும் குதிரைப்பந்தயம் நடை பெற்றுக் கொண்டுதான் இருக்குமாம். பிறகு பல இயற்கை வளங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு கூட்டத்திற்குப் போனேம்.

மலேயாவில் திராவிட கழகங்கள் பல விடங்களில் உண்டென்றும் அதற்குரிய தலைமை இடம் ஈப்போ என் றும் அறிந்தேன். அந்தக் கழகச் சார்பில் 'இனமணி' என்ற ஒரு கிழமை இதழையும் அவர்கள் நடத்தி வருகி ருர்கள். அந்தப் பத்திரிகை ஆசிரியரும், கழகத் தலை வரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டம் அவ்வளவு பெரிதாக இல்லா விட்டாலும், வந்தவர் அனைவரும் நல் லுணர்ச்சியோடு இருந்தனர். கூட்டம் முடிந்த பின் அருகே உள்ள குமரன் கோட்டம் சென்று அவனை வணங்கி னேம். பல அறிஞர்களோடு பேசினேம். பிறகு திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் காரில் ஏற்றிக்கொண்டு, மின்சார விளக்கொளி யிடையில் நகர் விளங்குவதைக் காட் டிக் கொண்டே வந்தார். பல பகுதிகளையும் சுற்றிப் பார்த் தோம். இடை இடையே அவர் தனக்குத் தமிழில் உள்ள ஆர்வத்தையும், ஆங்கிலம் பயில வேண்டும் என்ற அவா வினையும் வெளியிட்டார். செகப்பிரியர் கதைகளைப்

படித்து வருவதாகக் கூறினர். திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டார். நான் சைவனுக வாழ வேண்டுமானல் என்ன செய்ய வேண்டும் என்றார் அவர். நான் அப்பர் அடியை

'வஞ்சமின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொலின்றி விலகுமின் வீடுற' என்றேன்.

பிறகு பலவற்றைப் பற்றிக் கேட்டார். வீடு சென்றோம். இரவு உணவுக்குப் பின் திருக்குறளில் பல ஐயங்கள் அவருக்கு இருந்தன; கேட்டார்; சொன்னேன். பிறகு உனக்கு இக் கடிதத்தை எழுதத் தொடங்கினேன். அனைவரும் உறங்கி விட்டார்கள். நான் இரவு 11-30 மணி வரையில் எழுதினேன். முடியவில்லை. குறை வைத்தேன். இதோ குறையைத் 'தைப்பிங்' என்ற ஊரில் முடித்துத் தான் தபாலுக்கு அனுப்புகிறேன். இன்று (12-6-1948) மாலை 5 மணிக்குப் பினங்கில் பேச்சு. சென்று கொண்டே இருக்கிறேன். அடுத்த கடிதம் பினங்கிலிருந்து எழுதுகிறேன்.

கடிதம் 15.

பினங்கு
13—6—1948.

அன்பின் அரசி!

நேற்று தைப்பிங்கில் தபாலுக்கு அனுப்பிய கடிதம் சேர்ந்திருக்குமே. நேற்றைய நிகழ்ச்சி ஒன்றுமே அதில் குறிக்க வில்லையே. இதோ தருகின்றேன், நேற்று விடியலில் இத்தனை நாள் இல்லாதவகையில் காலை 5-30 மணிக்கே எழுந்து விட்டேன். பினங்குக்குச் செல்ல நூற்று இருபது கல் போக வேண்டும். உணவு அங்குதான் ஏற்பாடு செய்திருந்தோம். ஆகவே 5-30க்கே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, குளித்து 7 மணிக்கெல்லாம் காரில் புறப்பட்டோம். வழியைப்பற்றி ஒவ்வொரு முறையும் எழுத வேண்டா என எண்ணுகின்றேன். சுற்றிலும் இயற்கை வளம்; இடையில் தமிழன் கைத்திறனல் கண்ட பாதை. ஈப்போவுக்கு வடக்கே நிறைய ஊர்கள் இருந்தன. வழி நெடுக வீடுகளும் இருந்தன. மக்களும் தென்பட்டனர்.

கண்டெடுத்த சிலை:

ஈப்போவுக்கு 23 கல்லில் சிறிது நேரம் நாங்கள் நிற்க வேண்டி வந்தது. 'சங்கிச்சிபுட்' என்ற ஊரில் நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட ஒரு செப்பு உருவம் இருக்கிறது என்றும், அதை நாங்கள் பார்த்துத் தான் செல்ல வேண்டும் எனவும் முந்நாள் ஈப்போ கூட்டத்திற்கு வந்த அவ்வூர் வாழும் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் அழைத்தார்கள். ஆகவே அவர் ஊரில் தங்கினோம். அவரும் அவருடைய இரு உடன் பிறந்தவர் களும் நல்ல முறையில் வரவேற்றார்கள். மூன்று பேரும் இங்கே பிறந்தவர்கள். எனினும் நீங்காத தமிழ்ப் பற்று கொண்டவர்கள். ஒருவா தமிழ் நாட்டு அண்ணாமலைப் பல் கலைக் கழகத்துக்கு வந்து பயின்றவர் கூட. அவர்கள் வீட்டில் தான் அந்தத் திருஉருவம் இருந்தது. அதைக் கொண்டு வந்து வைத்தார்கள். வைத்த சிலையை நெடு நேரம் உற்று நோக்கினேன். அது குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்ததாக இருக்க வேண்டும். அதில் தமிழ் நாட்டுக் கலைப்பண்பு அப்படியே விளங் கிற்று. அந்த உருவம் புத்த சின்னத்தைக் குறிப்பது என்றார்கள். அது பற்றி ஒரு ஆங்கிலேயன் எழுதிய கட் டுரைத் துண்டு ஒன்றையும் கொடுத்தார்கள். அதில் இன் னும் மூன்று உருவங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அவற் றுள் ஒன்று தைப்பிங் காட்சிச் சாலையில் உள்ளது என் றும், வழியில் உள்ள தைப்பிங்கில் அதைக் கண்டு செல்ல வேண்டும் என்றும் கூறினார்கள். நான் அவ்வுருவைக் கூர்ந்து நோக்கினேன். அது சிவன் உருவமாகத் தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். 'எண் தோள் முக்கண் எம்மானே' என்று மணி வாசகர் கூறிய படி எட்டு தோள்கள் அந்த உருவுக்கு இருந்தன. ஒவ் வொன்றிலும் ஒவ்வொரு பொருள். அவை எவை என்று திட்டமாகத் தெரியவில்லை. ஒரு கை வரம் தருவகையில் நம் நாட்டுக் கோயில்களில் உள்ளது போல் அமைந்திருந் தது. சிவனுக்குரிய இரண்டொரு பொருள்கள் கை களில் இருந்தன. தலையில் பெண் உருவம் தெரிந்தது. சடையும் தெரிந்தது. எனவே இது சிவ உருவமாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். எனினும் ஆங்கிலேயன் கட்டுரையும், அவர்கள் கூற்றும் அது புத்த

உருவம் என்றன மற்றும் தாகூர் அவ்வுருவத்தைக் கண்டு திருமால் உருவம் என்று சொல்லிச் சென்ருராம், அவர் மலேயா வந்த போது. திருமாலுக்கும் எட்டுக்கைகள் உண்டு என்பதை நம் காஞ்சியில் இருக்கும் அட்டபுயப் பெருமாள் கோயில் நிலை நாட்டுமே. ஆகவே அவர் அதைத் திருமால் என்று நினைத்ததில் தவறு ஒன்றும் இல்லை. அது திருமாலாயினும், சிவனாயினும், புத்தச் சிலையாயினும் ஒன்று நிச்சயமாக விளங்கிற்று. அது தமிழ் நாட்டுப் பழம் பெருஞ் செல்வமாகக் காட்சி யளித்தது.

சையாம் நாட்டில் தமிழர் தொன்மை :

திரு மீனாட்சிசுந்திரம் அவர்கள் பிறகு சில நூல் களைக் கொண்டுவந்தார்கள். சையாம் நாட்டிலுள்ள சிவன் கோயிலைப்பற்றிய பெருநூல் ஒன்று. ஜாவா நாட்டில் இராமாகாதை தீட்டப் பெற்ற சிறப்பு மற்ருென்று. சையாம் நாட்டு மக்கள் இன்றும் தமிழ் நாட்டு மக்களைப் போன்றே உடை உடுத்துகிருர்களாம். பெயர்களெல்லாம் கூட நம் நாட்டுப் பெயர்களாக அமைந்துள்ளனவாம். அது பற்றி நான் 'பாங்காக்' போனுல் நன்ருக அறிந்து தெளிவாக எழுதுகிறேன். பாங்காக்தானே சையா மின் தலைநகர். மலாய் நாட்டுக்கு அடுத்த நாடு சையாம் தான். அங்கே அந்தத் தலைநகரில் 1,500 தமிழர்கள் வாழ்கிருாகளாம். அந்த நாட்டில் ஒரு பெரிய சிவன் கோயில் காட்டில் மறையுண்டு பிறகு கண்டுபிடிக்கப் பட்டதாம். மிகப் பழமையான கோயில். ஆனுல் பெரிய கோயில். அதன் படங்களைக் கண்டபோது நம் நாட்டுத் தஞ்சை, மதுரை முதலிய ஊர்களில் உள்ள கோயில் கள் நினைவுக்கு வந்தன. அதன் கோபுரங்கள் நம் நாட் டுக் கோபுரங்களை ஒத்து இருந்தன. அவற்றின் உச்சி யில் பொற் கலசங்கள் இருந்தன எனவும், அவைகள் களவாடப் பட்டன எனவும் கூறினுர். பல்லவர் காலத் துக்குப் பின் வந்த பிற்காலச் சோழர் காலக் கோயிலை ஒத்திருந்தது அது. அச் சோழர் பரம்பரையில் பலர் கடல்தாண்டிக் கலம் செலுத்தியும் வாழ்ந்தார்கள் என்று காண்கின்ருேமே. அவர்களுள் ஒருவர் இங்கு இக் கோயிலைக் கட்டி இருக்கலாமோ என எண்ணினேன்.

சையாம் நாடே தமிழ் நாகரிகம் நிறைந்த நாடென்றும் மக்கள் நடை, உடைகளில் தமிழ் நாட்டாரை ஒத்து இருக்கிறார்கள் என்றும், அவர்கள் மதம் பௌத்தம் என்றும் அறிந்தேன். பின் ஜாவாவில் கல்லில் செதுக்கப்பட்ட உருவங்களையும் அவற்றை விளக்கும் நூலையும் கண்டேன். இராமகாதை—இராமாயணம் அப்படியே உருவங்களில் கதையாகச் செதுக்கப்பட்டுள்ளது. அனுமன் கடல் தாண்டிச் சீதையைக் கண்டு வந்த சுந்தர காண்டம் சுவைபட நன்கு விளக்கப் பட்டிருந்தது. சிலையின் உருவங்கள் படங்களில் நன்கு தெரிந்தன. அந்த இரண்டு நூல்களையும் பெற விழைந்தேன். ஆனால் அவை தற்போது கிடைக்காதெனவும், வேண்டுமானால் வெளியிட்டோருக்கு எழுதிப் பார்க்கலாம் என்றும் சொல்லி முகவரியும் கொடுத்தார்கள். பிறகு தமிழர் தம் கலைவாழ்வு பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அவர்கள் வீட்டிலேயே சிற்றுண்டி கொண்டு மேலே புறப்பட்டோம்.

வழியில் 'கோலக்கஞ்சார்' என்ற ஒரு சிற்றூரில் தங்கினோம். ஊர் சிறியதாயினும் அது முக்கியம் பெற்ற ஊராக இருந்தது. நான் முன்குறித்தபடி சிறிய ஊராயினும் எல்லா வசதிகளும் அங்கு இருந்தன. தவிர இந்த நாட்டுக்கு - மாகாணத்துக்கு உரிய 'சுல்தான்' அங்குதான் இருக்கிறார். அவருடைய அரண்மனை முதலியவற்றைக் கண்டோம். சுல்தான் என்றால் அவர்கள் இந்நாட்டை ஆள்கின்றவர்கள். பின் அவர்களைப் பற்ற எழுத வாய்ப்பு நேருமேல் விளக்கமாக எழுதுகிறேன் ஊரைப்பற்றி ஒன்று சொல்லுகிறேன். 'கோலக்கஞ்சார்' என்ற உடனே 'கோலம்' என்பது அழகு என்ற பொருள்படும் தமிழ்ச்சொல்லோ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா உனக்கு! ஆம் நானும் அப்படித்தான் நினைத்து, கோலாலம்பூர் என்பதற்கு 'அழகு பொருந்திய ஊர், என்று பொருள் சொன்னேன். பிறகு மற்றவர்கள் விளக்கினார்கள். 'கோலா' என்பது மலாய் மொழியில் ஆறுகள் கூடுமிடத்தைக் குறிக்கும் இடம் என்றார்கள். நம் நாட்டில் இரண்டாறுகள் கூடுவதை முக்கூடல் என்று வழங்கிச் சிறந்த இடமாக அவற்றைப் போற்றுவதைப் போன்றே இங்கும் இரண்டாறுகள் கூடு

மிடத்தை முக்கூடல் என்ற பொருளிலே வழங்கி, கோல என்ற மொழியோடு கூட்டிப் பேசுகிருர்கள். கோலாலம்பூர், கோலக் கிள்ளன், கோலக்கஞ்சார் என்ற ஊர்கள் உனக்கு இவற்றை விளக்கவில்லையா! கோலக்கஞ்சார் பக்கத்தே ஒரு பேராறு இருக்கிறது. கடலிலிருந்து 20 கல் தொலைவிலிருந்தும் அந்த ஆற்றில் கப்பல் போக்குவருத்து உண்டாம். ஆற்றில் வெள்ளம் பெருகின் ஊர் நீர்க்குள் ஆழுமாம். சென்ற ஆண்டு அந்த நிலையில் மக்கள் இருந்தார்களாம். ஊரின் பல பகுதிகளையும் பார்த்தோம் ஒரு மாணவர், தமிழ் நாட்டவர்தான், இவற்றை எல்லாம் விளக்கிக் காட்டினர். பிறகு அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு மேல் சென்று 'தைப்பிங்' வந்து சேர்ந்தோம். அங்கே அரசாங்கப் பொருட்காட்சிச் சாலையைப் பார்க்கவேண்டி யுள்ளதால் அங்கேயே பகல் உணவு கொண்டு, பிறகு பினங்கு செல்ல முடிவு செய்தோம். உடனே 'போன்' மூலம் பினங்குக்குத் தகவல் தெரிவித்து விட்டோம். இன்னும் 56 கல் பினங்குக்கு இருக்கிறது. இந்த நாட்டில் சிங்கப்பூர் தொடங்கிப் பினங்கு வரையிலே 'போன் (Phone) மூலம் பேச எல்லா வசதிகளும் செய்திருக்கிருர்கள். கட்டணமும் குறைவு. நாம் சென்னையில் சாதாரணமாகப் போன் உபயோகிப்பது போன்று இங்குள்ளவர்கள் எல்லா இடங்களுங்கும் உபயோகிக்கிருர்கள். மலாய்நாட்டில் எப்பகுதியில் இருப்பினும் பிற பகுதியாரோடு எந்த நேரத்திலும், குறைந்த கட்டணத்தில் பேசக்கூடிய வசதி இருப்பது போற்றத் தக்கது. கட்டணம் நம் நாட்டுக் கட்டணத்தில் பாதி கூட இருக்காது.

கலைவிளக்கும் கண்காட்சி

தைப்பிங் ஊரைச்சுற்றிப் பார்ப்பதற்குமுன் அந்த ஊர்க் காட்சிச் சாலைக்குச் சென்ருேம். இத்தகைய காட்சிச் சாலையை மலாய் நாட்டில் நான் இன்று வரை கண்டதே இல்லை. வேறு எங்கும் இல்லை என்று அவர்களே சொல்லி விட்டார்கள். •கோலாலம்பூரில் ஒன்று இருந்ததாகவும் அது போர்க் காலத்தில் அழிவுற்றதென்றும் உரைத்தார்கள். முதலில் இந்த நாட்டு மூலப் பொருள்களாகிய ரப்பர், ஈயம் இவற்றின் வேறுபாடுகளைக் காட்டும் பல பொருள்

களைக் கண்டோம். மலாய் நாட்டில் நெற்பயிர் அதிகம் கிடையாது என்று எழுதினேன் அல்லவா! ஆனால் இங்கு காட்சிச் சாலையில் வைத்திருக்கும் பலவகை நெல்மணி களைக் கண்டு திகைத்தே போனேன். அவை எல்லாம் அந் நாட்டில் பயிரிடுகின்ற நெற்கள் தானும். ஆனால் நம் நாட் டிலே காணும் வெண்மையான நெல் இல்லை. குறைந் தது இருபத்தைந்து வகையாவது இருக்கும். அத்தனையும் சிகப்பு நெற்களே! ஆனால், அரிசி வெண்மையாக இருக் குமாம். மிகச்சிறியதும், பெரியதுமாகப் பல நெல் வகை கள் இருந்தன. பிறகு உள்சென்று இன்னும் பல பொருள் களைக் கண்டோம். பலவகைப்பட்ட நிலப் பொருள்கள் வைக்கப் பட்டிருந்தன. நாட்டுப் பழமையைக் காட்டும் பல பொருள்கள் ஒரு அறையில் வைக்கப்பட்டிருந்தன. அவற் றுள் ஒன்று அங்கு 'சங்கிச்'சியில் நான் குறித்த அந்தப் பித்தளைச் சிலை. அந்தச் சிலையின் அருகில் சென்று உற்று நோக்கினேன். ஏழு கைகள் இருந்தன. ஒன்று ஒடிந்திருந் தது. எனவே எண்தோள் முக்கண் எம்மானாகவே அவ்வுரு வம் காட்சி அளித்தது. ஒரு கை வரதம், மற்றொரு கை ஒடிந்தது அபயமாக இருக்கலாம். இந்த உருவில் தலையில் சடையும், சடையுள் கங்கையும் நன்கு தெரிந்தன. அத் துடன் இடுப்பில் புலித்தோலாடை நன்கு தெரிந்தது. புலித் தோலாடையை விளக்க, புலி முகம் ஒரு தொடைப் பக்கத்தே நன்கு பொறிக்கப் பட்டிருந்தது. கையேந்திய படைகள் சற்று மாறிக் காணப்பட்டன. எனினும் அந்த உருவம் சிவ உருவமே என முடிவு செய்து விட்டேன். பௌத்த உருவம் என்று காட்டப் போதிய சான்றுகள் கிடையா. சிறந்த சிவ வடிவந்தான் அது. இதை நினைக்கும் போது நம் நாட்டில் ஏன் இது போன்றெல்லாம் பழமை யைப் போற்றக்கூடாதுஎன்று எண்ணுகிறாயல்லவா? போற் றுகிறார்கள். நம் சென்னையிலே உள்ள கண் காட்சிச்சாலை யில் எத்தனையோ பழைய பொருள்கள் போற்றப்படுகின் றன. பல பழைய உருவங்கள் அங்கு உள்ளனவே. தற் போது அப்பழமையைக் கண்டுபிடித்து உலகுக்குக் காட்ட வேண்டியே ஒரு தனி இலாக்கா இருப்பதை நீ அறிவாயா? பழைமையைக் கண்டெடுத்த அந்தி முறையிலேதான் திராவிடரின் தொன்மை, ஹாரப்பா, மோஹன்ஜோதாரா என்ற சிந்து நதிக்கரையின் நாகரிகத்தால் விளக்கப்

பட்டுள்ளது. அது மட்டு மன்றி இன்றைய நம் உரிமை நாட்டு அரசாங்கத்தார் நம் பழம் பெருமைகளை விளக்க புதை பொருள் ஆராய்ச்சியை வளர்த்து வருகிறார்கள். அடுத்து அந் நாட்டுப் பல மிருகங்கள், பறவைகள், மீன் கள், பாம்புகள் முதலியவற்றின் இறந்த உடல்கள் பாது காக்கப் பட்டிருப்பதைக் கண்டோம்.

பிறகு மற்றொரு அறையிலே நுழைந்தோம். அங்கே இந் நாட்டுப் பழங் குடிகள் வாழ்க்கையை விளக்கிக் காட்டுவது போன்று அவர்கள் வாழ்வில் தேவைப் பட்ட அத்தனைப் பொருள்களையும் ஒருங்கே வைத்திருந்தார்கள். அவர்கள் காட்டுமிராண்டிகளைப் போல் வாழ்ந்தவர்கள். இன்றும் அத் தகைய இனத்தார் காடுகளில் வாழ்கின்றார்களாம். நாட்டு மக்களைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்வார்களாம். அவர் கற்கால மனிதர்களைப் போலவே வாழ்கிறார்கள் எனலாம். அவர்கள் குடிசைகளின் மாதிரிகள் கண்டோம், அவர்கள் உடை இடுப்பில் தொங்கும் மரப்பட்டை ஒன்றுதான். அவர்கள் ஆபரணங்கள் கொடிகளை அழகாகப் பின்னிய பின்னல்கள். அவர்கள் பாண்டங்கள் வெறும் மட் கலயங் கள் தான். அவர்கள் வில்லும் அம்பும் வைத்திருப்பவர் கள். அவர்கள் ஒரு விஷக்காற்றை ஊதித் தூரத்திலே செல்லும் விலங்கைக் கூடக் கொன்று விடுவார்களாம். அம்பின் முனையிலே விஷத்தை வைத்திருப்பார்களாம். இப்படி வாழும் அவர்கள் மனிதர்களுக்கு யாதொரு தீங் கும் செய்வதில்லையாம். தற்போது சிறிது சிறிதாக அவர் கள் தெளிவடைந்து வருகிறார்களாம். ஆண்களும் பெண் களும், ஒருசிலர், இடுப்பில் மட்டும் லுங்கி அணிந்து கொள் வார்களாம். என்றாலும் பெரும்பாலராகக் காட்டில் வாழ் பவர் இன்னும் பழமையைப் போற்றிப் பாதுகாக்கின்றார் களாம். அவர் தம் வாழ்க்கையை விளக்க எத்தனையோ படங்கள், பொருள்கள் இருந்தன. அவற்றை எல்லாம் எழுத இடமில்லை. நேரில் கண்டால்தான் விளங்கும்.

ஒரு புறத்தே பழங்காலத்தே இந்நாட்டில் இருந்த கைத்தொழிலுக்கு உரிய பொருள்களும், உழவுக்குரிய பொருள்களும் வைத்திருந்தனர். இன்று நாட்டிலே நெசவு இல்லை என்றாலும், நெசவுத் தொழில் நாட்டில் நடந்த தென்று அறியத் தக்க பல காட்சிகள் இருந்தன. உழவுத் தொழிலுக்குக் கொண்டுள்ள கலப்பை, மண் வெட்டி முத

லிய பல பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு சில நம் நாட்டுப் பொருள்களிலும் வேறுபட்டு இருந்தன. ஒரு புறத்தே பழங்கால நாணயங்கள் குவிக்கப்பட்டிருந்தன. இன்று நம் நாட்டிலே காணப்படும் 'பொத்தல் காலணு' வைப்போன்ற நாணயம் ஒருசுல்தானின் மலேயா பகுதியில் வழக்கத்தில் இருந்தது ஆங்கிலேயர் நாணயங்களும், காகிதப் பணங்களும் இருந்தன. இடைக்காலத்தில் ஜப்பான் மக்கள் வழங்கிய ஊர் பேர் இல்லாத 'நோட்டுக்கள்' பல இருந்தன. இன்னும் பலவகைப் பொருள்கள் அங்கு வைக்கப் பட்டிருந்தன. மேலே ஒரு அறை பூட்டப்பட்டிருந்தது. எங்கள் விருப்பப்படி அங்குள்ள காவற்காரரால் அறை திறக்கப் பட்டது. உள்சென்று பார்த்தோம்.

உள்ளே அரசர்களுக்கு உரிய உயரிய ஆடை ஆபரணங்களும் தங்க வெள்ளி நகைகளும், உயர்ந்த பாத்திரங்களும், நாணயங்களும் பட்டுப் பீதாம்பரங்களும், பிறவும் வைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொன்ருகப் பார்த்தோம். அரசர்களுக்கு உரிய முத்திரை பொறிக்கும் கருவிகளும், ரப்பர் முத்திரைகளும் (Rubber stamps) இருந்தன. கடைசியாகஇருந்த அரசர் தம் முத்திரையும் இருந்தது. மற்றும் பல்வேறு பொம்மலாட்டப் படங்களும் அங்கு வைக்கப்பட்டிருந்தன பொம்மலாட்டம் என்ருல் உனக்குத் தெரியாது. படக்காட்சிகள் நாட்டில் நன்கு பரவுவதற்குமுன் சிலர் பொம்மலாட்டம் காட்டிக் கொண்டிருந்தார்கள். நான் கூட நன்ருகப் பார்த்தது கிடையாது. அட்டைகளாலோ, தோலாலோ பொம்மைகள் செய்து அவற்றின் உறுப்புகளைக்கயிறுகளால் பிணைத்துத் திரையிட்டு ஆட்டுவது. அத்தகைய பொம்மைகள் இங்கு வித விதமாக இருந்தன. ஜாவாநாட்டு ஆட்டம், சீன நாட்டு ஆட்டம், சுல்தான் ஆட்டம் என்று பல பிரிவுகள் இருந்தன. ஒருவேளை பொழுது போக்குக்காக இவைகள் அரசர்களுக்குப் பயன் பட்டன போலும். இல்லாவிட்டால் அரசர்க்கு உரிய பொருள்கள் அடங்கிய அந்த அறையில் இந்தப் பொருள்கள் இருக்கத் தேவை இல்லையே.

குழந்தாய் ! அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே பல நாள் இருக்கலாம். பெரிதாக இல்லாவிட்டாலும்

பழமையைப் போற்றும் வகையில் அவைகள் அமைந் திருக்கின்றன. எனினும் இன்னும் நான்கு மணிநேரத்தில் நெடுந்தூரம் செல்லவேண்டி இருந்ததால் உடன் திரும் பினோம். திரும்பும் போது நகரின் பல பகுதிகளையும் கண்டு கொண்டோம். நகர நீர்த்தேக்கம்-குடி தண்ணீர்த் தேக்கம் முதலிய பலவற்றையும் கண்டு கொண்டு வீட் டுக்கு வந்தோம். வந்து உணவு கொண்டு, புறப்படத் தயாரானோம். அதற்கு முன் தான் உனது முந்திய கடி தத்தை எழுதி முடித்துத் தபாலுக்கு அனுப்பினேன். மணி இரண்டாயிற்று. பினங்கு இன்னும் 56 கல் இடையில் கடல் கடக்க வேண்டும். கார் விரைந்து புறப் பட்டது.

பினங்கு சேர்ந்தோம்:

வழி நெடுக நல்ல மழை பெய்தது. காரின் கதவுகளை நன்கு தாளிட்டுக் கொண்டோம். மூடிவிட்டோம். பெரு மழை. இத்தகைய மழை இங்கு மிக எளிது. மாலை 4 மணிக்கு பினங்கின் எதிர்கரை வந்து சேர்ந்தோம். குழந் தாய்! பினங்கு, சிங்கப்பூர் இரண்டும் தனித் தீவுகள். மலேயா பெருநிலப் பகுதி தனி. சிங்கப்பூருக்கும் பெரு நிலத்திற்கும் இடையில் கடல் பகுதி குறைவே. ஆகவே அதைத் தூர்த்து நல்லபாதையும், ரயில் வசதியும் அமைத்து விட்டார்கள். ஆனால் பினங்குக்கும், பெரு நிலப் பகுதிக்கும் இடையில் மூன்றுகல் தொலைவு. ஆகவே இடையில் கப்பலில்தான் ஏறிச் செல்லவேண்டி இருந் தது. சிங்கப்பூரினைப்போன்று பெரிதாக இல்லாவிட்டாலும் பினங்குத் துறைமுகத்தில் பல கப்பல்கள் நின்று கிடந் தன. நான் அங்கு புறப்பட்டு வந்த கப்பல் சரியாக வந் திருக்குமானல் பினங்கில் நின்றிருக்கும். நான் இங் கிருந்துதான் சொற்பொழிவைத் தொடங்கி இருப்பேன். ஆனல் அது பழுதுபார்க்கச் சென்ற தொன்ருகையால் நேரே சிங்கப்பூர் சேர்ந்து விட்டது. பினங்கின் மறுகரை யில் இருந்து மக்களும், கார் முதலியனவும் செய்வதற்குக் கப்பல் வசதி இருந்தது 4-20 க்குப் பினங்குக் கரை சேர்ந் தோம். கப்பல் மிக விரைவில் வந்தது. ரயிலில் வருபவர் களும் இந்தத்துறையில் இறங்கி மாறித்தான் ஆகவேண் டும். இறங்கி மறுபடியும்காரில் ஏறிக் கொண்டு உரிய

வீட்டுக்குச் சென்றோம். அவர்கள் நேரமாகிவிடவே ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிறகு சிற்றுண்டி கொண்டோம். நெடுந் தொலைவு வந்த இளைப்பு நீங்க நன்கு தூய தண்ணீரில் மூழ்கினேன். பிறகு 6 மணிக்குக் கூட்டம். இந்து சபாவில் 'திருவள்ளுவர் விழா'. உரிய வேளையில் சென்றேன். வள்ளுவன் புகழை வாயாரப் பேசினன். இடை இடையே மாணவர்களால் பாடப்பட்ட இனிய பாடல்களைக் குறிப்பிடாதிருக்க முடியவில்லை. கூட்ட முடிவுக்குப் பின் வீடு சென்று உணவு கொண்டோம். இன்று புதிது புதிதாக மூன்று வகையான பழங்களைத் தின்றேன். பிஞங்குத் தீவில் பலவகைப் பழங்கள் விளைகின்றனவாம். அவற்றின் பேர் கூட எனக்குத் தெரியவில்லை.

பழங்கள் நம் நாட்டினை விட இந்நாட்டில் அதிகம். பழமில்லாது ஒருவேளை கூட நான் உணவு கொள்ளவில்லை. எல்லா ஊரிலும் பழக் கடைகள் மிக மிக அதிகமாக இருப்பதைக் கண்டேன். பழ உணவை மக்கள் மிகச் சாதாரணமாக உபயோகித்தார்கள். அதிலும் இப் பிஞங்கில் தான் பழங்கள் மிக அதிகம். பிஞங்குத் தீவைச் சுற்றிலும் உள்ள சிறு சிறு காடுகளில் இப் பழங்கள் அதிகமாகப் பயிரிடுகிறார்களாம். சில பழங்களின் பெயர்கூட எனக்குப் புரியவில்லை 'டெரியான்' 'மங்குஸ்தான்' 'ரங்குஸ்தான்' என்று எத்தனையோ பெயர்கள். பெயர் புரியவில்லையே ஒழிய பழங்சள் நன்கு புரிந்தன. உண்டேன். என்றாலும் 'டொரியான்' பழத்தின் மணம் அவ்வளவு நன்றாக இல்லை. எனவே அதை அதிக விருப்பமாகவும் நான் உண்ணவில்லை. எனினும் பொதுவாகப் பழங்கள் விரும்பக் கூடியனவாக அமைந்தன. பழங்கள் நன்றாக இருந்தன. ஆனால் அவை நெடுநாளைக்கு இருக்காதாம். இருக்கக் கூடுமானால் உனக்குக் கொண்டுவருகிறேன். நாளையும் மறுநாளும் பிஞங்கில்தான் இருப்பேன். இரவு 10- க்குப் படுக்கச் சென்றேன்.

கடிதம் 16.

பினங்கு
15—6—48

அன்பின் செல்வி!

பினங்கில் முதல் நாள் நிகழ்ச்சியைப் பற்றி முன் கடிதத்தில் குறித்திருந்தேன். ஞாயிற்றுக்கிழமை அவ்வளவாக வெளியில் வேலைகள் வைத்துக்கொள்ளவில்லை. காலைச் சிற்றுண்டி கொண்டு, சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். பிறகு 11 மணிக்கு இராம கிருஷ்ண மாணவர் இல்லத்தில் ஒரு சிறு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர். ஆகவே அங்கு சென்றோம்.

ஏழை மாணவர் விடுதி:

குழந்தாய்! இல்லத்தில் 180 மாணவ மாணவிகள் இருக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் பெற்றோர் அற்றவர்தான். அத்தனை பேரையும் வைத்து இருக்க இடம், உடுக்க உடை, உணவு, கல்வி எல்லாவற்றையும் அவர்கள் வருத்தம் அறியா வகையில் அளித்து வளர்க்கிறார்கள். நம் நாட்டில் அனாதைப் பிள்ளைகள் மிகுதியாக உளர். அவர்களைப் போற்றி வளர்க்கப் பெரு இல்லங்கள் ஏது? வாலாஜாபாத் வள்ளலார் இல்லத்தை நீ அறிவாய். அது ஒன்றுதானே உண்மையில் ஏழை மாணவர் கல்வித்துறையில் கருத்திருத்துகிறது.

இங்கு இந்த விடுதியானது முதலற்றது, இருக்கும் இடம மட்டும் சொந்தமானது. அரசாங்கத்தார் ஒரு மாணவருக்கு 5 வெள்ளி (ரூ. 7 - 8 - 0) வீதம் பணம் தருகிறார்கள். பொதுமக்கள் சிறு நன்கொடை தருவார்களாம். இந்த இல்லம் ஒரு குழுவினால் பாதுகாக்கப் படுகிறது. அந்தக் குழுவார் குழந்தைகள் நலனைக் கவனித்துக் கொள்வார்கள். பள்ளி ஆசிரியர்கள் பாடங்களைக் கவனித்துக்கொள்வார்கள். குழந்தைகள் எல்லாம் ஆதரவு அற்றவர்கள். ஆதலினாலே, அவர்கள் ஆண்டுமுழுவதும் இங்கேயே இருப்பார்கள். குழந்தைகளுக்குக் காலையில் தோசை, இட்டலி முதலிய பலகாரம் அன்றாடம் உண்டு. பகலும், இரவும் உணவு உண்டு. பிறவசதிகள் உண்டு.

விடுதியை நன்கு சுற்றிப்பார்த்து விட்டோம். வழி பாட்டுக் கூடத்தே வேறுபாடு இன்றி எல்லாச் சமயப் படங்களும் மாட்டப்பெற்றிருந்தன. குழந்தைகள் - இளங் குழந்தைகள் - நடந்துக்கொண்ட முறை தனிப்பட்டது. அவர்களுக்குச் சாதி இன்னதென்று தெரியாது. சமய வேறுபாடும் அறியாவகையில் எல்லாச் சமயங்களும் நல்ல சமயங்களே என்ற அறிவுரையே அளிக்கப் பெரு கின்றது' வழிபாட்டிடத்தில் எல்லாச் சமயத்தலைவர்களும் காட்சி அளிக்கின்றனர். ஆகவே அவர்கள் உள்ளத்தில் எந்த வேறுபாடுதான் ஏன் முளைக்கப்போகிறது? உள்ளத் தே வேற்றுமை உணர்வு தோன்ரு வகையிலே அவர்களை நடத்துகிருர்கள். இல்லத்தைப்பார்த்துவிட்டு, கூட்டத் திற்குச் சென்ருேம். கூட்டத்தில் பல ஊர் மக்களும் வந்திருந்தனர். மாணவ மாணவிகள் ஏறத்தாழ ஒரே மாதிரி உடை உடுத்து இருந்தனர். மாணவருக்கு உடை வகையில் இந்திய அரசாங்கம் உதவி அளித்து வருகிறது. அன்று கூட இந்திய அரசாங்கப் பிரதிநிதி யாக இங்கு இருப்பவர் மாணவர்களுக்கு வழங்கத் துணி கள் கொண்டுவந்திருந்தார். எங்கள் முன்னே கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். நாங்கள் கூட்டம் முடிய நேர மாகி விட்டதால் அவரையே கொடுக்கச் சொல்லிவிட்டு, அவற்றைப் பார்த்து விட்டு வந்து விட்டோம்!

செல்வி! இந்திய அரசாங்கத்தார் இங்குள்ள இந்திய மக்களைக் கவனிப்பதற்காகப் பினங்கு, கோலாலம்பூர், சிங் கப்பூர் ஆகிய ஊர்களில் நலம் பேணும் அலுவலாளர்களை (welfare officers) நியமித்திருக்கிருர்கள். அவர்கள் இந்தியர் நலன்களை உண்மையிலேயே கவனிக்கிருர்கள். இங்கு திரு. கோபால் என்பவர் ஒருவர் இருக்கிருர். அவர் இங்குள்ள இந்தியரையும், கப்பலில் வந்து போகும் இந் தியரையும் நன்கு கவனித்து ஆவன செய்கிருர். அவர் தான் இந்தக் குழந்தைகளுக்குத் துணி கொண்டுவந்தார். இவர் சுற்றியுள்ள பிற ஏழை இந்தியர் நலன்களையும் கவனிக்கிருர். இவரைப்போன்றே மேற் கூறியபடி பெரிய இடங்களிலும் நல்லவர் இருந்து இந்தியர் நலனைப் பாது காக்கின்றனர். இந்தியரிலும் பெரும்பாலும் தமிழராகவே உள்ளவர்கள் ஆதலின் இவர்களைத் தமிழ் அறிந்தவர்களா கவே அமைக்கிருர்கள்.

விடுதியை விட்டு விருந்தளித்தவர் வீட்டுக்குச் சென்றோம். விருந்துண்டோம். இங்கு, விருந்து என்றால் ஒரு வீட்டில் நடந்தது என எண்ணவேண்டாம். பினங்கு இந்து சபாவில்தான் இரண்டு நாள் கூட்டமும். அந்த இந்து சபா உறுப்பினர்தான் விருந்துக்குச் சபாவிலேயே ஏற்பாடு செய்திருந்தார்கள். பல உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். அறிந்தேன். பிறகு உணவு கொண்டோம். பகலில் சற்று ஓய்வு; பிறகு மறுபடி 5 மணிக்கே கூட்டம். கூட்டத்திற்குச் சென்றோம். இன்று 'தமிழும் சமயமும்' என்னும் பொருள்பற்றிப் பேசினேன். அந்தக் கூட்ட முடிவில் மறுநாள் தொழிலாளர் இடையில் ஒரு பொதுக் கூட்டம் உண்டென்றும் அதில் பேசவேண்டும் என்றும் விழைந்தார்கள். தொழிலார்களைக் காணவேண்டும் என்று விரும்பிய என் உள்ளம் மகிழ்ந்தது. இசைந்தேன். குழந்தாய்! தொழிலாளர்தானே நாட்டின் உயிர். ஆகவே அவர்களைக் கண்டு பேசிவிட்டுப் போதல்தானே உண்மையில் நாட்டைக் கண்டதாகும். ஆடம்பர நகரச் செல்வர்களைக் கண்டு, அவர்கள் இட்ட பெருணவினை உண்டு, உல்லாசமாக உலவிவிட்டுச் சென்றால் நாட்டைக்காணமுடியாதே! மூலைமுடுக்குகளில்-குடிசைகளில் வாழும் ஏழைத்தொழிலாளர்களைக் கண்டால் தான் நாட்டு நிலை தெரியும். ஆகவே இணங்கினேன். துறைமுகத் தொழிலாளரும், பிற நகரத்தொழிலாளர்கள் கூடும் கூட்டம் அது. ரப்பர் தோட்டத் தொழிலாளர் அங்கு இல்லை, பினங்கில் ரப்பர் தோட்டம் அதிகமாக இல்லையாதலால். கூட்ட முடிவிற்குப்பின் ஒரு நண்பர் வீட்டில் உணவு கொண்டு படுக்கச் சென்றோம். நேற்றைய நிகழ்ச்சியை இனி எழுதுகின்றேன்?

அரசி! வேறு நாட்கள் கிடையாமையால், நேற்று - திங்கள் - முழுதும் ஓய்வில்லாது பினங்கைச் சுற்றிப் பார்த்தோம். மற்றும் நான் சையாமுக்குச் செல்லவேண்டும் என்று இருந்த பயணமும் நிறுத்தப்பட்டது. சையாம் நம் இந்திய நாட்டு நாகரிகம் நிறைந்தது; மக்களது உடை முதலியன நம்முடையதைப் போன்றதே என்று முன் கடிதத்தில் கூடக்குறித்திருக்கிறேன். ஆனால் சையாம் நாட்டை அவ்வளவு விரைவில் இரண்டு நாளில் பார்த்துவர முடியாதென்றும், இங்கே மலாய் நாட்டிலேயே பார்க்க

வேண்டியன பலவாக உள்ளனவென்றும் ஆகவே மற்ெருரு முறை சையாம் முதலிய நாடுகளுக்குச் செல்லலாம் என்றும் அனைவரும் ஒரு முகமாகக் கூறினார்கள். சையாம் பயணம் நின்றது. இந்தப் பயணம் நிறுத்தம் பெற்றும் இன்னும் பல ஊர்களுக்குச் செல்லவேண்டி இருந்ததால் இன்று ஒருநாளில் பினங்கு வளம்முழுதும் காணப்புறப்பட்டோம். திரு. உ. அரு. அவர்களும், இராமையா என்ற மற்றொரு நண்பரும், பிறரும் இரண்டு கார்களிலே பினங்குத் தீவைச் சுற்றிவரப் புறப் பட்டோம். பினங்கு மிகப் பெரிய தீவுமல்ல - மிகச்சிறிதுமல்ல. தீவின் சுற்றளவு 60 கல் இருக்கும். இடையிடையே சில மலைகளை வகுத்துப் பாதை அமைத்திருந்தனர். அது 45 கல் பாதையாக இருந்தது.

பினங்கைச் சுற்றி:

காலைச் சிற்றுண்டிக்குப்பின், இந்து சபா நடத்திவரும் சரஸ்வதி தமிழ்ப் பாடசாலையைப் பார்க்கச் சென்றோம். அங்கே இருந்த தலைமை ஆசிரியர் நமது திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்தவர். திருக்கழுக்குன்றத்தை நீ மறக்க மாட்டாய் அல்லவா! சென்ற ஆண்டுகூடச் சென்று வந்தாயே! அந்தத் தலைமை ஆசிரியரோடு, வேறு பிற ஆசிரியர்கள் இருந்தார். ஆறும் வகுப்பு வரை இருந்தது. ஆசிரியர்கள் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள். பள்ளிக்கூடம் நன்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. பள்ளியைப் பார்த்த பிறகே தீவைச் சுற்றப் புறபட்டோம். தீவு தெற்கு வடக்கில் சற்று நீண்டிருந்தது. பினங்கு ஊர் இருந்த பகுதி கிளி மூக்கைப்போல் கிழக்கை நோக்கி முன் வந்திருந்தது. வடக்குப்புறமாகச் சுற்றப் புறப்பட்டோம். அங்கே கடலிலே குளிப்பதற்குப் பல இடங்கள் கட்டப்பட்டிருந்தன. கடலை ஒட்டியே பல பெருமாளிகைகள் இருந்தன. அந்த மாளிகைகளில் சில அழகாக அமைந்திருந்தன. ஒரு மாளிகையின் நடுவில் கடல் கொண்டுவரப் பட்டிருந்ததென்றும் வீட்டிலிருந்தே படகில் கடலுக்குச் செல்ல வழி உண்டு என்றும் கூறினார்கள். மீன் பிடிப்பதற்காகக் கடலில் பல ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். அத்துடன் கடலில் குளிப்பதற்காக - பெருமீன்களால் தீங்கு நேராவண்ணம், பல அமைப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. மாலை வேளைகளில் அங்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள் என்றும்

அறிந்தேன். அவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு ஒரு சிறுமலையின்மேல் ஏறினோம். அங்கு ஒரு விடுதி இருந்தது. பல தனி அறைகள், வீடுகள் முறையில் கட்டப்பட்டிருந்தன. வெளியூர் மக்களோ - அன்றி உள்ளூராரோ அங்கு தங்க வசதிகள் மிக உள. அத்துடன் நடுவில் நீந்துவதற்கென்று ஒரு இடம் கட்டப்பட்டிருந்தது. நல்ல நீர் அந்த குளத்தில் விடப்பட்டிருந்தது. அவற்றின் நலம் கண்டு மலையைச் சுற்றக் காரிலேயே புறப்பட்டோம்.

குழந்தாய்! இயற்கை வளங்களைப் பல முறை குறித்துள்ளேன். எனினும் இந்த இயற்கை நலத்தைப் பற்றிச் சொல்லாதிருக்க முடியவில்லை. மலாய் நாட்டுப் பெரு நிலப் பகுதியைப்போல இங்கு ரப்பர் தோட்டங்கள் அதிக மாக இல்லை. எங்கு நோக்கினும் உயர்ந்த தென்னையும். வாழையும், கமுகும் பிற பழமரங்களும் தான். இங்கு பல புதிய பழங்களைக் கண்டேன் என்று நான் முன்னேயே குறித்தேன், அந்தப் பழங்கள் பழுக்கும் மரச் சோலைகள் பலவற்றைப் பார்த்தேன். அவற்றுள் ஒன்று 'டொரியன்' பழம் என்பது. அது சிறு பலாப் பழத்தைப் போன்றது. ஆனால் உடைத்தால் உள்ளே வேறு வகையாக இருக்கும். அதன் நாற்றம் எனக்குப் பிடிக்கவில்லை. பலருக்கும் முதலில் அப்படித்தான் இருக்குமென்றும், பிறகு நன்றாகும் என்றும் சொன்னார்கள். நான் மூன்நாள் அதைச் சுவை பார்த்தேன். பழம் இனிமையாகத்தான் இருந்தது. அந்தப் பழத்தை மரத்தில் ஏறிப் பறிக்க முடியாதாம். அதுவாக விழுந்தால்தான் எடுக்கலாமாம். காரணம் மரத்தைக் கண்டபோது அறிந்தேன். மிக உயர்ந்த மரங்கள் ஏற முடியா வகையில், நம் நாட்டு இலவ மரங்களைப் போன்று இருந்தன. அம்மரங்களில் வலை கட்டிவிடுவார்களாம். பழங்கள் நன்கு கனிந்து அதில் விழுந்தால்தான் பொறுக்கிக்கொள்ள வேண்டுமாம். அந்தப் பழமரங்கள் மட்டுமன்றி வேறு பல பழத் தோட்டங்களைக் கண்டோம் கண்ணுக் கெட்டியதூரம் தென்னஞ் சோலைகள் காட்சியளித்தன. அம்மம்ம! இயற்கைவளம் உண்மையிலே இத்தீவில் வாரிப் பெய்யப் பட்டிருந்தது. கடல் அலைக் கருகிலேயே சில கல் தொலைவு சென்றோம். பிறகு மலைச்சரிவுகளுக்கு இடையில் சென்

ளோம். இடையில் மலை. மலையைச் சுற்றித் தோட்டங்களும் ஊரும். பிறகு கடல். இவ்வளவுதான். மலையின் வளங்களை மெதுவாகச் சென்று கொண்டே கண்டோம். வானளவிய மரங்கள்; இனிய சோலைகள். அங்கங்கே உருண்டோடும் சிற்றருவிகள். அவற்றின் மேலாக அம்மலைகளில் மேகங்கள் கலந்து மலையை மறைத்து, அடிக்கடி சிறுதுளி வீசும் எழில். நாங்கள் மலையைச் சுற்றிவருவதற்குள் நான்கைந்து முறை மழை வந்து நின்றது. பழச்சோலைகளிலும், தென்னஞ் சோலைகளிலும் மக்கள் தனித்தனி குடிசைகள் அமைத்து வாழ்ந்திருந்தார்கள். அவற்றின் விளைவுகளை விலை பேசி வாங்கிச் செல்ல, நகரிலிருந்து சிலர் வருவார்களாம். சிலர் நாங்கள் காணும் போதும் வந்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த மலையில் அடர்ந்தகாடு இருந்தது. எனினும் கொடிய காட்டு விலங்குகள் இடையா. தனித் தீவாதலால்எங்கிருந்தும் வந்து தங்க அவற்றிற்கு வழி இல்லையாம். இயற்கை வளத்தை-மலை நலத்தை பசுஞ் சோலையை - மஞ்சார் கொஞ்சலைக் கண்டு கண்டு மகிழ்ந்தேன். பலப்பல புதுப்பறவைகள் தென்பட்டன; பறந்தன. கண்டேன்.வழியில்சிறு சிறுகுடிசைகள். கடைசியாக ஒரு சிற்றூர் வந்தோம். சிற்றூரில் சிறிது நேரம் தங்கி மேலே சென்றோம். திரும்பிப் பினாங்கு அருகில் வந்து விட்டோம். அங்கேதான் முன் கப்பலில் எழுதிய கடிதத்தில் குறித்த பாம்புக் கோயில் இருந்தது. கோயிலுள் சென்றோம். பல பாம்புகள் இல்லை. பச்சைப் பாம்புகள் இருபதுக் குறையாது விளக்குகளின் மேலும் படங்கள், சுவர்கள், கண்ணாடிகள் மேலும் அசையாது கட்டுண்டவை போல் கிடந்தன. ஒன்று கூட அசையவில்லை. ஏதோ கட்டுப் பாட்டுக்கு அடங்கி உறங்கும் குழந்தைகளை ஒத்தன அவை. ஆகவே அதில் ஒன்றும் வியப்பில்லை என்றேன். ஆனால் உடன் வந்தவர்கள், சில ஆண்டுகளுக்கு முன் நிறையப் பல பாமபுகள் இருந்தன என்றும், அவை அங்கும் இங்கும் நெளிந்து கொண்டு இருந்தன என்றும், ஜப்பான் காலத்தில் கோயிலை யாரும் சரியாகப் பார்க்காததால் அவற்றுள் பெரும்பாலன ஓடி விட்டன என்றும் கூறினார்கள். பிறகு அங்கு ஒரு அடைப்புக்குள் பெரு மலைப்பாம்புகள் இருப்பதைக் கண்டோம். இந்த கோயில் சீனர் வசத்திலிருக்கிறது.

மலை வளம்:

பாம்புக் கோயிலை பார்த்து விட்டு மறுபடியும் கடலோரமே வீடு வந்து சேர்ந்தோம். வேறொருவர் வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்துண்டு சிறிது நேரம் ஓய்வு கொண்டிருந்தோம். மழையும் சிறிதாகப் பெய்து கொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து மறுபடியும் புறப்பட்டோம். கடல் வளம் கண்ட நாங்கள் அனைவரும் மலை வளங்காண புறப்பட்டோம். பினங்கு ஒரு மலையடி வாரத்தில் இருக்கிறது என்றல்லவா எழுதினேன். அந்த மலைக்குக் கொடிமலை என்று பெயர். அந்த மலையின்மேல் கவர்னர் மாளிகையும், பிற மாளிகைகளும் இருக்கின்றனவாம். அது 2,300அடி உயரத்தில் உள்ள இடம். அதைக் கடக்க-உச்சியை அடையத் தண்டவாளம் அமைத்து, ரயில் போன்று வண்டி அமைத்து மின்சாரத்தின் உதவியினால் செல்ல ஏற்பாடுசெய்திருந்தார்கள். இரண்டு வண்டிகள் ஒன்றை ஒன்று பற்றினமின் கயிற்றால் கட்டப்பட்டு, இடையே சக்கரங்களில் அம்மின் கயிறு ஓட வண்டிகள் இரு தண்டவாளங்களில் மேல் செல்ல அமைக்கப்பட்டிருந்தன. நீண்ட வழியானதால் இந்த முறை இருபிரிவாகப் பிரிக்கப்பட்டு அமைந்தது. நாங்கள் அந்த வண்டிகளில்தான் மேலேறிச் சென்றோம். எங்களோடு மூன்று இளஞ் சிறுவர்களும் வந்தனர். இன்று எங்களோடே எல்லாவற்றையும் காட்டிச் சுற்றியவர் ராமய்யா என்பவர். அவருடைய குழந்தைகள் இருவர் என்னுடன் பயணம் செய்த சுப்பையா என்பவன் ஆகிய மூவர். சிறுவர்கள் மலை வளத்தைக் கண்டு கூச்சலிட்டார்கள். வண்டி இரண்டு பெரிய பள்ளங்களைக் கடக்க வேண்டி இருந்தது. இடையில் மலை அருவிகள். மலைமேல் பெரிய உணவு விடுதி இருந்தது அதில் தங்க ஒரு நாளைக்கு 18 வெள்ளியாம். (ரூ 28-) இங்கு பணத்தை அவ்வளவு பெரியதாகக் கருதாத செல்வர்களும், ஆங்கிலேயரும் அதிகமாக வந்து தங்குகின்றனர். எங்கள் வண்டியிலேயும் அவ்விடுதிக்குச் சில ஆங்கிலேயர் வந்தனர்.

மலையில் இறங்கி உயர்ந்த உச்சிக்குச் சென்றோம். நாற்புறமும் நோக்கினோம். பெரும்பாலும் கடல் காணப்பட்டது ஒரு புறம் மலைத்தொடர். சிறிது நேரம் அங்கே சுற்றி

விட்டு ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு நின்று நோக்கினால் பினாங்கு நகரமும் தென்பட்டது. சற்று நேரத்தில் இயற்கையின் ஆடலைக் கண்டோம். எங்கிருந்தோ ஒரு மேகச் சுழல் அதை அப்படியே மூடிக்கொண்டது. ஒன்றும் தெரியவில்லை. நாங்கள் மேகத்திற்கு மேலே மேக நாதர்களாக விளங்கினோம் அந்த மேகங்கள் விரைவில் எங்களைச் சுற்றிப் படர்ந்தன. 100 அடிக்கு அப்பாலுள்ளவர் தெரியாது பனி மூடுவது போன்று மேகம் எங்களை மூடிக் கொண்டது. மேகம் எங்களைக் கடந்து செல்லும் போது, அதன் குளிர்ச்சியை உற்று அறிந்தோம். பிறகு மலையிலிருந்து இறங்கினோம். சிறிது நேரம் மேகம் தாண்டி நின்ற உணர்ச்சி பெற்றோம். கீழ் இறங்கியதும் மலை அடிவாரத்தின் பக்கத்திலுள்ள ஆயிரத்தான்கோயில் என்ற பௌத்த கோயிலுக்குச் சென்றோம்!

ஆயிரத்தான் கோயில் :

செல்வி! பௌத்த சமயம்பற்றி உனக்கு நன்கு தெரியாது. நம் நாட்டில் தோன்றிய பௌத்த மதம் நம் நாட்டில் இன்று இல்லை யென்று சொல்லும்படி அவ்வளவு குறைந்துள்ளது ஆனால் மலேயா தொடங்கிச் சையாம், சீனா, ஜப்பான் முதலிய நாடுகளில் மிகச் சிறந்துளது. நம் இந்தியாவிலும் புத்தகயா இன்னும் பேர் பெற்று விளங்குகிறதே. அரச குடும்பத்திலே பிறந்து அல்லல்வாழ்வை அறியாது வாழ்ந்து, மணவாழ்வினையும் மேற்கொண்டு மகிழ்ந்த மன்னர் சித்தார்த்தர், மக்கள் படும் துன்பத்திற்குக் காரணம் காண வேண்டியும், அத்துன்பத்தை நீக்க வழிகாண விழைந்தும் அனைத்தையும் விட்டு, காடு சென்று துறவியாகி புத்த மதத்தைக் கண்டார். மக்கள் படும் துன்பத்திற்குத் தான் வருந்தி அறம் வகுத்தார். அந்த அறத்தின் வழி பௌத்தமதம் இலங்குகிறது. நம் நாட்டில் பௌத்த மதம் நன்கு கால் கொள்ளாவிடினும், இன்றைய சுதந்திர அரசியலார் அப் புத்தன் வழியை உலகுக்குக் காட்டிய அசோகனது அற ஆழியைத் தம் கொடியில் பொறித்துள்ளதை நீ அறிவாய். இனி, புத்த மதக் கொள்கை வளர வழியுண்டு. புத்தர் பிறந்த நாளை அவர்கள் விடுமுறை நாளாக்கப் போகிறார்கள். அப்புத்தர் வழிபாட்டுக் கோயில்களில் மிகப் பெரிய

தாம் இங்குள்ள ஆயிரத்தான் கோயில். 'ஆயிரத்தம்' என்ருல் கருப்பு நீர் என்று பொருளாம். அருகிலே ஒரு அருவி ஓடுகிறது. ஒருவேளை அதில் கருப்பு நீர் ஓடிக் கொண்டிருந்திருக்குமோ என எண்ணினேன். உலகம் உய்ய அன்பு நெறி காட்டிய அரியவருள் ஒருவராகிய புத்தர் தம் பெருங் கோயிலைக் காண்பதில் உண்மையிலே மகிழ்ந்தேன்.

கோயில் ஒரு உயர்ந்த மலையின் பக்கத்தின் அமைக்கப்பட்டிருந்தது. போகப் போக உயரமாகச் சென்றது. பல புத்தர்சிலைகளைப் சிறியதும் பெரியதுமாகப் பல விடங்களில் அமைத்திருந்தார்கள். மலை ஏறிச் செல்வதன் முன் இரண்டு சிறு, குளங்கள் கண்டோம். ஒன்றை ஆமைக் கிணறு என்றும்,மற்ருென்றை மீன் கிணறு என்றும் கூறிஞர்கள். ஆமைக்கிணற்றைக் கண்டு அப்படியே நின்றுவிட்டேன். சிறியதும் பெரியது மாக சுமார் 500 ஆமைகள் 50 அடி சுற்றளவுள்ள ஒரு பள்ளத்தில் இருக்கிறதென்ருல் அதைக் கண்டு யார்தான் வியவார். சில பெரிய ஆமைகள் பார்க்கப் பயமாகக் கூட இருந்தன. பக்கத்தில் இருந்த மீன் குளத்தில் அவ்வளவு பெரிய மீன்கள் இல்லை. ஆமைகள் அருந்துவதற்குப் பக்கத்தில் ஒருவன் சில பொருள்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தான் அவற்றைப் பலர் வாங்கியிட, இட்டதை, உண்ணப் போட்டி போட்டுக்கொண்டு அவை ஒன்றன் மேல் ஒன்று ஏறி ஒன்று கூடிய காட்சி நன்ருக இருந்தது. மலை மேல் ஏறினேம். அந்தக் கோயில் மூலத்தானத்தில் செதுக்கிய சிலை மலைச் சுவரில் ஒட்டி இருந்தது. நாம் சில மாதங்களுக்கு முன் திருப்பரங் குன்றத்தில் பார்த்த முருகன் உருவம் உனக்கு நினைப்புக்கு வருகிறதா? அது அம்மலையிலேயே அமைந்தது போலவே இவ்வுருவமும் அமைந்திருந்தது. அத்துடன் மிகப் பெரிய பெரிய புத்தச் சிலைகளும், வேறு பல சிலைகளும் இருந்தன. கோயிலின் மற்றொரு புறத்தே உயர்ந்த பகுதியில் மற்ரொரு புத்தச் சிலை பொலிவுடன்விளங்கிற்று. அதன் மேல் ஒன்பது நிலைக் கோபுரம் இருந்தது. ஒவ்வொரு நிலையாக ஏறிச் சென்ரேம். ஒவ்வொன்றிலும் பல புத்தர் சிலைகளும் புத்தரது வாழ்வை விளக்கும் வரலாறுகளும் இருந்தன. எல்லாச் சிலைகளும் பளிங்கிஞலும்,சலவைக்கற்களாலும் ஆகியவை.

உச்சி வரையில் சென்று மறுபடியும் பினங்கு ஊரை நோக்கினோம் பிறகு பொழுது சாயவே விரைந்து இறங்கி வீட்டுக்கு வந்தோம். வரும் வழியில் இவ்வூர்ப் பெரு மருந்தகம் இருந்தது. அதில் பணி யாற்றும் ஏகப்பா என்பவர் எங்களை வீட்டுக்கு மாலைச் சிற்றுண்டிக்காக வரச் சொல்லி இருந்தார். ஆகவே அவர் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டோம். வழியில் உள்ள பூஞ்சோலையையும், சற்று உயரத்தில் உள்ள குடி நீர்த்தேக்கத்தையும், தண்டபாணிக் கோயிலையும் காணத் திரும்பினோம். சோலை அழகாக இருந்தது. மலையை ஒட்டிய சரிவில் சற்று உயரத்தில் குடி நீர்த்தேக்கம் அமைந்திருந்தது. அது மிகத் தூய்மையாகப் பாதுகாக்கப்பட்டது. மலையில் இருந்து வரும் ஆற்று நீரை அணையிட்டுத் தேக்கி அப்படியே அதைத் தூய்மைப்படுத்திப் பிறகு ஊருக்குக் குழாய்களின் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தத் தேக்கத்தின் அகலம் சுமார் 250 அடி. 28 அடி ஆழம் நீர் இருந்தது. இன்னும் நான்கைந்தடி கூட ஏற வழி உண்டு. அத்தேக்கத்தைத் திங்களுக்கு ஒரு முறை துப்புரவு செய்வார்களாம். இது போன்று பினங்கு நகருக்கு நான்கு தேக்கங்கள் உண்டாம். மலையா நீரிலேயே பினங்கு நீரே சிறந்தது என்றும், அதில் மூழ்கினால் நோய் நீங்கும் என்றும் வந்ததும் கூறினார்கள். அதன் காரணத்தை இப்பொழுது அறிந்தேன். மலைமேல் பல மூலிகைகளில் பட்டுப்பட்டு வந்து தேங்கும் நீர் ஏன் நோய்களைப் போக்காது மூலிகை வகையால் எந்த நோயையும் குணப்படுத்தலாம் என்று சொன்னால் ஒரு வேளை நாகரிக உலகம் நகைக்கும். ஆனால் நம் தமிழ் நாட்டில் அந்த முறையைத்தான் அன்று கையாண்டார்கள். இன்று தான் கண்டதற்கெல்லாம் ஆங்கில மருத்துவர் தம் மனை புகுகின்றோமே! பச்சிலையின் பயன் அறியாது நாம் கெட்டோம். இராமலிங்க அடிகளார் அவற்றின் குணங்களை எல்லாம் நன்கு விளக்கிக் காட்டி இருக்கின்றார். ஆனால் தமிழனுக்கு அதைப்பார்க்க நேரம் ஏது? குழந்தாய்! அந்த மூலிகைகளின் பரப்பில் புரண்டு வரும் நீர் பினங்கு மக்களுக்கு நல்வாழ்வை நல்குகிறது.

பூங்கா நலம் கண்டோம். பிறகு பழனியாண்டவர் கோயிலுக்குச் சென்றோம். கோயில் மிகப் பெரிதாக இருந்தது. நகரத்தார்க்கு உரியது அது. அதில் திருவிழாக்

காலங்களில் சோறுக்கி உணவளிக்கச் செய்திருந்த ஏற்பாடு திகைப்பை விளைத்தது. பாத்திரங்களை அடுப்பின் மேலிருந்து எடுக்க முடியா வகையில் அப்படியே வைத்து - சமையல் செய்து, - பின் தூய்மை யாக்கி, திரும்பப் பயன் படுத்துவார்களாம். கோயில் நலமெல்லாம் கண்டு, பிறகு டாக்டர் ஏகப்பா வீட்டிற்குச் சென்றோம். அவரில்லை எனினும் அவர் செய்த ஏற்பாட்டின்படி நாங்கள் சிற்றுண்டி கொண்டு வீடு திரும்பினோம். மாலையில் மூழ்கிவிட்டு 7 மணிக்குக் கூட்டத்திற்குச் சென்றோம்.

தொழிலாளர் இடையில்:

கூட்டம் மாலை 7 மணிக்கு இந்து வேளாளர் சங்கத்தே ஏற்பாடு செய்திருந்தனர். தொழிலாளர்களைக் காணவேண்டும் என்று விரும்பிய எனக்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்ததை முன்னமே எழுதி இருக்கிறேன். இந்த நாட்டில் வாழும் நம் நாட்டுத் தொழிலாளர்களைக் காண 'சாஸ்திரி கமிட்டி' என்று ஒன்று வந்ததாம். அந்தக் குழுவாளர் செல்வர் வாழ் மாளிகைகளில் தங்கி, தோட்ட முதலாளிகள் வீட்டிலும், பிற பெருஞ் செல்வர் வீட்டிலும் இருந்து மகிழ்ந்து அந்த நிலையில் தொழிலாளர் நிலை நன்றாக இருக்கிறது என்று எழுதிவிட்டுச் சென்றார்களாம். சென்னையில் கூடப் பெருந்தெருக்களையும், மயிலை தியாகராயநகர் ஆகியவற்றையும் கண்டு, 'சென்னைச் சிங்காரமே' என்று பாடுவார் இல்லையா! அந்த நிலையில் அந்தக் குழு சென்றது என்று கூறினார்கள். ரப்பர் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி முன் கூறியிருக்கிறேன். இன்று நான் குறிப்பவர் சாதாரணமாகத் துறைமுகத்திலோ - நகராட்சியிலோ வேலை செய்கின்றவர்கள். இவர்கள் நிலையும் ஒன்றும் உயர்ந்ததாக இல்லை. நகர வாழ்க்கை என்ற ஒன்று தவிர மற்றவை எல்லாம் அத் தோட்டத் தொழிலாளர் வாழ்வாகவே அமைந்தன. அந்த எட்டடிக் குடிசைதான்; ஒதுக்கிடந்தான்; ஒரே வரிசைதான், உட்காரும் இடம்தான். அவர்கள் குடிலைக் கண்டேன். பக்கத்திலேயே கூட்டம் அமைத்திருந்தார்கள். பல மக்கள் வீட்டு வாயிலிலேயே உட்கார்ந்துகொண்டு கேட்டார்கள். பலர் எழுப் படிக்கத் தெரியாதவர்கள். தொழிலாளர்களைத் தவிர

ஊர் மக்கள் பிறரும் வந்திருந்தனர். தொழிலாளர் தம் குறையைப் பற்றிச் சற்று அதிகமாகவே கூறிவிட்டேன் 'வேளிரும் தமிழும்' என்று பேசினேன். கூட்டம் முடிந்து திரு. செந்தியப்பன் அவர்கள் வீட்டில் உணவு கொண்டோம். பல நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். பின் இரவு 11-மணிக்குப் படுக்கச் சென்றோம். விரைவில் உறக்கம் வரவில்லை. நாடு எவ்வளவு செல்வ நிலையில் இருந்தும், ஏழைகள் உயர வழி இல்லையே என்பதை எண்ணி எண்ணிச் சிந்தை நெடுந்தூரம் சென்றது. தொழிலாளர் தம் நிலை எண்ணினேன். பொருள் பெற்றும் அவர்கள் குடி முதலியவற்றில் காசை வீணாக்குவதை அறிந்து ஆழ்ந்தேன். அவர் பற்றிய எண்ண அலைகளின் சுழலிலேயே அப்படி என்னை மறந்து உறங்கினேன்.

கருத்துடைச் செல்வி !

இன்று காலை உறக்கம் விட்டு எழுந்தேன். இன்று பேச்சு ஒன்றும் கிடையாது. இன்று மாலையே, கோலக் கஞ்சா செல்லவேண்டும் என்ற ஏற்பாடு. காலைச் சிற்றுண்டிக்குப் பின் பல நண்பர்கள் வந்தார்கள். சிலருடன் கடைப் பக்கம் சென்றேன். பலவித உடைத்துணிகள் என் கண்ணைக் கவர்ந்தன. கூடுமாயின் வரும்போது சில வாங்கி வருகின்றேன். பிறகு ஜோதி அச்சகத்துக்குச் சென்றேன். அதன் உரிமையாளர் திரு, இலக்குமணசாமி அவர்கள் நூல்களைத் தைக்கும் சிறு கருவி ஒன்றை அன்பின் நினைவாக அளித்தார்கள். பிறகு பல கடைகள் கண்டோம். ஒரு கடிகாரம் வாங்கினேன். ஜோதி அச்சகத்தார் உடனிருந்து வாங்கித் தந்தார்கள். விலை 51 வெள்ளி (ரூ 78-0-0) நல்ல கடிகாரம் என்றார்கள்.

கடைகளைப் பார்த்து, பின் 1-மணிக்கு உணவு உண்டேன். பின் 'இந்தியன் பாங்கு ஏஜண்டு' திரு. இராமசாமி அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அவர் மிகச் சீர்திருத்தக்காரர். தனவணிகர்தான். எனினும் கன்னட நாட்டு மகளை மணந்துள்ளார். வீட்டுக்குச் சென்ற பின் அவர் தம் வாழ்க்கைத் துணைவியார் நம் கல்லூரியின் பழைய மாணவி என்று அறிந்தேன். அவர் தம் பழம் பேராசிரியர்களைப் பற்றியெல்லாம் கேட்டார். பின் இந்து சபா செயலாளர் வீடு சென்று அவரிடம் விடை பெற

றோம். அருகே உள்ள 'பினங்கு பௌத்தர் பணிமனை' (Penang Buddist mission) கண்டோம். புத்தர் பேருருவம் காட்சி அளித்தது. வழிபாட்டுக் கூடமும், சொற்பொழிவிடமும் நன்கு இருந்தன. அங்கே ஒரு உயர்ந்த நூல் நிலையம் இருந்தது. அதில் பல உயர்ந்த ஆங்கில நூல்கள் இருந்தன. எல்லா ஆலயங்களும் சீனர் கையில்தான் இருந்தன. இந்த ஆலயத்தே காந்தி அடிகளார் உண்ணாவிரதம் இருந்தபோது அதை நிறுத்த வேண்டியும், கொல்லப் பட்டபோது உயிர் அமைதியுற வேண்டியும் வழிபாடு ஆற்றினார்களாம். ஆலயம் மிகத்தூய்மையாக இருந்தது. புத்தர் வாழ்வைப் படத்தில் தீட்டி ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக மாட்டிவிட்டிருந்தனர். ஆலயம் விட்டு வெளிவரும்போது மணி ஐந்து. ஆகவே நாங்கள் இன்றைய பயணத்தை நிறுத்தி, நாளைக் காலை செல்ல முடிவு செய்தோம் நான் எண்ணெய் தேய்த்துக் கொண்டு ஓய்வு பெற்றேன். நாளை கோலக்கஞ்சார், மறு நாள் ஈபோ. பின் வெள்ளி மாலை கோலாலம்பூர் செல்வோம். அடுத்த கடிதம் கோலாலம்பூரிலிருந்து எழுதுகிறேன். நான் நலமாக இருக்கிறேன்.

கடிதம் 17

தாபா
18—6——48

அன்புடைக் குழந்தாய்.

வந்த வழியே திரும்பினோம்:

முந்திய கடிதம் கிடைத்திருக்குமே! மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து எழுதுகின்றேன். 16-6-48-காலை பினங்கிலிருந்து அனைவரிடமும் சொல்லிக் கொண்டு, சரியாக 9 30-க்குப் புறப்பட்டோம். பினங்கின் எழிலையெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றேன். நான் ஒரு வேளை விரைந்து வர வேண்டி இருப்பின் வான் வழி நேரும். அப்பொழுது மறுபடியும் இப்பயணத்தில் பினங்கைப் பார்க்க முடியாது, அன்றி நேராகச் சென்னை வரும் நம் நாட்டுக்குக் கப்பலாயின் இங்கு வந்துதான் புறப்படும். அப்பொழுது இறங்கிச் சில சாமான்களும் வாங்கி வருவேன்.

16. 6. 48-ல் கோலக்கஞ்சாரில் பேச்சு இருந்தது. பினங்கிலிருந்து அது 90 கல் தொலைவு. காலை 10 மணிக்குக் கடல் கடந்தோம். பினங்குத் தீவை விட்டு மலேயா பெரு நிலத்துக்கு வந்தோம். 'கார்' வேகமாகச் சென்று கொண்டிருந்தது. சாலையின் இருமருங்கும் உள்ள இயற்கை அழகுகளையும், மலை குடும்பங்கள் குடில்களில் வாழ்வதையும் கண்டு கொண்டே சென்றேன். பினங்கு தொடங்கி, தைப்பிங் வரையில் அறுபது கல் தொலைவுக்கு வரிசையாக வீடுகள் இருந்தன. இப்பகுதியில் சிறிது வேளாண்மையும் செய்கிறார்கள், இருபுறங்களிலும் வயல் வெளிகளைக் கண்டேன். பிறகு இந்தப் பகுதியிலும், மேலே உள்ள கிட்டா மாகாணத்திலும் நெல் பயிரிடுவதை அறிந்தேன். இக் கிட்டாவைத்தான் தமிழரசர் பண்டை நாளில் வெற்றிகொண்ட கடாரம் என்று கூறுகிறார்கள். கிட்டா மாகாணத்தே தமிழர் அதிகம் இல்லையாதலாலும் அங்கு காணவேண்டிய வேறு சிறப்புகள் இல்லையாதலாலும் நாங்கள் அங்கு செல்லவில்லை. எங்கும் ரப்பர் தோட்டமும் தென்னஞ் சோலையுமே கண்ட எனக்கு, இந்தப் பயிர்ப் பண்ணைகள் கண்களுக்கு விருந்தாக அமைந்தன. சாலை ஓரத்தில், சாலையைக் கடக்க அமைக்கப்பட்ட குறியீடுகளைக் (sign boards) கண்டோம். நல்ல முறைப்படி ஓட்டிச் செல்லும் வகையில் பலகுறியீடுகள் அமைந்திருந்தன. நல்ல சாலைகள் - அவைகளுக்கேற்ற செல்லும் முறை பற்றிய குறியீட்டுப் பலகைகள் - மற்றவிளக்கங்கள் அனைத்தையும் சிங்கப்பூர் தொடங்கிக் கண்டேனாயினும் இப்பொழுது தான் அது பற்றி எழுத நினைத்தேன். இடையில் போர்க்காலத்தே உடைபட்ட சில பாலங்களைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தனர். பகல் 12 மணிவரை வந்தோம். இதுவரையில் பழுதொன்று மில்லாது சுமார் 1000 கல் வந்த காரின் முன்சக்கரம் ஒரு ஆணியால் பழுதுற்றது. பிறகு காரை நிறுத்தி, அதைமாற்றி அமைத்துக்கொண்டு 12. 30 க்குத் தைப்பிங் வந்தோம்.

தைப்பிங்கில் சிறிது நேரம்தான் தங்கினோம். அது வரையில் மலேயாபடம் வாங்கவேண்டும் என்று எண்ணிய நான் அன்றுதான் அப் படத்தைத் தைப்பிங்கில் வாங்கினேன். படம் மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்தது.

நான் வரும்போது கொண்டு வருவேன். காணலாம். உடன் அங்கிருந்து புறப்பட்டு, 2-15-மணிக்குக் கோலக்கஞ்சார் வந்து சேர்ந்தோம். அங்கு, பிறகுதான் உணவு கொண் டோம். உணவுக்குப் பின் சிறிது நேரம் உறங்கினேன். கூட்டம் 5-மணிக்கு என்று போடப்பட் டிருந்தது. உரிய நேரத்தில் கூட்டத்திற்குச் சென்றோம். தமிழ்ப் பெருமை யைப் பற்றிப் பேசினேன். கூட்டம் முடிந்தபின் பல நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தோம். ஒருவர் நம் காஞ்சிபுரத்தில் பிறந்தவராம், சென்னையில் வளர்ந்தா ராம். இங்குவந்து இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றனவாம். அவர் என்னிடம் நெடுநேரம் அன் போடு பேசிக்கொண்டிருந்தார். காஞ்சிபுரத்திற்குப் பக் கத்து ஊர் என்று கேட்டதும் மிக்க அன்போடு அளவளா வினர். அவர் அங்கே ஒரு சினிமா கொட்டகையின் பொறுப் பாளராக இருக்கின்றாராம். அவரிடம் நெடுநேரம் பேசியபின் வீடு வந்தோம். உணவுண்டோம். அன்றுதான் நம் நாட்டு வானொலி நிலயப் பேச்சைக் கேட்டோம். அதில் செட்டி நாட்டு வள்ளல் ராஜா. சர். இறந்தார் என்ற செய்தி வந் தது. திடுக்கிட்டேன். தமிழ் நாட்டில் பல்கலைக் கழகம் கண்டவரல்லவா அவர். மறைந்த தமிழ் இசையைத் தமிழ் நாட்டுக்குத் தந்தவர் அல்லவா அவர். அவர் உயிர் அமைதி பெறுக என எண்ணினேன். பிறகு பலவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்து அப்படியே உறங்கிவிட்டோம்.

கோலக்கஞ்சாரில் கண்டவை:

செல்வி ! நேற்றுக் காலை கோலக்கஞ்சாரில் உறக்கம் விட்டெழுந்தோம். காலைச் சிற்றுண்டியை விரைவில் முடித்து, அருகில் 20 கல் தொலைவில் உள்ள அம்பாங் அணைக்கட்டைக் காண ஏற்பாடு செய்திருந்தோம். அந்த அணைக்கட்டில் நீரினைத் தேக்கி விட்டு, அதன் வீழ்ச்சியில் மின்சாரம் எடுக்கிறார்களாம். நம் நாட்டிற்கு இது புதி தன்று. பெரிய மேட்டூர் அணை, தெற்கே பாபநாசம் அணை, மைசூர் சிவ சமுத்திர நீர்வீழ்ச்சி இவற்றிலிருந்தும் மின் சாரம் எடுப்பது உனக்குத் தெரியுமே. நானும் அவற் றுள் இரண்டைக் கண்டிருக்கிறேன். மேட்டூர் தேக்கத் தை நோக்க, அம்பாங் அணை மிகச் சிறியது தான். என்றா லும் இந்த அமைப்பைக் காண விழைந்தேன். ஆனால் என்

விழைவு ஈடேற வில்லை. சில நாட்களுக்குள் இந்தப் பக்கத்தில் மூன்று பெருங் கொலைகள் நடந்தன. சீனப் பொது உடைமையாளர்கள் மறைந்து வந்து ரப்பர் தோட்ட முதலாளிகளைக் கொலை செய்வது சில நாட்களாக இங்கு வழக்கமாக இருந்து வருகிறது. அந்தக் கொடுஞ் செயல் இன்று இந்தப் பகுதியில் நடை பெற்றது. மூன்று ஐரோப்பியர்கள் ஒரு சேரக் கொல்லப்பட்டனர். பட்டப் பகலில் அவர் தம் அலுவலகத்தில் சென்று பொருள்களைக் கொண்டு, கட்டிச் சுட்டுக் கொன்றனர். இங்கே இந்தக் கலவரங்கள் நாள் தோறும் வளர்ந்து கொண்டே வருகின்றன. ஆகவே அரசியலார் கட்டாய இராணுவ சட்டத்தை இங்கு வற்புறுத்தினார்கள். பொது மக்கள் எல்லோரும் அரசியலார் நன்கு ஆளுந்திறம் பெறாமையே இதற்குக் காரணம் என்று கூறுகின்றனர். ஒரு ஆங்கிலத் தினத்தாள் 'ஆள் அல்லது வெளியேறு' என்ற தலையங்கத்தில் இனி மலேயா ஆட்சி எவ்வாறு அமையவேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. அதை இன்றைய தமிழ் நேசன் மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தது. அவற்றை யெல்லாம் உடன்கொண்டு வருகிறேன்.

குழந்தாய்! புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டப்படி அம்பாங் அணைக்கட்டு இராணுவ ஆட்சிக்கு உட்பட்டு விட்டதென்றும், அங்கு செல்வது அவ்வளவு எளிதல்ல என்றும் கூறினர். இராணுவ ஆட்சிதான் அவசரச் சட்டத்தால் ஆளும் ஆட்சி. உரிமை நாடுகளிலேயே இந்த இராணுவ ஆட்சி நடைபெறுகிறதே! மலேயாவில் போர்க்காலத்தில் இராணுவ ஆட்சி இருந்ததாம். அன்று வழங்கிய தபாற்றலைகள் இன்னும்வழக்கத்தில் உள்ளனவே. உனக்கு வரும் கடிதத்தின் மேல் ஒட்டி இருக்கும் தபால் தலைகளில் B. M. A. குறித்திருப்பதைக் காண்பாய். அதன் பொருள் British Military Administration என்பதாகும். அஃதாவது ஆங்கில இராணுவ ஆட்சி என்பது. இப்படிபட்ட இராணுவ ஆட்சிகொண்டு ஆள்வதால் ஆளவந்தவர்கள் மக்கள் எண்ணத்தை மடியச்செய்யலாம் என்றே பன்னெடுங்காலமாக எண்ணுகிறார்கள். ஆனால் வரலாறு இந்தக் கோரிக்கையை மறுத்துக் காட்டுகின்றது. இதை உணராது இன்னும் வல்லரசுகள் இராணுவ ஆட்சியையே ஆதாரமாகக் கொள்கின்

றன. அன்பாட்சி - அகிம்சை ஆட்சி உலகில் நலம் பெருக்கும். இல்லாவிட்டால் போர்தான். நிற்க. அம்பாங் பயணத்தை இல்லை என்று முடிவு செய்து விட்டோம். இங்கு கோலக்கஞ்சாரில் உள்ள மன்னராம் சுல்தானின், அரண்மனையைக் காணவேண்டும் என்று விரும்பினேன். ஆகவே அச் சுல்தான் உறவினர் ஒருவரை வரவழைத்தார், எங்களை ஏற்று அங்கு உபசரித்த செட்டியார் - வந்தவரோடு சுல்தான் அரண்மனைக்குச் சென்றேன். சுல்தான் மன்னரின் உடை, ஆபரணம், முத்திரை முதலியவற்றைக் காட்சிச் சாலையில் கண்ட நான் இங்கு மாளிகையில் நேரே சென்று பலவற்றைக் கண்டேன்.

நாடாளும் நல்லவர்:

செல்வி! இந்த மலேயா நாடு ஒன்பது சுல்தான்கள் ஆட்சிக்கு உட்பட்டது அவர்கள் ஆங்கில் 'ரிஜண்டின்' கைப்பிள்ளைகள் மாதிரி இருக்கிறார்கள். எனினும் ஆங்கிலேயர் அங்கு நம் நாட்டை ஆண்ட அந்த முறையில் இங்கு ஆளமுடியாது. சுல்தான் அதிகாரமும் உண்டு. சுல்தானைக் கலந்தே பல வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. உள்ள ஒன்பது சுல்தான்களில் போரக் மாகாண சுல்தான் இங்கு இருக்கின்றவர். இதற்கு முன் இருந்த சுல்தான் சில திங்ககளுக்கு முன்தான் இறந்துவிட்டாராம். அடுத்த சுல்தான் ஆகஸ்ட் 16ல் தான் பட்டம் சூட்டப் பெறுவார். தற்போதும் அவர்தான் ஆளுகின்றாராம். அவசரச் சட்டம் ஒன்று ஆக்குவதற்காக அவர் கோலாலம்பூர் சென்றிருக்கிறாராம். ஆகவே, அவரைக் காணமுடியவில்லை. அரச மாளிகையின் பல விடுதிகளையும் பார்த்தபின், மேல் உச்சிவரையில் ஏறி அதன் நலமறிந்தபின், அரசியைப் பார்க்க விழைந்தேன். மாளிகை ஒரு உயர்ந்த மேட்டில் கட்டப்பட்டிருந்தது. அந்த ஊரில் அடிக்கடி வெள்ளம் வருமாம். வீடுகள் மூழ்குமாம். பிறகு நீர் வடியுமாம். ஆனால் எந்த வெள்ளமும் இந்த மாளிகையை ஒன்றும் செய்யாது. மாளிகையில் ஒவ்வொருபகுதியையும் நன்கு காட்டினார் உடன்வந்திருந்தவர். பிறகு ராணியாரைப் பார்க்க அழைத்தார். அடுத்த பட்டத்துக்கு வரப்

போகும் ராணியார் வந்தார்கள். நான் திடுக்கிட்டேன். அவர்கள் வயது 50-க்கு மேல் இருக்கும். நான் ஒரு வேளை முன் இருந்த சுல்தானின் மனைவியோ என்றேன். உடன்வந்தவர் இல்லை என்றார். பிறகு ராணியார், அவரிடம் எங்களைப்பற்றி எல்லாம் விசாரித்தார். அவருக்கு ஆங்கிலம் தமிழ் இரண்டும் தெரியாத காரணத்தால் நான் நேரில் ஒன்றும் பேச முடியவில்லை. பிறகு எங்கள் வருகையை எல்லாம் அறிந்து சிற்றுண்டி கொள்ளச் சொன்னார். நாங்கள் வேண்டாமென்று மறுக்கவே, குளிர்ந்த பானம் கொடுத்து வழி யனுப்பினார்கள். ஒரு நாட்டுக்கு அரசி, காணவேண்டும் என்ற உடனே வந்து, நலன் வினவியதோடல்லாது விருந்து புரந்த தன்மை, எனக்கு 'காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்' என்ற வள்ளுவன் குறள் நினை வூட்டிற்று. நம் நாட்டில் சிறு செல்வமோ அதிகாரமோ பெற்றவர்கள் காண விழைந்தாலும் முகங்கொடுக்காது நிற்கும் நிலை எண்ணினேன். பிறகு அவரிடம் விடை பெற்றுப் பிரிந்தேன். வரும் வழியில் ராணியார் மிக வயதானவர்களாகக் காண்கிறார்கள். ஆட்சி முறை எப்படி அமைவது என்றேன். ஆளுகின்ற மன்னரின் மூத்தவருக்கேதான் பட்டம் அளிப்பது பெரும்பாலாகக் கொள்ளும் வழக்கம்; ஆனால் இங்கு அப்படி இல்லை. எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் அண்ணனுக்குப் பின் தம்பி என்று ஒவ்வொருவரும் முறையாக ஆள வேண்டுமாம். பிறகு மூத்தவன் மைந்தர், பிறகு அடுத்தவர், இளையவர் மைந்தர்கள் இப்படியே வழி வழியாக எத்தனை பேர் இருந்தாலும் வரவேண்டுமாம். எனவே பட்டத்திற்கு வரும்போது அவர்களுக்கு வயது அதிகமாகிவிடும் என்று அவர் கூறினார். அத்துடன் அவர்கள் மலேயா மண்ணை ஆளும் முறை பற்றியும் அவர்தம் ஆளுகை ஆங்கிலேயரின் கீழ் வந்த வரலாற்றையும் விளக்க உரைத்தார். நான் முன்னமே மலாக்காவைப்பற்றி எழுதும் போது இவை பற்றி எழுதி இருக்கிறேன் அல்லவா! உடன் வந்தவர் அரசியைப் பார்த்தற்கு அறிகுறியாக ஒரு சிறந்த கத்தி ஒன்றை வெகுமதியாகக் கொடுக்க வேண்டுமென்று முயன்றார். நான் உடனே ஈப்போ செல்ல வேண்டி இருந்ததால்,

பிறகு வாய்ப்பு நேருமேல் பெற்றுக் கொள்ளுகிறேன் என்று விடை பெற்றுக்கொண்டேன். பின்னர் அனைவரும் நேராகச் 'சங்கச்சிபுட்' என்ற இடம் வந்தோம். அங்கு திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் நாங்கள் முன் அறிவித்த படி உணவு தயாராக வைத்திருந்தார். நல்ல உணவளித்தார். தமிழ் நாட்டு அரசியலைப் பற்றி நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். முன்னாள் அங்கு நடந்த கொலை நிகழ்ச்சிகளைப் பற்றியும், அரசாங்கம் செய்ய வேண்டிய செயல்பற்றியும் கூடப் பேசினோம். பிறகு 2 மணிக்குமேல் அதைவிட்டுப் புறப்பட்டோம். ஈப்போவிற்கு மாலை மூன்று மணிக்கு வந்து சேர்ந்தோம். அன்றுமாலை நகர மண்டபத்தே 6 மணிக்கு, 'தமிழ்ச் சுவை' என்னும் பொருள் பற்றி நான் பேச வேண்டும். அதற்குமுன் கடைத்தெருவுகளைச் சுற்றிப் பார்த்தோம். சிறிது நேரம் ஓய்வு கொண்டோம். கூட்டத்திற்குச் சென்றோம், பெருங்கூட்டம் இருந்தது. கூட்ட முடிவில் சில அன்பர்கள் கேள்விகள் கேட்டார்கள். அவைகளுக்கும் பதில் கூறினேன். பல நண்பர்களோடு பேசிவிட்டு வீட்டிற்கு வந்தோம். உணவுண்டோம். இரவு 10 மணிக்குமேல் படுத்துக் கொண்டோம்!

மாலாய் நாட்டு நீலகிரி:

அரசி! இன்று, (18-6-48) ஒரு முக்கியமான - சிறந்த நாள். நான் ஒரு உயர்ந்த மலை மீதேறினேன். 4800 அடி உயரமுள்ள 'காமொரின் உயர் நிலத்துக்குச் (Comorin High lands) சென்றேன். காலை ஈப்போவில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, தாபாவிற்குப் புறப்பட்டோம். தாபாவில் இன்றுமாலை 6 மணிக்குப்பேச்சு. ஆகவே நாங்கள் உடன் புறப்பட வேண்டியதாயிற்று, வழியில் கம்பார் என்ற ஊரில் தங்கி, அங்கிருந்து ஒரு நண்பரை உயர்மலையைக்காண உடன் அழைத்துக்கொண்டோம். 10 மணிக்குத் தாபா வந்து சேர்ந்தோம். நானும், கம்பாரில் இருந்துவந்த நண்பரும், தாபாவிலிருந்த மற்றொரு பெரியவரும் உயர் மலை நிலம் காணச் சென்றோம். மாலை 5-மணிக்குள் திரும்பவேண்டும். அப்போதே புறப்பட்டோம்.

அருமைக் குழந்தாய்! மலையின் உயரம் 4,800 அடி தான். ஆனால் அந்த அளவைக் கடப்பதற்கான வழியின் நீளம் நாற்பது கல். முதல் ஏழு கற்கள் பரப்பின் மேல் தான் வழி சென்றது. பிறகுதான் உயரம் புலப்பட்டது. வண்டி வளைந்து வளைந்து சென்றது. இயற்கைக் காட்சி கண்ணுக்கு நல்விருந்தாக அமைந்தது. பல உயர்ந்த மரங்கள்; அடர்ந்த காடுகள்: சலசலத்து ஓடும் கானாறுகள். அவற்றில் துள்ளிஎழும் நீர்த்திவலைகள்; இவற்றின் காட்சி என் கருத்தைஈர்த்தது. கூட வந்த அன்பர் அந்த இயற்கை நலங்களைப்பற்றி எல்லாம் விளக்கிக்கொண்டிருந்தார். தேவையான வேளையில் மட்டும் அவர்கள் விளக்கம் தந்து கொண்டே இருந்தார்கள். எப்போதும் எதையாவதுபேசிக் கொண்டிருந்தால் ஆசிலிட், ('Hazllitt') என்ற ஆங்கிலப் பேராசிரியர் 'தனியாகத்தான் இயற்கையைக் காண வேண்டும்' என்று சொல்லியது சரி என்று எண்ணி இருப்பேன். என்னுடன் வந்தவர்களும் இயற்கை வழி செல்பவர்கள் ஆதலின் அவர்களும் அந்தக் காட்சிகளைக் கண்டு கொண்டு, தேவையான காலத்து எனக்கும் விளக்கம் உரைத்துக் கொண்டே வந்தார்கள். 2,700 அடி உயரம் சென்றதும் ஒரு பள்ளத்தாக்கில் ஒரு சிற்றூர் கண்டோம். நிலத்தைப் பண் படுத்தி பல வகைக் காய் கறிகளைப் பயிரிட்டிருந்தனர், அத்துடன் உயர்ந்த மலைச் சரிவுகளில் உள்ள காடுகளை அழித்துத் தேயிலைச் செடிகளைப் பயிர் செய்திருந்தார்கள். நில மென்னும் நல்லாள் நகா வழியில் தம் கைத்திறனால் மலை இடைவெளியையும் மலைச்சரிவையும் திருத்தி, காடு கொன்று நாடாக்கிப் பல பொருள்கள் பயிரிடும் கை நலம் கண்டேன். மிக மகிழ்ந்தேன், வண்டி விரைந்து சென்று கொண்டே இருந்தது பயிரிடும் பொருள்களில் கோசுக்கீரை அதிகமாக இருந்தது. கண்டோம். மேலே சென்றோம். வழி நெடுகக் காட்டு மலாய்க் காரர்களைக் கண்டோம். மலாய் நாட்டு மக்களைப் பற்றி முன் உனக்கு எழுதி இருக்கிறேன் அல்லவா! இந்த மக்களைப் பற்றியும் நீ சிறிது அறிய வேண்டும், சற்று நாகரிக வாழ்வில் திருந்திய மலாய் மக்கள் நகரை ஒட்டியும் ஊரை ஒட்டியும் போது மென்ற மனத்தோடு வாழ்க்கை நடத்துவதைக் கூறி இருக்கிறேன். இதோ, இந்தக் காட்டு மலாய்க்காரர்களோ காடே கதி என்று

வாழ்வார்கள். அவர்களை இங்குள்ளவர்கள் சக்காய்காரர்கள் என்று அழைக்கிறார்கள். அவர்கள் நாட்டுப் பக்கம் வருவதே இல்லையாம். காட்டிலேயே குடும்பம் குடும்பமாக வாழ்ந்து, காட்டில் வேட்டையாடித்தான் வாழ்வு நடத்துவார்களாம்.

அவர்களுக்குச் சாதாரணச் சிறு உடைதான் இடுப்பில் இருந்தது. ஆடவரும் பெண்டிரும் மேலாடை இன்றியே இருந்தார்கள். அவர்கள் வேட்டையாடும்முறை வேடிக்கையாக இருந்தது. அவர்கள் கைகளிலே நீண்ட மூங்கிற் குழாய் வைத்திருந்ததைக் கண்டேன். உடன் வந்தவர்கள் அவர் தம் வேட்டை முறையை விளக்கினார்கள். அந்த மூங்கிற் குழாயில் ஏதோ விடப் பொருளை வைத்து ஊதுவார்களாம். அந்தப் பேரூதல் தூரத்தே செல்லும் பறவை, விலங்கு முதலிய வற்றை வீழ்த்துமாம். அம்பு இன்றி - அன்றி வேறு ஆயுதமின்றி - இந்த முறையில் அவர்கள் வேட்டையாடுகிறார்கள் என்பது வியப்பல்லவா! குழந்தாய்! மிகப் பழங்காலத்தே மனிதன் இந்த முறையில்தான் வாழ்ந்தான் என்பதைக் காட்டத்தான் இவர்கள் இப்படி வாழ்கிறார்களோ என்று எண்ணினேன். சில சக்காய்காரர்கள் நம் போன்ற மக்களைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்ளுவார்களாம். சில நாட்களுக்கு முன் அவர்கள் - ஆடவரும் பெண்டிரும் - உடை ஒன்றும் இல்லாமலேயே திரிந்து வந்தார்களாம். பிறகு மக்களிடைத் தோன்றி மறையும் வாழ்வைக் கொண்டபின் இருசாரரும் இடுப்புக்குமட்டும் ஆடை அணிகின்றனர். அம்மலைவாழ் மக்களில் சிலரையும் வழியில் கண்டேன். அவர் தம் குடும்பப் படம் ஒன்று வாங்கிவைத்திருக்கிறேன். நேரில் காண்பாய்.

செல்வி! மலைவளமும், மலையில் மறைந்து வாழ் மக்கள் நிலையும் கண்டுகொண்டே மலை உச்சிக்கு வந்தோம். 4,800 அடி உயரமாதலால் குளிர்ச்சி இருந்தது. சேலம் மாவட்டத்திலே உள்ள ஏர்க்காட்டை ஒத்து விளங்கிற்று ஊர். அந்த அளவில்தான் இங்கு குளிர்ச்சி இருந்தது. ஆனால் சில தினங்களில் மிக அதிகமாக, தாங்கமுடியாத குளிராயிருக்குமாம். எனினும் நம் நீலமலையைப் (Nilgris) போல அவ்வளவு பெருங்குளிரா யிருக்காது என்று எண்ணுகிறேன். கடைத் தெரு மிகச் சிறியதுதான். பல

மாளிகைகள் மலை முழுதும் சிதறிக் கிடந்தன. அங்கு ஒரு பயிர்ப் பண்ணையும் இருந்தது. முதலாவதாகப் பயிர்ப் பண்ணையைப் பார்க்கச் சென்றோம். வழியிலே ஒரு பெரிய விடுதி இருந்தது. பல சிறு அலுவலகங்கள் இருந்தன. அவற்றை எல்லாம் கண்டுகொண்டே பயிர்ப் பண்ணையுள் நுழைந்தோம்.

அந்தப் பயிர்ப் பண்ணையில் இரு மலையாளிகள் மேற்பார்வையாளராக இருக்கின்றனர். அவர்கள் எங்களைக் கண்டதும் மகிழ்ந்தார்கள். பெரும்பாலும் இந்தியர்கள், அதிலும் தென் இந்தியர்கள் அப்பயிர்ப் பண்ணையைப் பார்க்க வருவது கிடையாதாம். எனவே நாங்கள் சென்றது அவர்களுக்குப் பெரு விருந்தாக அமைந்தது. சிறிது நேரம் பேசிக் கொண்டே இருந்தோம். பிறகு அதைச் சுற்றிப் பார்த்தோம். பன்றிகள் வளர்ப்பதைக் கண்டோம். மிகப் பெரிய அளவில், எருமை மாடுகளோ என்று எண்ணுவதைப் போன்று நன்கு கொழுத்து வளர்ந்திருந்தன பன்றிகள். வியந்தேன். பிறகு பலவகை மலர்ச் செடிகளைக் கண்டோம். அங்கு பணியாற்றுகின்றவர் ஒருவர் உதவிக்கு வந்தார். அவர் எந்த ஊர் என அறிய விரும்பினேன். அங்குள்ள அனைவரும் நன்கு தமிழ் பேசினார்கள். அந்தப் பணியாளர் சேலத்தைச் சேர்ந்த நாமக்கல்லிலிருந்து இங்கு வந்தவராம். அந்த மலைப்பகுதியில் உள்ளவர்களில் பெரும்பாலோர் சேலம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர் அங்கு வந்து பல ஆண்டுகள் ஆயிற்றாம். அவர்கள் நம் நாட்டில் இருப்பதைக் காட்டிலும் இங்கிருப்பது நலமாக இருக்கிறது என்றார். பொருளை மிச்சப் படுத்தி ஊருக்கு அனுப்புவதாகவும் சொன்னார். அதற்குக் காரணம் அவர்கள் குடியராகாமை தான். அருகில் கள்ளுக் கடைகள் கிடையாவாம். அவர்களிலும் பெரும்பாலோர் குடிக்க மாட்டார்கள். என அறிந்தேன். சிலர் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கில் அனுப்பிக்கொண்டு வருகிறார்களாம். உண்மையில் மகிழ்ந்தேன். ஆனால் ஒன்று; அவர் தம் குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்றுசொன்ன போது, அவர்கள் எங்களுக்குப் படிப்பு வேண்டாம், இந்தத் தோட்ட வேலையே தொடர்ந்து இருந்தால் போதும் என்றார்கள். அவர் தம்கருத்து, 'முன்னேற வேண்டாம், உள்ளது போதும்' என்பதுதான். அதை நினைத்துத் தான்

நான் வருந்தினேன். ஏழைகள் இப்படி முன்னேற மனமிலாதிருக்கும் நிலையினை நினைந்தேன். பிறகு அந்தப் பணியாளர் அங்குள்ள பல இடங்களைப் பார்க்க ஏற்பாடு செய்தார். தோட்டங்களையெல்லாம் கண்டேன். தேயிலைத் தோட்டங்களில் எப்படித் தேயிலை எடுக்கிறார்கள் என்பதைக் கண்டேன். பிறகு தேயிலையைப் பக்குவப்படுத்தும் பல முறைகளையும் கண்டேன். தோட்டத்திற்கு உள் செல்லும் காலத்து இரண்டு வகை மரங்களைக் கண்டேன். ஒன்று மலேரியா நோய்க்கு மருந்தளிக்கும் 'கொயினா' மரம். மற்றொன்று கற்பூரத் தைலம் எடுக்கும் மரம். இந்த மரத்தின் இலைகளைக் கசக்கி முகர்ந்தேன். அதில் அத்தைல மணம் கமழ்ந்தது. அதன் பட்டைகளிலிருந்துதான் கற்பூரத் தைலம் எடுக்கிறார்களாம். 'கொயினா' மருந்து எடுப்பதைப் பற்றி அந்தப் பணியாளர் நன்கு அறியவில்லை. பிறகு அங்கேயே, கொண்டு சென்ற உணவை வைத்துக்கொண்டு உண்டோம். கம்பாரிலிருந்து நல்லவகையில் உணவு தயாரித்துக் கொடுத்திருந்தார்கள்.

உணவுக்குப் பிறகு 'காரி'லேயே புறப்பட்டு, மலையின் பல பகுதிகளையும் கண்டு மகிழ்ந்தோம். மாலை 5-மணிக்கு மறுபடியும் தாபாவில் இருக்கவேண்டும். ஆதலால் விரைந்து திரும்ப முயன்றோம். பல இயற்கைப் படங்கள் கிடைத்தன. வாங்கினேன். கொண்டுவருகிறேன். பிறகு மூன்று மணிக்கு மலைக் காட்சிகளைக் கண்டுகொண்டே விரைந்து இறங்கினோம். வரும் வழியில் நல்ல மழை. மேகங்கள் வழியைத் தடை செய்தன. வழியே தெரியவில்லை. விளக்குப் போட்டும் கூட வழி தெரியவில்லை. வண்டியும், சிறிது மெதுவாகவே சென்றது. எங்களைச் சூழ்ந்து மேகம் தாழ்ந்த காட்சி கண்ணுக்கு விருந்தாயிற்று. 5-30-க்தான் ஊர் வந்து சேர்ந்தோம். கூட்டம் ஆறுமணிக்கு. கூட்டத்திற்கு முன் ஒரு தேநீர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த ஊரில்தான் இந்தப் புது முறையில் வரவேற்பு பெற்றேன். பல அரசியல் அதிகாரிகளெல்லாம் பங்கெடுத்துக் கொண்டனர். அவ்வூர் நீதிபதி (Magistrate) ஒரு மலாய்க்காரர். அவர். சிற்றுண்டி கொள்ளும் காலத்தில் பக்கத்திலிருந்தார். இந்த நாட்டுப் பழங்குடிகளில் ஒருவர் அந்தப் பதவியில் இருப்பது கண்டு மகிழ்ந்தேன். அவர்கள் வரவர உயர்ந்து வருவதையும் கேட்டேன். பல மக்கள்-

தமிழ் அறியாதவர்களெல்லாம்-வடநாட்டு இந்தியரும் கூட வந்திருந்தமையால் நான் அவர் தம் விருந்துக்கு ஆங்கிலத்திலே பதில் சொன்னேன். விருந்து முடிந்தது. கூட்டத்திற்குச் சென்றோம். மாலைக் கூட்டமும் சிறப்பாகத்தான் நடை பெற்றது. ஊர் சிறியதாயினும் பல மக்கள் கூடி இருந்தது போற்றத் தக்கது. அங்கு நான் பேச வேண்டிய பொருள் என்ன என்பதை அவர்கள் குறிக்கவில்லை. என்றாலும் பொதுப்படச் சில பேசினேன். குறைந்த நேரம் தான் நான் பேசினேன். சுபாஷின் அடிச்சுவட்டைப்பற்றி அங்கு பலர் வாழ்ந்து வந்ததை அவர் தம் உணர்வால் அறிந்தேன். கூட்டம் முடிந்தது.

வீட்டுக்கு வந்தோம், வரும் போதே ஒரு மலையாளி நண்பர் எங்களுடன் வந்தார். அவர் நம் நாட்டுக்கும், மலேயாவிற்கும் பல வகையில் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை விளக்கினார். இந்திய அரசாங்கத்தார் எப்படியும் நல் தொடர்பு மேற்கொள்ள வேண்டும் என்று விளக்க உரைத்தார். ஆங்கில அரசாங்கத்தார் கொடுக்க வேண்டிய கடன் தொகையை இந்திய நாடு இந்த நாட்டுத் தொழில் வளர்ச்சி மூலம் பயன் படுத்த வழியும் சொன்னார். அவர் கருத்துக்கள் பல நன்றாக இருந்தன. எனவே அவற்றையெல்லாம் நான் குறித்து ஊருக்கு அனுப்பும் படிச் சொல்லி முகவரியும் கொடுத்தேன். அவருக்குப் பின் பல நண்பர்கள் வந்தார்கள், பேசிக் கொண்டிருந்தேன், உணவு உண்டோம், கடைசியாக இக் கடிதம் எழுதத் தொடங்கினேன். மணி பதினொன்றாகி விட்டது. ஆகவே படுத்துக் கொண்டேன். இக் கடிதத்தை மறுபடியும் கோலாலம்பூரில் வந்துதான் முடித்தேன். கோலாலம்பூர் நிகழ்ச்சிகளை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

கடிதம் 18.

கோலாலம்பூர்
20-6-48

அருமைக் குழந்தாய் !

கோலாலம்பூர் நோக்கி:

நேற்றுக் காலை சீக்கிரமே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிற்றுண்டி கொண்டோம். தாபாவிருந்து கோலாலம்பூரை அடைவதற்கு நூற்றுக்கு மேற்

பட்ட கல் தொலைவு செல்ல வேண்டும். ஆகவே சீக்கிரம் உண்டி கொண்டு புறப்பட்டோம். விரைந்து கார் வந்தது. நேற்று மாலை கோலாலம்பூர் வானொலி நிலையத்தே நான் பேச வேண்டி இருந்ததற்காக, முன் ஒத்திகை வேண்டி இருந்தது பாடல்களைப் பார்ப்பதற்காக. அதற்கெனப் 11 மணிக்கே நாங்கள் அங்கு இருப்பதாகக் கூறி இருந்தோம். ஆதலின் விரைந்து புறப்பட்டோம். வழி நெடுகச் சோலைகளின் சிறப்புத்தான். இன்று எங்கள் வண்டியை இரண்டிடத்தே காவற்புரை அலுவலாளர்கள் நிறுத்திச் சோதனை இட்டார்கள். முன் கடிதத்தில் குறித்தபடி, தற்போது ஊர் எங்கணும் கொலை, கொள்ளை அதிகமாக இருக்கிறபடியால் காவல் ஆணையைச் சற்று அதிகமாக்கி விட்டார்கள் அரசியலார். வழியிடைச் செல்பவர்களை யெல்லாம் நிறுத்தி, ஆராய்ந்து அனுப்புவதுதான் முறை என்று கண்டார்கள் போலும். இரண்டிடங்களில் ஆராய்வு நடத்தி அனுப்பினார்கள்.

குழந்தாய்! முன் கடிதத்தில் குறித்தபடி இன்று இந்த நாட்டு நிலை சரியானதாக இல்லை. செல்வர்களும் அரசாங்கமும் அஞ்சத் தக்க நிலையிலே அன்றாடம் பல கொலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. சீனப் பொது உடைமைக்காரர்கள் பல இடங்களில் மறைந்திருந்து, கொள்ளைக் கூட்டத்தாரைப் போன்று பலரகசிய ஆயுதங்களையும் வைத்திருந்து, திடீர் திடீர் எனத் தோட்ட முதலாளிகளையும் பிறரையும் தாக்கிப் பெரும் பொருள் கொள்ளுகின்றனர். அதை அடக்கவே நாடு முழுவதும் கடுஞ்சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். காவர்காரர்கள் கடுகிப் பணியாற்றுகிறார்கள். இன்று கூடக் கொலைக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் கோலாலம்பூருக்கு அண்மையிலேயே பிடிப்பட்டார்கள். இந்தக் கடுஞ் சட்டம் இன்னும் கடுமையாக்கப் படவேண்டும் என்று பொது மக்கள் விரும்புகிறார்கள். இந்த நிலையில் எங்கள் வண்டியை வழியிடை ஆய்ந்து,செல்க என்று விட்டதில் தவறொன்றும் இல்லையல்லவா.

வானொலிப் பேச்சு:

விரைந்து வந்துகொண்டே இருந்தோம். வழியில் தஞ்சமாலிம் என்ற ஊரில் சிறிது நேரம் தங்கி நீர் அருந்திப் பின் புறப்பட்டோம். 11 - 20-க்குக் கோலாலம்பூர் வந்து

சேர்ந்தோம். வந்ததும் பல நண்பர்களைக் கண்டுபேசினோம். இரண்டு மணிக்குப் பாடல் ஒத்திகை நடத்த ஏற்பாடு செய்திருந்தனர் பகல் உணவுக்குமேல் நானும் திரு சுப்பையா அவர்களும் விவேகானந்தர் ஆச்சிரமத்துக்குச் சென்றோம். நான்கு மணிக்கு வானொலிப் பேச்சு. எனது பேச்சு தொடங்குவதற்கு முன், என்னை அறிமுகப்படுத்தும் வகையில் திரு-நடராஜமூப்பனார் அவர்கள் எழுதி வைத்திருந்த சொல்லாடல் இனிதாக இருந்தது. அங்கு, சிறிதுநேரம் இருந்து அனைவரும் வானொலி நிலையத்துக்குச் சென்றோம். வானொலிப் பேரலுவலாளர் திரு தாமஸ் அவர்களும், திரு நடராஜ மூப்பனார் அவர்களும் ரேடியோ மூலமே தம் சொலாடலால் என்னை அறிமுகப்படுத்தினார்கள். பிறகு நான் 'இன்றைய தமிழ்' என்னும் பொருள் பற்றிப் பேசினேன். இன்று நம் நாட்டில் இருக்கும் மொழி நிலைபற்றி விளக்க உரைத்தேன். பிறகு 4 - 45-க்குச் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்று உணவு கொண்டோம். எனது பேச்சை முடித்து, முடிவில் பாடச் சொல்லிவிட்டு வந்த அதே பாடலை அந்தச் செல்வியார் பாடிக் கொண்டிருந்ததை அங்கு விடுதியில் வைத்திருந்த வானொலியில் கேட்டோம். மற்றும் எனது பேச்சைக் கேட்ட அங்குள்ளவர்கள் அளிந்த நல்ல விமரிசனத்தையும் கேட்டோம். எங்களை யார் என்று அறியாவகையில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் பேச்சைப்பற்றி. நல்ல வேளையாக நல்லபடி தான் பேசிக்கொண் டிருந்தார்கள்.

மாலை 5 - மணிக்கு நகரமண்டபத்தே ஒரு பெருங் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நம் நாட்டிலிருந்து வந்த தலைவர்களெல்லாம் அங்கு நின்று பேசித்தான் சென்றிருக்கிறார்களாம். நேரு போன்ற பேரறிஞர்களை யெல்லாம் கண்ட பெரு மண்டபம் அது. அந்த மண்டபத்தினுள் சரியாக 5-மணிக்கு நுழைந்தோம். கூட்டம் வந்தது. சற்று காலம் கழித்துத் தொடங்கலாம் என எண்ணிக் கொண்டே உள் சென்றேன். மண்டபம் மிகப் பெரிதாக இருந்தது. மண்டபம் நிறைய 5-மணிக்கே மக்கள் திரண்டு விட்டனர். இடமில்லாது வெளியே நிற்கவும் தொடங்கினர். மகளிர்

பலரும் வந்திருந்தனர். அவ்வூர் மக்கள் தமிழ்ப் பற்றை அப்போதுதான் அறிந்தேன். அரசியில் அலுவலாளர் பலர்; தொழில் தலைவர் பலர்; பலர்; வாணிப-வினைஞர் - பொது மக்கள், பல கொள்கை உடையவர்கள் அனைவரும் ஒன்றிக்கலந்து நின்றகாட்சி இனி இங்கு ஒருமுகமாகத் தமிழ் ஓம்பப்படும் என்பதை எனக்கு எடுத்துக் காட்டிற்று. மகிழ்ந்தேன். இக்கூட்டம் தமிழாசிரியர்களால் ஏற்பாடு செய்யப் பட்டது. ஆசியர் கழகச் சார்பில்-நானும் ஒரு ஆசிரியன் என்ற முறையில் ஒரு வரவேற்பும் அளித்தார்கள். பெற்றேன். பிறகு நான் 'தமிழ்-அன்றும் இன்றும்' என்றும் பொருள் பற்றிப் பேசினேன். சற்று நீண்ட நேரமே பேசிவிட்டேன். மக்களது மன உணர்ச்சியும், அமைதி நாட்டமும் என்னை நேரத்தையும் மறக்கச்செய்தன. கூட்டம் முடிந்தபின் பலருடன் பேசிக்கொண்டே இருந்து பிறகு வீடு வந்தேன்.

குழந்தாய்! இன்றைய நகர மண்டபக் கூட்டத்திற்கு இந்தியப் பிரதிநிதி திரு. கோ. நடராஜப்பிள்ளை அவர்கள் தலைமைவகிப்பார் என்று வெளியிட்டிருந்தார்கள். அவர்கள் அருகிலே ஒரு ரப்பர் தோட்டத்தில் நடந்த கலவரத்தை நீக்குவதற்காக அன்று பகல் புறப்பட்டுச் சென்றார்கள். நாட்டு நிலை ஒருவரையுமே ஓய்வாக விடவில்லை. அவர் வர நாழியாகவே உ. அரு அவர்களே தலைமை வகித்தார்கள். கூட்டம் முடிவதற்குள் நடராசப்பிள்ளை அவர்களும் வந்து விட்டார்கள். கூட்டம் முடிந்த பின் அவர்களும் கூடவே வந்தார்கள். நாளை மாலையில் இங்கு வந்திருக்கும் இந்தியாவின் மலேயா பிரதிநிதியைக் காணவேண்டும் என்றும் மாலை வருவதாகவும் சொல்லிச் சென்றார்கள். பிறகு நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்து உறங்கினோம்.

இந்திய ஏஜண்டு திரு. திவியுடன்:

செல்வி! இன்று எனக்கு ஓய்வுநாள். நாளை சிகாமட், மறுநாள் குளுவாய் 23.24-ல் சிங்கப்பூர், ஜோகூர். ஆகவே இன்று நான் சற்று ஓய்வு கொண்டேன். என்றாலும் அன்பர்கள் பலர் வந்து பேசிக்கொண்டே இருந்ததனால் அதிகமாக ஓய்வு கொள்ள இயலவில்லை. சத்தியானந்த அடிகள்

வந்தார்கள். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுதிய இரண்டு நூல்களையும் கொடுத்துச் சென்றார்கள். திரு. அருணாசலஞ் செட்டியார் அவர்கள் மலாக்காவுக்குப் புறப்பட்டார்கள். நாளை அங்கிருந்து அப்படியே மேல் நிகழ்ச்சிகளில் வந்து கலந்துகொள்வ தாகச் சொல்லிச் சென்றார்கள். பிறகு மூன்று மணிவரை பேசிக் கொண்டே இருந்தோம். முன் ஏற்பாட்டின் படித் தமிழ் நாட்டுப் புத்தக நிலையத்தார் வந்தார்கள். மூன்று மணிக்கு அவர்களுடன் அவர்தம் அலுவலகத் திற்குச் சென்றேன். திராவிடர் கழகத்தே ஆழ்ந்த பற்றும் இன உணர்ச்சியும் கொண்டவர்களாக அவர்கள் விளங்கினார்கள். நம் நாட்டில் உள்ள பல தலைவர்களது நலன்களைப் பற்றியும், பிற நாட்டு நிலையைப்பற்றியும் ஒன்றரைமணிநேரம் பேசிக்கொண்டிருந்தோம். அவர்கள் அளித்த விருந்துண்டேன். அவர்கள் சிறந்த உணர்வு வயப்பட்டு நின்றார்கள். பிறகு 4. 30-க்கு வீடு வந்தேன். திரு. நடராஜப்பிள்ளை அவர்கள் திரு. திவியைக் காண அழைத்துச் செல்லும்பொருட்டு 5-மணிக்கு வந்தார்கள். திரு. திவி அவர்கள்தான் மலேயாவில் இந்தியப்பிரதிநிதி. நானும், இராமநாதன்செட்டியார் அவர்களும், நடராஜ மூப்பனார் அவர்களும், அவருடன் திரு. திவி தங்கி இருந்த மாளிகைக்குச் சென்றோம். அம்மாளிகை ஒரு பெருஞ் செல்வருக்குச் சொந்தமானதென்றும், அங்குதான் முன் சாஸ்திரியார் இந்தியமக்கள் நலன் காணவந்த காலத்தில் தங்கி இருந்தார் என்றும் அறிந்தேன். நெடுநேரம் அனை வரும் பேசிக்கொண்டிருந்தோம். திரு. திவி அவர்கள் வழக்கறிஞராக லண்டனில் பயின்று, இங்குப் பயிற்சி செய்துகொண்டிருந்தவர். சுபாஷ் இங்கு தலைவராகஇருந்த காலத்தே சிறந்த பதவியில் இருந்து அன்றைய நிலையில் பெருந் தியாகம் செய்தவர். ஆசியா மாநாட்டுக்குச் சென்ற ஆண்டு நம் 'தில்லிக்கு' வந்தவர். இங்கு பிறகு இந்தியப் பிரதிநிதியாக ஆக்கப்பட்டவர். மிக நல்லவரராகக் காணப் பட்டார். நெடுநேரம் பலப்பல பொருள்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். மலாய்நாட்டில் மலே மக்கள் முன் னேற்றம்தான் முதலில் கவனிக்கப் படவேண்டும் என்றும் அந்த நல்வழியில் இந்திய நாட்டுமக்கள் கருத்திருத்த வேண்டுமென்றும், உண்மையிலே அந்த

வகையில் இந்தியமக்கள் பாடுபடுவார்களாயின், இந்த நாட்டுச் சொந்தக் குடிகளாகிய மலாய்மக்களும், இந்தியரும் என்றும் யாதொரு வேறுபாடும் இல்லாமல் வாழலாம் என்றும் பலப்பல பேசினோம். அந்த வீட்டுக்காரர் பெருத்த செல்வர். அவர் இந்நாட்டிலேயே தங்கிவிட்டவர். யாழ்ப்பாணத்தார். அவர் தந்தை தம் காலத்திலேயே இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டவர். அவர் மலேயா மக்களுக்கு நம்மவர் செய்யவேண்டிய உதவியை வற்புறுத்தினர். இந்தியப் பல்கலைக் கழகத்தே இந்நாட்டு மலாய் மக்கள் எல்லா உதவியும் பெற்றுப் படிக்க வசதி செய்ய வேண்டிய வகையை எடுத்துரைத்தார். இங்கு மற்றொன்றைக் குறிக்க வேண்டும். இந்த ஆண்டிலிருந்து, இங்கே விரும்பும் மலாய் மாணவர் ஒருவர் நம் நாட்டுக் காரைக்குடி அழகப்பர் கல்லூரியில் எல்லா வகை உதவியும் பெற்றுப் படிக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்குரிய விளமபரங்கள் இங்குள்ள நாள் இதழ்களில் வெளியாயின. நான் இங்கு வந்த போது—இருந்த போது தமிழ்நாட்டுக்கும் இந்நாட்டுக்கும் தொடர்பு கொள்ளும் வகையில் பல செயல் நடக்கின்றன.

ஒன்று, இங்குள்ள மாணவர்—மலாய்காரர் ஒருவர் நம் நாட்டுக்குவர ஏற்பாடுசெய்வது. இரண்டு, பத்தாண்டு திட்டத்திலே தமிழ் மக்களுக்குக் கட்டாயக் கல்வி மூலம் தமிழைப் பரப்ப அரசியலார் முயற்சி செய்வது. மூன்று, இங்கு தொடங்கும் பல்கலைக் கழகத்திலே தமிழுக்கு ஒரு தனி இடம் கொடுக்க ஏற்பாடு செய்வது. நான்கு, ஆங்காங்கே தமிழ் மக்கள் உணர்ச்சி வய்ப்பட்டுப் பல தமிழ் வகுப்புகள் தொடங்கிப் பாடம் பயிலும் வகையில் முயல்வது.

இவையெல்லாம் காண உண்மையில் உளமகிழ வேண்டியவர்கள் இங்குள்ள தமிழர்கள். பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு உரிய இடம், மறறவர்தம் இடத்தைக் காட்டிலும் சற்று தாழ்ந்து இருக்கிறது. அதைச்சரியாக்க மக்கள் முயலவேண்டுமென்று சென்ற இடங்கள் தோறும் வற்புறுத்தி வந்தேன். தமிழ்ப் பண்ணையும் அதில் கருத் திருத்துகிறது. ஆகவே அந்தக் குறையும்கூட நீக்கப்படலாம். இங்கு சொல்லுவானேன். அங்கு தமிழ்

நாட்டுப்பல்கலைக் கழகங்களில் தான் என்ன வாழ்கிறது. வடமொழிக்கும் பிறவற்றிற்கும் இருக்கும் சலுகை தமிழுக்கோ—தெலுங்குக்கோ உண்டோ? இல்லையே. வரலாறு போன்றவற்றிற்கெல்லாம் பேராசிரியர் பதவி இருக்க இந்தத் தமிழுக்கு மட்டும் அது இல்லையே. இந்தக் குறை தமிழ் நாட்டிலேயே இருக்கும் போது இங்கு மட்டும் எப்படி இந்த வேறுபாடு இல்லாதிருக்க இயலும். தமிழ் ஆக்கம் பெற்றுத்தான் வளர்கிறது. தமிழ் மக்களது ஊக்கந்தான் இன்னும் ஓங்கவேண்டும்.

குழந்தாய்! எங்கோ சென்றேன். திரு. திவி அவர்களோடு பல பொருள்களைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தோம். ஏழு மணிக்குமேல் வேறு வேலைகளை முன்னிட்டு வெளியே சென்றோம்.

அன்று மாலை விவேகானந்தர் ஆச்சிரமத்தில் 'யோக'த்தைப்பற்றி அடிகள் சத்தியானந்தர் அவர்களது பேச்சு இருந்தது. அனைவரும் சென்றோம். சிறிதுநேரம் இருந்தோம் கூட்டம் முடிவுற்றது. நான் நாளை சிங்கப்பூர் செல்ல ஏற்பாடாகி இருந்தது. வழியே சிகாமட், குளுவாங், ஜோகூர் முதலிய இடங்களில் தங்க வேண்டும். 24-ல் சிங்கப்பூரில் கப்பல் கிடைத்தால் அப்படியே புறப்பட வேண்டி இருக்கும். எனவே, பல நண்பர்களுடன் பேசி முடிந்து வீட்டிற்கு வந்து உணவு கொண்டோம்.

திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் இங்கு சிலரைத் தமிழ்பயிலத் தூண்டி நன்கு பயிற்றுகின்றார்கள். அவர்கள் கிழமைக்கொருமுறை சொற்போர்க் கூட்டங்கள் நடத்துகிறார்கள். இன்று அந்தநாள். அறிவியல் வளர்ச்சி நன்மையா தீமையா என்பது பற்றி, நால்வர் பேசினர். மலாக்கா வாழ் திரு. அண்ணாமலை செட்டியார் தலைமை தாங்கினர். நானும் பேச்சு எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிச் சிறிது உரைத்தேன். ஐந்தாறு பேர்தான்; பல அலுவல் பார்ப்பவர்கள்; தமிழிடம் பற்றுக்கொண்ட காரணத்தால், திரு. இராமநாதர் அவர்களிடம் நாள்தோறும் தமிழ்—குறள் பயில்கின்றனர். இன்னும் நகரிலே இரண்டொரு வகுப்புகள் தொடங்க இருக்கிறார்கள் எனவும் அறிந்தேன். இப்படித் தமிழ் வளர்ச்சி கொள்ளத் தொடங்கும் இந்த நிலையில் நான்

வந்தது நன்று என்றே அவர்கள் கூறினார்கள். நானும் அதை உணர்ந்தேன். பிறகு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம் படுக்கச் செல்கின்றேன். நாளை முதல் ஒவ்வொரு நாளில் ஒவ்வொரு ஊரில் இருப்பேன். 24-6-48ல் கப்பல் கிடைத்தால் சிங்கப்பூரிலிருந்து புறப்படுவேன். இன்றேல் கோலாலம்பூரிலிருந்து 28-6-48 ல் புறப்பட்டு, அங்கு 4-7-48 ல் வந்து சேர்வேன். எல்லாவற்றையும் திட்டமாக அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

கடிதம் 19.

குளுவாங்.
22—6—48.

அன்பின் கொழுந்தே!

மலேயாவின் இரயில்வே:

நேற்று கோலாலம்பூரி லிருந்து காலை 7-மணிக்குப் புறப்பட்டோம். இது வரையில் "காரி" லே சென்று வந்த நான், இந் நாட்டுப் புகை வண்டியிலும் பயணம் செய்ய வேண்டும் என்று விழைந்ததால் கோலாலம்பூரிலிருந்து 'சிகாமட்' வரை 125 கல் தொலைவு புகை வண்டியில் செல்ல முடிவு செய்தோம். 8-மணிக்கு இரயில். நானும் திரு. இராமநாதனார் அவர்களும் புறப்பட்டோம். இரயிலடிக்கு வந்தோம். திரும்பவும் கோலாலம்பூருக்கு வருவேனோ வாரேனோ என்று எண்ணிய காரணத்தால் சில அன்பர்கள் இரயிலடியில் வழியனுப்ப வந்திருந்தார்கள். குழந்தாய்! உண்மையிலேயே அந்தப் பிரியும் நிலை பெரு நிலையாக இருந்தது 'உவப்பத் தலை கூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்' என்றான் வள்ளுவன். அது இன்று என்முன் எவ்வளவு மெய்யாக இருக்கிறது. முன்பின் அறியா நாடு-கோலாலம்பூர் வந்தேன். எப்படியோ மக்கள் அறிமுகமாயினர். சில நாட்கள் தான் தங்கினேன். ஆனால் பிரியும்போதோ— அம்மம்ம உளம் நைகிறது. என்று காண்போம் இன் தமிழ் அன்பர்களை என்று ஏங்குகிறது என் மனம். வளமார் நகரை என்று நோக்குவோம் என்று சிந்தை நைகிறது. கண்ணீர் பெருக்கெடுக்கின்றது. எனினும் உடன் இருந்தவர்கள் காணக் கூடாதபடி உணர்ச்சியை அடக்கி நீரைத் துடைத்துக் கொண்டேன். என்றாலும் அக் கோலாலம்பூர் அன்பர்

கள் இன்ப உரையும் உணவும் பிறவும் என்னை எண்ணத் தாழ்த்தி ஏங்கச்செய்தது. துன்பத்தை நீளவிடக்கூடாது என்றுதானோ என்னவோ இரயிலும் உடன் புறப்பட்டது. இரயில் சரியாக 8-க்குப் புறப்பட்டு விட்டது.

குழந்தாய்! இந்த நாட்டு இரயிலைப்பற்றிச்சிறிது சொல்லத்தான் வேண்டும். இந்நாட்டுக்கு இரயில்வந்து அறுபது ஆண்டுகள் ஆயின. முதலில் பிறைங்கிலிருந்து ஈப்போ வரையிலும், பிறகு கோலாலம்பூர் வரையிலும், பிறகு சிங்கப்பூர் வரையிலும் பாதை அமைத்தார்கள். நம் நாட்டில் நம் ஊருக்குச் செல்லும், தென் இந்தியப் புகைவண்டியாகிய சிறிய இரயில் (S. I. R) இருக்கிறதே அந்த அளவுதான் தாண்டவாளங்கள். வண்டிகள் அவ்வளவு அகலமாகக்கூட இல்லை. சற்றுக் குறைவுதான். இந்த நாட்டில் நல்ல சாலைகள் இருப்பதாலும், பல இடங்களுக்குப் 'பஸ்' வண்டிகள் செல்லுவதாலும் பெரும்பாலோர் இரயிலில் ஏறுவதில்லை. எனவே இரயிலில் கூட்டம் குறைவுதான். இரயிலில் அங்கிருப்பது போலவே முதல், இரண்டு, மூன்றுவது வகுப்புகள் உண்டு. மூன்றுவது வகுப்புக்கு கட்டணம் அதிகமாக இருக்கிறது. நம் நாட்டுக் கணக்குப்படி கல்லுக்கு ஒரு அணுவாகிறது. நம் நாட்டில் நான்கு அல்லது ஐந்து பைதானே மூன்றுவது வகுப்புக்கு. இரண்டாவது வகுப்பு, மூன்றுவது வகுப்புக்கு $1\frac{1}{2}$ மடங்கு; அதாவது 6 காசு (அணு $1\frac{1}{2}$.) நம் நாட்டில் $1\frac{1}{4}$ அணு தானே. முதல் வகுப்புக்கு $12\frac{1}{2}$ காசு ஆகிறது. அதாவது 0-3-3 அணு. நாட்டு விகிதம் 0-2-6 தானே. எனவே எல்லா வகையிலும் இங்கு இரயில் பிரயாணம் அதிக்செலவர்கவே இருக்கிறது. செலவானாலும் கெடுதலில்லை. இங்குள்ள இரண்டாவது வகுப்பு நம் நாட்டு மூன்றுவது வகுப்பைப் போலவே இருக்கிறது. உட்காரும் இடத்துக்கு மெத்தை ஒன்று கூட; அவ்வளவுதான். வண்டிகளும் தூய்மையாக இல்லை. அரை மணி நேரத்தில் வெறுங்காலோடு வண்டியில் இருந்தால் ஒரே கருப்பாகக் கால் அடி—உள்ளங்கால் மாறிவிடும். மூன்றும் வகுப்பு இடம் இன்னும் மோசமாக இருந்தது. எங்கும் ஒரே கரி. ஒரு மணி நேரமும் உட்கார முடியாது. நிற்க, இரவில் படுப்பதற்கு ஒரு வகை வசதி செய்திருந்தனர். பயணச்சீட்டுடன் கூட ஒரு வெள்ளி கொடுத்து விட்டால், இரண்டாம் வகுப்புக்குப் படுக்க இடம்

தருகிறார்கள், அந்தப் படுக்கை அறை நம் நாட்டு இரண்டாம் வகுப்பு போலத் தனித்தனியாக, விளக்கணைக்கும் வகையில் விசிறியோடு அமையவில்லை. மருந்தகங்களில் நோயாளிகளுக்குப் போட்டிருக்கும் படுக்கைகளைப் போல வரிசையாக இருக்கிறது. விளக்கு எரிந்து கொண்டு தான் இருக்கும்போலும். அடிக்கடி பலர் வந்து கொண்டே தான் இருப்பார்கள். முதல் வகுப்பு சற்று உயர்ந்ததாக இருக்கிறது. தனி அறை முறையில் உள்ளது. இத்துணையும் போர்க்காலத்துக்குப் பிறகாம். அதற்குமுன் இரயில் நன்கு இருந்ததாம். இந்த நிலையில்தானே என்னவோ பெரும் பாலான மக்கள் இரயிலில் ஏறுவதில்லை. இரயிலில் ஒரு கோடியில் ஏறினால் மற்றொரு கோடிவரை இடையில் பெட்டிகளைப் பிணைக்கப்பட்ட வழிகளால் தாண்டிச் செல்லலாம். இது இந்நாட்டு இரயில் நிலை. இத்தனைக்கும் இரயில்வே அரசாங்கத்தாரால் நடத்தப்படுகிறது.

அரசாங்கம் ஏற்று நடத்துதல் பொது உடைமைக்கு முதற்படி என்று கொள்ளுகின்றனர். நம் நாட்டில் கூட நகர 'பஸ்' களெல்லாம் இன்று அரசாங்கத்தால் நடத்தப் பெறுகின்றன. ஆனால் பொதுமக்கள், முன் பெற்ற சலுகைகளோ-சௌகரியங்களோ இப்போது பெறவில்லை என்று தானே கூறுகின்றார்கள். மக்களுக்கு அதிக நன்மை செய்யவேண்டும் என்று அரசாங்கம் எடுத்துக் கொள்ளட்டும் என்று கூறினால், மக்களுக்கு அதற்குப் பதில் அதிக தீமையல்லவா சேர்கிறது. இதற்குக் காரணம் எங்கே என்று அரசியலார் ஆராய வேண்டும். காரணம் கண்டு, காரணமாகியவற்றை விலக்கப் பாடு படவேண்டும். அந்த முறையில் அரசாங்கம் நடக்குமானால் பயன் உண்டு.

சிகாமட்:

குழந்தாய்! இந்த இரயிலில் தான்கோலாலம்பூரிலிருந்து சிகாமட் வரையில் பயணம் செய்தோம். திரு. அருணாசலஞ் செட்டியார் அவர்கள் மலாக்காவிலிருந்து, தம்பினில் வந்து கலந்துகொண்டார்கள். அனைவரும் இரண்டு மணிக்கு சிகாமட்போய்ச்சேர்ந்தோம். சிகாமட் ஊர்சிறியதாயினும்மிக அழகாகக் காணப்பட்டது. பலர் அறிமுகம் செய்யப்பட்டார்கள். அவர்களுள் ஒருவர் மருத்துவர். மற்றொருவர் ஆசிரியர் ஆவர். ஆசிரியர் மணியம் அவர்கள் தமிழை நன்கு பயின்றவராகத் தோன்றினர். அவர் தான் அன்றைய கூட்

டத்திற்குத் தலைமை தாங்கினார். கூட்டத்தில் 'தமிழ்ப்பணி' என்னும் பொருள் பற்றிப் பேசினேன். கூட்டம் முடிந்த பிறகும் வீட்டிலேயும் நெடு நேரம் திரு. மணியம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு உணவு கொண்டு உறங்கச் சென்றோம்.

குளுவாங்கில் கொண்டாட்டம்:

குழந்தாய்! இன்று காலை உறங்கி எழுந்தோம். இனிய ஊர்க்காட்சி என்னை ஈர்த்தது. ஆகவே சிறிது தூரம் நடக்க நினைத்தேன். திரு. இராமநாதன் அவர்களும் உடன் வந்தார்கள். உலாவி வந்தபிறகு கடன் முடித்துச் சிற்றுண்டி கொண்டோம். இன்று மாலை இங்கு, 'குளுவாங்கில்' பேச்சு இருந்தது ஆகவே பத்து மணிக்குப் புறப்பட்டோம். ஜோகூரிலிருந்து திரு. அழகப்ப செட்டியார் அவர்கள் வந்திருந்தார்கள் அவர்களது காரிலேயே புறப்பட்டோம். பன்னிரண்டு மணிக்கு இங்குவந்து சேர்ந்தோம். பகல் உணவுக்குப்பின் சிறிது ஓய்வு. பிறகு பலர் வந்தார்கள். பேசிக்கொண்டே இருந்தோம். கூட்டம் அவ்வூர் ஆங்கிலப் பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பள்ளியின் ஆசிரியர் திரு. வடிவேலர்தான் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவர் நண்பிற்குரிய ஒரு இளைஞர். கூட்டம் தொடங்குவதற்குமுன் அவரிடம் அதிகமாகப் பழகவில்லை. கூட்ட நிகழ்ச்சிகளில் அவர் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புப் பாடல்களும், சிறு சொல்லாட்ட நிகழ்ச்சிகளும் அவர் அவற்றை நடத்திய முறையும் மிக அழகாக அமைந்தன. 'தமிழர் வீரம், என்பது பற்றிப் பேசினேன். திரு. இராமநாதன் அவர்கள் 'தமிழர் வாழ்வு' என்பது பற்றிப் பேசினார்கள். இடையிடையே பாட்டும் பேச்சும் அமைந்ததால் 6-மணிக்குத் தொடங்கிய கூட்டம் இரவு 9-க்குத்தான் முடிந்தது

குழந்தைகளின் ஆடலும் இனிமையாக இருந்தது. இன்றைய கூட்டம் ஒரு நாடக அரங்காகவே அமைந்தது. அன்பர் வடிவேலனார் அருமுயற்சி போற்றத்தக்கது. இளம் குழந்தைகளை மனம் சலிக்கா வகையில் மூன்று மணி நேரத்துக்குமேல் வெறுஞ் சொற்பொழிவுகளை, அருஞ் நடிப்புகளுக்கு இடையில் கேட்க வைத்தார் என்றால் அது உயர்ந்த செயலல்லவா! ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் கடைசி வரையில்

அசையாது அப்படியே இருந்தனர். கூட்டம் முடிந்தபின் சிலர் அறிமுகமானார்கள்.

பிறகு வந்து உணவு கொண்டோம். உணவைச் சோற்றுக்கடையில் இருந்துகொண்டு வந்திருந்தார்கள். உணவு நன்றாக இருந்ததால் நான் அதைப் பாராட்டினேன் பாராட்டு பெற்றால் இனம் ஒரு வெள்ளி என்று அன்பர் வடிவேலர் அறிவுறுத்தி யிருந்தாராம். உண்மையிலேயே உணவு, கடை உணவாக இல்லாது வீட்டுணவாக இருந்தது. ஆகவே போற்றினேம். அப்போது வடிவேலர் இல்லை. வந்த பிறகு பணியாளர், போற்றலைக் கூறி ஒரு வெள்ளி, பரிசு பெற்றுக்கொண்டார். பிறகு அவரும் உணவு கொண்டார்.

உணவுக்குப்பின் வடிவேலர் வேடிக்கையாகப் பலவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். நாங்கள் மிக மகிழ்வோடு கேட்டுக் கொண்டிருந்தோம்.

ஜப்பானியர் ஆட்சிக்காலத்தும், போர்க் காலத்தும் அவர் இந்நாட்டில் வாழ்ந்த வாழ்க்கை, வியப்பும் பயமும் ஒருங்கே கலந்ததாகக் காட்சி அளித்தது. அவர் அன்று நடத்திய வாழ்க்கையை வேடிக்கை கலந்த மொழியில் விளக்க உரைத்தார். மணி 11-15 ஆயிற்று. திரு. இராமநாதன் அவர்கள் கோலாலம்பூர் செல்லவேண்டி இருந்தது. அவர் இரயில் 11-30க்கு. ஆகவே எல்லோரும் சென்றோம். இரயிலும் வந்தது. அப்போது தான் முதல் இரண்டாம் வகுப்புப் படுக்கை முறைகளைக் கண்டேன். நான் 23-6-48-ல் கிள்ளானில் தான் கப்பல் ஏறவேண்டும் என்ற முடிவினைச் செய்தனர். ஆகவே நான் மறுபடியும் கோலாலம்பூர் வருவதாகக்கூற திரு. இராமநாதன் அவர்களும் சென்றார்கள்.

திரு. வடிவேலர் அவாகள் தம் கதையைத் தொடர்ந்து சொன்னர். 12-க்கு மேலாகிவிட்டதால் முடிக்க முடியவில்லை. மற்றும் அவர் அங்கு சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் தேர்வுகளுக்குப் படிக்கவேண்டும் என்றார். நான் ஆவன செய்வதாக உரைத்தேன். பிறகு இரவு 12-மணிக்குமேல் அவர் விடைபெற்றார். நாங்கள் படுத்துக் கொண்டோம். நாளை ஜோகூர், சிங்கப்பூருக்குப் போகிறேன். அடுத்த கடிதம் ஜோகூர் அல்லது சிங்கப்பூரிலிருந்து எழுதுகிறேன். எனது பயணம்பற்றி அடுத்தகடி

தத்தில்தான் திட்டமாகஎழுதமுடியும். எப்படியும் 5-7-48க்குள் அங்கு இருப்பேன். பிற அடுத்த கடிதத்தில். நீ 28-6-48ல் சென்னை வந்து பள்ளிக்கூடத்தில் சேரவேண்டும் அல்லவா! ஆம்! மறவாதே. அன்றே வந்து சேர்ந்து விடு. நான் வர நாளாயினும் கவலற்க. அம்மாவோடு சென்னைவந்து, வகுப்பில் சேர்ந்துபடி. பயன்பெறு.

கடிதம் **20**

ஜொகூர்பாரு
26—6—48

அன்பின் குழந்தாய்!

குழந்தைகளைப் போற்றுகின்றனர்.

மலேயா மண்ணிலிருந்து எழுதும் கடைசிக் கடிதம் இதுவாகத்தான் இருக்கும். நாளைக்காலை கப்பலில் இருப்பேன். அங்கு வெள்ளி அல்லது சனிக்கிழமை காலை திட்டமாக வருவேன்.

குளுவாங் கூட்ட முடிவுக்குப் பின் நான்கு நாட்களாக ஒன்றும் எழுத முடியவில்லை. ஓய்வில்லாது பல நண்பர்களைக் காணச் செல்லவேண்டி இருந்தது. பல அலுவலகங்கள் செல்லவேண்டி இருந்தது. தொடர்ந்து மூன்று நாட்கள் கூட்டமும் இருந்தது.

23—6—48 காலை குளுவாங்கில் துயிலெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, சிற்றுண்டி கொண்டோம். முன்னாள் திரு வடிவேலு அவர்கள் தம் பள்ளியைக் காண வருக என்று சொல்லிச் சென்றார். அவர் அன்பின் வழிக் கட்டுப்பட்ட நாங்கள் 9-மணிக்குப் பள்ளிக்கூடம் சென்றோம். அது ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடம். அங்கு நாங்கள் சென்றபோது தலைமை ஆசிரியராகிய சீனர் இல்லை. பல ஆசிரியர்கள் இருந்தனர். அவருள் ஒருவர் நம் கல்லூரி ஆசிரியரின் மைத்துனர். மற்றொருவர் யாழ்ப்பாணக்காரர். திரு. வடிவேலு அவர்கள் அனைவரையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். அப்பள்ளிக்கூடம் வெளியிடும் கட்டுரை நூல் ஒன்றும் கொடுத்தார்கள். சில வகுப்புக்கள் நடப்பதையும் கண்டோம். இடைவேளையில் குழந்தைகளுக்கும் பால் தருகிறார்கள். டின் பால்தான் என்றாலும் நன்றாக இருக்கிறது. நான் அதைச் சுவை பார்க்கவேண்டு

மென்றே விரும்பிப் பார்த்தேன். இப்படிப் பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேருக்கும், மலேயா நாட்டில் இடைக்கால ஓய்வில் பால் தருகின்றார்கள் அரசியலார். குழந்தைகள் விருப்பத்தோடு உண்கின்றன. பால் இனிமையாகவும் விரும்பத்தக்கதாகவும் இருந்தது. 10-30-க்குச் செல்லுகின்ற இரயிலில் செல்ல வேண்டி இருந்ததால் விரைந்து விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். இரயிலடிக்குச் சென்றோம். இரயில் காலம் தாழ்த்து வந்தது. அந்த வண்டி சாமான்களை ஏற்றி வருவது. அத்துடன் இரண்டு பெட்டிகள் மக்கள் ஏற இணைத்துள்ளார்கள். அதில் முதல் இரண்டு வகுப்புக்கள் கிடையா! வேறு வழி இன்றி மூன்றாவது வகுப்பில் ஏறினோம். அந்த வகுப்பைப்பற்றி முன் கடிதத்தில் குறித்திருக்கிறேன் அல்லவா! சாமான்கள் ஏற்றி வரும் அந்த வண்டியில் ஏறுபவர்களையும் அச்சாமான்களை ஒப்ப எண்ணுவார்கள் போலும். மிக அழுக்கடைந்த அறையில் ஆமை வேகத்தில் எப்படியோ 2-30-க்கு ஜோகூர் பார் வந்து சேர்ந்தோம். திரு. அழகப்ப செட்டியார் 'கார்' வந்திருந்தது. வீடு சென்றோம். அன்பர் அழகப்பர் அதுவரை எங்களோடு உண்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். உண்டோம். சிறிது நேரம் ஓய்வு கொண்டிருந்தோம்.

ஜோகூர்பார் என்பது மலாய் நாட்டின் தென் கோடியாகும். அதற்கு அடுத்துத தான் சிங்கப்பூர்த் தீவு இருக்கிறது. நம் நாட்டிலே சாதாரணமாகச் சிங்கப்பூர் பினாங்கு என்றால் தானே தெரியும். ஆனால் இரண்டும் மலாய் நாட்டிலே இருந்து விடுபட்ட தனித் தீவுகள். தென் கோடியிலே சிங்கப்பூர். வட கோடியிலே பினாங்கு. இவற்றின் இடையிலே ஐந்நூறுகல் அளவுக்குப் பரந்த மலேயா. சிங்கப்பூர்த் தீவினை மலாய் நாட்டோடு பாலத்தின் மூலம் இணைத்து விட்டார்கள். இடையில் இருக்கின்ற கடல் நம் பாலாறு அவ்வளவு அகலந்தான் இருக்கும். பினாங்குக்கும் பெருநிலத்துக்கும் இடைவெளி மூன்று கல் இருப்பதால் அது அடைபடவில்லை; கப்பல் செல்லுகிறது. சிங்கப்பூர், ஜோகூரிலேதான் இணைக்கப்பட்டிருகிறது. சிங்கப்பூரும் பினாங்கும் சுங்க மற்ற தனித் துறைமுகங்கள். ஆனால் மலாய் நாட்டில் செல்லுங்கால் சில பொருள்

களுக்கு, வரி செலுத்தவேண்டும். இங்கு அதற்கு ஒரு சுங்கச் சாவடி உண்டு. இது ஒரு விந்தைதான். ஏறக்குறைய ஒரே நாடாக அமைந்த இவற்றுள் தனிப்பட இரு தீவுகளுக்கு ஒருமுறை. மற்றவற்றிற்கு ஒரு முறை. ஆட்சி முறையும் அப்படித்தான் போலும். சிங்கப்பூர் தனிக் காலனியாக உள்ளது. பினங்கு சில காலத்துக்கு முன்தான் — போருக்குப் பின் பெரு நிலத்தோடு இணைக்கப்பட்டது. பெருநிலம் என்று எழுதும் போதெல்லாம் உண்மையிலே மகிழ்கின்றேன். ஆசியப் பெருநிலத்துத் தென் கிழக்குக் கோடியாக அமைகின்றதல்லவா இது. மலைகளையும் காடுகளையும் கடக்க வாய்ப்பு நேருமேல் நம் தாயகத்திலிருந்து இங்கு நில வழியாகக்கூட வரலாமே. இடையிலே பர்மா - சையாம் இரண்டு நாடுகள் கடக்க வேண்டும். சிங்கப்பூர் இப்பெரு நிலத் தென் கிழக்குக் கோடியில் அமைந்த தீவு. உலகத்தே சிறந்த வாணிக நிலைக்களனாக விளங்குவது. அம்மம்ம! இங்குள்ள கப்பல் பெருக்கைத்தான் முன்பே எழுதி இருக்கிறேனே! போர்க் காலத்திலும் இதன் வீழ்ச்சி ஆங்கிலேயரை வாடச் செய்ததே! குழந்தாய்! மலேயாவில் கால்வைத்துப் புறப்பட்ட அதே கோடிக்கு வந்துவிட்டேன்.

புறப்பட ஏற்பாடு :

23-6-48 மாலை, ஓய்வு கொண்ட பிறகு, எனது பயணத்தைத் திட்டமாக முடிவு செய்வதற்காக, சிங்கப்பூர் புறப்பட்டோம். நல்ல வேளையாக இங்கே இன்று கூட்டம் கிடையாது. இங்குள்ள இந்திய அலுவலகத்தின் மூலமாகப் பயணச்சீட்டு வாங்கவேண்டும் என்று சென்றோம். இந்திய மக்கள் நலனைக் காப்பதற்காக நாடுதோறும் தக்க அறிஞர்களை நம் நாட்டு அரசியலார் ஏற்பாடு செய்திருக்கிறார்களல்லவா! அந்த முறையில் இங்கிருப்பவர் தான் 'திவி'. அவரைப்பற்றி முன்னமே எழுதியிருக்கிறேனே. அவர் தம் அலுவலகத்திற்குச் சென்றோம். பயணச்சீட்டு முதலியன வாங்கித் தருபவரைக் கண்டோம். அவர் நம் கல்லூரி ஆசிரியர் ஒருவரின் அண்ணா். மகிழ்ந்து வரவேற்று அமெரிக்கக் கப்பலுக்கு இடம் ஏற்பாடு செய்தார். மறுநாள் காலையில் திட்டமாகத் தெரியும் என்றும், அப்போது பயணச் சீட்டு வாங்கலாம் என்றும் அறிந்தோம். பிறகு பல இடங்களுக்குச் சென்றோம்.

டாக்டர் சங்கரர் அவர்களைக் கண்டோம். இன்னும் பல அறிஞர்கள் அறிமுகமாயினர். 'இந்தியன் ஓவர்சீஸ், பாங்கி'யில் இந் நாட்டுப் பொறுப்பாளராக உள்ள திரு. அரசு அவர்களைக் கண்டோம். பிறகு அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு இன்னும் பலரைக் கண்டு விட்டு ஜோகூர் வந்தோம். உண்டு உறங்கினோம்.

செல்வி !, மறுநாள் (24-6-48) படுக்கை விட்டெழுந்து கடன் முடித்துப் பயணச்சீட்டு பெறவேண்டிய அவசியத்தை எண்ணிப் பத்து மணிக்கு அங்கிருந்து சிங்கப்பூர் சென்றடைந்தோம். நல்ல வேளையாக அமெரிக்கச் கப்பல் ஒன்றில் முதல் வகுப்புப் பயணச்சீட்டு எனக்குக் கிடைத்தது. அது 27-6-48-ல் புறப்படுகிறது. எப்படி வந்தேனோ அப்படியே திரும்ப நேர்ந்தது. கோலாலம்பூர் அன்பர்களெல்லாம் உடனிருந்து வழியனுப்ப வேண்டும் என்ற பெருவிழைவில் நான் வந்தக் கப்பலில், திரும்பும் காலை, அங்கு கோலக்கிள்ளானில் (Port swetenham) இருந்து வழியனுப்ப விருமபினார்கள். ஆனால் அது இரண்டாந்தேதி தான் புறப்படுகிறது. எனவே நான் இந்த அமெரிககப் கப்பலைக் (Carrick bnd) கொள்ள வேண்டியதாயிற்று. இது, சிங்கப்பூரை விட்டால் நேராகச் சென்னைக்குத்தான். பெரும்பாலும் 2-7-48 ல் அங்குவந்துவிடும். எனவே கல்லூரிக்கு நான் அதிக நாள் விடுமுறை பெறவேண்டிய தேவை இல்லை. கடமையை ஆற்றக் குறித்த நாளில் -திறக்குங் காலையே வர இயலவில்லை. முயன்றும் வழி கிடைக்கவில்லை, இப்போதாவது கிடைத்ததே என எண்ணினேன். இதுவும் இல்லை என்றால் வான்வழி வரவே முடிவு செய்தேன். கிடைத்தது நல்லதாயிற்று. பயணச்சீட்டு வாங்கிய பிறகு பல நண்பர்களைக் கண்டோம். பகல் உணவு திரு. நடராசன் (சுப்பையாவின் தந்தை) அவர்கள் வீட்டில் ஏற்பாடாகி இருந்தது. உணவு உண்டு சற்று உறங்கினேன். மிகவும் அசதியாக இருந்தது. பிறகு நான்கு மணிக்கு எழுந்து எழுத வேண்டிய கடிதங்கள் சில எழுதினேன். ஊருக்குத் தகவல் எழுதினேன். அன்று மாலை 6 மணிக்குச் சிங்கப்பூர் செட்டியார் கோயிலில் கூட்டம். ஆகவே அதற்காகச் சென்றோம். பொதுவாகத் தமிழ்மொழி பற்றிப் பேசினேன். பலர் வந்திருந்தனர். பத்திரிகையில் பார்த்துக் காண

வேண்டும் என்ற விருப்பத்தால் 'வாசனு' கப்பலின் மருத்துவர் (Doctor) வந்து இருந்து சென்றார். கூட்டம் முடிந்த பின் அங்கேயே திரு. சண்முகம் செட்டியார் அவர்கள் வீட்டில் உணவு கொண்டோம். பிறகு ஜோகூர் பாருக்கு வந்தோம். அன்று அயர்ச்சி நீங்கவில்லை. சற்று தலைவலியும் இருந்தது. எனவே மணி 10-30-க்கு மேலாகியும் கூடக் கடற்கரையில் காற்று வாங்குவதற்காக நானும் அன்பர் அழகப்பரும் சென்று 12 மணிவரை பேசிக் கொண்டிருந்தோம். மலேயாநாட்டு வளப்பம், மலேயாவில் தமிழ் மக்களது அன்றைய வாழ்வு, இன்றைய நிலை, ஜோகூர் சுல்தானிடமிருந்து சிங்கப்பூரை ஆங்கிலேயர் பெற்ற வரலாறு, மலேயாவில் டச்சு, போர்ச்சுக்கல் ஆட்சி முதலிய பல பொருள்களைப் பற்றி எல்லாம் அன்பர் அவர்கள் நன்கு விளக்கினார்கள். அந்த நடு இரவில் நீல விளக்குகள் நெடுகத் தெரியக் கடற்கரை அழகாகத் தென்பட்டது. அவ்வூர். வானிலே மதி வந்தது. கடல் பெருகிற்று, நாங்கள் தங்கிய ஒரு மணி நேரத்திற்குள் குறைந்தது மூன்றடியாவது பெருகி இருக்கவேண்டும் என்று கண்டேன். குழந்தாய்! எங்கள் பேச்சு, முன்னே நான் சிங்கப்பூரைப் பற்றிக் குறித்தபோது கண்ட மக்கள் வாழ்வுபற்றி மாறியது. சீன நாட்டுப் பெண்கள் சில ஆண்டுகளுக்கு முன் தெருவில் தலை காட்டுவதும் அருமை என்கின்ற முறையிலே வளர்ந்தார்கள். சீன ஆண்மக்களும் செம்மையில் இருந்தார்களாம். ஆனால் காலம் வெகு விரைவிலே அக்காட்சியை மாற்றி விட்டது. பத்தாண்டுகளுக்குள் இப்படிப் பார்க்கத் தரும் நிலைவரும் என்று நினைக்கமுடியவில்லை என்றார் அவர். அந்நேரத்திலும் எதிரே இருந்த சீனர் உணவுவிடுதியில் ஆடலும் பாடலும் அமைதிபெறவில்லை. விடுதியின் நடுவிலே சீன மக்களைத் திருத்திய 'சன்யாட்சன்' படம் அழகாக மாட்டப் பட்டிருந்தது. சன்யாட்சன் சீனமக்களைத் திருத்திய பேரறிஞன். ஒவ்வொரு நாட்டிலும் நிலை கெடுங் காலத்து அறிஞர்கள் தோன்றி ஆக்கப்பணி செய்கிறார்கள். எப்படியோ நாடுதோறும் கண்மூடி வழக்கங்கள் மலிகின்றன. அவற்றை மண் மூடச் செய்வது அறிஞர்தம் கடனாகின்றது. இங்கு சீன நாட்டுக் கண்மூடி வழக்கங்களாகிய பெண்ணடிமை—அறியாமை போன்ற

திமைகளை நீங்கிய பெருமை சன்யாட்சன் அவர்களுக்கே உண்டு. அவரைப்பற்றித் தனியாக நன்கு விளக்குகிறேன். அவர் படம் கண்டோம். களித்தோம். ஆனால் அவன் விரும்பிய விடுதலை வேறு வகையிலே மாறிவிட்டதை எண்ணாதிருக்க இயலவில்லை. சீர்திருத்தக்காரர்கள், அறிஞர்கள் நாடு நலம் பெறப் பல புது வழி காண்கிறார்கள். ஆனால் அவ்வழிகளைப் பின் பற்றுகின்றவர்கள் வழுக்கி வீழ்கிறார்கள். இது உலகம் கண்ட ஒரு உண்மை வரலாறு. இந்த மாற்றமும் அதை நினைவூட்டிற்று. மணி 12 ஆகிவிடவே நாங்கள் வந்துபடுத்துக் கொண்டோம்!

அரசி! நேற்று 25-6-48 காலை முறைப்படி கடன் முடித்துப் பத்து மணிக்குச் சிங்கப்பூர் புறப்பட்டோம். இந்த நாட்களிலெல்லாம் திரு. அழகப்பர் அவர்கள் எங்களோடேயே இருந்து, எங்களில் ஒருவராகி வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்.

சிங்கப்பூர் கண்காட்சி:

சிங்கப்பூர் புறப்பட்ட நாங்கள் நேரே நகரக் கண்காட்சிச் சாலைக்குச் சென்றோம். இதற்கு முன் நான் கண்ட காட்சிச்சாலையைப் பற்றி எழுதினேனே நினைவிருக்கிறதா! எண்ணிப் பார். தைப்பிங் என்ற ஊரில் கண்ட காட்சிச்சாலை அது. இங்கே சிங்கப்பூர் காட்சிச்சாலை தைப்பிங் போன்று அவ்வளவு பெருஞ் சிறப்பாக எனக்குத் தோன்றவில்லை. காரணம், பலவற்றை நான் பார்க்க முடியவில்லை. காட்சிச்சாலைக் கட்டிடத்தைப் பழுது பார்த்துக்கொண்டும் வெள்ளை அடித்துக் கொண்டும் இருந்த காரணத்தில் பல பொருள்கள் எடுத்துவைக்கப்பட்டிருந்தன. பல அறைகள் மூடிக்கிடந்தன. என்றாலும் ஒருமணி நேரத்திற்குமேல் உள்ளிருந்து பலவற்றைக் கண்டு கொண்டேதான் இருந்தோம். கடல் படு பொருள்களும் மீன்களும் மிக அதிகமாக இங்கே இருந்தன. தைப்பிங்கில் கூட அவ்வளவு இல்லை. அத்துடன 'பட்டாம்பூச்சி' வகைகள் அதிகமாக இருந்தன. பல மிருகங்களது இறந்த உருவங்கள் வைக்கபபட்டிருந்தன. ஜாவா மக்களது வாழ்வை விளக்கும் பல பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. போர்னியோவில் வாழும் மக்களும் மாலாய் காரர்களும் நெருங்கிய தொடர்புடையவர்களாம். ஆகவே அவர் தம் வாழ்வும் பல பொருள்களில் விளக்கப் பட்டிருந்தது. பிறகு மணி ஒன்றாகிவிடவே திரு. அரசு.

அவர்கள் வீட்டிற்கு உணவுக்குச் சென்ருேம். அங்கு அவர்களுடனும் உடன் வந்திருந்த திருவாளர்கள். சண் முகம், இலக்குவன் ஆகியோருடனும் பேசிக் கொண்டே உணவு உண்டோம். பிறகு அவர்களிடம் விடை பெற்று நேரே ஜோகூர்பாருக்குச் சென்ருேம். அன்று மாலை அங்கு மாரியம்மன் கோயிலில் கூட்டம். சற்று ஓய்வு கொண்டு, கூட்டத்திற்காகப் புறப் பட்டோம். 5 மணிக்குக் கூட்டம். 'கூட்டு வாழ்வு' என் னும் பொருள் பற்றிப் பேசினேன். இந்தக் கூட்டத் திற்குத் தலைமை வகித்தவர், இவ் ஊர் மருந்தகத்தின் பெரு மருத்துவர். சென்னையைச் சேர்ந்தவர். டாக்டர். சர்மா என்பவர். அவர் வீட்டிற்குக் கூட நேற்றுக் காலை சென்றிருந்தோம். அவரிடம் பலவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். மலேயாவிலேயே இந்த மருந்தகம் தான் மிகப் பெரியதென்று முன்னமே கூறி இருக்கிறேன் அல்லவா. அதன் பல பகுதிகளையும் கண்டோம். அந்த மருத்துவர் நல்ல முறையில் உபசரித்தார். நிற்க, நான் சென்ற கப்பலில் என் அறையில் ஒரு மருத்துவர் இருந் தார என்று எழுதினேன் அல்லவா? அவர் இங்கேதான் இருப்பதாகச் சொன்ஞர். எனவே அவரைப் பற்றி திரு. சர்மா அவர்களை விசாரித்தேன். அவர்கள், என்னுடன் வந்த புருஷோத்தமன் டாக்டர் அல்லர் என்றும், கட்டுக் கட்டுபவர் (Dresser) என்றும், இப்படித்தான் இங் குள்ளவர்கள் தங்களைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்வார்கள் என்றும் கூறினுர். நான் வியந்தேன். ஏன்? உள்ளதை உரைத்தால் என்ன என்று என் மனம் எண் ணிற்று. இப்படி இல்லாத ஒன்றைத் தம்மேல் ஏற்றிப் பெருமைப் படுத்திக் கொள்வது தங்களுக்குச் சிறந்தது என்று, பாவம் இவர் மட்டும் அல்ல, உலகில் பலர் எண்ணு கிருர்கள். அவருள் ஒருவர் தான் டாக்டர்—இல்லை— டிரசர் புருஷோத்தமன் என்று எண்ணினேன்.

நாட்டு அளவைகள் :

கூட்டம் முடிந்த பின் உணவு கொண்டோம். மற்ருெரு நண்பர் தம் மளிகைக் கடைக்குப் போனேம். அங்கே இந் நாட்டு நிறுத்தல்-முகத்தல் அளவைகளைப் பற்றி அறிந்து கொண்டேன். நிறுத்தல் அளவையைக் 'கட்டி' என்று கூறினுர்கள். கட்டி என்பது நம் நாட்டின் அளவிற்குப்

18 பலம். 100 கட்டி கொண்டதை ஒரு பீக்கில் என்று வழங்குகிறார்கள், அது 133 பவுண்டாகும். ஒரு பவுண்டு ஏறக்குறைய 13 பலம் என்பது தெரியுமே. இது நிறுத்தல் அளவை. இனி முகத்தல் அளவையைக் 'கந்தம்' என்று அழைக்கிறார்கள். கந்தம் என்பது நமது ஊர்களில் ஆளுக்குப் படி கொடுக்கும் மரக்கால் அளவு உள்ளது. சென்னைப்படி $2\frac{1}{2}$ கொண்டது. ஆனால் இங்கே நம் நாட்டில் கோபுரமாக அளப்பது போல அளக்கவில்லை. தலையைத் தட்டி அளக்கிறார்கள். அதற்கு ஒரு பலகை உண்டு. அதனால் தட்டித் தலைமட்டம் தான் அளக்கிறார்கள். அப்போது சென்னைப் படி இரண்டுதான் கணக்கு. நம் நாட்டில் கிடைக்கும் எல்லாவித உணவுகளும் இங்கே உண்டு. விலைகள் சற்று கூட; அவ்வளவுதான். அந்தக் கடை நண்பரோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து நேரமாகிவிட்டபடியால் வந்து படுத்துக் கொண்டோம்.

கடைசி நாள் :

குழந்தாய்! இன்றுதான் நான் இம்மண்ணில் இம் முறை முழுதும் கழிக்கும் நாள். நாளை காலை 8-மணிக்குத் துறைமுகத்தில் இருக்கவேண்டும். கப்பல் புறப்படும் நேரம் காலை 10-மணி. ஆகவே உனக்கு இங்கிருந்து அனுப்பும் கடிதமும் இதுதான். இன்று காலை முறைப் படி அனைத்தும் முடித்து, பகல் 10-மணிக்குச் சிங்கப்பூருக் குப் புறப்பட்டோம். இரவு அங்கேயே தங்கி அப்படியே கப்பலுக்குப் போக வேண்டி இருந்ததால் எல்லாச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டோம். சிங்கப் பூரில் தேவையான சில சாமான்கள் வாங்கினோம். உனக் குக்கூடக் சில விளையாட்டுச் சாமான்கள் வாங்கினோம். பல கடைகளைக் கண்டோம். வந்தநாள்முதல் நண்பர் மேல் நண்பர் விருந்துக்கு அழைத்தமையால் சோற்றுக் கடை யின் (ஓட்டல்) உணவு எப்படி இருக்கிறது என அறிய முடியவில்லை. அதையும் அறிய விரும்பினேன். ஆகவே நாங்கள் 'கிருஷ்ண விலாஸ்' என்கிற ஒரு நம் நாட்டுச் சோற்றுக் க்டைச்குச் சென்றோம். நாகப்பட்டினத்தைச் சேர்ந்த ஒருவருடைய கடை அது. உணவு நன்றாகவே இருந்தது. ஒரு சாப்பாட்டுக்கு ஒருவெள்ளி (ரூ. 1-8-0) இந் நாட்டுக்கு இது சாதாரணம். இங்கு உணவுக்கட்டுப்பாடு

அளந்து சோறு போடும் நிலையில் இல்லையாதலால் அள விலா உணவுதான் பெற்றோம். இந் நாட்டில் நல்ல நெய் தான் அதிகமாகக் கிடைப்பதில்லையே. நல்ல நெய் அதிக மாகக் கிடைக்கும் நம் நாட்டிலேயே டின் நெய் உபயோகிக் கும் விடுதிகள் நிரம்ப இருக்கும்போது, இந்நாட்டுச் சோற் றுக் கடையில் நல்ல நெய் எதிர்பார்ப்பது எப்படி? அந்த ஒரு குறையைத் தவிர மற்ற வகையில் உணவு நன்கு அமைந்தது; உணவு கொண்டோம்.

பிறகும் நான்குமணிவரை பல கடைகளைக் கண்டு விட்டு, டாக்டர் சங்கரர் வீட்டுக்குச் சென்றோம். அவர் சிற்றுண்டி அளித்தார். உண்டு பிறகு 6-மணிக்கு அருகே உள்ள இராமகிருஷ்ண மடத்துக்குச் சென்றோம், அங்குதான் அன்றைய கூட்டம். இப்பயணத்தின் இறு திக் கூட்டம். அன்று கூட்டத்தை முன்னின்று நடத்தி யவர் இங்குள்ள 'தமிழ்முரசு' என்ற தினத்தாளின் உரிமை யாளர் திரு. சாரங்கபாணி அவர்கள். அவர் முன் எச்சரிக்கை யின்றியே என்னை 'மலேயா மக்கள் நிலைமையும் கடமையும்' என்று பேசச் சொன்னார். பேசினேன். ஒரு திங்களாகக் கண்ட அத்துணை அனுபவத்தையும் ஒருவாறு உணர்த் தினேன். ஏழைகள் உயர்வு, கல்வி வளம், இனஒற்றுமை, செல்வவளம் அனைத்தும் இங்குள்ள தமிழரை வாழவைக் கும் என்றும், அதற்காவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். குழந்தாய்! கூட்ட முடிவில் பல ரைக் கண்டேன். அவர்களில் ஒரு இளைஞன் உருவம் என் னைப் பிணித்தது. யார் என்றேன்? அறிந்தேன். பத்து ஆண்டுகளுக்கு முன் அவன் பத்துவயதுச் சிறுவனாயிருந்த போது, காஞ்சிபுரத்தில் அவன் பெற்றோர்கள் அவனை என்னிடம் ஒப்படைத்துப் படிக்க வைத்தார்கள். நான் காஞ்சியில் அப்போது நடத்திய விடுதியில் அவனைச் சேர்த்து வைத்திருந்தேன். அவன் பெற்றோர் கோவையில் இருந்தார்கள். அவனும் அவன் அண்ணனும் காஞ்சியில் இருந்தார்கள். அவன் அதைக் கூறிய பிறகு உணர்ந் தேன். அவன் தந்தை இறந்தார் என்றும், அண்ணன் பம்பாயில் இராணுவத்தில் இருப்பதாகவும் கூறினான். உண்மையில் உளம்கனிந்து அவனை வாழ்த்தி வந்தேன். திரு. இலக்குவன் அவர் தம் இல்லிலே உணவு கொண் டேன். அன்பர் அழகப்பர் மலாய் நாட்டை விட்டுப்

புறப்படுமுன் மற்ளுெரு குறையையும் முடிக்க வேண்டும் என்றார். அதுதான் அந்த ஊரில் உள்ள படக்காட்சியைக் காண்பது.

படக்காட்சி :

படக்காட்சி என்றால் வெறும்படம் மட்டும் பார்ப்பதல்ல அவர் கருத்து; அந்தக் கட்டிடத்தையே பார்க்க வேண்டும் என்றார். சிங்கப்பூர் கட்டிடங்கள் அத்தனையிலும் மிக உயர்ந்த கட்டிடம் அந்தப் படக் காட்சி நடக்கும் இடம் தான். பதினான்கு அடுக்குகள் மாடி, மிக மிக உயர்ந்தது. நான் கப்பலில் வந்த போது அதைத்தான் முதலில் கண்டு கேட்டேன். ஆனால் அதனுள் சென்று காண வாய்ப்புப் பெறவில்லை. அன்பர் அழகப்பர் அந்த வாய்ப்பினையும் கொடுத்தார். உணவுண்டு அவருடன் அந்தக் கட்டிடம் சென்றேன் அண்ணாந்து பார்க்க முடியவில்லை. அடித்தளம் இரண்டிலும் காட்சிச்சாலைக்கு உரிய அமைப்புகள். மேலே நடனசாலைகள்; மதுக்கடைகள்; உணவுவிடுதிகள் அதற்கு மேலே பல ராணுவ அலுவலகங்கள், இப்படி எல்லா விடங்களும் நிறைந்திருந்தன. கட்டிட அமைப்பு கண்ணைக் கவர்ந்தது. ஒரு மலைச் சாரலில் அழகாக, அடுக்காக அமைக்கப்பட்ட கட்டிடம் அது. நாங்கள் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தோம். படக்காட்சி 9-30 க்கு. ஆங்கிலம் படம். சீட்டு வாங்கிக்கொண்டு உள் சென்று உட்கார்ந்தோம். பல சீன, ஆங்கில நாட்டு மக்கள் - ஆடவரும் பெண்டிரும் அணி அணியாக அமர்ந்திருந்தார்கள். முன் விளம்பங்கள்; பின் படம். படம் மிகக் குறைந்த அளவில் 11-30 க்குள் முடிந்துவிட்டது. ஒரு ஆங்கிலக் கதைக் அது. அந்தக் கொட்டகை முழுதும் வெப்ப தட்ப நிலைகேற்ற முறையில் (Air Conditioned Room) ஆக்கப்பட்டது. உள்ளே வெப்பம் தெரியாது இனிமையாக இருந்தது. அத்தனைப் பெருங்கூட்டம் இருந்தும் ஒரு சிறு ஒலியும் இல்லாது படம் ஓடிக்கொண்டிருந்தது 'சத்தம் செய்யாதீர்கள்' என்ற எச்சரிக்கை இங்கு தேவை இல்லை. படம் முடிந்தும் வீடு வந்தோம் அந்தப் பன்னிரண்டு மணி வேளையிலும் ஓயாது 'கார்' சென்றது கண்டு வியந்தேன் இந்நாட்டு வரியில் முதல் இடம் 'கார்' மூலமாகப் பெறும் வரியாகத்தான் இருக்குமோ என்று கூட யோசித்தேன், நான்கைந்து நாட்களாகத் சிங்கப்பூர்

தெருவு தோறும் செல்லும் காலத்து, அப்பப்ப எத்தனைக் கார்கள். எண்ண முடியாது. கடைத்தெருவிலோ பிற இடங்களிலோ கார்களை விட்டுவைக்கவும் முடியாது. எங்கும் கார் மயம். இந்தக் கார்களை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக நிறுத்தினால் அந்தத் தொடர் சிங்கப்பூரையும், பினாங்கையும் ஒன்று சேர்த்துக்கூட வைக்க உதவும் போலும். கோலாலம்பூர், பினாங்கிலும் இதே முறையில் 'கார்' கூட்டம். பல நாட்டுக் 'கார்'களும் இங்கே வாங்கலாம். விலைகூட நம் நாட்டைக் காட்டிலும் குறைவுதான். இந்த நிலை கண்டுகொண்டே சென்றோம். வழியிலே கார் விற்பனை செய்யும் இடங்கள் பல இருந்தன இரவெலாம் கூடக் கண்ணாடிக் கதவுகளுக்கு இடையே 'கார்'கள் காட்சி அளித்தன. பலப்பல கண்டோம். சென்னையில் கார் கிடைக்கவில்லையே என எண்ணி வருபவர்கள் பலர் இங்கு வந்தால் வாங்கிச் செல்லலாம். அங்கு, சுங்க வரி கொடுத்தாலும் அந்த நாட்டு விலைக்குக் குறைவாகத்தான் இருக்கும். கிடைக்கவில்லை என்ற கவலையும் நீங்கும்.

இப்படி இரவிலேயும் பகலிலேயும் வேறுபாடு காணா வகையிலே விளங்கிற்று சிங்கப்பூர். வாடகைத் தனி மோட்டார்களும், பஸ்களும் கூட 12-மணிக்குத் தெருவில் சென்றன என்றால் - பல உணவுக் கடைகளும், நடன சாலைகளும் மின்விளக்கோடு விளங்கின என்றால் இதை இராப்பகல் அற்ற இடம் என்றுதானே சொல்லவேண்டும். இந்தக் கடைசி இரவினைப்பற்றி எண்ணிக்கொண்டே நானும் அழகப்பரும் வீடு சென்று சேர்ந்தோம். இதோ இந்தக் கடிதத்தை எழுதி முடித்து, நாளை காலையில் தபாலில் அனுப்ப வேண்டியதாகையால் ஆவன செய்து படுத்துக் கொண்டேன். நாளை 8-மணிக்குக் கப்பல். அடுத்து எழுதும் போது கடல்மேல் இருப்பேன். கலத்திருந்து கலந்தனுபவம்பற்றி நேரில் கொண்டுவருகிறேன். சென்னையில் சனிக்கிழமைக்குள் இருப்பேன். பிறநேரில்.

கப்பல் ஏறிவிட்டேன்

குழந்தாய்!

இன்று காலை சற்று விடியலிலே எழுந்தேன். 7-30க்கெல்லாம் துறைமுகம் செல்லவேண்டி இருந்ததால் காலைக் கடன்களை விரைந்து முடித்தேன். பிறகு அனைவரும் எழுந்தார்கள். எல்லாச் சாமான்களையும் கட்ட ஏற்பாடு செய்தேன். தெலுக்கான்சன் கண்ணப்ப செட்டியாரைப்பற்றி முன் குறித்திருந்தேன் அல்லவா! அவர் சிங்கப்பூர் வந்திருந்தார். வழியனுப்ப திரு உ. அரு. அருணசலஞ் செட்டியார், அழகப்பர் கண்ணப்பர், ஆகியோர் துறைமுகம் வரையில் வந்திருந்தார்கள். துறைமுகத்துக்கு ஒரு கல் தொலைவில்தான் கப்பல் நின்றிருந்தது. உள் வந்து கரையைப் பிடித்தால் அதற்குத் தனிக் கட்டணம் உண்டாம். ஆகவே தூரத்திலேயே நின்றுவிட்டது. நான் பிரியா விடைபெற்றுப் பிரிந்தேன். சிறு மின்சாரப் படகில் ஏறி அதன் மூலமாகக் கப்பலில் வந்து சேர்ந்தேன். கப்பலில் இரண்டு முதல் வகுப்பு இடங்கள்தான் இருந்தன. இந்தக் கப்பல் பெரும்பாலும் சாமான் ஏற்றிச் செல்கின்ற கப்பல். ஏதோ சில காலங்களில் சாமான்கள் குறையின் மக்களை ஏற்றிக்கொண்டு போகும் போலும். இதில் மேற்பார்வையாளராகிய தலைமைப் பணியாளர்கள் தங்கும் இரண்டு அறைகளை எங்களுக்கு என்று ஒதுக்கினார்கள்போலும். நான் முதல் அறையில்விடப்பெற்றேன். மற்றொருவர் 'கராச்சி' செல்பவர். இக் கப்பல் அமெரிக்க ஆட்சியொடு தொடர்புள்ள பிலிப்பயன் நாட்டுக்குச் சொந்தமானது. சென்னை வந்து பிறகு கொளும்பு, பம்பாய் கராச்சி வரை செல்வது. முதல் வகுப்பில் இரண்டு பேர் தான். இரண்டாம் வகுப்பில் 8 பேர் தான். மூன்றும் வகுப்பாகிய தரையில் சுமார் 120 பேர்தான். ஆனால் பெரும் சுமை ஏற்றப்பட்டிருந்தது. இந்த அளவோடு, கப்பல் சரியாகப் 10 மணிக்குச் சிங்கப்பூரை விட்டுப் புறப்படுகிறது

கப்பலில் தமிழ்ப் பற்றுடைய பக்கிரிசாமி, மாணிக்கம் என்ற இருவர் - மலேயாவில் பணியாற்றுகின்றவர்கள் - பயணம் செய்தார்கள். ஆகவே கப்பலுக்குத் தக்க துணை பெற்றமை கண்டு மகிழ்ந்தேன். கப்பல் புறப்படப் போகின்றது. அதற்குமுன் இச் சிறுகடிதத்தை எழுதி இங்கிருந்து செல்லும் கப்பல் தொழிலாளி வசம் சிங்கப்பூரில் தபாலில் சேர்க்குமாறு அனுப்புகிறேன். 4-7-48-ல் சென்னையில் இருப்பேன். மற்றவை வந்ததும் நேரில் உணர்த்துகிறேன்.

மலேயா நிலையை ஒருவாறு அறிந்திருப்பாய். நாட்டு அமைப்பு, ஆட்சிமுறை, மக்கள் வாழ்வு, செல்வ வளன், தொழிற் சிறப்பு பிற எல்லாவற்றையும் ஒருவாறு எடுத்துக் காட்டினேன் அவைபற்றி மேலும் அறிய விரும்பின் நேரில் கூறுகின்றேன். 4-7-50-ல் நேரில் காணலாம்! வாழ்க வளமார் மலேயா என முடித்துக்கொள்கிறேன்.

V435
N50
ARCHIVES
108079
44305

மலேயாச் சொற்பொழிவுகள்

மலேயா தமிழ்ப் பண்ணையாரின் அழைப்புக்கு இணங்கி அங்கு சென்ற வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் நிகழ்த்திய அழகிய சொற்பொழிவுகளை இப்புத்தகத்தில் காணலாம்.

—(தினமணி)

*   *   *   *

இச் சொற்பொழிவுகள் யாவும் தமிழ் நூல்கள், பண்புகள் ஆகியவற்றில் பற்று ஏற்படச் செய்து, தமிழ் ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

—(சுதேசமித்திரன்)

*   *   *   *

A representative Collection is reprinted here tracing the growth and history of Tamil culture and literature, the important place it held in an earlier period of Indian History and the rivival we are witnessing to-day.

—(*The Hindu*)

*   *   *   *

சொற்பொழிவுகள் ஒன்பதும் தமிழரின் பண்பாடு, நாகரிகம், சமயம், வீரம் முதலியவைகளைப் பற்றிப் பறை சாற்றுவனவாயுள்ளன.

—(அமுதசுரபி

Rajan Electric Press Madras-1